2860

# T.N.L.A. Debates

## OFFICIAL REPORT

VOL: IX NO: 2

JUNE 24th 1985

C

V211,31'N85
N85.9.2
136387

136387

சென்னை-600 009

# உள்ளடக்கம்

24—6—1985

| | பக்கங்கள் |
| --- | --- |
| 1 இரங்கல் குறிப்பு— | |
| கனடாவிலிருந்து கிளம்பிய ஏர்-இந்தியா விமானம் அட்லாண்டிக் பெருங்கடலில் 23-6-1985 அம் நாளன்று விபத்துக்குள்ளானது குறித்து. | 257 |
| 2 வினாக்கள்—விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 258—292 |
| 3 தகவல் கோரல்— | |
| (அ) நான்காவது சம்பளக் கமிஷன் அறிக்கையை பேரவைமுன் வைத்தல் | 293—295 |
| (ஆ) மரணமடைந்த, போக்குவரத்துக் கழக ஊழியரின் மனைவிக்கு வேலைவாய்ப்பு. | 295—296 |
| 4 அறிவிப்புகள்— | |
| (அ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியந் தேர்தல் | 296 |
| (ஆ) எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன் வடிவு, 1985. | 298 |
| 5 கவன ஈர்ப்பு— | |
| (அ) முதுகுளத்தூர் தொகுதி அபிராமபுரத்தில் குடிநீர் மேல்நிலைத் தொட்டி சுவர் இடிந்து ஒருவர் இறந்ததும் சிலர் காயமுற்றதும். | 296—298 |
| (ஆ) மேட்டூர் அணையிலிருந்து காவேரி டெல்டாப் பகுதிப் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடுவது. | 298—303 |
| 6 அரசினர் சட்டமுன்வடிவு— | |
| எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1985. | 303—306 |

D 2 A 177—1

பக்கங்கள்


7 வரவு—செலவுத் திட்டம், 1985-86, வாக்கெடுப்பு கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் 306—388

*மாண்புமிகு திரு. நா. வீராசாமி 306, 366—387

திரு. எ. தெய்வநாயகம் 307—309

*திரு. செ. செம்மலை 309—315

திரு. அ. மலர்மன்னன் 315—320

டாக்டர் கே. சமரசம் 321—326

திரு. ஜே. ஹேமச்சந்திரன் 327—334

*திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் 334—340

திரு. க. பாலசுப்ரமணியன் 340—345

திரு. பொ. உத்திராபதி 345—350

திரு. மா. சின்னராசு 350—358

திரு. என். எஸ். வி. சித்தன் 358—366

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 388


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1985, ஜூன் 24, திங்கட்கிழமை,

ஆனி 10 குரோதன — திருவள்ளுவர் ஆண்டு 2016

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :—

''வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை''.

பொருள் வரும் வழிகளைப் பெருகச் செய்து, அவற்றால் வளத்தை உண்டாக்கி, வரும் இடையூறுகளை ஆராய்ந்து நீக்க வல்லவனே செயல் செய்ய வேண்டும்.

## 1. இரங்கல் குறிப்பு

கனடாவில் இருந்து கிளம்பிய ஏர்-இந்தியா விமானம் அட்லாண்டிக் பெருங்கடலில் 23—6—1985 ஆம் நாளன்று விபத்துக்குள்ளானது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றைய தினம் இங்கிலாந்துக்கு அருகில் அட்லாண்டிக் பெருங்கடலில் 'ஏர்-இந்தியா'-வைச் சேர்ந்த விமானம் விபத்துக்குள்ளாகி 326 பேர்கள் மரணம் அடைந்துள்ள செய்தி அதிர்ச்சி அடையச் செய்வதாகவும், மிகுந்த வருத்தத்தைத் தரக்கூடியதாகவும் உள்ளது. வன்முறை நடந்திருக்கக் கூடும் என்று சந்தேகிக்கப்படுவதால், இப்பேரவையின் சார்பில், இவ்விபத்துக்கு ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவிப்பதோடு, வன்முறைச் செயல் நடந்திருப்பின், அதற்கு கண்டனத்தையும் பேரவையின் சார்பில் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களும் அதில் அநேகம் பேர் உள்ளனர். விஞ்ஞானி திரு. நாயுடம்மா அவர்களும் அந்த விமானத்தில் பயணம் செய்தார்கள் என்று கூறப்படுகிறது. இதில் எத்தனை பேர் விபத்திலிருந்து தப்பி இருக்கக் கூடும் என்பது தெரியவில்லை.

உயிரிழந்த பயணிகள் மற்றும் விமானத்தில் பணியாற்றியோர் குடும்பத்தினர் அனைவருக்கும் இந்தப் பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும், தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்தவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் 2 நிமிடங்கள் அமைதியாக எழுந்து நிற்கக் கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

## 2. வினாக்கள் — விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**சாத்தம்பாடியில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கல்.**

334—(*வினா எண். 1155)—திரு. மெ. ஆண்டி அம்பலம் :
மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை
யளிப்பாரா —

(அ) நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம், சாத்தப்பாடி
கிராமத்தில் உள்ள ஏழை விவசாய மக்களுக்குப் பட்டா வழங்க
வருவாய்த் துறை அதிகாரிகள் மனைகளை அளந்து சென்றது
உண்மையா ?

(ஆ) ஆம் எனில், வீட்டு மனைப் பட்டா எப்போது
வழங்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) சர்வே நெ. 128 நத்தம் புறம்போக்கில் 164 பேர்
களுக்கு 2 ஏக்கர் 11 சென்ட் ஏற்கனவே பட்டா வழங்கப்
பட்டுள்ளது. 25—10—1984-ல் 50 பேர்களுக்கும், 25-1-1985-ல்
114 பேர்களுக்கும் ஆக 164 பேர்களுக்கு பட்டாக்கள் வழங்கப்
பட்டுள்ளன. சர்வே நெ. 465 நத்தம் புறம்போக்கில் 175
பேர்களுக்கு 1.91 ஏக்கர் நிலத்தில் பட்டாக்கள், 21-6-1985-ல்
கொடுக்கப்பட்டு விட்டன.

திரு. ந. சிவஞானம் : பேரவைத் தலைவர் அவர்களே,
ஏழைகளுக்கு மனைப் பட்டா வழங்குவதில் காலதாமதம் ஆகிறது
என்று சொல்கிறார்களே, அப்படிப்பட்ட கால தாமதத்தை
தவிர்த்து, மனைப் பட்டா வழங்குவதில் அரசாங்கம் துரித
நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இது புதுக் கேள்வியாக இருந்
தாலும், சாதாரணமாக, பொதுவாக ஆங்காங்கு மனைப் பட்டா
வழங்குவதற்கான அளவுக்கு உரிய நிலங்கள் கிடைக்கப்பட
வேண்டி இருக்கின்றன. ஆகவே, அரசுக்கே வேறு பல பணி
களுக்காக பயன்படுத்த வேண்டும் என்று உள்ள நிலங்களில்
பட்டாக்கள் வேண்டும் என்று கேட்கும்போது, அதற்கான
கடிதப் போக்குவரத்தும் நடைபெற்று, கடைசியில் மறுக்க
வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு, சில இடங்களில் மனைப் பட்
டாக்கள் கிடைக்காத இடங்களில் நிலங்களைக் கையகப்படுத்தித்
தர வேண்டிய நிலையில் இருக்கிறது. குறிப்பாக, பொதுவாக,
ஆங்காங்கே எங்கெங்கு புறம்போக்கு நிலங்கள், மற்றவைகளில்
எளிதாக மனைப் பட்டாக்கள் வழங்க இயலுமோ, அவற்றை



துரிதப்படுத்த முடியுமோ, துரிதப்
எவ்வளவுக்கு எவ்வளவு
படுத்த வேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர்கள் எல்லாம்
அவ்வப்போது கேட்டுக் கொள்ளப்பட்டு இருக்கிறார்கள். அந்த
முறையில் ஆங்காங்கு பணிகளும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்
(பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்த வீட்டு மனைப் பட்டா இருக்கிற
கிராமம் அருகிலேயே கூட வண்டிப் பாதைப் புறம்போக்கு
பாதை புறம்போக்கில் எல்லாம், அந்தப் பயனுக்காக பயன்
படுத்தாத சூழ்நிலையில் வீடுகள் கட்டி விடுகிறார்கள். அவற்றை
மாற்றி நத்தப் புறம்போக்காக மாற்றி அவர்களுக்குப் பட்டா
வழங்க வேண்டும் என்று சொல்லி ஒரு கருத்துரு சென்னையில்
பெரிய அளவில் வந்து கால தாமதம் ஆகிறது. அப்படிப்பட்ட
கன்வர்ஷன் ப்ரப்போஸல்களை,—மாற்றுகிற அதிகாரத்தை
மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குக் கொடுக்க அரசு பரிசீலிக்குமா
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்
கள் கூறுவது போன்று, அதிலே சிக்கல்கள் இருக்குமேயானால்,
ஆராய்ந்து தான் முடிவு எடுக்க வேண்டும் அதனுடைய நிலைமை
களை இப்போது சொல்வதற்கில்லை. ஆனால், எவ்வளவுக்
கெவ்வளவு எளிதாக ஆக்க முடியுமோ, விரைவாகக் கொடுப்ப
தற்கான வழிவகைகளை மேற்கொள்ள முடியுமோ, அதை
மேற்கொள்வதற்கு அரசு ஆயத்தமாக இருக்கும்.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, ஏழைகளுக்கும், ஏழை அரிசன மக்களுக்
கும் மனைப் பட்டா வழங்குவதிலே டவுன் பஞ்சாயத்திலே,
குடியிருப்பு மனைகளுக்கு அரசாங்கம் அதற்கு உண்டான
விலையை நிர்ணயம் செய்துதான் பட்டா வழங்க வேண்டுமென்ற
விதி இருக்கிறது. ஆனால், ஏழைகள், வசதியில்லாமல் அன்றா
டம் கூலி வேலை செய்பவர்கள், அரிசன மக்கள் போன்றவர்கள்
15 ஆண்டுகள், 20 ஆண்டுகள் குடிசை போட்டுக் கொண்டு
வாழும் பகுதிகள் அடமானம் செய்யப்பட வேண்டும் என்றால்
அதற்குத் தர நிர்ணயம் செய்து கிரயம் பெற்றுத்தான் அடை
மானம் செய்ய வேண்டுமென்று விதி முறை இருப்பதாக
அதிகாரிகள் கூறுகிறார்கள். என்னுடைய தொகுதியில் பாப்பி
ரெட்டிப்பட்டி நகரப் பஞ்சாயத்தில் அப்படிப் பட்ட நிலைமை
இருக்கிறது. இதை நீக்கும் வகையில் ஏழை எளிய மக்களுக்கு
இலவசப் பட்டா வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது வீட்டு மனைப்
பட்டா வழங்கப்படுவதில் ஆதி திராவிடர்கள் மிக மிக ஏழை

களாக இருப்பவர்களுக்கு இலவசமாகத்தான் வீட்டு மனைப்
பட்டா ஆங்காங்கு வழங்கப்பட்டு வருகிறது. அப்படி வழங்கப்
பட்டவைகளில் வீடுகள் கட்டித் தரப்படும் பணிகளும் நிறை
வேறி வருகின்றன. ஆனால் ஏழை எளியவர்கள் என்ற முறை
யில் பார்க்கின்றபொழுது அவர்களுக்கு வேறு இடம், வேறு
நிலம் எதுவும் இருக்கக் கூடாது; அப்படிப்பட்டவர்களுக்கு
ஒப்படை செய்யும் பொழுது தான், அவர்களுக்கு, கிரயம்
வாங்கித் தர வேண்டுமென்ற நிலையிருக்கிறது. ஆனால் 1 சென்ட்,
2 சென்ட், $2\frac{1}{2}$ சென்ட் என்று கொடுக்கின்றபொழுது ஏழை
எளியவர்களுக்குக் கிரயம் வாங்கிக் கொண்டு தருகின்ற நிலைமை
கள் இருக்காது. அப்படிப்பட்டவர்களுக்கு ஆங்காங்கு கிரயம்
இல்லாமல்தான் தரப்பட்டிருக்கிறது. அப்படி எதாவது
நிலைமைகள் இருந்தால் அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு
வந்தால் அது பற்றி ஆராய்ந்து என்ன செய்யலாம் என்பதைப்
பற்றி யோசிக்கலாம்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவ
ரவர்களே, பட்டா வழங்குகின்றபொழுது, தனியார் இடமாக
இருந்தால் அதற்கு கோர்ட்டிலே சென்று தடை வாங்கி விடு
கிறார்கள். அதைப் போல, ஏழை எளிய மக்களுக்கு, மனைப்
பட்டா இல்லாதவர்களுக்குக் கொடுப்பதற்காகத், தனியார்
இடத்தில் அந்த நிலத்தை எடுக்கின்றபொழுது தனியாரும்
கோர்ட்டிலே சென்று தடை வாங்கி விடுகிறார்கள். இதனால்
பட்டா வழங்க முடியாத நிலைமை இருக்கிறது. இல்லாதவர்
களுக்கு நிலம் எடுத்துக் கொடுப்பதிலேயும் சட்டச் சிக்கல்
இருப்பதால் அதை நீக்கி, அந்தந்த மாவட்டக் கலெக்டர்களுக்கு
அதிகாரம் வழங்கி, சம்பந்தப்பட்டவர்களுக்கு மனை கொடுக்
கவும், பட்டா கொடுக்கவும் அமைச்சரவர்கள் நடவடிக்கை
எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரும்,
அவர்களுக்குக் கீழே இருக்கின்ற வருவாய்த் துறை அதிகாரி
களும் இந்தப் பணியைச் செய்வதிலே மிகவும் ஈடுபட்டு இருக்
கிறார்கள். அரசாங்கத்தினுடைய புறம்போக்கு நிலத்தைக்
கொடுக்கும் பொழுது அதில் சிக்கல் வருவதில்லை. மாவட்ட
ஆட்சித் தலைவர், வேறு எந்தப் பயனுக்கும், வேறு எந்தப்
பணிக்கும் பயன்படாது என்ற நிலையில், வீட்டு மனை வழங்க
லாம் என்று அவர்கள் சொன்ன பிறகு, அரசாங்கத்தின் அனுமதி
கிடைக்கிறது; அதன் பேரில் வழங்கப்படுகிறது. ஆனால்
தனியார் இடங்களைக் கையகப்படுத்தி வீட்டு மனைப் பட்டா
வழங்கப்பட வேண்டுமென்ற நிலைமை ஏற்படுகின்றபொழுது ரிட்
மனுக்கள் போடுகின்ற நிலைமைக்குச் சென்று விடுகிறார்கள்.
அதற்கு அரசமைப்புச் சட்டம் இடம் கொடுத்திருப்பதால், அது
தீரும் வரையில் அப்படிப்பட்ட நிலம் கையகப்படுத்தப்படுவ
தில்லை. அதைக் கையகப்படுத்தும் வரையில், வேறு மாற்ற



இடம் பார்த்து சில பலயிடங்களில் முயலலாம் என்றால் இடம் கிடைப்பதில்லை. கூடுமானவரையில் நஞ்சை நிலத்தை எடுக்க வேண்டாமென்று கருதினாலும், பலயிடங்களில் புஞ்சை நிலம் இல்லாத சூழ்நிலையில், விதிவிலக்கு கொடுத்து நஞ்சை நிலத்தை எடுக்க வேண்டிய கட்டாயம் கூட ஏற்படுகிறது. ஆனால், எந்தச் சட்டச் சிக்கலும் இல்லாமல் எந்த அளவிற்குச் செய்ய முடியுமோ அதைச் செய்வதற்கு இந்தத் துறை ஈடுபட்டு வருகிறது.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் வீட்டு மனைப் பட்டா வழங்குவதைப் பொறுத்தவரையில் ஆதி திராவிடர்களுக்கு ஒரு சென்ட், இரண்டு சென்ட் என்று நிலங்கள் வீட்டு மனைப் பட்டா வழங்கப்படுவதாகத் தெரிவித்தார்கள். கிராமப்புறங்களில் வீடு கட்டும் சங்கத்தின் மூலம் கடன் வாங்குவதற்கு அங்கே சென்றால் குறைந்த பட்சம் $1\frac{1}{2}$ சென்ட் இருக்க வேண்டும். அதற்குக் குறைவாக இருந்தால் கடன் அளிக்கப்பட மாட்டாது என்ற விதியைச் சொல்கிறார்கள். ஆகவே, அரிசன மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் பொழுது குறைந்த பட்சம் மூன்று சென்ட்டாவது இருக்க வேண்டும் அல்லது நத்தம் ஜாரி அல்லது ரெவின்யூ புறம்போக்கு நிலத்தை அவர்களுக்குப் பட்டா செய்து கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.10).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலும் 2 சென்டிலிருந்து 3 சென்ட் வரையில் இலவசமாக வழங்கப்படுகிற நிலைமை தான் ஏற்படுகிறது. அதிலே வீடு கட்டுகிற நிலைமை வருகிறபோது, ரூ. 6,000 மதிப்பீட்டுச் செலவில் 1 சென்ட் பரப்பில் வீடு கட்டி முடித்து, 2 சென்ட் பரப்பில் அவர்கள் தோட்டம், மற்றவை வைப்பதற்கு, மாடு, கன்றுகள் வைப்பதற்கு வசதியாக இருக்கும் பொருட்டு, இடம் ஒதுக்கி வைக்கப்படுகிறது. பெரும்பாலான இடங்களில் 2 சென்டிலிருந்து 3 சென்ட் வரையில் அங்கே இடம் பெறுகின்றவர்கள் எண்ணிக்கையைப் பொறுத்தும் கிடைக்கின்ற நிலத்தைப் பொறுத்தும் வகுத்துத் தரப்படுகிறது.

## புதிய பட்டா பாஸ் புத்தகங்கள் வழங்கல்

335—(*வினா எண். 1435)—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள விவசாயிகள் அனைவருக்கும் புதிதாக பட்டா பாஸ் புத்தகம் வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது வழங்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவ அவர்களே, (அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் உள்ள நில உரிமையாளர்களுக்கு நில உரிமைப் பதிவேடு பட்டா பாஸ் புத்தகம், சட்டபூர்வமாக வழங்க, 1983 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நில உரிமைப் பதிவேடு வழங்கல் சட்ட முன்வடிவு சட்டமன்றத்தால் நிறைவேற்றப் பெற்றுள்ளது. மேற்படி சட்ட முன்வடிவு இந்திய குடியரசுத் தலைவரின் இசைவினை எதிர் நோக்கியுள்ளது. அன்னாரின் இசைவு கிடைத்தவுடன் இதற்கான மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியரசுத் தலைவரின் இசைவினைப் பெறுவதற்கு ஒப்புதல் பெறுவதற்கு அனுப்பி ஏறத்தாழ ஓராண்டுக் காலம் ஆகிறது. அதை விரைவுபடுத்தி, அதற்கு ஒப்புதல் பெறுவதற்கு மாநில அரசு ஏதாவது நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1983 ஆவது ஆண்டே இந்தச் சட்டமன்றத் தால் நிறைவேற்றப்பட்டு, குடியரசுத் தலைவருடைய அனுமதிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மத்திய அரசு அந்தப் பாஸ் புத்தகங் களில் குத்தகைதாரர்கள் பெயர்களைக் குறிப்பிட வேண்டு மென்று வற்புறுத்துவதன் காரணமாக, அப்படி குத்தகைதாரர் கள் பெயர்களை ஒவ்வொரு பாஸ் புத்தகத்திலும் அவ்வப்போது குறிக்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்பட்டால் அங்கு வேறுபல சங்கடங் களும் வரக்கூடிய நிலைமைகளும் ஏற்படும் என்று மாநில அரசு அவர்களோடு வாதாடி வந்தது. கடைசியிலே அவர்களைச் சேர்க்கின்ற பொழுது நிலத்தை அடமானம் வைப்பதைக் குறிக் கலாம். கடன் வழங்குவதைக் குறிக்கலாம், வேறு பல மாற்றங் களைக் குறிக்கலாம். யார், யாருக்குக் குத்தகை கொடுத்தோம் என்பதையும் இந்த பாஸ் புத்தகத்திலே குறிப்பிடுகின்ற சூழ்நிலை வந்தால் அதை ஒரு காரணமாக வைத்து வேறுபல சட்ட சம்பந்த மான சிக்கல் ஏற்படுமோ என்று மாநில அரசு அஞ்சுகிறது. ஆகவேதான் மத்திய அரசோடு அதுபற்றிய கடிதப் போக்குவரத் தைத் தொடர்ந்து வைத்து வந்துள்ளோம். 1983 நவம்பர் திங்களில் நடந்த சட்டமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டு அதற்குப் பின் இப்பொழுது 25-2-1985 ஆம் நாளன்று தகுந்த பதிலை மைய அரசுக்கு நாம் அனுப்பி வைத்தோம். இதற்குப் பின் மைய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் இணைச் செய லாளர் 12-4-1985 அன்று சென்னையில் மாநில அரசு தொடர்புள்ள அலுவலர்களோடு கலந்துரையாடலில் மேறபடி சட்ட முன்வடிவு பிரிவு 3 (8) சி-ன் கீழ் விதிகள் வகுக்கும் போது குத்தகை சாகுபடி யாளர் பெயர் நில உரிமைப் பதிவேட்டுப் புத்தகத்தில் இடம் பெற வகை செய்ய வேண்டுமென்றும், அதற்கு மாநில அரசு இணக் கத்தைத் தருமாறு மைய அரசு கேட்டிருந்தார்கள். ஆகவே,



இந்தச் சட்டத்தையே மாற்ற வேண்டிய அவசியம் இல்லை என்றும் அதற்கு விதிமுறைகள் வகுக்கும் போது, அதற்கு இடம் வகுக்க வேண்டுமென்று மத்திய அரசு சொன்னதை மாநில அரசு அலுவலர்கள் ஏறறுக்கொண்டிருக்கிறார்கள். மாநில அரசு ஏற்றுக்கொண்டாலும் மைய அரசினுடைய அனுமதியோடு குடியரசுத் தலைவருடைய கையெழுத்தாகி வரக்கூடும் என்று சொன்னதன் பேரில் மாநில அரசினுடைய அலுவலர்களும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். மைய அரசிடமிருந்து ஒரு கடிதம் 27-5-1985 ஆம் நாள் முறையாகக் கிடைக்கப்பெற்றது. அதை விரைவில் பரிசீலனை செய்து, விரைவில் அதுபற்றிய ஒரு முடிவை மாநில அரசு எடுக்கும்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பட்டா பாஸ் புத்தகச் சட்டத்தின்படி கிராமங்களிலே இருக்கிற விவசாயப் பெருமக்கள் பல்வேறு வகையிலும் பயன்பெறுகிற வகையில் அவர்கள் தங்களுடைய குழந்தைகளுக்கு ஜாதிச் சான்றிதழ் வாங்க, வருவாய்த் துறைக்குப் போக வேண்டியதில்லை, கடன் வாங்குகிறபொழுது ஆஸ்திப் பொறுப்புக்கு வருவாய்த்துறை அதிகாரிகளை அணுக வேண்டியதில்லை என்கிற வகையிலே இந்தச் சட்டம் இங்கே இயற்றப்பட்டிருக்கிறது. ஆனால் பெரும்பாலானவர்கள், நிலமே இல்லாதவர்கள் அதைப் போனறு ஜாதிச் சான்றிதழ் வாங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. நிலம் இல்லாதவர் களுக்குக் கடன் வழங்குகிறபொழுது ஆஸ்திப் பொறுப்புக் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, நிலம் இல்லாதவர்களுக் கும் அவர்கள் வைத்திருக்கிற வீடுகளை அளந்து, இதே போன்று பட்டா பாஸ் புத்தகம் கொடுத்து, இப்படிப்பட்ட இன்னல்களி லிருந்து அவர்களை விடுவிக்க அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, புதிய பாஸ் புத்தகம் வந்தாலும் விற்பனை கொடை, அடமானம், பரிவர்த்தனை, மற்றும் சட்டத்தின் மூலமாக, மற்றும் வேறு வகையில், ஏதேனும் ஒரு நிலத்தை உரிமை மாற்றம் செய்வதற்காகத் தாக்கல் செய்யப்படும் பத்திரம் எதையும் அந்நிலம் தொடர்பான நில உரிமைப் பதிவேட்டைத் தாக்கல் செய்தாலன்றி மற்றபடி பத்திரப் பதிவு செய்யும் அலுவ லர் பதிவு செய்யக் கூடாது என்று இருப்பதன் காரணமாக எல்லா நிலைகளும் நிலத்தைப் பொறுத்து இந்தப் பாஸ் புத்தகத் தில் அடங்கியிருப்பதன் காரணமாக ஒரு சுமூகமான சூழ்நிலை ஏற்படும். சட்டச் சிக்கல்கள் ஏற்படுமானல் சட்டச் சிக்கல்களின் காரணமாக, வழக்கு மன்றங்கள் சென்று வீண் காலதாமதம் செய்து 4 ஆண்டு, 5 ஆண்டு, 6 ஆண்டு ஆகியும் தீர்க்க முடியாத

பல பிரச்சினைகள் இருப்பதன் காரணமாகத்தான் இந்த முறை கொண்டு வரப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று இருக்கிற சிக்கல்களை எந்த வகையில் தீர்க்கலாம் என்பதைப் பற்றி அரசு ஆராய்ந்து பார்க்கும்.

### காமராஜ் மாவட்டத்தில் நகராட்சி அதிகாரிகள்

336—(*வினா எண் 614)—திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேற்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள நகராட்சி களுள் ஐந்து நகராட்சிகளில் ஆணையர் பதவியும் பல நகராட்சி களில் தனி அதிகாரிகள் பதவியும் நீண்ட நாட்களாக நிரப்பப்படா மல் காலியாக உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதனை நிரப்ப அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### அடையாற்றில் அரசு நில ஆக்கிரமிப்பு

337— (*வினா எண் 1220)— திரு சா. துரைசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அடையார் சர்தார் பட்டேல் சாலை மேற்கு காலவாய்க் கரை சந்திப்பில் அரசுக்குச் சொந்தமான நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்த கடைகள் கட்டியிருப்பது அரசின் கவனத் திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே,

(அ) சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான இந்த இடத்தில் தற்போது தனியாரால் ஆக்கிரமிப்புகள் செய்யப்பட் டுள்ளன.

(ஆ) மேற்படி ஆக்கிரமிப்புகளை அகற்ற சென்னை மாநகராட்சியால் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



திரு. சா. துரைசாமி : தலைவர் அவர்களே, மாநகராட்சிக்குச் சொந்தமான பல்வேறு இடங்களில் இதைப்போன்ற ஆக்கிரமிப் பாளர்கள் கட்டிடங்களைக் கட்டுவதும் கடைகளைக் கட்டுவதும் வாடிக்கையாக இருக்கிறது. இப்படிப்பட்ட ஆக்கிரமிப்புகளைத் தடுக்க, தேவையான பணிகளைத் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்க ஏற்கனவே சென்னை மாநகராட்சியில் இயங்கிவந்த அந்த நீதிமன்றம் நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் இயங்கச்செய்ய அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? இப்படிப்பட்ட ஆக்கிரமிப்பாளர்களை அகற்ற வேறு ஏதாவது வகையில் சட்டத் திருத்தம் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் ஆக்கிரமிப்பு செய்வது நிறுத்தப்பட வேண்டுமென்று ஏற்கனவே முடிவு செய்யப்பட் டிருக்கிறது. ஏற்கனவே இயங்கிவந்த நீதிமன்றம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் இயங்கச் செய்யலாமா என்பது அரசின் பரிசீலனையில இருக்கிறது. ஆனால் இதற்குச் சட்டத் திருத்தம் தேவையில்லை என்று கருதுகிறேன். தேவை என்றால் பரிசீலனை செய்யலாம்.

திரு. சா. துரைசாமி : தலைவரவர்களே, மாநகராட்சிக்குச் சொந்தமான இடங்களில் கட்டுகின்ற கட்டடங்களை நிறுத் தாமல் அவர்களுக்கு தண்டனை என்று விதித்துவிடுகிறார்கள். அது ஆக்கிரமிப்பாளர்களுக்கு வசதியாக இருக்கிறது. அதன் காரணமாக அவர்கள் எல்லா இடங்களிலும் நிலையான கட்டடங்களைக் கட்டுகிறார்கள். குறிப்பாக சனி, ஞாயிறு ஆகிய விடுமுறை நாட்களில் வெகுவேகமாகக் கட்டடங் களைக் கட்டிவிடுவதால் அதைத் தடுக்க மாநகராட்சி நடவடிக்கை எடுக்க வசதியில்லை. பின்னர் நடவடிக்கை எடுக்கமுடியாமல் நீதி மன்றத்திற்குச் சென்று தடையும் வாங்கி விடுகிறார்கள். இத்தகைய நிலைமைகளை மாற்ற, மாநகராட்சிக்குச் சொந்தமான இடங்களில் 'என்குரோச் மெண்ட்' இருந்தால் உடனடியாக நீக்க அரசு நடவடிக்கை எடுக்க அரசிடம் ஏதாவது மாற்றுத் திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, மாநகராட்சிக்குச் சொந்தமான இடங்களில் ஏற்படுகின்ற ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு, நீதி மன்றத்தில் அபராதம் விதித்தாலும் கட்டிடம் கட்டுவதை நிறுத்துவது இல்லை. ஆக்கிரமிப்பை எப்படியாவது நிறுத்த வேண்டும் ; அப்புறப்படுத்த வேண்டும். அதற்கு வேறு வகையில் தக்க நடவடிக்கை எடுக்க அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

[1985 ஜூன் 24

## உள்ளாட்சி மன்ற ஆலோசனைக் குழுக்கள்

338—(*வினா எண் 1279)— திரு. கோ. இரகுபதி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றியம், நகராட்சி போன்றவைகளில் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, (அ) ஏற்கனவே இக்குழுக்கள் அமைக்கப்பட்டு இருந்தன.

(ஆ) வரும் உள்ளாட்சி மற்றும் நகராட்சி தேர்தலை முன்னிட்டு தற்போது கலைக்கப்பட்டு விட்டது.

திரு. கோ. இரகுபதி : தலைவரவர்களே, நாம் இப்போது தேர்தலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்த ஊராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றியம், நகராட்சி போன்றவைகளில் தனி அதிகாரிகள் தனித்துச் செயல்படுகிறார்கள் என்று மக்கள் மத்தியில் அச்சம் ஏற்படுகிறது. ஆகவே, தேர்தல் நடைபெறும் காலம் வரையில் ஒரு ஆலோசனைக் குழு, சட்டமன்ற உறுப்பினர்களைக் கலந்து அமைத்து செயல் படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, ஏற்கனவே ஒரு ஆலோசனைக் குழு இருந்தது. தேர்தல் நடை பெறுவதற்குள் வாக்காளர் பட்டியலில் ஏதாவது நடைபெற்று விடுமோ, இடையூறு ஏற்படுமோ என்ற அச்சம் ஏற்பட்டதால் அந்தக் குழுக்கள் கலைக்கப்பட்டன.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, கோவை மாநகராட் சிக்கு ஆலோசனைக் குழுவே அமைக்கப்படவில்லை. கோவை நகராட்சியாக இருந்தபோது ஆலோசனைக் குழு இருந்தது. மாநகராட்சி ஆகி கிட்டத்தட்ட மூன்றரை ஆண்டுகள் ஆன பிற கும் ஆலோசனைக் குழு அமைக்கப்படவில்லை. கோவை மாநகராட்சிக்கு இப்போது தேர்தல் வரப்போவதில்லை. ஒரு வருஷம் எக்ஸ்டன்ட் பண்ணியாகிவிட்டது. அதனால் குறைந்தபட்சம் கட்சித் தலைவர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியவர்களைக் கொண்ட ஒரு ஆலோசனைக் குழு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?



1985 ஜூன் 24]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே கோவை மாநகராட்சிக்குத் தேர்தல் வராது என்று தவறாக எண்ணவேண்டாம். நிச்சயமாக தேர்தல் வரும். அதற் கிடையில் இப்படிப்பட்ட ஒரு ஆலோசனைக் குழுவை அமைக்கலாமா என்பது பற்றி அரசு பரிசீலித்துக் கொண்டி ருக்கிறது.

(முற்பகல் 9-20)

திரு. கோ. இரகுபதி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாக்காளர் பட்டியலைச் சேர்க்கின்ற காரணத்தால் ஒரு அச்சம் ஏற்படும் என்ற காரணத்தால் ஆலோசனைக் குழு நீக்கப்பட்டது என்று குறிப்பிட்டார்கள். வாக்காளர் பட்டியல் சேகரிக்கப்பட்டு முடிந்துவிட்டதாக நான் அறிகிறேன். ஆகவே தனி அதி காரிகள் தன்னிச்சையாகச் செயல்படாமல் எம்.எல்.ஏ.க்கள் உள்ளிட்ட ஒரு குழு அமைக்கப்பட்டு அதிலே எம்.எல்.ஏ.க்கள் மட்டும் அல்லாது இரண்டு மூன்று அங்கத்தினர்களை நான் அஃபி ஷியல் மெம்பர் என்று சொல்லப்படுகின்ற முக்கியஸ்தர்களும் சேர்க்கப்பட்டு தேர்தல் வருவது வரையில் இந்த ஆலோசனைக் குழுக்கள் பஞ்சாயத்து, ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி போன்ற வற்றிற்கு ஆலோசனை தெரிவித்தால் நலமாக இருக்கும் என்று மக்கள் கருதுவதோடு நானும் கருதுகிறேன். ஆகவே மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் தேர்தல் வருவது வரையில் ஆலோசனைகள் வழங்க குழு அமைப்பது பற்றி பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் வருவதற்கு இன்னும் சில மாதங்களே இருப்ப தால் இப்படி ஒரு ஆலோசனைக் குழு தேவையில்லை என்று அரசு கருதுகிறது. எனவே பல நாட்கள் பொறுத்துக்கொண்டிருந்த வர்கள் இரண்டு மாதங்கள் பொறுத்துக்கொண்டிருப்பதில் தவ றில்லை. எனவே இரண்டு மாதங்கள் பொறுத்துக்கொண்டால் தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர்கள் வந்து விடுவார்கள். எனவே அந்த ஆலோசனைக் குழு அவசியம் இல்லாமல் போய் விடும்.

திரு. மு. இராமநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்களுக்கும், ஊராட்சிகளுக்கும்தான் தேர்தல் அறி விக்கப்பட்டு விரைவில் வருகின்றது என்று அறிவிக்கப்பட்டிருக்கி றது. ஆனால் கோவை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் 2 நகராட்சிகளையும், சுற்றியிருக்கின்ற பஞ்சாயத்துக்களையும் இணைத்து அது மாநகராட்சியாக உருவாக்கப்பட்டிருக்கின்றது. அங்கே பல பிரச்சினைகள், குறிப்பாக சாதாரண பிரச்சினைகள் கூட தனி அதிகாரிகளால் டிஸ்போஸ் ஆகாமல் இருக்கின்றன.

எனவே அப்படிப்பட்ட பிரச்சினைகளைக் கருதியாவது சட்ட மன்ற உறுப்பினர்களையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கொண்ட ஆலோசனைக் குழுக்கள் அமைப்பது என்ற வகை யில் ஒரு இடைக்கால ஏற்பாடாகவாவது அதை ஏற்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா, உரிய நடவடிக்கை எடுப்பார் களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொன்னேன். கோவை மாநகராட்சித் தேர்தல் நடத்துவதற்கு முன்பாக அப்படி ஒரு குழு அமைக்கலாமா என்பதை அரசு பரிசீலித்துக்கொண்டி ருக்கின்றது என்று நான் தெரிவித்தேன்.

திரு. துரை கோவிந்தராசன் : பேரவைத் தலைவர் அவர் களே, ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள் போன்ற வற்றிற்குத் தேர்தல் நடத்த இருப்பதால் ஆலோசனைக் குழு தேவையில்லை என்பது போல் அமைச்சர் அவர்கள் கருத்துக் கூறியிருக்கிறார்கள். ஆனால் தற்போது அரசினுடைய மானி யங்கள் எல்லாம் ஒதுக்கப்பட்டு பல்வேறு வகைகளில் நிதி அளித்திருக்கின்ற நிலையில் அந்தச் சலுகைகள் முறையாக பலருக்கும் கிடைக்கின்ற வகையில், உரிய வகையில் பகிர்ந் தளிக்கப்படுகின்ற வகையில் ஆலோசனைக் குழுக்கள் என்ற பெயரில் இல்லாவிட்டாலும் அந்தந்த ஊராட்சி, பேரூராட்சி களில் ஆங்காங்குள்ள சட்டமன்ற உறுப்பினர்களைக் கலந்து ஆலோசித்து தனி அதிகாரிகள் அந்த சப்சிடி போன்றவற்றைப் பயன்பெறுகின்றவர்களுக்கு பகிர்ந்தளிக்கின்ற வகையில் ஏற் பாடு செய்ய அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகி றேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் வளர்ச்சித் திட்டங்களுக் காகச் செலவிடப்படுகின்ற பணங்கள், அது என். ஆர். இ. பி. யாக இருந்தாலும், ஐ. ஆர். டீ. பி. கடனாக இருந்தாலும் அந்தந்த ஊர்களில் உள்ள படித்தவர்களுக்கும், ஆயக்கட்டுதாரர் களுக்கும் கொடுக்கலாம் என்று ஏற்கனவே உத்தரவு போட் டாகிவிட்டது. கடன்களாக இருந்தாலும் இதுவரையில் கிராம சேவக்குகளின் சிபாரிசு வேண்டும் என்று இருந்தது மாற்றப்பட்டு ஒன்றியங்கள் மட்டத்தில் குழு அமைக்கப்பட்டு அந்தக் குழுதான் பரிந்துரை செய்யவேண்டும் என்ற வகையில் அரசின் ஆணைகள் எல்லாம் பிறப்பித்தாகிவிட்டது. அவ்வாறு ஆணைகள் எல்லாம் பிறப்பிக்கப்பட்டுவிட்டன என்ற நிலை யில் இனி அத்தகைய குழுக்கள் அமைக்க விரைவில் ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர் களே, ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சி, நகராட்சி போன்றவற்றிற்காக உள்ள ஆலோசனைக் குழுக்களிலி ருந்து திராவிட முன்னேற்றக் கழகம் ராஜினாமா செய்து விட்டதாக அறிவித்தது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமநாதன் அவர்கள் பழையபடி ஆலோசனைக் குழு உறுப்பினராகப் போடவேண்டும் என்று சொல்கிறார்கள். அந்த வகையில் ஏதேனும் கோரிக்கை வைத்து சேர்க்கவேண்டும் என்று செயற்குறிப்பு கொடுத்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு அப்படி ஒன்றும் திருவாளர் இராமநாதன் அவர்கள் தந்ததாகத் தெரியவில்லை. ஆனால் அவர்களும் உறுப்பினராக இருக்க வேண்டும் என்பதை மட்டும் நான் அவருடைய பேச்சிலிருந்து புரிந்துகொள்ள முடிகிறது.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களிடத்திலே நான் கேட்டது, மக்கள் பிரதிநிதிகள் கொண்ட ஆலோசனைக் குழுக்கள் தேர்தல் வரும்வரையில் இருப்பது நல்லது என்பதால். கோவை மாநக ராட்சி போன்ற நிர்வாகத்தில் பல பிரச்னைகளை அமைச்சர் அவர்களிடத்திலே தெரிவிப்பதற்கு அதிகாரிகள் பயப்படுகிறார் கள். மக்கள் பிரதிநிதிகள் அங்கே இருந்தால், மக்கள் பிரச்னை களை தைரியமாகத் தெரிவிப்பதற்கு உதவியாக இருக்குமென்று சொன்னேனே தவிர, திராவிட முன்னேறக் கழகத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் இடம் பெறுவது என்பது முக்கிய மல்ல. அதை வைத்து நான் கேட்கவில்லை.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அதிகாரிகள் அமைச்சர்களிடத்தில் பேசுவதற்கு எந்தவித அச்சமும் இல்லாமல் தாராளமாகப் பேசுகிறார்கள் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக் கொள் கிறேன். மேலும், நாங்கள் அரசு அதிகாரிகளைக் கூப்பிட்டு ஆலோசனைகளை தாராளமாகப் பெறுகிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### பெருந்துறை பேருந்து நிலையம்.

339—(*வினா எண் 1792)—டாக்டர் அ. பொன்னுசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை பேருந்து நிலையத்தில் இட நெருக்கடி அதிகமாக உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை மாற்றியமைக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) பெருந்துறை பேருந்து நிலையத்தை உடனடியாக மாற்ற பேரூராட்சிக்குச் சொந்தமான இடம் ஏதும் இல்லை. எனவே நில ஆர்ஜிதம் செய்துதான் மாற்ற வேண்டும். பேருந்து நிலையத்தை வசதியான இடத்திற்கு மாற்றி அமைக்க பேரூராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

டாக்டர் அ. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி. பேரூராட்சிக்கு நிலமில்லை என்றால் கோவை பாதையில் உள்ள கோட்டை மாரியம்மன் நிலத்தையும், அதற்கு அருகிலுள்ள நிலத்தையும் எடுத்து பேருந்து நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிக்குச் சொந்தமான இடமில்லை. ஆனால், பேருந்து நிலையம் கட்டுவதற்கு இடமிருக்கிறது. அந்த இடத்தை ஆர்ஜிதம் செய்ய வேண்டும். விரைவில் அதற்கு உண்டான நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர் அ. பொன்னுசாமி : பேரவைத் தலைவர் அவர்களே. அப்படியென்றால் இப்போது சந்தை நடந்து கொண்டிருக்கும் அந்த இடத்தில் பேருந்து நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் எழுதிக் கொடுப்பார்களானால், அதைப்பற்றி பரிசீலிக்கச் சொல்லலாம்.

### சுவாமிமலையில் புதிய மேல்நிலைப் பள்ளி.

340—(*வினா எண். 726)—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாபநாசம் தொகுதி, சுவாமிமலையில் மேல்நிலைப் பள்ளி ஆரம்பிக்க அருள்மிகு சுவாமிநாத சுவாமி ஆலயத்தின் சார்பில் நிதியும் நிலமும், வழங்க முன்வந்து இருப்பது உண்மையா ?



(ஆ) ஆம் எனில், பள்ளி எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, (அ) தகவல் எதுவும் பெறப்படவில்லை.

(ஆ) எழவில்லை.

திரு. கி. பழனிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்துவது சம்பந்தமாக கடந்த ஆண்டு தனியார் பள்ளிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. ஆனால், இந்த ஆண்டு அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தும் திட்டம் உள்ளதா ? அப்படியென்றால், கடந்த 3, 4 ஆண்டுகளில் பணம் கொடுத்தும், மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்துவதற்கு அனுமதி கொடுக்குமா, கொடுக்காதா என்ற உத்தரவை அரசு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அதுகுறித்து அரசு பரிசீலிக்கும்.

### விருத்தாசலம் சரவணபவா பாலிடெக்னிக்

341—(*வினா எண். 937)—திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

" விருத்தாசலம் சரவணபவா பாலிடெக்னிக் பள்ளிக்கு " நடப்பு ஆண்டு முதல் அங்கீகாரம் அளிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இல்லை.

திரு. ஆர். தியாகராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, சரவணா பாலிடெக்னிக் என்று சொல்லி, எல்லா இடங்களிலும் தவறாக அரசு அனுமதியின்றி பல இடங்களில் பலர் ஏமாற்றும் முறையில் பாலிடெக்னிக்குகள் என்ற பெயரில் சின்ன இடங்களில் வைத்து, அங்கங்கே ஆரம்பிக்கிறார்கள். அவர்கள் எந்த அரசு அனுமதியும் இல்லாமல் ஆரம்பிக்கிறார்கள். அது அரசுக்குத் தெரியுமா ? அதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அரசு விதித்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்கிறவர்களுக்கு, அரசு அனுமதி தந்திருக்கிறது.

[1985 ஜூன் 24

## திருவாரூர்—மயிலாடுதுறை பேருந்துப் பணி

342—(* வினா எண் 862)—திரு. மா. பணிமாறன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் வழியாக திருவாரூரிலிருந்து மயிலாடுதுறை சென்று கொண்டிருந்த பேருந்து குறுக்கு வழியில் செல்வதால் அரசு ஊழியர்கள், வழக்கறிஞர், பள்ளி மாணவர் படும் சிரமத்தை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இதுகுறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி : தலைவர் அவர்களே, (அ) திருவாரூரிலிருந்து நன்னிலம் வழியாக மயிலாடுதுறைக்குச் செல்லும் சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளும், தனியார் பேருந்துகளும் தற்போது தினமும் தவறாமல் நன்னிலம் வழியாகச் செல்லுகின்றன.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

## சென்னை—பம்பாய் விரைவுப் பேருந்துப் பணி

343—(*வினா எண். 1244,—திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னை—பம்பாய் வழித் தடத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் பேருந்துக்களை விட எண்ணியுள்ளதா ?

(ஆ) எத்தனை பேருந்து வழித்தடங்களுக்கு அரசு அங்கீகாரம் கொடுத்துள்ளது ?

(இ) எப்போது முதல் பேருந்துகள் ஓடத் துவங்கும் ?

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி : தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) இதற்கென மோட்டார் வாகன விதிப்படி வரைவுத் திட்டம் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தால் (ஸ்கீம்) தீட்டப்பட்டு வருகிறது. இத்திட்டம் கிடைக்கப்பெற்றப் பின் அவை அரசால் பரிசீலனை செய்யப்பட்டு பேருந்தை இயக்க ஒப்புதல் அளிக்கப்படும்.



1985 ஜூன் 24]

திரு. மு. இராமநாதன் : தலைவர் அவர்களே, ஈரோட்டி லிருந்து சென்னைக்குத் தூங்கும் வசதியோடு பஸ் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதைப் போல சென்னையிலிருந்து பம்பாய்க்குச் செல்லக்கூடிய பஸ்களை ஏற்பாடு செய்யும்போது தூங்கும் வசதியுள்ள பஸ்களாக அரசு அமைக்குமா ? அல்லது ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட இருக்கைகளைக் கொண்ட பஸ்களாக விடுவதற்கு உத்தேசித்து இருக்கிறதா ? அதனுடைய கட்டணம் உத்தேசமாக எவ்வளவு ஆகும் என்ற விவரத்தைத் தெரிவிப்பார்களா ?

(முற்பகல் 9-30.)

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அதனுடைய விவரம் வருமாறு : 1,550 கிலோ மீட்டர் தூரம். அதை வைத்துக் கட்டணத்தை நீங்கள் கணக்குப் போட்டுக் கொள்ள முடியும் என்று கருதுகிறேன். எப்படிப்பட்ட பேருந்து விடுவது என்பதைப்பற்றி ஆய்வு முடியவில்லை. காரணம் 3 மாநிலங்களைக் கடந்து அந்தப் பேருந்துகள் செல்லவேண்டி இருக்கின்ற காரணத்தினால் அதற்காக ஒரு ஸ்கீமை ஏற்பாடு செய்துக் கொண்டிருக்கிறார்கள். திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் அதை முடித்ததற்குப் பின்புதான் இதை முழுமையாக ஆய்வு செய்ய முடியும். நீண்ட தூரப்பயணமாக இருப்பதால் எந்த எந்த இடங்களிலே பணியாட்களை அமர்த்துவது எந்த எந்த இடங்களிலே அவர்களை மாற்றுவது என்பதுபோன்ற பெரிய சிரமங்கள் இருக்கின்றன. இதையெல்லாம் ஆய்வுசெய்து தான் முடிவு செய்யவேண்டும். அதற்குப் பின்புதான் எப்படிப்பட்ட பேருந்துகளை விடுவது என்பதைப்பற்றி ஆலோசிக்க வேண்டும்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, ஈரோட்டிலிருந்து சென்னைக்கு தூங்கும் வசதி பஸ்கள் விடப்படுகின்றன. பெரிய மாநகரமாகிய கோவை நகரத்திலிருந்து அதைப்போன்று தூங்கும் வசதியுள்ள பஸ்கள் சென்னைக்கு விடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ? அதைப்போலவே ஏர்கண்டிஷன் பஸ்களை விடுவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஏர்—கண்டிஷன் பஸ் விடுவதைப்பற்றி வேண்டுமானால் ஆலோசிக்கலாம். ஆனால் தூங்கும் வசதி உள்ள பஸ்கள் விடுகிறபோது அதிக நேரத்திற்கு முன்னாலே கோவையிலிருந்து அந்த பஸ்கள் புறப்பட வேண்டியிருக்கின்ற காரணத்தினால்— 8 மணியிலிருந்து தூங்குவது கடினம் என்ற காரணத்தினால் —10 மணிக்குப் பின்னாலே புறப்படுகிற இடமாகப் பார்த்து விடவேண்டுமென்ற முறையிலே ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. தூங்கும் வசதி பஸ்கள் அதிகப்படியாக விடுவதைப்பற்றி

இன்னும் ஆய்வு செய்துக்கொண்டிருக்கிறோம். இன்னும் முடிவு
ஏற்படவில்லை. முடிவு ஏற்பட்டதற்குப் பின் கோவை பற்றி
ஆலோசிக்கப்படும்.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே,
திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் தஞ்சை
மாவட்டத்திலே குறிப்பாக பேராவூரணி, பட்டுக்கோட்டை
போன்ற இடங்களுக்கு வருகின்ற பேருந்துகள் மிகவும் பழு
தடைந்த நிலையில் இருக்கின்றன. நான் நேற்றைக்கு முழுமை
யாக நனைந்து அசிங்கமான நிலையில் சென்னை வந்து சேர
வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஆகவே, அந்த நிலையிலே
ஓடுகின்ற பேருந்துகளை உடனடியாக மாற்றுவதற்கு அரசு
ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே,
ஏதாவது இரண்டொரு வண்டிகள் அப்படி இருந்திருக்கலாம்.
இப்போது திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்த
வரையில் 50 புதிய பேருந்துகளை மாற்றம் செய்வதற்குத்
தயார் செய்து வைத்திருக்கிறோம். ஏற்கெனவே நான் பலமுறை
சொல்லியிருக்கிறேன். மாதம் 25 பேருந்துகளுக்குக் குறையாமல்
புதிய பேருந்துகளாக மாற்றவேண்டுமென்று சொல்லிக்கொண்டி
ருக்கிறோம். 5, 6 மாதங்களுக்குள் அந்த வண்டிகள் புதிதாக
மாற்றப்படும். இப்போது 3 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான்
பேருந்துகளை மாற்றிக் கொண்டிருக்கிறோம். அதற்கு மேல்
விடுவதில்லை. இருந்தாலும், பாதைகள் காரணமாகவும் அதிக
தூரம் பேருந்துகள் ஓட்டப்படுகிற காரணத்தாலும் ஒரு பேருந்
துக்கு 4 மணி நேரத்திற்கு மேல் பராமரிப்பதற்கு நேரமும்
கிடைப்பதில்லை என்ற காரணத்தாலும் இப்படிப்பட்ட குறை
பாடுகள் ஏற்படுகின்றன. எனவே மாற்றுப் பேருந்துகள், ஸ்பேர்
பஸ்கள் 10 சதவீதத்திற்கு மேல் இருக்க வேண்டுமென்று நட
வடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அந்தக் குறிப்பிட்ட
பேருந்துபற்றி மாண்புமிகு உறுப்பினர் சொன்னால் உடனடியாக
நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மு. இராமநாதன் : தலைவர் அவர்களே, அமைச்சர்
அவர்கள் 8 மணிக்குள் பஸ் புறப்பட வேண்டிய அவசியம் இருப்ப
தால் 8 மணிக்கு யாரும் தூங்க முடியாது. ஆகவே யோசிக்க
வேண்டியிருக்கிறது என்று சொன்னார்கள். நான் தங்கள் மூல
மாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது 10 மணிக்கு
மேல் கோவையிலிருந்து சென்னைக்குப் புறப்படுகிற அளவுக்கு
ஒரு வழித்தடத்தை ஏற்பாடு செய்வார்களா ? கோவை மாநகரம்
ஒரு பெரிய இண்டஸ்ட்ரியல் செக்டர் என்ற முறையிலே மக்கள்
வசதியாக போகிற முறையில் அது அமையும். ஆகவே, சுரோட்
டிற்குத் தருகிற முன்னுரிமையைக் கோவைக்கும் தருகிற முறை
யிலே அதை மறுபரிசீலனை செய்வார்களா ?





மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே,
இரவு புறப்படுவதைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்
பினருடைய ஆலோசனை ஏற்றுக்கொள்ளத் தக்கது. ஆனால்
காலை நேரத்தைப்பற்றிக் கொஞ்சம் யோசித்துப் பார்க்க
வேண்டும். இரவு 10 மணிக்குப் புறப்பட்டால் காலை 7 மணிக்
குத்தான் வந்து சேர வேண்டியிருக்கும். எனவே, 5½ மணிக்
குத் தூங்கி எழுந்தால் கொஞ்சம் வசதிகள் தேவைப்படும்.
அப்படிச் சிரமங்கள் ஏற்படுமானால் கொஞ்சம் சிரமமாகிப்
போய்விடும். எனவே, 5½ மணிக்குள்ளாக வந்து சேரு
வதற்கான இடமாகவும் இருக்கவேண்டும்.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, சென்னை
யிலிருந்து பம்பாய்க்குப் பேருந்து விடுவதைப்பற்றிய திட்டம்
ஆய்வில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்
னார்கள். அதைப்போன்று இந்தியாவிலேயே உள்ள
பெரிய நகரங்களான டெல்லி, கல்கத்தா, ஹைதராபாத்
போன்ற நகரங்களுக்கும் பேருந்துகளை விடுவதற்குப் பரிசீலனை
செய்வார்களா ? பம்பாய்க்கு விடுவதைப்பற்றிப் பரிசீலனை செய்
கின்ற இந்த சமயத்திலே அதையும் அமைச்சர் அவர்கள் பரி
சீலனை செய்வார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே,
இதையே தான் நாங்கள் ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம்.
டெல்லி வரையில் விட்டால் அந்தப் பகுதிகளில் அது எங்கே
இருக்கிறது, எப்பொழுது வரும் என்று தெரியாமல் போய்விடும்.
எனவே இது போன்று பல சிரமங்கள் இருக்கின்றன. அவ்வளவு
தூரம் பேருந்துகளை விடுகிறபோது அந்தப் பணியாளர்களை
இடையில் மாற்றுவது அவர்களுக்கு வேண்டிய வசதிகளை ஆங்
காங்கே செய்து கொடுப்பது எல்லாம் கடினமாகப் போய்விடும்.
இதே காரணத்தினால் தான் இதிலும் காலதாமதம் ஏற்படக்
கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஹைதராபாத், மாகி
போன்ற இடங்களுக்கு விட வேண்டும் என்ற குறிப்பு இருக்கிறது.
அதற்கான ஆய்வும் நடந்துக் கொண்டிருக்கிறது. வேண்டு
மானால் அருகாமையில் இருக்கிற பெரிய நகரங்களுக்கு விட
நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. நி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இண்டர்-ஸ்டேட் பெர்மிட் வழங்குவதில் காலதாமதம்
ஏற்படுகிறது. அந்தக் கால தாமதத்தை தவிர்த்து, மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தித்
தர நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, குறைந்த பட்சம் ஆண்டுக்கு ஒரு முறை
யாவது அதிகாரிகள் மட்டத்திலோ அல்லது அமைச்சர்கள்

மட்டத்திலோ கூடி இந்த இண்டர்-ஸ்டேட் பெர்மிட் வழங்குவது குறித்து சந்தித்துக் கொள்கிறோம். ஆனாலும் சில இடங்களில் கால தாமதம் ஏற்படுகிறது. அதுவும் பெரும்பாலும் இரண்டு மாநிலங்களுக்கிடையில் ஏற்படும் பிரச்சினை இது என்பதால் தான் சில இடங்களில் அப்படி ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனாலும் முடிந்த வரையில் விரைவாகத்தான் கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது இடங்களைக் குறிப்பிட்டுச் சொல்லச் சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் தஞ்சைக்கு வரக்கூடிய அனைத்துப் பேருந்துகளும் மிகவும் மோசமாக பழுதடைந்த நிலையிலேயே இருக்கின்றன. குறிப்பாக மன்னார்குடியிலிருந்து தஞ்சைக்கு வரக்கூடிய பேருந்து, வேதாரண்யத்திலிருந்து தஞ்சைக்கு வரக்கூடிய பேருந்து, தஞ்சையிலிருந்து 9 மணிக்கு புறப்படக்கூடிய பேருந்து போன்றவைகள் எல்லாம் இங்கே உள்ள நம்முடைய கொரடா அவர்கள் அதில் ஏறி உட்கார்ந்த உடனேயே அவருடைய சட்டை கிழிந்து விட்டது—அப்படி அவ்வளவு மோசமாக தஞ்சை மாவட்டப் பேருந்துகளின் நிலை இருக்கிறது. ஆகவே அவைகளை மாற்றி நல்ல பேருந்துகளாகக் கொடுப்பதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இதற்கு விளக்கமாகப் பதில் சொல்லியிருக்கிறேன். தஞ்சைக்கு வேண்டுமானால் தனியாகக் கவனிக்கலாம்.

திரு. என். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு பஸ்ஸை சொல்ல வேண்டும் என்று சொன்னார்கள். திருச்செந்தூர் தேவஸ்தானத்திலிருந்து காலை 5½ மணிக்கு விடக்கூடிய 600-ஆம் எண் கொண்ட டீலக்ஸ் பஸ் கடந்த 2 ஆண்டுகளாக மிகவும் பழுதடைந்த நிலையில் ஓடிக் கொண்டிருக்கிறது. நாங்களும் அங்கே புதிய பஸ்ஸை விட வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். இது வரையில் விடப்படவில்லை. ஆகவே இனியாவது உடனடியாக அங்கே புதிய பஸ்ஸை விடுவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : இதுவரையில் விடவில்லை. இனிமேல் நிச்சயமாக விடப்படும்.



அம்பாசமுத்திரம் சாலையில் ஆற்றின் குறுக்கே பாலம்.

344— (*வினா எண் 1570)— திரு. சா. துரைசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் தருவை அருகில் அம்பாசமுத்திரம் சாலையில் கோரை ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

திரு. சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலமானது மிக முக்கியமானது. குறிப்பாக அந்தப் பகுதியிலே இருக்கிற, விக்கிரமசிங்கபுரம், கடையம், தென்காசி, அம்பாசமுத்திரம், சேரன்மாதேவி, பாளையங்கோட்டை போன்ற பகுதிகளுக்கு— அதுவும் நம்முடைய சபாநாயகர் அவர்களுடைய தொகுதிக்கும் வெகு முக்கியமாக இருக்கிற—ஒரு முக்கியமான பாலம் அது. சிறிது மழை பெய்தாலும் கூட அந்தப் பகுதியில் போக்குவரத்துக்கள் அப்படியே நிறுத்தப்படுகின்றன. எனவே இந்தக் குறையை நீக்கினால் அந்தப் பகுதி மக்கள் எல்லாம் மகிழ்ச்சிக் கடலிலே திளைப்பார்கள். ஆகவே, அதற்கான செயற்குறிப்பு இல்லாவிடினும், அதன் முக்கியத்துவத்தைக் கருதி, அதில் தனியாக கவனம் செலுத்தி, நடப்பு நிதி ஆண்டிலேயே அதைத் துவக்குவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே, செயற்குறிப்பு எல்லாம் இருக்கிறது. ஆனால் 50 இலட்சம் ரூபாய் செலவு ஆகும் என்ற காரணத்தினால்தான் காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அங்கிருக்கிற மக்கள் எல்லாம் இந்தப் பாலம் வந்தால் மகிழ்ச்சிக் கடலிலே திளைப்பார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இங்கிருக்கிற நமது சபாநாயகர் அவர்கள் கூட மகிழ்ச்சிக் கடலிலே திளைப்பார்கள் அதை எடுத்துக் கொண்டால். எனவே நடப்பு நிதி ஆண்டிலேயே தொடங்குவதற்கான முயற்சியை அரசு ஆய்வில் எடுக்கும்.

திரு. சா. துரைசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, நடப்பு நிதி ஆண்டில் எடுத்துக் கொள்வதற்காக நன்றி. இது போல தமிழகம் முழுவதும் பல்வேறு இடங்களில் தரைப் பாலங்களில் மழையின் காரணமாக போக்குவரத்து பாதிக்கப்படுகிற

நிலைமை பல்வேறு இடங்களில் இருக்கிறதே. அவைகளை எல்லாம் மாற்றி அமைக்கின்ற முறையில் பணிகளை எடுத்துச் செய்கின்ற செயற் குறிப்பு அரசின் கவனத்தில் உள்ளதா ? அப்படி இருந்தால் அவைகளின் விவரங்களை தர இயலுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே, அரசாங்கம் முயற்சி எடுக்கும் என்றுதான் சொன்னேன். முயற்சி என்றால் அதை எடுப்பதற்கான முயற்சி என்று அர்த்தம். இங்கே நடவடிக்கையே எடுக்கப்பட்டு விட்டது போல் அவர்கள் சொல்லுகிறார்கள். அடுத்து, எல்லா இடங்களிலும் இருக்கிற பாலங்கள் பற்றிச் சொன்னார்கள். அந்தக் குறிப்பு தற்போது இல்லை. வேண்டுமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்பினால், எல்லா இடங்களிலும் இருக்கிற பாலங்களுடைய நிலைமைகளைப் பார்த்து, அவைகளை 1, 2, 3 என்று தரம் பிரித்து, அவைகளிலே எங்காவது இப்படிப்பட்ட நடவடிக்கை தேவைப்பட்டால், எதிர்காலத்தில் அவைகள் மீது அரசு நடவடிக்கை எடுக்கும்.

(முற்பகல் 9.40)

திரு. ஆர். எஸ். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, அந்தப் பாலம் இல்லாததால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஏனென்றால் திடீரென்று வெள்ளம் வந்து விடுகிறபோது போக்குவரத்து பாதிக்கப்படுகிறது. எப்போது வெள்ளம் வருமென்று யாருக்கும் தெரிவதில்லை. ஆகவே உடனடியாக அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு அரசாங்கம் ஆலோசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஏற்கனவே அதைத்தான் சொன்னேன். இந்த நிலைமைகளை ஆலோசித்து, அரசாங்கம் வருகிற நிதியாண்டில் ஆய்வு செய்து அது பற்றி முடிவு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமென்று சொல்லியிருக்கிறேன்.

நாகர்கோவில்—இரணியல் சாலையில் வள்ளியாற்றுப் பாலம்.

345— (*வினா எண் 1802)— திரு. எம். எம். இராசரத்தினம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம், நாகர்கோவில்- இரணியல் நெடுஞ் சாலையிலுள்ள வள்ளியாறு பாலம் பழுதடைந்திருப்பதால் அங்கே புதிதாக பாலம் கட்டும் செயற் குறிப்பு அரசில் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவக்கப்படும் ?



மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. எம். எம். இராசரத்தினம் : தலைவர் அவர்களே, இந்தப் பாலம் கொளச்சல், தேங்காய் பட்டணம், கருங்கல் போன்ற நகரப் பகுதிகளை இணைக்கிற பாலமாக இருக்கிற தால், அதனுடைய முக்கியத்துவத்தைக் கருதி, இரணியல் நெடுஞ்சாலையில் பாலம் கட்டுகிற பணியை அரசு மறுபரிசீலனை செய்து இந்த ஆண்டிலேயே அதனைத் துவக்குவதற்கு உத்தர விடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவர் அவர்களே, நிதி நிலையைப் பொறுத்து இந்த ஆண்டில் எடுத்துக் கொள்ள முடியுமா என்பது ஆய்வு செய்யப்படும்.

அழகும் பெருமாளூரில் சத்துணவுக்கூடம்.

346—(*வினா எண் 35)—திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியத்தைச் சார்ந்த அழகும் பெருமாளூரில் கட்டப்பட வேண்டிய சத்துணவுக் கூடம் அங்கு கட்டப்படாமல் அரசு உத்திரவுகளுக்கு விரோதமாக வேறு ஊரில் கட்டுப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) அரசு உத்திரவுக்கு விரோதமாக கட்டிடம் கட்டப் பட்டதற்காக அரசு என்ன நடவடிக்கை எடுக்க உள்ளது ?

(இ) அழகும் பெருமாளூரில் உடன் சத்துணவுக் கூடம் கட்டப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, (அ) அழகும் பெருமாளூர் சத்துணவுக் கூடம் என்று பெயர் தாங்கிய சத்துணவுக் கூடம் அழகும் பெருமாளூரிலிருந்து சுமார் 500 அடி தூரமேயுள்ள சின்னநாடாளூரில் வெகு அருகில் கட்டப்பட்டுள்ளது.

(ஆ) அரசு உத்தரவிற்கு மாறாக கட்டிடம் கட்டப்பட வில்லை.

(இ) அழகும்பெருமாளூரில் மொத்தம் 20 (இருபது) பிள்ளைகள் மட்டும் சத்துணவு சாப்பிட வருகின்றனர். எனவே அழகும்பெருமாளூரில் மற்றொரு சத்துணவுக் கூடம் புதிதாக கட்ட எத்தவிதமான ஆலோசனையும் இல்லை. மேலும் சின்னநாடாளூரில் தற்போது இயங்கிவரும் சத்துணவுக் கூடம் 500 அடி தொலைவில்தான் உள்ளது

[1985 ஜூன் 24

சத்துணவுப் பற்றிய ஆய்வு.

347—(*வினா எண் 1634)—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சத்துணவுத்திட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சத்துணவு பற்றி கோவை அவிநாசி மகளிர் கல்லூரி மாணவிகள் ஆய்வு செய்தனரா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது. ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே:

(அ) கோவை அவிநாசிலிங்கம் மகளிர் கல்லூரியின் இயக்குநர் மேற்பார்வையில் அவ்வப்போது முதலமைச்சர் சத்துணவு கூடங்களில் உணவு அருந்தும் குழந்தைகளின் வளர்ச்சி பற்றி ஆய்வு செய்யப்படுகிறது.

(ஆ) அவர்களது ஆராய்ச்சியின்படி சத்துணவு பெறும் குழந்தைகள் நல்ல வளர்ச்சியும் எடை கூடுதலும் பெற்றிருக்கிறார்கள் என அறிய வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, கோவை அவிநாசிலிங்கம் மகளிர் கல்லூரியைச் சேர்ந்தவர்கள் எங்கே ஆய்வு செய்தார்கள் ? அவர்கள் ஆய்வு முடிந்துவிட்டதா ? அல்லது அவர்கள் இன்னும் ஆய்வு செய்து வருகிறார்களா ? என்ன ஆய்வு செய்தார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்களில் உணவு அருந்தும் குழந்தைகளின் வளர்ச்சியை பற்றி அவர்கள் ஆய்வு செய்தார்கள். இந்த ஆய்வு 1983-ம் ஆண்டு முதல் 1984-ம் ஆண்டு வரையில் 12 மாத இடைவெளியில் செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆய்விலே ஈடுபட்டவர்கள் கோவை அவிநாசிலிங்கம் மகளிர் கல்லூரியின் இயக்குநர் மேற்பார்வையில் அங்கே படிக்கிற மாணவிகள் ஆய்விலே ஈடுபட்டார்கள். குழந்தைகளின் வளர்ச்சியில் முன்னேற்றம் தெரிகிறது என்று அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, கோவை அவிநாசிலிங்கம் மகளிர் கல்லூரியைச் சேர்ந்தவர்கள் சத்துணவு பற்றி ஆய்வு செய்துள்ளதைப் போல வேறு யாராவது ஆய்வு செய்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, பூனா பல்கலைக்கழகத்திலிருந்து இது பற்றி ஆய்வு செய்திருக்கிறார்கள். இன்னும் அவர்களுடைய அறிக்கை நமக்கு வரவில்லை.



1985 ஜூன் 24]

திரு. மு. இராமநாதன் : தலைவர் அவர்களே, கோவை மாநகரத்தில் இருக்கிற அவினாசிலிங்கம் மகளிர் கல்லூரி என்று சொல்லக்கூடிய மகளிர் இணையியல் கல்லூரியின் சார்பாக அதன் டைரக்டர் அவர்களும் மற்றும் ஆசிரியர் பெருமக்களும் சேர்ந்து ஆய்வு செய்து ஒரு ரிப்போர்ட் தந்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி சத்துணவுக் கூடங்களை அவர்கள் பார்வையிட்டு தந்திருக்கிற அந்தக் குறிப்பிலே, மாணவ மாணவிகள் அல்லது சிறார்களுக்கு தரப்படுகிற உணவிற்கு, மேலும் கூடுதலாக இன்னும் காய்கறிகள், அல்லது வேறு வகையான சத்துணவு தருவதற்கு பரிந்துரை செய்திருக்கிறார்களா ? அந்த அறிக்கையில் அவர்கள் என்ன கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்தில் வழங்குகிற சத்துணவால் எந்த அளவிற்கு குழந்தைகளுக்கு அது வளர்ச்சியை தருகிறது என்பதை, அது உடல் வளர்ச்சி மட்டுமல்லாமல் மனவளர்ச்சியையும் குழந்தைகளுக்கு அதனால் கிடைக்கிற சுறுசுறுப்பையும் பற்றியெல்லாம் அவர்கள் ஆராய்ந்து இருக்கிறார்கள். இப்போது தருகின்ற அந்தச் சத்துணவே போதும் என்று தெரிவித்து, வேறு எதுவும் புதிதாக சேர்க்க வேண்டாம் என்று கூறியிருக்கிறார்கள்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறும்போது, அவிநாசி மகளிர் கல்லூரி மாணவிகள் இந்த ஆராய்ச்சியை நடத்துவதாக சொன்னார்கள். அந்த மாணவிகள் படித்துக் கொண்டு இருப்பவர்கள். அவர்களுடைய ஆராய்ச்சி முடிவுகளை அரசாங்கத்தினுடைய அதிகாரப்பூர்வமான முடிவுக்கு அடிப்படையாகக் கொள்கிறார்களா ? அரசாங்கத்தினுடைய விஞ்ஞானிகள் இதற்கு என்று நியமிக்கப்பட்டு, அந்தக் குழந்தைகளுக்குக் கொடுக்கும்படியான உணவில் எந்த அளவிற்குச் சத்துணவு உள்ளது, அரசாங்கம் வரையறுத்த அளவிற்கு ஊட்டச் சத்துக் கொடுக்கப்படுகிறதா, அவர்களுடைய வளர்ச்சி எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை ''ஆதன்டிக்காக'' அரசுக்குத் தெரிவிக்க விஞ்ஞானிகள் கொண்ட குழுவை வைத்து ஆராய்ச்சி நடத்த முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, கல்லூரிகளில் பயில்கின்ற மாணவிகள் என்று சொல்லுகின்றபோது அவர்கள் சாதாரண மாணவிகள் அல்ல. படித்து பட்டம் பெற்று, மேல் படிப்பிற்காக படித்துக் கொண்டு இருப்பவர்கள்தான் இந்த ஆய்வை நடத்துகிறார்கள். அவர்கள் செய்யும் அந்த ஆய்வு விஞ்ஞானிகளுடைய ஆய்வைப் போன்றதாகும். ஆகவே அந்த ஆய்வினுடைய கருத்துக்கள் மறுக்கக்கூடியதாகவோ, அல்லது தரம் குறைவானதாகவோ, நிச்சயமாக இல்லை. அதுமட்டுமல்லாமல் நம் கண்முன்னால் நடைபெறுகின்ற அந்த ஆய்வு உண்மையானது என்றும் தெரிய வருகிறது.

[1985 ஜூன் 24

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோவை அவிநாசிலிங்கம் மகளிர் கல்லூரி மாணவிகள் எந்தந்தப் பகுதிகளில், எவ்வளவு மாணவக் குழந்தை களிடம் என்ன வகையான ஆய்வுகளை நடத்தி இருக்கிறார்கள் என்பதையும், அதனால் ஏற்பட்ட முன்னேற்றங்களையும் அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கைகளையும் அமைச்சர் அவர்கள் விளக்க முன்வருவார்களா என்பதை நான் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை நகரத்தைச் சுற்றியுள்ள கிராமப்பகுதி, மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில், 3,757 குழந்தை களின் வளர்ச்சி பற்றி ஜூன் 1983, முதல் 1984 ஆம் ஆண்டு வரை, 12 மாத இடைவெளியில் ஆய்வு எடுத்துக் கொள்ளப் பட்டது. குழந்தைகள் 4 செ. மீ. முதல் 6 செ. மீ. உயரம் வரை கூடுதலாகி இருப்பதாக கண்டறியப்பட்டது. ஆண் குழந்தைகள் 1.50 முதல் 2.63 கிலோ கிராம் வரையிலும், மற்றும் பெண் குழந்தைகளைப் பொறுத்தவரை 1.54 முதல் 2.75 கிலோ கிராம் வரையில் கூடுதலாக எடை ஏற்பட்டதாக அவர்கள் குறிப் பிட்டு இருக்கிறார்கள். இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம், ஐ. சி. எம். ஆர். 1971-ல் நிர்ணயித்து உள்ள அந்த அளவைவிட இந்தத் திட்டத்தினால் பயன் பெறும் குழந்தைகளுடைய அளவு கூடுதலாகப் பயன்பெற்று இருக்கிறார்கள். என்பதையும் ஆய்வின் மூலமாக கண்டறிந்து இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், இந்தப் பயன் பெறும் குழந்தைகளுடைய 2250 பெற்றோர்கள் நேரடியாக ஆய்வு செய்யப்பட்டு அந்த ஆய்வின் அடிப்படையில் குழந்தைகள் மிக வேகமாக வளர்வதாக வும், 50 விழுக்காடு வரையிலும் குழந்தைகளின் தலைமுடி கூட செழுமையுடன் வளர்ந்து இருப்பதாகவும், கருமை நீலம் உள்ள தாக இருப்பதாகவும் குறைந்த கண்பார்வை, மாலைக்கண் நோய் போன்றவைகள் தடுக்கப்பட்டதாகவும், கண்ணீர் நீர்வடி தல், போன்றவை குறைந்ததாகவும் கூறியிருக்கிறார்கள். மேலும் குழந்தைகளுடைய பற்கள், ஈறுகள் போன்றவைகள் முன்பு இருந்ததைவிட திடமாகவும், அதிலே முன்னேற்றம் காணப்படுவ தாகவும், தாய்மார்களே, நேரடியாக அறிவித்திருக்கிறார்கள். சொறி சிரங்கு, போன்றவைகள்கூட பெருமளவு குறைந்திருப்பதாக அந்த ஆய்வின் முலம் தெரிய வருகிறது.

டாக்டர் ந. மாசிலாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சத்துணவு ஆராய்ச்சி பற்றி மற்ற இடங்களில் ஆராய்ச்சி செய்வதைவிட இந்த மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த பேராசி ரியர்களும், மருத்துவ மாணவர்களும் சேர்ந்து செய்தால் சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறேன். அதன்படி அரசு மருத்துவக் கல் ரி சளுக்கு இதைப்பற்றி ஆராய்ச்சி செய்வதற்கு பரிந்துரை செய்யப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன். இரண்டாவதாகஎடை கூடியிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். குழந்தைகளுக்கு எடை கூடியிருப்பது என்பது, சாப்பிடுவதற்கு முன்பா சாப்பிட்டதற்கு பின்பா என்பதை அறிய விரும்புகிறேன்.



1985 ஜூன் 24]

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவ மனையில் பணியாற்றுபவர்கள் இந்த ஆய் வை நடத்த வேண்டும் என்று சொல்கிறார்கள். இப்போது அது செய்யப்பட்டு வருகிறது. அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கின்ற பி. எச். சி. லே உள்ள டாக்டர் ஒவ்வொரு குழந்தை யையும் 6 மாதத்திற்கு ஒரு முறை பரிசோதனை செய்து அந்தக் குழந்தைகளுடைய வளர்ச்சியிலே எந்த அளவிற்கு முன்னேற்றம் காணப்படுகிறது என்பதை அங்கே உள்ள ஹெல்த் கார்டிலே குறித்து வருகிறார்கள். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தக் கருத்தை அரசு ஏற்கனவே செய்து கொண்டு வருகிறது. இரண்டாவதாக எடை எடுத்தது, சாப்பிட்டதற்குப் பின்பா, அல்லது முன்பா என்று றுப்பினர் அவர்கள் கேட்டார் கள். எப்போது எடுக்க வேண்டுமோ, அப்போது அதைக் கண்டு பிடித்து எடுத்து இருக்கிறார்கள்.

## வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்கள்.

348— (*வினா எண் 213)— திரு. மா. சின்னராசு மற்றும் திரு. செ. செம்மலை : மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதிதாக வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கம் அமைக்க தடை ஏதும் விதிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : இல்லை.

(முற்பகல் 9-50)

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரணமாக ஒரே அமைப்பில் ஒரே தொழிற்சாலையில் பணிபரிகிறவர்கள் ஒன்றுசேர்ந்து ஒரு கூட்டுறவு அமைப்பாக தங்களுக்கு வீடு கட்டிக்கொள்வதற்கு முன்வந்தால் அது நிதி பற்றாக்குறை காரணமாக அரசு உதவ முடியாது என்ற நிலை இருக்கிற காரணத்தால் அது போன்ற பிரேரணைகளை தேவைகளை எடுத்துக்கொள்வதற்கு அரசு முன்னுரிமை கொடுக்காமல் ஒத்தி வைக்கப்படுகிறது என்று அதிகாரிகள் மத்தியில் சொல்கிறார்கள். அது மாண்புமிகு அமைச்சருக்குத் தெரியுமா ? அப்படி நிதி பற்றாக்குறை காரண மாக புதிதாக சங்கங்கள் துவக்குவதை ஊக்குவிக்கவில்லை என்கிற ஒரு முடிவு அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறதா என் பதை அறிய விரும்புகிறேன்.

[1985 ஜூன் 24

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக புதிதாக கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களைப் பொறுத்தவரையில் துவங்கினால் அதை வேண் டாம் என்று சொல்லுகிற ஒரு குறிப்பு அதிகாரிகள் மத்தியில் சொல்லவில்லை. ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் 607 பேரூராட்சி மன்றங்கள் இருக்கின்றன. 607 பேரூராட்சி மன்றங்களிலும் கிட்டத்தட்ட அத்தனை இடங்களிலும் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் இருக்கின்றன. அதுபோல 106 நகராட்சி மன்றங்கள் இருக்கின்றன. அத்தனை இடங் களிலும் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் இருக்கின்றன. புதிதாக சங்கங்கள் துவக்கினால் அவசியமாக இருந்தால் அதைப் பற்றி அரசு பரிசீலனைச் செய்யும். நிதியைப் பொறுத்தவரை யில் ஏற்கனவே, முறைப்படி நிதி வந்து கொண்டிருக்கின்றது. அந்த அடிப்படையில் இப்போது மேலும் நிதி பெறுவதற்கு 'அட்கோ' நிறுவனத்திடம் கேட்டுக்கொண்டு இருக்கிறோம். அங்கிருந்து பதில் வரவில்லை. இப்படிப்பட்ட மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்தினை மையமாக வைத்துத்தான் அட்கோ நிறுவனத்துடன் பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறோம். அவர் கள் பதில் அனுப்புவதாக சொல்லியிருக்கிறார்கள்.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் நேரடியாக அட்கோ நிறுவனத்திடம் கடன் வசதியைப் பெறுவதற்கு அனுமதிக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மூலமாக அந்தக் கருத்து வந்து அரசு 'அட்கோ' நிறுவனத்திற்கு தெரிவிப்பது என்ற அடிப்படையில் தான் இதுவரை நடைமுறையில் இருந்து கொண்டிருக்கிறது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இப்படிப்பட்ட வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக ஒரு வீடு கட்டவேண்டும் என்று சொன்னால் நிர்ணயிக்கப்பட்டு இருக்கிற அதிகபட்ச கடன் தொகை 60 ஆயிரம் ரூபாய் ஆகும். ஆனால் இப்போது இருக்கிற விலைவாசி, பொருள்களின் விலை உயர்வு இவைகளை கருத்தில் கொண்டு பார்க்கிறபோது இந்தத் தொகை குறைவாக இருப்பதாக கடன் வாங்குவோர் மத்தியில் ஒரு கருத்து இருந்து வருகிறது. எனவே இந்தத் தொகையை அதிகபடுத்துவதற்கு, 60 ஆயிரம் ரூபாய் என்ற அந்தத் தொகையை குறைந்தபட்சம் 1 லட்சம் ரூபாய் என்று உயர்த்தித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்பு கிறேன்.



1985 ஜூன் 24]

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1983 ஆம் ஆண்டு 60 ஆயிரம் ரூபாய் என்று வீடு கட்டுவதற்கு ஒரு மேக்ஸிம் லிமிட் என்ற அடிப்படையில் கடன் தந்து கொண்டு இருக்கிறார்கள். இப் போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தில் நியாயம் இருப்பதாலும், விலைவாசிகள் உயர்ந்து இருப்ப தாலும் கொஞ்சம் அதிகரித்து கொடுத்தால் தான் வீடு கட்டு வதற்கு நல்லது என்ற ஒரு கருத்து இருக்கிறது. நாளை மறு தினம் 26 ஆம் தேதி இது சம்பந்தப்பட்ட டிமாண்டு இருக்கிற காரணத்தால் அப்போது அவர்களின் நியாயமான கோரிக்கை கவனிக்கப்படும்.

திரு. செ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கிற வீட்டு வசதி சங்கத்தின் மூலமாக 60 ஆயிரம் ரூபாய் கடன் வழங்குகிறோம். இந்த 60 ஆயிரம் ரூபாயை 3 முறையாக வழங்குகிறோம். இப்படி 3 முறையாக வழங்கும் போது ஒவ்வொரு கால கட்டத்திலும் விலைவாசி ஏறிவிடுகிறது. ஆகவே அதை ஒரே தவணையாக வழங்க அரசு உத்தேசிக்குமா என அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கருத்து பலமுறை வீட்டு வசதி சங்கத்திற்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதில் என்ன சங்கடம் என்றால் ஒரே தடவையாக 60 ஆயிரம் ரூபாயை கொடுத்தால் வீடு கட்டுபவர்கள் அதை வேறு செலவுக்கு உபயோகப்படுத்தி விட்டு பிறகு பாதி அல்லது அஸ்திவாரத்தில் வேலையை நிறுத்தி வைக்கின்ற வரலாறுகளை எல்லாம் நாம் பல்வேறு இடங்களில் காண்கிறோம். ஆகவே 3 முறையாக கொடுத்தால் நிச்சயமாக வீடு கட்டுகின்ற அந்த ப்ரபோஷனேட் எண்ணிக்கையை பார்க்கிற போது இந்த முறைதான் பரவாயில்லை என்ற கருத்து பொதுவாக இருக்கிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கிராமிய கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தின் மூலமாக நாம் 6 ஆயிரம் ரூபாய் ஒரு வீட்டுக்கு கடன் என்று ஒதுக்குகிறோம். அதில் 1,500 ரூபாய் அவர்களே கட்ட வேண்டும். 4,500 ரூபாய் அரசு கொடுக்கிறது. இந்த நிலை மையில் 1983 ஆம் ஆண்டிலிருந்து பல ஆயிரக்கணக்கான வீடுகள் சேங்ஷன் செய்யப்பட்டு அவர்கள் செய்யவேண்டிய பிரிலிமினரி வேலைகள் எல்லாம் செய்து முடித்து அதாவது அந்த பத்திரங்களை எல்லாம் பதிவு செய்து கொடுத்த பிறகும் இப் போது கடந்த 2 ஆண்டு காலமாக அங்கு வீடு கட்டாமல் அங்கே குடிசைகள் எல்லாம் பிரித்து போட்டு அவர்கள் வானம் பறித்து விட்டபிறகு கூட இந்த கடன் வழங்குவது நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறது என்று சொல்லி வீடுகள் கட்டப்படாமல் இருக் கிறது. இதைத் தவறு செய்து மாற்றி உடனடியாக ஏற்கனவே

சேங்ஷன் செய்யப்பட்ட வீடுகளையாவது கட்டுவதற்கு அவர்களுக்கு கடன் வழங்குவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தைப் பொறுத்தவரையில், இது எந்த ஊரிலே எப்படி நடைபெற்றது என்று எழுதிக் கொடுத்தால் நடவடிக்கை எடுக்கப்படும். 1983-வது ஆண்டைப் பொறுத்தவரையில், தமிழக அரசால் 40,092 வீடுகள் இந்தத் திட்டத்தின் அடிப்படையில் கட்டப்பட்டிருக்கின்றன. ஆகவே, எங்காவது குறைபாடுகள் இருந்தால், இந்த அரசைப் பொறுத்தவரையில், குறைபாடுகளைப் போக்குகின்ற வகையில், அதற்கு முன்னுரிமை தரப்படும்.

வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள்.

349—(*வினா எண். 755)—திரு. செ. செம்மலை : மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புற கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்தின் மூலம் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வீடுகள் கட்ட கடன் வழங்க மறுக்கப்படுவது உண்மையா ?

(ஆ) பிற்படுத்தப்பட்டவர்களுக்கென்று குறிப்பிட்ட சதவீதம் ஒதுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இத் திட்டத்தின் கீழ் பயனடைவோர் அனைவரும் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினரே. எனவே பிற்பட்டவர்களுக்கென்று குறிப்பிட்ட சதவீதம் ஒதுக்கீடு செய்யவேண்டிய சூழ்நிலை ஏற்படவில்லை.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களின் மூலம் வருமானம் குறைந்தவர்களுக்கு கடன் கொடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதிலே அனுபவ ரீதியாக உள்ள சங்கடங்கள் என்னவென்றால் ஒரு யூனியனுக்கு 100 வீடுகள் என்று ஒதுக்கப்பட்டு, அப்படி அதிகாரிகள் ஒதுக்குகிற போது, ஏற்கனவே தயார் நிலையில் உள்ள, ஆதி திராவிடர்களுக்கு அப்படிப்பட்ட வீடுகளை அவர்களுக்கு வழங்குவது சுலபமாக இருக்கிற காரணத்தால், முழுவதுமாக அவர்களுக்கு வழங்கிவிடுகிறார்கள். சில நேரங்களில், பிற்படுத்தப்பட்டவர்கள், பேக்வேர்டு கிளாஸ் கம்யூனிட்டியைச் சேர்ந்தவர்கள் சென்று கேட்கிறபோது, அந்த



ஒதுக்கீடு முடிந்து விட்டது. 100 வீடுகள் கொடுத்து ஆகிவிட்டது என்று சொல்லி காரணம் காட்டி, மறுக்கப்பட்டுவிடுகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன அடிப்படையில் பார்த்தால் கூட, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கும் ஒரு குறிப்பிட்ட சதவீதமாவது ஒதுக்கினால் அவர்களுக்கும் அது பயனை ஏற்படுத்தும். எனவே, எப்படி ஆதி திராவிடர்களுக்கு நாம் இந்த சலுகையை அளிக்கிறோமோ, அதேபோல பிற்படுத்தப்பட்டவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட சதவீதமாவது வழங்குவதற்கு அமைச்சரவர்கள் இனிமேலாவது நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் அடிப்படையில் நாம் கொடுக்கின்ற கடனே ரூ. 6,000. வாங்குகின்ற அத்தனை பேருமே ஏழைகள். எனவே, பிற்பட்டோர் என்று தனியாகப் பிரித்துப் பார்க்க வேண்டியது இல்லை. சமுதாயத்தில் பிற்படுத்தப்பட்டவர்கள் தான் இந்த அடிப்படையில் ரூ. 6,000க்கு, குறைவான அளவில் பெற்று வீடுகள் கட்டுகின்றனர். எனவே, தனிப்பட்ட முறையில் ஒதுக்கவேண்டிய அவசியம் இல்லை. பிற்பட்டோர் தரப்பில், முறைப்படி, அவர்களுக்கு முன்னணியில் வந்து கொண்டிருக்கிறது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் கீழ் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மொத்தம் எவ்வளவு வீடுகள் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என்ற அந்த விவரத்தையும், இப்போது நடப்பாண்டில் எவ்வளவு வீடுகள் கட்டுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தையும் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொறுத்த வரையில், இரண்டு இலட்சம் வீடுகள் கட்டுவதற்கு இந்த அரசு முடிவெடுத்து இருக்கிறது. இப்போது நடப்பாண்டைப் பொறுத்தவரையில், நாளை மறுநாள் 26 ஆம் தேதி, அவர்களுடைய கேளவிக்குநான் விளக்கமாக 'டிமாண்டில்' பதில் சொல்கிறேன்.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுக்கு 'தாட்கோ' மூலமாக இலவசமாக வீடுகளைக் கட்டித் தந்து விட்டு, கிராம கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக கடன் வழங்குவது முழுவதுமாக பிற்பட்டவர்களுக்கு வழங்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, கொடுத்த சலுகையை நிறுத்துவது என்பது ஜனநாயக நாட்டிலே அவ்வளவு சுலபமாக நடப்பதில்லை. கருத்து நல்ல கருத்தாகத் தான் இருக்கிறது. பல வீட்டு வசதி சங்கங்கள் கிராமப்புறங்களில் இருக்கின்றன. ஒவ்வொருவருக்கும் ரூ. 6,000 வழங்கி வருகிறார்கள். அரசின் பெருந்தன்மையின் காரணமாக ' தாட்கோ ' மூலம் இலவசமாக வீடுகள் கொடுக்கப்படுகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதிலே தவறில்லை. இருந்தாலும், இதிலே இருக்கிற சங்கடத்தை ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். அந்த அடிப்படையில் பார்க்கிறபோது, ரூ. 6,000 கடன் கொடுப்பது ஒரு பக்கம் இருந்தாலும், நாட்டிலே சொந்தச் செலவில் வீடு கட்டவேண்டும் என்ற தன்னம்பிக்கையைப் பெறும் அடிப்படையில் இந்தத் திட்டத்தை தொடர்ந்து நடைமுறையில் வைத்துக் கொண்டு இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 350, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளிற்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.

### ஆணைக்கூட்டம் நீர்த்தேக்கம்

351(*வினா எண். 977)—திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆணைக்கூட்டம் நீர்த்தேக்கத் திட்டத்தின்கீழ் அணை எப்பொழுது கட்டி முடிக்கப்படும் ?

(ஆ) இதனால் பயனடையும் விவசாயிகள் எத்தனை பேர்? எத்தனை ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, (அ) ஆணைக்கூட்டம் நீர்த்தேக்கத் திட்டப் பணிகள் 1986 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் இறுதிக்குள் முடிக்கப்படும்.

(ஆ) இத்திட்டத்தினால் பயனடையும் விவசாயிகளின் எண்ணிக்கை பற்றி துல்லியமாக தற்போது கூற இயலாது. இத்திட்டத்தின் மூலம் 3,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதிபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

(முற்பகல் 10–00).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.



### நிலையூர் கண்மாய், கம்பிக்குடி கண்மாய் இணைப்பு

352 (*வினா எண். 987) திரு. மூ. பிச்சை : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் நிலையூர்க் கண்மாயில் இருந்து அருப்புக்கோட்டை தொகுதி கம்பிக்குடி கண்மாய்க்கு வைகைத் தண்ணீர் விடும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) இத்திட்டத்திற்கு உலக வங்கி ஏதேனும் உதவி செய்துள்ளதா ?

(இ) எப்பொழுது, எவ்வளவு மதிப்பீட்டில் வேலை தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, (அ) இத்திட்டம் தலைமைப் பொறியாளரின் ஆய்வில் உள்ளது.

(ஆ) இல்லை.

(இ) ஆய்வு முடிந்து, மதிப்பீடுகள் தயாரித்தபின்னர் [illegible] மதிப்பீட்டுத் தொகை தெரியும். திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்த பின்னர் பணிகள் தொடங்கஇயலும்.

திரு. எஸ். எஸ். வி. சித்ரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்திலே உள்ள நிலையூர் கண்மாயிலிருந்து அந்தப் பகுதிக்கு விஸ்தரிக்கின்ற இந்தப் பணியினாலே அந்தப் பகுதியிலே மிகவும் பின் தங்கிய நிலையிலே வாழ்கின்ற இனமாகிய மூப்பர் இனத்தைச் சேர்ந்தவர்கள் வறுமைக் கோட்டோடு என்றைக்குமே உற வாடிக் கொண்டிருக்கிறார்கள். அந்த மக்கள் வாழுகின்ற கிராமங்களாகிய வலையபட்டி, வலையங்குளம், எலியார் பட்டி, நெடுமதுரை, சாரப்பட்டி, ஆலங்குளம், கொம்பாடி ஆகிய கிராமங்களின் வழியாக இந்தக் கால்வாய் போவதால் மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லுகின்ற நேரத்தில் ஆய்வில் இருப்பதாகச் சொன்னார்கள். இது நீண்ட நாட்களாக அந்தப் பகுதி மக்களாலும், எங்களாலும் வற்புறுத்தப் பட்ட கோரிக்கையாக இருப்பதால் விரைவிலே ஆய்வை நிறைவு செய்து அரசாங்கம் ஒப்புதலை அளித்து எடுத்துக்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம், ஆய்வு துரிதமாக மேற்கொள்ளப் பட்டு, இந்தத் திட்டத்தின் வாயிலாக அருப்புக்கோட்டை

தொகுதியிலே உள்ள கம்பிக்குடி கண்மாய் உட்பட 76 கண்மாய் களுக்கு வைகை உபரி நீரை அளிக்க அரசு ஆரம்பகட்ட திட் டத்தை ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. திட்ட மதிப்பீடு தோராயமாக 500 இலட்சம் ரூபாய் ஆகும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. ஆகவே, விரைவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டு வருகிறது என்பதற்கு உதாரணமாகத்தான் இவற்றை யெல்லாம் சொன்னேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏறக்குறைய 5 கோடி ரூபாய் தோராயமாக செலவாகும் என்ற ஒரு கணக்கைச் சொல்கிறார்கள். இந்தப் பணியிலே அரசாங்கம் வெகு முனைப் பாக இருக்கிறது என்றும் சொன்னார்கள். நான் அவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டிலேயே இந்தத் திட்டத்திற்கு மதிப்பீடுகள், ஆய்வு வேலைகள் ஆகிய வற்றை முடித்து— மாண்புமிகு அமைச்சரவர்கள் சுறுசுறுப் புக்குப் பெயர் போனவர்கள்— முடிந்தால் இந்த ஆண்டிலேயே முடித்து, அல்லது இந்த ஆண்டு இல்லாவிட்டால் அடுத்த ஆண்டு இந்தப் பணி எடுக்கப்படும் என்ற உறுதியை இந்த மாமன்றத் திற்கு அளிப்பார்களா? அவ்வாறு செய்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் அந்தப் பகுதியிலே வாழும் மக்கள் இத னால் பயன்பெற்று, ஒவ்வொரு கவளத்தையும் வாயிலே எடுத்து வைக்கின்ற நேரத்திலேயெல்லாம் இந்த அரசாங் கத்தை— குறிப்பாக இந்த அமைச்சரைப் பாராட்டுவார்கள். எனவே, அதற்கான ஒரு உறுதியை இந்த மாமன்றத்தின் மூலமாகக் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் தலை வரவர்களே, பாராட்டைப் பொறுத்தவரையிலும் புரட்சித் தலைவர் தலைமையிலே இருக்கின்ற புரட்சித் தலைவரின் அரசுக்குத்தான் கிடைக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் களும், நானும் அறிவோம். அதேநேரத்தில் இங்கே ஆய்வில் ஒரு திட்டம் இருப்பதன் காரணத்தினால், ஆய்வு எப்படி ஆகிறது என்று சொல்ல முடியாத நிலையில் இருப்பதன் காரணமாகத் தான் அரசின் எண்ணம் நிச்சயமாகச் செய்து தர வேண்டுமென்று விருப்பமும் ஆசையும் இருந்தாலும்கூட, ஆய்வு முடிவுகள் எப்படியிருக்கும் என்று தெரிய முடியாத இந்தச் சூழ்நிலையில் எந்தவிதமான வாக்குறுதியையோ. உத்தரவாதத்தையோ தர முடியாத நிலையிலே அரசு இருக்கின்றது என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன். இயன்ற அளவிற்கு முயல்வோம் என் பதையும் சொல்லிக்கொள்கிறேன்.



நந்தன் கால்வாய்த் திட்டம்

353 -(* வினா எண் 1373)— திரு. மு. சந்திரசேகர்: மாண்பு மிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா -

தென் ஆற்காடு மாவட்டம் முகையூர் தொகுதியில் பனமலை ஏரிக்கு நீர் கொண்டுவரும் நந்தன் கால்வாய் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: தலைவர் அவர் களே, நந்தன் கால்வாய் திட்டம் 1976 ஆம் ஆண்டு முடிக் கப்பட்டது. இத்திட்டத்தினால் பயன் அடையும் ஏரிகளில் பனமலை ஏரியும் ஒன்றாகும்.

திரு. மு. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அளித்த விளக்கம் சரியானதாக இருக்கலாம். இருப்பினும் பனமலை ஏரிக்கு நீர் கொண்டு வரும் நந்தன் கால்வாய்த் திட்டம், பனமலை ஏரிக்கு 6 கிலோ மீட்டருக்கு முன்பாகவே கணக்கன்குப்பம் என்ற ஊரோடு முடிக்கப்பட்டுள்ளது. கணக்கன்குப்பத்தில் இருந்து 6 கிலோ மீட்டர் தூரம் வாய்க்கால் வெட்டினால்தான் பனமலை ஏரிக்குத் தண்ணீர் வரும். இத்திட்டம் நிறை வேற்றப்பட்டு விட்டதாகக் கூறி பனமலை ஏரி பகுதியில் உள்ளவர்களிடம் கூடுதல் தீர்வை வசூல் செய்யப்படுகிறது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரும் வரையில் கூடுதல் தீர்வை வசூல் செய்யப்படுவதை நிறுத்தி வைக்க வேண்டும் இந்தத் திட்டத்திற்கு 128 இலட்சம் ரூபாய் செலவு செய்தும் எந்தவிதமான பயனும் இல்லாமல் உள்ளது. 6 கிலோ மீட்டர் தூரம் புதிய வாய்க்காலை வெட்டியும், ஏற்கனவே வெட்டப் பட்டுள்ள கால்வாயைத் தூர் வாரியும் இத்திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர் களை மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களின் மூலம் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேர வைத் தலைவரவர்களே, 1976 ஆம் ஆண்டு முடிக்கப்பட்ட நந்தன் கால்வாய்த் திட்டத்தின் வாயிலாக தென்னார்காடு மாவட்டத்தில் மட்டும் பயன்பெறும் ஏரிகளின் எண்ணிக்கை 22. அதனுடைய மொத்த ஆயக்கட்டு 5,033 ஏக்கர் ஆகும். மாண்புமிகு உறுப்பினரவர்களால் சொல்லப்பட்ட பனமலை ஏரியும் இவைகளில் அடங்கிய ஒன்றாகும். இந்த ஏரியின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஆயக்கட்டுகள் மட்டும் 1079 ஏக்கர்

24 செண்ட் ஆகும். இவை எனக்குத் தரப்பட்டிருக்கின்ற விவரங்கள். இந்த விவரங்களுக்குப் புறம்பாக, இந்தப் பளமலை ஏரி—6 கிலோ மீட்டருக்கு முன்பாகவே வெட்டப்பட வேண்டிய கால்வாய் நிறுத்தப்பட்டிருக்கிறது என்ற விவரங்களை மாண்புமிகு உறுப்பினரவர்கள் தந்திருக்கிறார்கள். இந்த விவரம் உண்மையா என்பதைத் தெரிந்து கொண்டு, உண்மையாக இருப்பின், உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு போடப்பட்ட திட்டம் ஏன் நிறைவேறவில்லை, நிறைவு பெறாமலேயே நிறைவேற்றப்பட்டதாக இங்கே ஏன் தகவல் தரப்பட்டது என்பதையும் ஆய்வு செய்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நந்தன் கால்வாய், கிளைக் கால்வாயின் மூலமாக வட ஆற்காடு மாவட்டத்தில் குறிப்பாக திருவண்ணாமலை தண்டாரம்பட்டு தொகுதிகளில் நிலங்களுக்குப் பாசன வசதி ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால், தற்போது பெரும்பாலான நிலங்கள் மேற்படி பாசன வசதிகள்கீழ் வரவில்லை என்பதை அரசு அறியுமா? அவற்றிற்கு உடனடியாகப் பாசன வசதி ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் இப்படிப் பாசன வசதி கிடைக்காத நிலங்களுக்கு பெட்டர்மென்ட் லெவி வசூலிப்பது, அவ்வசதி கிடைக்கும் வரை நிறுத்தி வைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. பூகப்: பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே ஒருசில பகுதிகள் இந்த நந்தன் கால்வாய் திட்டத்தின்கீழ் பாசன வசதி பெற்றிருக்கின்றனவா என்ற கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. தற்போது அந்த விவரங்கள் என்னிடம் இல்லை. அதே போல் பயன்பெறாத பகுதிகளிடமிருந்து பெறக்கூடிய பெட்டர்மென்ட் டாக்ஸ், வளர்ச்சி வரியை அரசு நிறுத்துமா என்று கேட்டார்கள். அதனைப் பொறுத்தவரையில் அது வேறு ஒரு துறையைச் சேர்ந்தது. தனிக் கேள்வி போட்டால் சரியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெறாதது என்பதைக் குறிக்கும்.]



## 3. தகவல் கோரல்

### (அ) நான்காவது சம்பளக் கமிஷன் அறிக்கையை பேரவை முன் வைத்தல்

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, இன்றைய தினம் நம்முடைய நிதி அமைச்சர் கன்டின்ஜென்ட் பண்டு பில்லுக்கு ஒரு திருத்தம் கொண்டு வர இருக்கிறார். எதிர்பாராத செலவிற்காக மேலும் ரூ. 50 கோடியைப் பெறுவதற்காக ஒரு முயற்சி அது. எதற்காக என்று பார்த்தால், நான்காவது ஊதியக் குழு பரிந்துரைகளை அமுல் செய்வதற்காக என்று சொல்லப்பட்டிருக்கிறது; அதுதான் காரணம். ஆனால் அப்படி ஒரு பே கமிஷன் ரிப்போர்ட்டை இந்த அவையிலே எந்த மெம்பரும் பார்க்கவில்லை; இதுவரையில் எந்த உறுப்பினரும் பார்க்கவில்லை.

இரண்டாவதாக, சபை நடந்து கொண்டிருக்கும்போதே, ஹவுஸ் ப்ரோரோக் ஆகாத நிலையிலே, கமிஷன் ரிப்போர்ட் மீது அரசு முடிவுகளை வெளியிலே சொல்வது முறைதானா? சரிதானா? சபையை அவமதிப்பது ஆகாதா? சபையை இப்படிப் புறக்கணிப்பது, முறையா, சரியா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, என்ன வேண்டிக் கொள்கிறேன் என்றால், இந்தப் பே கமிஷன் ரிப்போர்ட்டும், அது சம்பந்தமாக அரசு பிறப்பித்திருக்கிற ஜி.ஓ. வினுடைய நகல் இந்த ஹவுசில் வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திரு. ப. பொன்னுரங்கம்: Whether the Pay Commission Report will be placed in the House?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்பளக் குழு அறிக்கை வந்திருக்கிறது. அந்த அறிக்கையைப் பார்த்து சிலபல முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. முடிவுகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அதுபற்றிய ஆய்வினை அரசு நடத்திக் கொண்டு இருக்கிறது. அந்த ரிப்போர்ட்டை பேரவையில், மேலவையில் வைக்கின்ற ஒரு பழக்கம் இருக்கின்றதா என்பதைப் பார்த்துவிட்டு, அதற்கான நிலைமைகள் இருக்குமேயானால் அதற்கேற்றபடி அரசு செய்யும். இப்பொழுது அதைப்பற்றி நான் எதுவும் சொல்வதற்கில்லை.

திரு. பொ. உத்திராபதி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது பே கமிஷன் ரிப்போர்ட்டை அவையில் வைக்க வேண்டாம் என்ற முறையிலே சொன்னார்கள். ஆனால் இங்கே அறிவிக்கிறபோது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எல்லாம் விரைவில் அந்த ரிப்போர்ட் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் பே கமிஷன் ரிப்போர்ட் கொடுக்கப்படாமலேயே ஒரு 'பில்' கொண்டு வந்து விவாதிக்கவிருப்பது சரியா ? தமிழ் நாட்டு மக்களுக்கு எல்லாம் அறிவித்த பிறகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அந்த ரிப்போர்ட் கொடுக்கப்படுமா அல்லது கொடுக்கப்பட மாட்டாதா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10).

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, இது சம்பந்தமாக நானும் ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். (மணி யடிக்கப்பட்டது) இது சம்பந்தமானதுதான், சேர்த்து பதில் சொல்ல வசதியாக இருக்கும். இப்போதே சொல்லிவிட்டால் 'பில்' வரும்போது சிக்கல் வராது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலில் திரு. உத்திராபதி அவர்கள் கேட்டதற்குப் பதில் சொல்லி விடட்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, சம்பளக் கமிஷன் அறிக்கை ஆராயப்பட்டு அதுபற்றி ஏற்கப்பட்ட முடிவுகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. சம்பளக் குழுவினுடைய பரிந்துரைகள் முழுவதும் இன்னும் வெளியிடப் படவில்லை. இரண்டாவது, மூன்றாவது சம்பளக் குழுவின் அறிக்கைகள் அவை முன் வைக்கப்பட்டிருக்கின்ற சூழ்நிலை இருந்தால் அந்த வகையிலே இந்த அறிக்கையையும் வைக்கலாம். நிலைமைகளை ஆராய்ந்து பார்த்தபின்னால் அதுபற்றி முடிவாகச் சொல்ல முடியும். இப்போது சொல்ல முடியாத நிலையில் இருக்கிறேன். ஆனால் 50 கோடியை 100 கோடி ஆக்குவது வேறு, சம்பளக் குழு அறிக்கை வேறு. அதற்கான காரணங்கள் சொல்லப் பட்டு, 'கண்டின்ஜன்ட் பண்டை' அதிகமாக்க வேண்டுமென்ற ஒரு மசோதா தான் வருகிறது. அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, பே கமிஷன் ரிப்போர்ட் வைக்கப்படுவதில்லை என்ற முறையிலே சொன்னார்கள். ரிப்போர்ட்டை அவையில் வைக்கவில்லை என்று சொன்னார்கள். பே கமிஷன் ரிப்போர்ட் வந்து, அதுபற்றிய ஜி.ஓ. வருகிறபோது அதனுடைய விவரங்கள் எல்லாம் உறுப்பினர்களுக்குத் தெரிந்தால்தான் இந்த விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து



சொல்ல வசதியாக இருக்கும். எனவே மசோதா விவாதத்திற்கு வருவதற்கு முன்னால் உறுப்பினர்களுக்கு பே கமிஷன் ரிப்போர்ட்டைக் கொடுப்பதில் தவறு இல்லை. அதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, சம்பளக் குழுவின் அறிக்கை அவையில் வைக்கப்பட வேண்டுமா, வேண்டாமா என்பது வேறு ; இன்றைக்கு அறிமுகம் செய்யப்படவிருக்கிற மசோதா வேறு. 50 கோடி ரூபாயை 100 கோடி ரூபாயாக ஆக்கலாமா வேண்டாமா என்பது பற்றியது தான் மசோதா.

திரு. அ. ரகுமான்கான் : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே பாயின்ட் ஆஃப் ஆர்டர் தேவையில்லை.

## (ஆ) மரணமடைந்த போக்குவரத்துக் கழக ஊழியரின் மனைவிக்கு வேலை வாய்ப்பு.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார், நம்முடைய இந்திய அரசியல் சட்டத்தின்படி பெண்களுக்கென்று தனி உரிமையும் பெண்களுடைய பாதுகாப்புக்கென்று பல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. இன்றைக்குப் பெண்களுடைய முன்னேற்றத்தைப் பற்றி நாம் பக்கம், பக்கமாக எழுதி வாசித்துக்கொண்டிருக்கிறோம். ஆனால்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயிண்ட் ஆஃப் ஆர்டரில் வராது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : சீரோ-அவரில் இதையெல்லாம் ரெயிஸ் பண்ணலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய சபையில் சீரோ-அவரே கிடையாது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : பி. ஆர். சி. யிலே வேலை பார்த்த ஒரு ஊழியருடைய மரணத்தைத் தொடர்ந்து அவருடைய மனைவிக்கு வேலை கொடுக்கப்பட்டது. பின்னால், அந்தப் பெண்மணி மறுமணம் செய்ததன் காரணத்தால், தனலட்சுமி என்ற அந்தப் பெண்மணி.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆஃப் ஆர்டரில் வராது, வேறு வழியில் எழுதிக்கொண்டு வாருங்கள். It won't come under Point of Order. Point of order can be raised only on some business which is being conducted the House. We have not yet started a Government business. We are yet to start.

## 4. அறிவிப்புகள்.

### (அ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு: தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியத்திற்கான தேர்தலுக்கு (Board of Management of Tamil Nadu Agricultural University) திரு. பொ. அன்பழகன் அவர்களின் பெயர் முறையாக நியமனம் செய்யப்பெற்றுள்ளது. முறைப்படி நியமனம் செய்யப்பட வேண்டிய வேட்பாளரின் எண்ணிக்கையும், நிரப்பப்பட வேண்டிய வெற்றிடத்தின் எண்ணிக்கையும் ஒன்றாக இருப்பதால், திரு. பொ. அன்பழகன், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியத்திற்கு தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளார் என நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

## 5. கவன ஈர்ப்பு

(அ) முதுகுளத்தூர் தொகுதி அபிராமபுரத்தில் குடிநீர்த்தொட்டி மேல்நிலைத் தொட்டிச் சுவர் இடிந்து ஒருவர் இறந்ததும் சிலர் காயமுற்றதும்.

திரு. கே. முத்துவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முதுகுளத்தூர் தொகுதி, அபிராமபுரத்தில் ஆழ் குழாய் கிணறு திட்டத்தில் புதிதாக கட்டப்பட்ட 'தண்ணீர் தொட்டி இடிந்து, தண்ணீர் எடுத்துக் கொண்டிருந்த பெண் ஒருவர் இறந்ததோடு, மேலும் 6 பேர் கடுமையான காயங்களால் பாதிக்கப்பட்டு மதுரை மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.





### அறிக்கை

மானாமதுரை, தாதம் கிராமத்தில் வேளாண் பொறியியல் துறையால் வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒரு சமுதாய துளைக்கிணறு அமைக்கப்பட்டு அதில் 7.5 (எச்.பி.) குதிரைத் திறன் மோட்டாருடன் கூடிய நீர் இறைக்கும் பம்பு பொருத்தப்பட்டது. இதன் தண்ணீர் பட்டுப் பூச்சி வளர்ப்புப் பண்ணையின் பாசனத்திற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. வேளாண் பொறியியல் துறை, மக்களின் குடிநீர் வசதிக்காக, 7 அடி உயரமுடைய 5 குழாய்களுடன் கூடிய ஒரு தொட்டியையும் $1\frac{1}{2}$ ஆண்டுகளுக்கு முன்பு அங்கே அமைத்தது. இத்தொட்டி, செய்யமங்கலம் கிராமத்தில் உள்ள திரு. வேலு தேவர் என்ற ஒப்பந்தக்காரரால் கட்டப்பட்டது. இத்தொட்டியில் 22—5—1985 அன்று தண்ணீர் நிரப்பப்பட்டது. 23—5—1985 அன்று அபிராமம் கிராமத்திலுள்ள பெண்கள் அதிலிருந்து தண்ணீர் எடுத்துக் கொண்டு இருந்தனர் பிற்பகல் 2-30 மணி அளவில் அத்தொட்டியின் நான்கு சுவர்களும் இடிந்ததினால் தண்ணீர் எடுத்துக் கொண்டிருந்த பெண்கள் அதில் சிக்கிக் கொண்டனர். இதனால் கீழ்க்கண்டவர்கள் காயமுற்றனர்.—

1. திருமதி முனியம்மாள் (காலஞ்சென்ற திரு. வீரசின்னு வின் மனைவி) வயது 40.

2. திருமதி செல்வி (சுப்பிரமணியன் அவர்களின் மனைவி) வயது 17.

3. செல்வி மீனாட்சி (சண்முகவேல் ஆசாரி அவர்களின் மகள்) வயது 22.

4. திருமதி ருக்மணி (கோட்டூரான் அவர்களின் மனைவி) வயது 35.

5. திருமதி மாரியம்மாள் (கிருஷ்ணன் சேர்வை அவர்களின் மனைவி) வயது 45.

6. செல்வி சுசிலா (பாலகிருஷ்ணன் ஆசாரி மகள்) வயது 22

இவர்கள் அனைவரும் அபிராமபுரத்தைச் சார்ந்தவர்கள். அனைவரும் மதுரையில் உள்ள ராஜாஜி மருத்துவ மனைக்கு சிகிச்சைக்காக எடுத்துச் செல்லப்பட்டனர். அவர்களில் திருமதி முனியம்மாள் இறந்து விட்டார். திருமதி ருக்மணியைத் தவிர மற்றவர்கள் 27—5—1985 அன்று மருத்துவ மனையிலிருந்து திரும்பி விட்டனர். இந்த விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்பது குறித்து அறிக்கை அனுப்புமாறு பரமக்குடி வட்ட பொறியாளர் (நெடுஞ்சாலை ஊரகப்பணி) கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். இவ்விபத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் அளிக்க பரமக்குடி வருவாய் வட்ட அலுவலர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

[1985 ஜூன் 24

திரு. கே. முத்துவேல் : தலைவரவர்களே, அந்தத் தொட்டி
கட்டியவர்கள் மீது இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா ? அந்த
விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் போதுமான அளவுக்கு
அரசு நிவாரணம் வழங்குமா ? இதைப்போன்று எங்கள் பகுதி
களிலே கட்டப்பட்டிருக்கின்ற தொட்டிகளை எல்லாம் சோதனை
செய்து பார்த்து, அவை நல்லமுறையிலே இருக்கின்றனவா என்
பதை அறிந்த பின்னால் தண்ணீர் திறந்துவிட ஏற்பாடு செய்யப்
படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து ; மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்
அதுபற்றி முழுமையாக விசாரணை நடத்தி வருகிறார். அவர்
மூலமாகவே பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கவும்
உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்
பினர் அவர்கள் புதிதாகக் கட்டப்பட்டிருக்கிற தொட்டிகள்
பற்றிக் குறிப்பிட்டார்கள். அவற்றை எல்லாம் ஆராய்ந்து
பார்த்த பின்னால்தான் அவற்றை பயன்படுத்த ஏற்பாடு செய்
யப்படும்.

(ஆ) மேட்டூர் அணையிலிருந்து காவேரி டெல்டாப் பகுதிப்
பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடுவது

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்
கள் ந. சிவஞானம், மு. இராசாங்கம், துரை கோவிந்தராசன்
ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம்
கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு பொதுப்
பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு அதைக்
கொண்டு வருவார்.

திரு. ந. சிவஞானம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்
களே, " மேட்டூர் அணையில் நீர்மட்டம் குறைவாக இருப்பதால்
காவேரி டெல்டாப் பகுதியிலுள்ள விவசாயப் பெருங்குடி மக்களி
டையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த " அவசரப் பொது
முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்
துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. யா.சை.மு.யூசுப்: பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே மேட்டூர் நீர்த்தேக்கம் வழக்கமாக ஜூன் மாதம் 12-ஆம்
தேதி காவேரி டெல்டா பாசனத்திற்காகத் திறந்துவிடப்பட வேண்
டும். இவ்வருடம் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தென்மேற்குப்
பருவமழை இன்னும் தீவிரமடையவில்லை. கர்நாடகத்தில் உள்ள



1985 ஜூன் 25] [திரு. யா. சை. மு. யூசுப்)

கிருஷ்ணராஜசாகர், கபினி, ஹேமாவதி மற்றும் ஹேரங்கி
முதலிய நீர்த்தேக்கங்களில் தற்சமயம் சுமார் 22 டி. எம். சி.
தான் நீரளவு இருக்கிறது. இவற்றில் மேலும் சுமார் 84
டி. எம். சி. கொள்ளளவுக்கான காலியிடம் (Storage space)
உள்ளது.

2. கர்நாடக அரசு 1974-ம் ஆண்டு முதல் 1924-ம் ஆண்டு
காவிரி ஒப்பந்த விதிமுறைகளைக் கடைபிடிக்காமல், தங்கள்
நீர்த்தேக்கங்களில், கணிசமான அளவு நீர் நிரம்பிய பின்புதான்,
தமிழ்நாட்டிற்கு தண்ணீர் விடுகின்றனர். எனவே, பருவமழை
மேலும் தீவிரமடைந்து. கர்நாடக நீர்த்தேக்கங்கள் கணிசமாக
நிரம்பிய பின்புதான் மேட்டூர் நீர்த்தேக்கத்திற்கு நீர் வரத்து
எதிர்பார்க்க முடியும்.

3. இவ்வாண்டு காவிரி டெல்டா பகுதியில் ஜூன் முதல்
வாரத்தில் ஓரளவு மழை பெய்தது. இதைக்கொண்டு, சில பகுதி
களில் பயிர் வேலைகளும் தொடங்கப்பட்டுள்ளன. இப்பயிர்களை
சாப்பாற்றும் பொருட்டும், உழவு மற்றும் நாற்று நடுதல்
முதலிய பணிகளை தொடங்குவதற்காகவும், மேட்டூர் நீர்த்
தேக்கம் விரைவில் திறக்கப்படவேண்டும். மேட்டூர் நீர்த்
தேக்கத்தின் முழுக் கொள்ளளவு 93,470 மி.க. அடி. ஆனால்,
மேட்டூர் நீர்த்தேக்கத்தில் 19—6—1985 அன்று 11.00
டி. எம். சி. தான் நீரளவு உள்ளது. (நீர் மட்டம் 38.20 அடி).
குறைந்த பட்சம் 40 அலலது 45 டி. எம். சி. ஆவது இருந்தால்
தான் மேட்டூர் நீர்த்தேக்கம் பாசனத்திற்கு திறக்க முடியும்.
எனவே, காவிரி ஆற்றில் பருவ மழையினால் வரும் நீர்வரத்தை,
கர்நாடக நீர்த் தேக்கங்களில் தேக்கி வைக்காமல், அப்படியே
தமிழ்நாட்டிற்கு அனுப்பும்படி கர்நாடக அரசை கேட்டுக்கொள்ள
உள்ளது. மேட்டூர் நீர்த் தேக்கத்திற்கு நீர் வரத்து தினந்
தோறும் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. போதிய அளவு நீர்
வந்தவுடன் மேட்டூர் நீர்த் தேக்கம் பாசனத்திற்கு திறந்து
விடப்படும்.

திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, காவிரி நீரில் ஏற்பட்டுள்ள குறைவின்
காரணமாக இன்றையத்தினம் சுமார் 38 அடித் தண்ணீர்தான்
மேட்டூரில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்
கள். காவிரி டெல்டாப் பகுதியில் உள்ள விவசாயப் பெருங்குடி
மக்கள் மத்தியில் ஆழ்ந்த கவலை ஏற்பட்டிருக்கின்ற காரணத்
தால் கர்நாடகாவிலிருந்து தண்ணீர் இங்கே ஓரளவுக்காவது
கிடைக்கின்ற வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும். இப்போது
தஞ்சைப் பகுதியில் நாற்றங்கால் விடப்பட்டுள்ளது. எனவே,
இத்தகைய சூழ்நிலையில் அரசு பெருமுயற்சி எடுத்து கர்நாடக
அரசிடமிருந்து நீரைப் பெற்றுக் கொடுக்க முன்வருமா என்பதை
அறிந்து கொள்ள விரும்புவதோடு 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம்

1974 ஆம் ஆண்டிலே முடிந்துவிட்டதன் காரணத்தால் இனிமேல் காவிரி டெல்டாப் பகுதிக்குத் தண்ணீரே வராது என்ற வகையில் வீணான வதந்தியைப் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அதற்கான முயற்சியை அரசாங்கம் எடுத்துக்கொண்டு தமிழ்நாடு அரசும், கர்நாடக அரசும் சுமுகமாகப் பேசி, ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து காவிரி டெல்டாப் பகுதிக்கு 486 டி. எம். சி. தண்ணீர் கிடைத்தால் கூடப் போதும் ; அதையாவது பெற்றுத் தருகின்ற வகையில் அந்த அரசோடு ஒப்பந்தம் செய்து சுமுகமான ஒரு முடிவை ஏற்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவிரி டெல்டா பகுதியிலே தேவையான அளவுக்கு மேட்டூர் நீர்த்தேக்கத்திலே தண்ணீர் இல்லாமல் விவ சாயிகள் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலையை தமிழக அரசைப் பொறுத்தமட்டிலும் பார்த்துக் கொண்டு எந்த நேரத்திலும் இருந்ததில்லை. உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு கர் நாடகா மாநிலத்திலிருந்து தேவையான தண்ணீரைப் பெற ஒவ்வொரு கால கட்டத்திலும் முயற்சி எடுத்துக் கொண்டுதான் வந்திருக்கிறோம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். காவிரி நீரைப் பொறுத்தவரையில் 1924 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஒப்பந்தம் 1974-லே முடிந்து விட்டதாகக் கருதிச் சொன்னார்கள். நிச்சயமாக நிலைமை அதுவல்ல. தமிழக அரசைப் பொறுத்தவரையிலும் காவிரி ஒப்பந்தம் என்பது ஒரு முடிவு பெற முடியாத ஒப்பந்தமாகும். நிரந்தரமாக ஏற்படக் கூடிய ஒப்பந்தம் ஆகும். 1971-லே இல்லா விட்டாலும் கூட, 5 ஆண்டுகளுக்குப் பிறகு 1974-லே அது அந் தந்த சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாற்றி அமைக்கப்பட்டிருக்க வேண் டுமே தவிர, நிறைவு பெற்ற ஒப்பந்தமாக இருக்காது என்பது தான் தமிழக அரசின் நிலையாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, தகுந்த முயற்சிகளை மேற்கொண்டு கர்நாடக அரசோடு தொடர்பு கொண்டு, தமிழகத்திற்கு தேவை யான தண்ணீரைப் பெற தமிழக அரசு முயற்சிகளை மேற் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-20.)

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிறபோது, ஒரு கருத்தை எண்ணிக் கொண்டு, இன்னொரு கருத்தைச் சொல்லி விட்டார்கள் என்று கருதுகிறேன். அந்த ஒப்பந்தம் நிறைவு பெற்ற ஒப்பந்தமாக இருக்காது என்று அவர்கள் சொன் னார்கள். ஆனால் அதை அவர்கள் அந்த ஒப்பந்தம் முடிவுபெற்ற கேன்சலான ஒப்பந்தமாக இருக்காது என்ற கருத்தில்தான் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் அது குறிப்பேட்டிலே அப்படியே இருந்தால் நன்றாக இருக்காது என்பதற்காக நான் இந்தக் கருத்தைச் சொன்னேன்.





திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் காவிரி நீர்ப் பிரச்சினையில். . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு கேள்வி தான் ஒரு உறுப்பினருக்கு. திரு. மு. ராசாங்கம்.

திரு. ந. சிவஞானம் : கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் இரண்டு கேள்விகள் உண்டு. அதுவும் இது காவிரி நீர்ப் பிரச்சினை. நாட்டிற்குத் தேவையான தண்ணீர் பிரச்சினை. . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு உறுப்பினர் கொடுத்திருந்தால் 2 கேள்விகள், ஒன்றுக்கு மேற்பட்ட உறுப் பினர்கள் இருந்தால் ஒரு கேள்விதான் அனுமதிக்கப்படும். இதில் 3 உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. மு. இராசாங்கம் : மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, காவிரியினுடைய நீர் பிடிப்பு பகுதியான கிருஷ்ணராஜ சாகர் அணையில் தற்போது தண் ணீரின் அளவு என்ன? அது குறித்து நம்முடைய அரசுக்கு ஏதேனும் தகவல் உண்டா என்று அறிய விரும்புவதோடு, அந்தப் பகுதியிலே எந்த அளவுக்கு மழை பெய்திருக்கிறது? தமிழ கத்தினுடைய விவசாயிகளை காப்பாற்றுகிற வகையிலே மழையின் அளவு அதிகரித்திருக்கிறதா என்பதை அறிய விரும்புவதோடு மேட்டூர் பகுதியில் தற்போது மழை ஓரளவுக்கு இருக்கிறது. சுமார் சில 100 கன அடிகள் தண்ணீர் வந்துக் கொண்டிருக்கிறது என்று தகவல் இருக்கிறது. அது எங்கேயிருந்து பெய்கின்ற மழையின் காரணமாக வருகிறது என்பதை அறிய விரும்புகிறேன் ? அத்தோடு காவிரியை நம்பி வாழ்ந்துக் கொண்டிருக்கிற தஞ்சை, திருச்சி மாவட்ட விவசாய மக்கள் இந்த ஆண்டு எப்படி விவ சாயத்தை மேற்கொள்ளுவது என்று கவலையும் வருத்தமும் கொண்டு வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். விவசாயத்தையே நம்பியிருக்கிற அந்தத் தொழிலாளர்களுக்கு உதவி செய்யும் வகையில், அவர்கள் விவசாயத்திற்கு இந்த ஆண்டு அரசு ஏதாவது உரிய முயற்சிகளை மேற்கொள்ள இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த ஜூன் மாதம் ஒவ்வொரு ஆண்டிலும் இப்படிப்பட்ட ஒரு பெரிய சங்கடத்தை தமிழக விவசாயிகளுக்கு தருகிறது. ஆனால் எந்த ஆண்டில் பார்த்தாலும் இறுதியாக வரக்கூடிய விளைவுகள் தமிழகத்திற்கு ஓரளவிற்கு நன்மை பயக் கக்கூடிய அளவிற்கே விளைந்திருக்கின்றன. ஒரே அடியாக இடிந்து போய்விடக் கூடிய அளவிற்கு நிலைமைகள் எந்த ஆண்டிலும் இருக்காது என்பதுதான் நம்முடைய அனுபவம் ஆகும். அந்த நம்பிக்கையை இந்த ஆண்டிலும் கொள்வோம்.

[திரு. யா. சை. மு. யூசுப்] [1985 ஜூன் 24

அடுத்து கர்நாடகத்தைப் பொறுத்த மட்டில் காவேரி நீர் பங்கீடு குறித்து, கிருஷ்ணாராஜசாகர், கபினி, ஹேமாவதி, ஹேரங்கி ஆகிய அணைகளின் மொத்தக் கொள்ளளவு 136 டி.எம்.சி. ஆகும். அங்கே இப்போது 28.7 டி.எம்.சி. தண்ணீர்தான் அவர்களுக்கே இருக்கிறது. அவர்களைப் பொறுத்தமட்டில் அந்தப் பிரச்சினைகளைப் பார்த்துக்கொண்டு, தமிழகத்திற்கு தேவையான தண்ணீரையும் அவர்கள் வழங்க வேண்டியது பற்றி அவர்கள் ஆய்வு செய்ய வேண்டும். வேண்டும் அல்லது வேண்டாம் என்ற ஒரு முடிவை மேற்கொள்ள வேண்டிய ஒரு நிலைமையில் இருக்கிறோம். ஆகவே அதைப்பற்றி ஒரு பிரச்சினையாக இங்கே கிளப்ப வேண்டிய அவசியம் இல்லை. தமிழகத்தைப் பொறுத்தமட்டில், தமிழகத்திற்கு தேவையான தண்ணீரைப் பெறுவதற்கு தமிழக அரசு உரிய முயற்சிகளை மேற்கொள்ளும்.

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மேட்டுர் அணையினைப் பொறுத்தமட்டில் 38 அடி தண்ணீர் இருக்கிறது என்றாலும், திருச்சி மாவட்டம், தென்னாற்காடு மாவட்டம், பாண்டிச்சேரியில் உள்ள காரைக் கால் போன்ற பகுதிகளில் உள்ள விவசாயப் பெருமக்கள், தண் ணீர் இல்லாமை காரணமாக மிகவும் கவலைக்குள்ளாகியிருக் கிறார்கள். இப்படி பல முறை மூன்பு ஏற்பட்ட போதெல்லாம், நமது புரட்சித் தலைவர் அவர்களின் அரசு, அந்த விவசாயி களுடைய கவலையைப் போக்குகிற வகையில் அதுவும் மேட்டூரில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்ட நேரத்தில் கர்நாடக அரசோடு பேச்சு வார்த்தை நடத்தி, அவர்களிடமிருந்து தண்ணீரை கட னாகப் பெற்று, முன் கூட்டியே விவசாயிகளுக்கு நல்ல விளைச்சல் தரத் தக்க அளவிற்கு காலத்திலே செய்கின்ற ஒரு வாய்ப்பை இதற்கு முன்னாலேயும் பல முறை நமது புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு செய்திருக்கிறது. அந்த அடிப்படையில் இந்த ஆண்டு ஜூன் மாதம் திறக்க வேண்டுமென்றாலும் இது வரையில் தண்ணீர் திறக்கப்படாமல் இருக்கிறது. இப்போது ஜூன் மாதம் 24 தேதி ஆகிவிட்டது. இதற்குப் பின்னாலும் போகுமென்றால் விவசாயம் பாதிக்கப்படுவது மட்டுமல்லாமல், சேகரிக்கப்படுகிற விளை பொருள்கள் மழையின் காரணமாக பாதிக்கக் கூடிய நிலைமை ஏற்படும். இவற்றை கவனத்திலே கொண்டு 20 டி.எம்.சி. தண்ணீராவது கர்நாடக அரசினிடத் தில் உடனடியாக கடனாகப் பெற வேண்டும். 3, 4 மாவட்டங் களில் வ்வசாயம் பாதிக்கப்படுகிற அளவிற்கு நிலைமைகள் இருக் கின்றன. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களும், அரசும் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு, உழுகிறவர்களுக்கு உற்சாகம் ஊட்டுவதை மனதிலே கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த நிலைமையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கர்நாடக முதலமைச்சரிடத்தில் பேசி 20 டி.எம்.சி. தண்ணீரைப் பெற்று, ஒரு வார காலத்திற்குள்ளாக தண்ணீர் விடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



1985 ஜூன் 24]

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: துணைத் தலைவர் அவர் களே ஜூன் மாதம் 12ம் தேதி திறப்பதைப் பொறுத்த வரையில், சட்டியில் இருந்தால்தான் அகப்பையில் வருமென்பது மாண்புமிகு, கொறடா அவர்கள் அறிவார்கள் என்று கருதுகிறேன். ஆகவே இருக்கக் கூடிய சூழ்நிலையில் பாசனத்திற்கு மேட்டூரிலிருந்து தண்ணீரை திறந்து விட முடியாத நிலையில் துறை இருந்து வருகிறது. கர்நாடக மாநிலத்திலிருந்து எப்படியாவது தண்ணீரைப் பெற்றாக வேண்டுமென்ற முயற்சியில் துறை அரசுக்கு தகவல்களை எல்லாம் தந்து வருகிறது. அரசு தீவிரமாக நடவடிக்கை எடுத்து, உரிய முயற்சிகளை மேற்கொண்டு, தேவையான தண்ணீரை பெற முயன்று வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எப்படி மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், தமிழக மக்க ளின் நம்பிக்கை வீண் போகாத அளவிற்குத் தேவையான தண்ணீர் பெற்றுத் தந்திருக்கிறார்களோ, அப்படி இந்த முறை யும் நடவடிக்கை எடுப்பார்கள். வெற்றி பெறுவார்கள் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. அறிவிப்புகள் — தொடர்ச்சி.

(ஆ) எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்டமுன் வடிவு 1985.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன் வடிவை அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள் ளார்.

6. அரசினர் சட்ட முன்வடிவு.

எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன் வடிவு 1985.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதியை (திருத்த) சட்ட முன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத்தலை வர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள இந்த மசோதாவை நாங்கள் எதிர்க்கவில்லை,

ஆதரிக்கின்றோம். ஆனால் ஒரு முக்கியமான பாயிண்ட்டை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இங்கே ஆப்ஜக்ட்ஸ் அண்ட் ரீசன்சிலே தெளிவாகச் சொல்லப் பட்டிருக்கிறது.

DR. K. SOWRIRAJAN: Only if he is opposing, he can speak.

திரு. அ. ரகுமான்கான் : மொத்தத்தில் இந்த மசோதாவை ஆதரிக்கிற நிலையில்தான் நாங்கள் இருக்கிறோம். எதிர்க் கட்சி என்பதற்காக எதிர்க்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் இதிலே ஒரு அம்சத்தை மட்டும் எதிர்த்து உங்களுடைய கவனத் திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இந்த மசோதாவினுடைய நோக்கம் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. In view of the orders of the Government on the recommendations of the Fourth Pay Commission involving an additional expenditure of the order of Rs. 100 crores it is considered necessary to increase the sum temporarily from Rs. 50 crores to Rs. 100 crores என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவைக் கொண்டு வருவதின் நோக்கம், நான்காவது சம்பள கமிஷனுடைய ரிப் போர்ட்டில் சொல்லப்பட்டிருக்கிற சிபார்சுகளை அமல் புடுத்து வதற்காக அரசாங்கம் உத்தரவு போடுகிறது. அதனாலே அடிஷனலாக செலவுகள் அரசாங்கத்திற்கு ஏற்படுகிறது. எனவே இந்த எதிர்பாராத செலவு நிதியை 50 கோடி ரூபாயிலிருந்து 100 கோடி ரூபாயாக உயர்த்தப்படுகிறது என்று காரண காரிய விளக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதிலே நாங்கள் எல் லாம் விவாதிப்பதற்கு இப்போது இல்லா விட்டாலும், இந்த மசோதாவை நிறைவேற்றப்படுகிறபோது வாய்ப்புகள் இருக் கின்றன. இந்த நான்காவது சம்பள கமிஷன் ரிப்போர்ட் என்ன? அதிலே சொல்லப்பட்டிருப்பது என்ன ? அரசாங்கத்தினுடைய உத்தரவு என்ன என்ற அந்த மெட்டீரியல் பாக்ட்சை வைத் தால் தான் உதவியாக இருக்கும். இல்லாவிட்டால் கறுப்பு பூனையை இருட்டு அறைக்குள் தேடுகிற முயற்சியில் இறங்கி யதைப் போல தான் அமையும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முன்பே இது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லி இருக் கிறார்கள்.

(முற்பகல் 10.30)

திரு. அ. ரகுமான்கான் : ஆகையினாலே இங்கேயிருக்கக் கூடிய எல்லா உறுப்பினர்களும் இது குறித்து, விவாதித்து நட வடிக்கை எடுக்க வேண்டும் என்றால் நான்காவது ஊதியக் குழு வினுடைய ரிப்போர்ட்டும், அரசாங்கத்தினுடைய உத்தரவும் இருந்தால்தான் அதை அடிப்படையாக வைத்துக்கொண்டு, இங்கே விவாதிப்பதற்கு வாய்ப்பு ஏற்படும். அந்த நேரத்தில்





உங்களுடைய கவனத்திற்கு நான் ஒன்றைக் கொண்டு வர விரும்பு கிறேன். இந்த மன்றத்திலே ராமபிரசாத் ராவ் கமிஷன் ரிப் போர்ட், மற்றும் தி.மு.க. ஆட்சியில் ஊழல் என்று சொல்ல வைத்த நாயுடு கமிஷன் ரிப்போர்ட் எல்லாம் இங்கே வைத் திருக்கிறார்கள். ஆனால் விவாதிக்கப்படவில்லை. விதிகளிலே தெளிவாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. எதைப் பற்றி விவா திக்கிறோமோ, அதைப் பற்றிய பேப்பர்கள் இங்கே வைக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. எனவே இது சம்பந்தமான பேப்பர்கள் இங்கே வைக்கப்பட வேண்டும். ஆன் னுவல் ரிப்போர்ட் கூட இங்கே பிளேஸ் பண்ணுகிறார்கள் என்று சொல்கிறபோது, இந்த விவாதத்திற்கு மிக முக்கியமாக இருக் கின்ற அந்த மெட்டீரியல் பேக்ட்ஸ்சான அந்த கமிஷன் ரிப் போர்ட்டும், ஆர்டரும் இல்லை என்றால், எப்படி விவா திப்பது? ஆகையினாலே ஹெல்தி டிஸ்கசனுக்காக, நீங்கள் அருள் கூர்ந்து எங்களுடைய உரிமையைப் பாதுகாத்து, அர சாங்கத்திற்கு உத்தரவிட்டு. அந்த காப்பியை இங்கே வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவை உதவித் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுக்கு அதிகப் படியான சம்பளம், இன்றைய சூழ்நிலையில் வழங்க வேண்டும் என்பதிலே யாருக்கும் எந்த விதமான கருத்து வேறுபாடும் இருக்க முடியாது. ஆனாலும் கூட அதைச் செய்கின்ற வகையில், செய்கின்ற முறையிலே, சட்டத்திற்கு உட்பட்டு செய்ய வேண்டும் என்ற காரணத்தால் தான் இன்றைக்கு இங்கே கொண்டு வரப் பட்டு இருக்கின்ற இந்தச் சட்ட முன் வடிவை நான் எதிர்க் கிறேன். ஏற்கனவே இந்த கன்டின்ஜென்ட் பன்ட் ஆப் தமிழ் நாடு என்பது 150 கோடி ரூபாய் வரைக்கும் உயர்த்தப்பட்டு, அது தவறு என்று ஆடிட்டர் ஜெனரலினுடைய ரிப்போர்ட்டிலே குறிப்பிட்டதன் காரணமாகத்தான் அது பிற்காலத்தில் மீண்டும் 50 கோடி ரூபாய்க்குக் குறைக்கப்பட்டு இருக்கிறது.

அது மட்டுமல்லாமல், இந்த கன்டின்ஜென்ட் பண்டிலே இருந்து எடுக்கக் கூடிய பணங்கள் மீண்டும் கன்டின்ஜென்ட் பண் டுக்கு அனுப்ப வேண்டும் என்பது அடிப்படை பொருளாதாரக் கொள்கையாக இருக்கின்ற காரணத்தால், நீங்கள் இந்தத் தொகையை உயர்த்துவதன் காரணமாக, இதிலேயிருந்து எடுக் கின்ற பணங்களை, செலவழிக்கின்ற பணங்களை மீண்டும் கன் டின்ஜென்ட் பண்டுக்கு அனுப்ப வேண்டிய ஒரு கட்டாயம் இருக் கின்ற காரணத்தால் நீங்கள் எங்கேயிருந்து இந்தப் பணத்தை எடுக்க வேண்டும் என்று நினைக்கிறீர்களோ, அதிலேயிருந்து, நான் இந்தப் பணத்தைச் செலவழிக்க வேண்டும் என்று....

(மணியடிக்கப்பட்டது).

[1985 ஜூன் 24

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதைப் பற்றி ஏற்கனவே பேசியாகிவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள், அந்தக் காப்பியை எல்லாம் இங்கே வைக்க வேண்டும் என்று சொன்னார்கள். (குறுக்கீடு). நீங்கள் அந்த பில் கன்சிடரேசனுக்கு வரும்போது, விரிவாகப் பேசலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி ;

'' 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

## 7. வரவு செலவுத் திட்டம், 1985–86,—வாக்கெடுப்பு

### கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும், நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 12,86,56,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ''.

THIRU N. S. V. CHITHAN : Sir,—

To discuss about the need to withdraw Sales-tax on machinery used in small scale industries or Cottage industries. I move—

"that the sum of Rs. 12,86,56,000 under Demand No. 4 General Sales-tax and other Taxes and duties Administration to be reduced by Rs. 100,"



1985 ஜூன் 24]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும், பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கைக் குறிப்புகள், *அச்சடிக்கப்பட்டு அவையில் வைக்கப்பட்டு இருக்கிறது. அவற்றை நான் அவையில் படித்ததாக ஏற்றுக்கொண்டு அவைக் குறிப்பேட்டில் ஏற்றிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய அனுபவமிக்க நல்ல அறிவுரைகளை வழங்கியதற்குப் பிறகு இறுதியாக நான் ஏதேனும் சொல்ல வேண்டும் என்றால், சொல்கிறேன்.

திரு. எ. தெய்வநாயகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வணிகவரி மானியக் கோரிக்கையின் மீது இந்த விவாதத்தில் பங்கு கொள்ள செய்தமைக்கு முதலில் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று நாட்டில் உள்ள வணிகர்களின் பிரச்சினைகளை, சிலவற்றை அரசின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

முதலாவதாக கூடுதல் விற்பனை வரியை ரத்து செய்ய வேண்டும் அல்லது அந்த வரியை விதிப்பதில் உள்ள தடையை அகற்ற வேண்டும். எவ்வித ஊதியமும் இன்றி சுமார் ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் விற்பனை வரியாக வசூல் செய்து அரசுக்கு செலுத்தும் வணிகர்களை ஊக்குவிப்பதற்கு பதிலாக அவர்களுக்கு தண்டனை அளிப்பது போல் அமைந்துள்ள கூடுதல் விற்பனை வரியை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வரியை வணிகர்கள் தங்கள் கையில் இருந்து செலுத்த வேண்டியிருக்கிறது. இந்த வரியை வசூலிக்கக் கூடாது. வணிகத்தில் நஷ்டம் ஏற்பட்டாலும் இந்த வரியை வணிகர்கள் தங்கள் முதலீட்டில் இருந்து செலுத்த வேண்டிய கடமைக்கு உள்ளாகியிருக்கிறார்கள். குறைந்த லாபம் அதிக வணிகம் என்ற கொள்கை உடன் செயல்படும் வணிகர்களையும் உணவுப் பொருட்கள் வகையறாக்களையும் இந்த வரி மேலும் பாதிக்கிறது. இந்த வரி விகிதத்தை சென்ற பட்ஜெட்டில் மேலும் ஏற்றி இருப்பது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் இருக்கிறது. எனவே, கூடுதல் விற்பனை வரியை ரத்து செய்யவேண்டும் அல்லது அந்த வரியை வசூலிப்பதில் உள்ள தடையை நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

---

*389—414ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

[திரு. எ. தெய்வநாயகம்] [1985 ஜூன் 24

ஒருமுனை வரி விதிப்பதால் சில்லரை வணிகர்கள் நிம்மதியுடன் வணிகம் செய்ய முடிகிறது. வரி ஏய்ப்பும் தடுக்கப்படுகிறது. வரி வசூலும் கூடுதல் ஆகிறது. விற்பனை வரி அதிகாரிகளின் வேலைப் பளுவும் குறைகிறது. எனவே கூடுமான வரை அதிக பொருட்களை ஒரு முனை வரி விதிப்பின் கீழ் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு முனை விற்பனை வரியின் கீழ் கொண்டு வரும் போது அந்த பொருட்களின் விற்பனை வரியை கூட்டக் கூடாது.

வத்தல், புளி, மஞ்சள், மல்லி, மிளகு ஆகியவைகளுக்கு இப்போது வரி சலுகைகள் ஒருமுனை வரியாக ஆக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் அந்த ஒரு முனை வரி சதவீதமானது 8 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. அதை 5 சதவீதமாகக் குறைத்தால் ஏழை எளிய மக்களுக்கு வாங்கி உபயோகிப்பவர்களுக்கு நல்ல ஒரு வாய்ப்பாக அது அமையும் என கருதுகிறேன்.

வணிகத்தில் பாதுகாப்பும், வர்த்தகர்களின் நலன்களை காக்கவும் வணிகர் நல வாரியம் அமைக்கப்பட வேண்டும் என்று நீண்ட நாட்களாகக் கோரி வருகிறோம். அரசுக்கு வரியின் மூலம் வருமானம் கூடுதலாக வந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில் வணிகர்களின் நியாயமான இந்த கோரிக்கையை ஏற்று வணிகர் நல வாரியம் அமைக்க உடனே ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சமீப காலமாக விற்பனை வரி அதிகாரிகள் வர்த்தக நிறுவனங்களில் சோதனை செய்யும்போது தங்கள் அதிகார வரம்பை மீறி வர்த்தகர்களை மிகுந்த தொல்லைக்கும் மனவேதனைக்கும் உள்ளாக்கச் செய்கிறார்கள். பல அதிகாரிகள் ஒரே சமயத்தில் வந்து சோதனை செய்வதால் ஒரு நபராக இருக்கும் உரிமையாளர் பல அதிகாரிகளுக்கு ஒரே சமயத்தில் பதில் சொல்லவோ, தேவையான விவரங்களைத் தரவோ முடியவில்லை. சுமார் ஆயிரம் கோடி ரூபாய் விற்பனை வரியாக வசூல் தரும் வணிகர்கள் மரியாதையாக நடத்தப்பட வேண்டும். வணிகர்கள் ஊக்கமாக செயல்பட்டால் வரி வருமானம் உயரும். தக்க காரணம் இன்றியோ, பெரிய அதிகாரிகள் எழுத்து மூலமாகவோ அதிகாரம் பெறாமல் வர்த்தகர்களை சோதனை செய்யக்கூடாது. விற்பனை வரித் துறையில் ஏதாவது ஒரு குறிப்பிட்ட துறைக்கு சோதனை அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும். சோதனை இடும்போது அதிகாரிகள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும், என்ன என்ன விவரங்களை வணிகர்கள் கொடுக்க வேண்டும் என்ற நெறி முறைகளை வைக்க வேண்டும். இதனால் வணிகர்கள் சிரமங்கள் பெருமளவுக்கு குறையும் என்று என்னுடைய கருத்தை வலியுறுத்துகிறேன்.



1985 ஜூன் 24] [திரு. எ. தெய்வநாயகம்]

நமது நாட்டில் விவசாய பொருளான வெல்லம் ஒரு குடிசை தொழிலாகவே அமைக்கப்பட்டிருக்கிறது. முன்பு ஒரு காலத்தில் நமது தமிழக முதலமைச்சராக இருந்த பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் அதை குடிசைத் தொழில் என்ற காரணத்தால் அதற்கு ஒரு முனை விற்பனை வரியாக வசூல் செய்தார்கள். இப்படி இருந்ததால் விவசாய பெருங்குடி மக்களுக்கு இன்பமாக இருந்தது. பொதுமக்களுக்கும் அது ஒரு நல்ல வரப்பிரசாதமாக இருந்தது. ஆனால் இன்று அதற்கான வரி பல முனை வரியாக வசூலிக்கப்பட்டு பெரும் தொல்லைக்கு உள்ளாக்குகிறார்கள். அதை மாற்ற ஆவன செய்யவேண்டும் என்று தமிழக அரசை கேட்டுக்கொள்கிறேன்.

எண்ணெய்ப் பொருட்களுக்கும் பல முனை வரி விதிக்கப்பட்டுள்ளது. அந்த எண்ணெய்ப் பொருட்களைச் சேர்ந்த புண்ணாக்கு, மாட்டுத் தீவனம் போன்ற பொருட்களுக்கும் பல முனை வரி விதிக்கப்பட்டுள்ளது. அதை ஒரு முனை வரியாக மாற்றி விவசாய பெருங்குடி மக்களுக்கு நல்ல ஒரு பயனை அளிக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். வரி விதிப்பு என்பது ஒரு நல்ல சாதனமாக இருந்தாலும் இப்போது நம் அறிக்கையின்படி பார்க்கும் போது 1979 ஆம் ஆண்டிலிருந்து கூடுதலாகவே வரி வருவதாக அறிக்கையில் காணப்படுகிறது. அதற்காக நமது தமிழக அரசை நான் பாராட்டுகிறேன். ஆகவே மேலும் மேலும் வளர்ந்து நல்ல முறையில் இருக்க வேண்டும். வரி வசூலிக்காமல் நாம் அரசை நடத்த முடியாது என்றாலும் அதை ஓரளவுக்கு, ஒரு நியாயமான வரியை வசூலித்து நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்கு பாடுபட வேண்டும் என்று இந்த அரசை கேட்டுக்கொண்டு இந்த சந்தர்ப்பத்தில் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

(முற்பகல் 10–40)

*திரு. செ. செம்மலை : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்த மானியக் கோரிக்கையினை வரவேற்று என்னுடைய ஒரு சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல நான் விரும்புகிறேன். வணிக வரித் துறையைப் பொறுத்த வரையில், இதை ஒரு வருவாய்த் துறை என்று சொன்னால், அந்தப் பெயர் மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். காரணம், கிட்டத்தட்ட அரசினுடைய மொத்த ஆண்டு வருமானத்தில் 70 சதவிகித்தை இந்தத் துறை ஈட்டித் தருகிறது என்ற நிலைமையை நாம் பார்க்கிறபோது, இந்தத் துறையை எந்த அளவுக்கு அக்கறையோடு நாம் நடத்த வேண்டும் என்ற ஒரு நிலைமை இப்போது ஏற்பட்டிருக்கிறது.

இந்தத் துறையைப் பொறுத்தவரையில், வணிகர்களைக் கண்டிப்போடு வைத்திருக்கிற அந்த வகையிலும், அதைப் போல, நுகர்வோரை, பயன்படுத்துவோரை கருணையோடு பார்க்கிற ஒரு துறையாகவும், அதே சமயத்தில், வணிகர்களுக்கும், பயன்படுத்துவோருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படாத வகையில் ஒரு கண்காணிப்புள்ள துறையாகவும் இந்தத் துறை சிறப்பு வாய்ந்த துறையாக இருக்கிறது, இருந்து வருகிறது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில், இந்தத் துறையில் வரி வாய்ப்புக்கு நல்ல ஆதாரங்களை அவர் தேடிக் கொண்டிருந்தாலும், இந்தத் துறையைப் பொறுத்த வரையில்,இத்துறை வரி ஏய்ப்புக்கு அதிகமாக ஆளாகிக் கொண்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

எனவே, இந்தத் துறையைப் பொறுத்தவரையில், நாம் புதிதாக வரி விதிப்பது அல்லது ஆதாரங்களைத் தேடுவதை விட விதிக்கப்பட்ட வரிகளை ஏய்க்காமல் அல்லது வியாபாரிகள், வணிகர்கள் வரி ஏய்ப்புச் செய்யாமல் கண்காணிப்போமேயானால், அந்த வருமானத்தை நாம் முறையாகப் பெறுவதற்கு நிச்சயமாக நல்ல வாய்ப்பு இருக்கும் என்று நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எனவே, இந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் முடிந்த அளவுக்கு வரி ஏய்க்காத அளவுக்கு கண்காணிப்போடு, விழிப்போடு செயல்பட வேண்டும் என்ற அந்த வேண்டுகோளையும் நான் இந்த நேரத்தில் வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஒரு பொருளுக்கு பல முனை வரி விதிப்பதன் மூலமாக, ஒவ்வொரு கால கட்டத்திலும் ஒவ்வொரு விற்பனையிலும் புதிதாக வரி விதிக்கப்பட்டு நுகர்வோர், பயன்படுத்துவோர் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக சில அத்தியாவசியப் பொருட்களுக்கு, குறிப்பாக பொதுமக்கள் அன்றாடம் உணவில் பயன்படுத்தக்கூடிய, மிளகாய், புளி, மஞ்சள், மல்லி, மிளகு போன்ற பொருள்களுக்கு இன்றைக்கு அரசாங்கம் ஒரு முனை வரியை விதிப்பதற்கு இன்றைக்கு நடவடிக்கை எடுத்து, அதற்கான சட்ட முன்வடிவை எல்லாம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்காக நான் உள்ளபடியே இந்தத் திட்டத்தை, இந்த முறையை வரவேற்க கடமைப்பட்டிருக்கிறேன்.

காரணம், அப்படிப்பட்ட அத்தியாவசியப் பொருட்கள் எத்தனை முறை விற்கப்பட்டாலும், அத்தனை விற்பனைகளிலேயும், வரி செலுத்துகிற வகையில் இதுவரையில் பல முனை வரியாக விதிக்கப்பட்டு வந்தது. அது பயன்படுத்துவோருக்கு ஒரு சுமையாகவும், பாதிப்பாகவும் இருந்து வந்த நிலைமை



மாறி, ஒரு முனை வரியின் மூலமாக அந்தச் சுமை இப்போது குறைக்கப்பட்டு இருக்கிறது என்பதை நாம் நன்றாக உணர வேண்டும். ஆனால், இதிலும் வணிகர்களுக்கு அல்லது அந்தப் பொருளை விற்பவர்களுக்கு வரி ஏய்க்கிற வாய்ப்பு இருக்கிறது என்பதையும் மறந்து விடக்கூடாது.

முதல் விற்பனையை இரண்டாவது விற்பனையாகக் காட்டி, அந்த வரி ஏய்ப்பு செய்வதற்கு அவர்கள் முயலக்கூடும். இதைக் கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு பொதுக்கூட்டத்திலே சுட்டிக்காட்டி இருக்கிறார்கள்.

குறிப்பாக, விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படுவதை வணிகர்கள் முதல் விற்பனை செய்கிறபோது, அதற்கு வரி விதிக்கவேண்டும். ஆனால், அந்த வரியிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக, வியாபாரிகள் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யாத அளவுக்கு அவர்கள் கணக்கைக் காட்டி கொள்முதல் செய்வதை மறைத்து, முதல் விற்பனைக்கு போலி பில்களை அவர்கள் தயாரித்து, அவர்கள் முதல் விற்பனையை இரண்டாவது விற்பனயாகக் காட்டி, அந்த விற்பனைக்கு வரி விலக்கு—ஆதாவது விற்பனை வரி அளிக்க வேண்டிய தேவையில்லை என்ற நிலைமைக்கு, வியாபாரிகள் வரி ஏய்ப்பு செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதை இந்தத் துறை அதிகாரிகள் மிகவும் கண்காணித்து, இந்த வரி ஏய்ப்பு ஏற்படாத வகையில், குறிப்பிட்ட சட்டத்திலே அல்லது பிரிவிலே சட்டத் திருத்தம் தேவைப்படுமானால்கூட, அதை தமிழ்நாடு பொது விற்பனை வரி சட்டத்தில் கொண்டு வருவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கேளிக்கை வரி சட்டப்படி திரையரங்குகளில் விற்கப்படும் நுழைவுச் சீட்டுகள் அல்லது தினசரி வசூலைப் பதிவு செய்யும் ஏடுகளில் வணிக வரி அதிகாரிகளின் முத்திரை இடப்பட வேண்டுமென்ற நிலைமையிருக்கிறது. அதன் மூலம் அவர்கள் வரியை ஏய்க்க அல்லது போலி பில்கள் அல்லது போலி பதிவேடுகளை தயாரிக்கக்கூடிய வாய்ப்பு குறைக்கப்படுகிறது.

ஆகவே, நான் மாண்புமிகு அமைச்சரவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வது, தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் விதி 26-ன் கீழ் பேணப்படும் அத்தனை பதிவேடுகளிலும் வருமான வரி அதிகாரிகளின் முத்திரையைப் பெற வேண்டும் என்ற திருத்தத்தை நீங்கள் கொண்டு வந்தால் இப்படிப்பட்ட போலி பதிவேடுகளை உருவாக்குவதைத் தடுக்க முடியும்.

இடையிலே கணக்குப் புத்தகங்களை ஆண்டுக்கு ஒருமுறை ஆய்வு செய்தாலும், இடையிலே மாற்றக் கூடிய நிலைமைகளைத் தவிர்க்க முடியும் என்பதையும் எடுத்துச் சொல்லி,

[திரு. செ. செம்மலை] [1985 ஜூன் 24

அப்படிப்பட்ட பதிவேடுகளில் வணிக வரி அதிகாரிகளின் முத்திரை இடப்பட வேண்டும் என்ற நிலையை அமைச்சரவர்கள் உரு வாக்கித் தர வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசியலமைப்பு 46-வது சட்டத் திருத்தத்தின்படி கன்சைன் மெண்ட் சேல்ஸ், ஓர்க்ஸ் காண்ட்ராக்ட், இன்ஸ்டால்மெண்ட் பர்சேஸ், சர்விஸ் சார்ஜ் ஆகியவற்றின்மீது வரி விதிப்பதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. இந்த நான்கைந்து பிரிவுகளுக்கு வரி விதிக்க வகையிருந்தாலும் தற்போது ஓர்க்ஸ் கான்ட்ராக்ட் டைப் பொறுத்தவரையில் மட்டும் சட்டமாக 1-10-1984 முதல் நடைமுறையிலே இருந்து வருகிறது. கன்சைன்மெண்ட் சேல்ஸ் சர்வீஸ் சார்ஜ் ஆகியவற்றிற்கு இன்னும் சட்டம் கொண்டு வரப்படவில்லை. கன்சைன்மெண்ட் சேலைப் பொறுத்தவரை யில் அது மத்திய அரசாங்கத்தினுடைய ஆளுகைக்கு உட்பட் டிருப்பதால், அதற்கு உடனடியாகச் சட்டம் கொண்டு வர வேண்டும் என்று மத்திய அரசாங்கத்தை நம்முடைய அரசு வற்புறுத்த வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு சங்கடத்தையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். வெளி மாநில விற்பனையை — இன்டர் ஸ்டேட் சேலைப் பொறுத்த வரையில், அந்த வியாபாரிகள் அந்த முறையைப் பயன்படுத்தி ஒப்படைச் சரக்கு என்ற முறையில் அந்த வியா பாரத்தைச் செய்வதால் வருவாயை இழக்கின்ற சூழ்நிலை இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நேரடியாக விற்பனை என்று வருகின்றபோது, வரிக்கு உட்படுகிறார் கள்: ஆனால் அதையே வெளி மாநிலங்களில் உள்ள எங்க ளுடைய ஏஜண்டுகளுக்கு நாங்கள் அனுப்புகிறோம், விற்பனை செய்யவில்லை, ஏஜண்டுகள் மூலம் அனுப்பி அங்கே விற்கிறோம் என்ற தந்திரத்தைக் கையாண்டு இன்டர் ஸ்டேட் சேலில் வரி ஏய்ப்பைச் செய்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமைகளையும் நாம் தடுத்து, வரி ஏய்ப்பைத் தடுப்பதற்கு மாண்புமிகு அமைச்ச ரவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சர்வீஸ் சார்ஜைப் பொறுத்தவரையில் நம்முடைய அர சாங்கம் சட்டம் கொண்டு வரலாம். ஓட்டல்கள், தனியார் நடத்தும் மருத்துவமனைகள் போன்ற இப்படிப்பட்ட பிரிவுகளுக்கு நாம் சட்டத்தை அமல்படுத்தலாம் என்ற நிலையிலிருந்தாலும், இந்த ஓட்டல்களுக்குக் கொண்டு வந்தால் ஓட்டல்களிலே சாப்பிடுகின்றவர்களுக்குத்தான் அந்தவரி சுமை யாக இருக்கும் என்பதால் அப்படிப்பட்ட விடுதிகளுக்கு இந்த வரியிலிருந்து விலக்களிக்க ஏற்பாடு செய்யலாம். இப்பொழுது



1985 ஜூன் 24] [திரு. செ. செம்மலை]

தனியார்கள் நர்சிங் ஹோம் என்று நடத்துகிறார்கள். வசதி யடைத் தவர்கள் போய்த் தங்கி ஓய்வெடுக்கிறார்கள் அல்லது மருத்துவச் சிகிச்சை பெறுகிறார்கள். அப்படிப்பட்ட சர்வீஸ்களுக்கு ஓரளவிற்கு வரி விதித்தால் அந்தத் துறைக்கு வருமானம் கூடுத லாகக் கிடைக்கும். ஆகவே, சர்வீஸ் சார்ஜ் வரி வதிப்புச் சட்டத் தைக் கொண்டு வந்து இப்படிப்பட்ட வருமான வரியைப் பெருக்கு கின்ற வகையில் இப்படிப்பட்ட மருத்துவ மனைகள், நர்சிங் ஹோம் போன்றவற்றிற்கு வரியை விதித்தால் ஓரளவு வருமானம் கிடைப்பதற்கு வாய்ப்பு ஏற்படும். அப்படி சட்டம் வருகின்ற பொழுது ஓட்டல்கள் போன்றவற்றிற்கு வரிவிலக்கு அளித்து செக்ஷன் 17 இன்படி விலக்கு அளிக்க வேண்டும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, வரி ஏய்ப்புக்கு வாய்ப்பிருக்கின்ற நிலைமைகளை பற்றியும் மாண்புமிகு அமைச்சரவர்களுக்குச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். இப்பொழுது வெளி மாநிலங்களி லிருந்து கொள்முதல் செய்யப்படும் சரக்குகள், உள் மாநிலத்தில் இ.1 சேல் அதாவது என்டார்ஸ்மென்ட் சேல் எனறு விற்பனை செய்யப்படுவதால் நமக்குப் பெரும் இழப்பு ஏற்படுவதாகச் சொல்கிறார்கள். அந்த நிலைமைகளைப் பொறுத்தவரையில் குறிப்பாக சாயம், ரசாயனப் பொருட்களை வெளி மாநிலங்களி லிருந்து கொள்முதல் செய்கிறார்கள். அப்படிக் கொள்முதல் செய்து அவர்கள் விற்கின்றபொழுது சாயப்பட்டறைக்கு விற்க வேண்டும். ஆனால் நேரடியாக விற்பதற்குப் பதிலாக வரியை ஏய்க்க வேண்டுமென்ற எண்ணத்தில் நேரடியாக விற்காமல் என்டார்ஸ்மென்ட் சேல்ஸ் என்ற முறையில் பொருள்களின் கொள்முதல் உரிமையை மாற்றிக் கொடுக்கிறோம். என்டார்ஸ் செய்கிறோம் என்று சொல்கிறார்கள். நாங்கள் நேரடியாக விற்பனை செய்யவில்லை. நாங்கள் என் டார்ஸ் செய்கிறோம். அந்தக் கொள்முதல் உரிமையை என்டார்ஸ் செய்கிறோம் என்று சொல்லி, இங்கே நம்முடைய நாட்டிலே விற்கக்கூடிய பொருள்களுக்கு விற்பனை வரி கொடுக்காத அளவுக்கு வரி ஏய்ப்பு செய்கிற சூழ்நிலை என்டார்ஸ்மென்ட் சேல்சைப் பொறுத்து நிலவி வருகிறது. எனவே, அந்த இ-1 சேலைப் பொறுத்த அளவில் முழுமையாகத் தடை செய்வதன் மூலம் இந்தத் துறை வரி ஏய்ப்பை முழுமையாகத் தடுக்கலாம். எனவே, அப்படிப்பட்ட நிலைமைகளை உருவாக்க, இ-1 விற்பனையை முழுமையாகத் தடை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10—50)

தங்கும் விடுதிகளிலே தங்குபவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் கட்டணத்திற்கு ஏற்ப நம்முடைய துறையைச் சேர்ந்தவர்கள் இன்றைக்கு வரி விதித்துக் கொண்டிருக்கிறார்கள். ரூ. 20-லிருந்து

ரூ. 49 வரை 5 சதவீதமும், ரூ. 50 க்கு மேல் 10 சதவீதமும் வரி விதிக்கப்பட்டு வருகிறது. ஆனால், இந்த அளவு, ஒரு அறைக்கு என்று இல்லாமல், ஒரு தலைக்கு என்று இருந்து வருவதால், இன்றைக்கு நமக்குவரவேண்டியவரிகள் தடுக்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு ஒரு அறையிலே இரண்டு பேர்கள் தங்குகிறார்கள் என்று வைத்துக் கொண்டால், அதற்கு வாடகை ரூ. 35 என்று வசூலிக்கப்படுகிற சூழ்நிலையில் இருவர் தங்குகிற அந்த அறைக்கு அங்கே வரி விதிக்க முடியாது. காரணம், தலைக்கு ரூ. 20 க்கு மேல் இருக்க வேண்டுமென்று சட்டத்தினுடைய விதிகள் சொல்வதாலே, இரண்டு பேர் தங்கி, அந்த அறைக்கு ரூ. 35 என்று சொன்னால், நாம் அதற்கு வரி விதிக்க முடியாது. எனவே இப்படி அதிகமான வாடகையை அவர்கள் வாங்கினால் கூட, ரசீது போடுகிற பொழுது ரூ. 35 க்குக் குறைவாக, ரூ. 40 க்குக் குறைவாக ரசீது போட்டு, இரண்டு பேர் தங்குகிற அந்த அறைக்கு வரி ஏய்ப்பு செய்கிற நிலைமை இருக்கிறது. அதற்குக் காரணம் அறைக்கு என்று இல்லாமல் ஒரு நபருக்கு என்று இருக்கிறது. ஆகவே, அந்த விடுதிகளிலே ஒரு நபருக்கு என்று இருக்கிற நிலைமையை மாற்றி ஒரு அறைக்கு என்று திருத்தம் கொண்டு வந்தால், எத்தனை பேர்கள் அந்த அறையிலே தங்கினாலும் சரி, அந்த அறைக்கு விதிக்கப்படுகிற கட்டணத்திலிருந்து 5%, 10%, வரி நிரந்தரமாக வந்துவிடும். எனவே, அப்படிப்பட்ட ஒரு சட்டத் திருத்தத்தை வரி ஏய்ப்பைத் தடுப்பதற்காக கொண்டுவர வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

கொள்கை விளக்கக் குறிப்பேட்டிலே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இந்த வரியைப் பொறுத்த அளவில் நான் ஏற்கனவே சொன்னதைப் போல, நல்ல வருவாயைப் பெற்று வருகிற ஒரு துறையாக இருந்தாலும், மைய அரசைப் பொறுத்தவரையில் இந்தத் துறையிலே சில அதிகாரங்களை அவர்கள் கைக்கு மாற்றிக் கொள்கிற முயற்சியிலே முயன்று கொண்டிருக்கிறார்கள். வனஸ்பதி, மருந்துப் பொருட்கள், சிமெண்ட், காகிதம், காகித அட்டை, பெட்ரோலியம் போன்ற பொருட்கள் மீது விற்பனை வரிக்குப் பதிலாக, கூடுதல் ஆயத் தீர்வை விதிப்பதற்கான செயற் குறிப்பை அவர்கள் பரிசீலித்துக் கொண்டிருப்பதாகவும், அதை நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் முதலமைச்சர்கள் மாநாட்டிலே கடுமையாக எதிர்த்ததன் காரணமாக, அது தற்போதைக்கு ஒத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும், அவர்கள் சொல்லுகிறார்கள். நான் ஏற்கனவே சொன்னதைப் போல இந்தத் துறையைப் பொறுத்தவரையில் நல்ல வருவாயை ஈட்டி தருகிற ஒரு துறையாக இது இருக்கிறது. இந்தத் துறையின் வருவாயைக் கொண்டுதான் நம்முடைய மாநிலங்களுக்குப் பல்வேறு பணிகளை, வளர்ச்சிப் பணிகளை நாம் செய்வதற்கு வாய்ப்பிருக்கிறது. எனவே, எந்தக் காரணத்தைக் கொண்டும், மைய அரசு அப்படிப்பட்ட பொருள்கள் மீது விற்பனை வரியை





எடுத்து, ஆயத் தீர்வையை விதிக்கிற சூழ்நிலையை நம்முடைய அரசாங்கம் கட்டாயமாக எதிர்க்கவேண்டும். இதிலே மாநில அரசு மிகுந்த எச்சரிக்கையோடு இருக்க வேண்டு மென்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தி பேசாத மாநிலங்கள், இந்தியை ஏற்றுக் கொள்கிற வரையில், இந்தியை நாங்கள் கட்டாயமாக்கமாட்டோம் என்று பண்டித ஜவகர்லால் நேரு வாக்குறுதி கொடுத்திருந்தாலும், மறைமுகமாக இந்தியை வளர்ப்பதறகும் இந்தியைத் திணிப்பதற்கும் பல்வேறு முயற்சிகளிலே அவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கிற சூழ்நிலையில் இப்படிப்பட்ட வரி விதிப்பைப் பொறுத்தவரையில் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். காரணம், இப்படிப்பட்ட பொருட்கள் மீது ஆயத் தீர்வை விதிக்கப்படுமானால், வருகிற நிகர வருமானம் நிச்சயமாக க் குறைந்துவிடும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எச்சரிக்கையோடு இருந்து அப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற குறிப்பின்படி சென்ற ஆண்டு மட்டும் 14% இந்தத் துறையிலே வருவாய் அதிகரித்திருக்கிறது. இந்த அதிகரிப்பு என்பது உள்ளபடியாக குறைவாக இருக்கிறது என்பது என்னுடைய கருத்து. காரணம் ஏற்கனவே சொன்னதைப் போல, வரி ஏய்ப்பை நாம் தடுப்போமானால் இன்னும் அதிகச் சதவீதத்தை வரியாகப் பெற நமக்கு வழிவகை இருக்கிறது. எனவே, என்னைப் பொறுத்த வரையில் இன்றைக்கு இந்தச் சட்டத்திலே இருக்கிற சந்து பொந்துகளைப் பயன்படுத்தி வணிகர்கள் வரி ஏய்ப்பு செய்கிற ஒரு நிலைமையை மாற்றி, மூடிந்த அளவுக்கு வரி ஏய்க்காமல் தடுக்கப்படுமானால் நிரந்தரமாக வருவாயை இந்தத் துறை நிச்சயமாகப் பெறும். இப்படிப்பட்ட முயற்சிகளிலே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும், இந்தத் துறையினுடைய அதிகாரிகளும் ஈடுபட வேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லி, இந்த மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணிக வரி மானியக் கோரிக்கை பற்றிய விவாதத்தில் நான் சார்ந்துள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சிலபல கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

1939 ஆம் ஆண்டு மூதறிஞர் இராஜாஜி அவர்களால் ரூபாய்க்கு ஒரு காசு வீதம் அறிமுகப்படுத்தப்பட்ட விற்பனை வரி இன்றைக்கு தமிழக அரசுக்கு காமதேனு போல விளங்குகிறது என்பதை நாம் எல்லோரும் அறிவோம்.

[திரு. அ. மலர்மன்னன்] [1985 ஜூன் 24

1984–85 ஆம் ஆண்டு கிட்டத்தட்ட ஆயிரம் கோடி ரூபாய்க்கு வணிக வரியிலிருந்து இந்த அரசுக்கு வருமானம் வந்திருக்கிறது. இது முந்தைய ஆண்டு விற்பனை வரி மூலம் கிடைத்த வருமானத்தைவிட 154 கோடி ரூபாய் அதிகமாகும். ஒரே ஆண்டில் 21 சதவீதம் உயர்ந்துள்ளதை இது எடுத்துக் காட்டுகிறது.

மூதறிஞர் இராஜாஜி அவர்கள் 46 ஆண்டுகளுக்கு முன்னால் மாநில விற்பனை வரியைப் புகுத்தும்போது அப்போது அமுல்படுத்தப்பட்ட மதுவிலக்கினால் அரசுக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பை சரிக்கட்டத்தான் இந்த விற்பனை வரியை அறிமுகப்படுத்தினார்கள். ஆனால் உங்களது ஆட்சியிலே நமது முதலமைச்சர் அறிவித்தவாறு பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளான செப்டம்பர் 15 அன்று மதுவிலக்கை மீண்டும் செயல்படுத்த எந்த ஒரு அறிகுறியும் இன்று வரையில் தெரிய வில்லை. ஆனால் இன்றைய தினம் சாராயத்தினுடைய சில்லரை விற்பனைக்கு ஏஜெண்டுகள் எல்லாம் நியமித்து, கட்சிக்குப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறீர்கள்.

இன்றைய தினம் விற்பனை வரியினால் அவதியுறும் வியா பாரிகள், அல்லல்படுகின்ற பொதுமக்களுக்கு இந்த அரசிட மிருந்து எந்தவிதமான நிவாரணமும் கிடைக்கவில்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது அளித்த நிதிநிலை அறிக்கையிலே ஒன்றை எடுத்துச் சொன்னார்கள் 'Tap the rich and pat the poor' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்றைய தினம் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் இன்றைய தினம் உங்களுடைய ஆட்சியிலே 'ஸ்டீல் ரோல் மில்' முதலாளியிடம் விற்பனை வரியை எந்த அளவுக்கு விட்டுக்கொடுத்திருக்கிறீர்கள் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வியாபாரியை ஒரு பூவோடு ஒப்பிடலாம். அந்தப் பூவை மிகவும் கவனமாகக் கையாள வேண்டும். மலரை கசக்கினால் அதனுடைய மணத்தை நுகர முடியாது. அதைப்போன்று வியா பாரிகளைக் கசக்கினால் அதன் மூலம் முழுப் பயனையும் பெற முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதை ஒரு உதாரணம் மூலம் எடுத்துச் சொல்ல வேண்டு மென்றால் பூவிலே இருந்து தேன் சேகரிக்கிற வண்டு எந்த அளவுக்கு பூவைச் சுற்றிச் சுற்றி வந்து, மெல்ல பூவிலே அமர்ந்து தேனை சிந்தாமல் சிதறாமல் எடுக்கிறதோ அதைப்போன்று வணிக வரித் துறையில் இருக்கின்றவர்கள் விற்பனை வரியைப் பெற வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள் கிறேன்.



1985 ஜூன் 24] [திரு. அ. மலர்மன்னன்]

இன்றையதினம் இருக்கிற வியாபாரிகள் பூவாக இருக் கிறார்கள். தேன் எடுக்கின்ற வண்டு விற்பனை வரி அதிகாரி களாக இருக்கிறார்கள். பெறப்படுகிற தேன் விற்பனை வரியாக இருக்கிறது. ஆனால் அந்த வண்டு மலரிலே இருக்கிற தேனை எடுப்பதைப்போல நீங்கள் இன்றைக்கு விற்பனை வரியை வசூலிக்கிறீர்களா என்றால் இல்லை.

(முற்பகல் 11–00)

இன்றைக்குத் தமிழகத்தில் தமிழக அரசுக்கு ஆண்டின் வரு வாயில் கிட்டத்தட்ட 70 சதவீதத்திற்கு மேல் தருகின்ற வியாபாரப் பெருமக்கள் படுகின்ற அவதியை இந்த அரசு கவனிக்கவில்லை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வியாபாரிகளின் அன்றாடக் கோரிக்கைகளாக அளிக்கப்படுபவையும், அவர்கள் மாநாடுகளின் மூலமாக அமைச்சர் பெருமக்கள் மத்தியில் அளிக்கப்படுகின்ற கோரிக்கை களையும் இப்படி எந்த கோரிக்கைகளையும் இந்த அரசு வியாபாரப் பெருமக்களுக்காக நிறைவேற்றித்தரவில்லை என் பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

வியாபாரிகள் படுகின்ற அவதியைப் பற்றி உங்களால் நியமிக்கப்பட்ட கைவார் குழு தெளிவாகக் கூறியிருக்கின்றது. 'Commercial Tax Officers should behave like gentlemen and no time they should hurt the feelings of dealers' என்று கைவார் குழு எடுத்துக் கூறியிருக்கின்றது. வர்த்தகச் சோதனைச் சாவடிகளைப் பொறுத்தவரையில் அவையெல்லாம் வேதனைச் சாவடிகளாகத்தான் இன்றைக்கு இருந்துகொண் டிருக்கின்றன. வியாபாரிகள் பொருட்களை எடுத்து வருகின்ற நேரங்களில் அந்த நிலையங்களில் அவர்கள் படுகின்ற அவதி களைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அரசுத்துறை அதிகாரிகளும் கவனித்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வியாபாரிகளைப் பொறுத்தவரையில் ஒட்டுமொத்த மான கோரிக்கையாக ஒரே லைசன்ஸ் முறை வேண்டும் என்று நீண்ட நாட்களாகக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். எனவே எதை வியாபாரிகள் கேட்டார்களோ அதற்கு எதிர்மாறாக நீங்கள் இன்றையதினம் நடந்துகொண்டிருக்கிறீர்கள் என்பதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். மிளகாய், புளி, எண்ணெய், எண்ணெய் வித்துக்கள், சர்க்கரை இவற்றைப் பொறுத்தவரையில் லைசன்ஸ் இல்லாது இருந்த நிலையில், வியாபாரிகள் ஒரே லைசன்ஸ் முறை வேண்டும் என்று கோரிக்கை வைத்துக்கொண்டிருந்த நிலையில் இந்த மிளகாய், புளி, எண்ணெய், எண்ணெய் வித்துக்கள் சர்க்கரை போன்றவற்றிற்கு எல்லாம் லைசன்ஸ் முறையைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். இது நியாயமா ?

[திரு. அ. மலர்மன்னன்] [1985 ஜூன் 24

உணவு தானியங்களைப் பொறுத்தவரையில் இன்றைக்கு வரி
விலக்கு அளித்திருக்கிறீர்கள். அதுபோலவே ஏழை, எளிய
மக்கள் அன்றாடம் பயன்படுத்துகின்ற மிளகாய், புளி, எண்ணெய்
எண்ணெய் வித்துக்கள், சர்க்கரை இவற்றுக்கு எல்லாம் வரி
விலக்கு அளிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் மெத்தப்
பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் வெளி மாநிலத்
திற்கு அனுப்பப்படுகின்ற பொருட்களைப் பொறுத்த வரை
யில் வரி ஏய்ப்பு செய்யப்படுகிறது என்று சொன்னார்கள்.
நான் அவர்களுக்கெல்லாம் தெரிவித்துக்கொள்ள விரும்பு
கிறேன். ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன்.
சர்க்கரைக்கு 5 சதவீதம் வரியாகப் போட்டிருக்
கிறீர்கள். ஆனால் காமராஜர் அவர்கள் காலத்தில்
நாட்டுச் சர்க்கரை குடிசைப் பொருளாக இருந்த காரணத்தால்
அவற்றுக்கு வரிவிலக்கு அளித்திருந்தார்கள். ஆனால் இன்றைய
தினம் நீங்கள் 5 சதவீதம் வரியைப் போட்டிருக்கின்ற காரணத்
தால் அவர்கள் டெலிவரி நோட் மூலமாகச் சர்க்கரை பெற்று
இன்றைக்கு வெளி மாநிலங்களுக்கு நேரடியாக அவர்களுடைய
ஏஜெண்டாக இருந்து விற்பனை செய்கின்ற காரணத்தால் பல்
வேறு நிலைகளில் வரியை நாம் இழந்துகொண்டிருக்கிறோம்
என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றையதினம் வியாபாரிகளுக்கு மெத்த சுமையாக இரு
க்கின்ற ஒன்றை நான் இந்த நேரத்தில் தெரிவிக்க நான் விரும்பு
கிறேன். இன்றையதினம் நீங்கள் அடிஷனல் டாக்ஸாக வசூ
லிப்பது எந்த வகையில் நியாயம் என்று கேட்க விரும்புகிறேன்.
வியாபாரிகள் பொதுமக்களுக்கும், அரசுக்கும் இடையிலே இருந்து
கொண்டு வரியை வசூல் செய்து தருகின்ற பில் கலெக்டராகவும்,
ஊழியர்களாகவும், சம்பளம் பெறாதவர்களாகவும் இன்றைக்கு
இருந்து கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு இந்த அரசுக்கு
வரியை வசூல் செய்து கொடுத்துக்கொண்டிருக்கின்ற வியாபாரி
களுக்கு இந்த அரசு அடிஷனல் டாக்ஸ் விதித்திருக்கின்றது.
5 இலட்சத்திலிருந்து 7 இலட்சம் வரையில் டாக்ஸைபிள் டர்ன்
ஓவர் செய்திருப்பார்களையானால் முன்பு 6 சதவீதமாக இருந்த
வரி இன்றைக்கு 7 சதவீதமாக உயர்த்தப்பட்டிருக்கின்றது. அது
போல் 7 இலட்சத்திலிருந்து 10 இலட்சத்திற்கு டர்ன் ஓவர்
செய்கின்ற வியாபாரிகள் ஒரு பர்சன்ட் வரி கட்டவேண்டி இருக்
கின்றது. 10 இலட்சத்திற்கு மேலே டர்ன் ஓவர் செய்கின்ற
வியாபாரியைப் பொறுத்தவரையில் முன்பு கட்டவேண்டியது
7 சதவீதம் என்பதுதான். அது இன்றைக்கு 1.25 சதவீதமாக
உயர்த்தப்பட்டிருக்கிறது. இவற்றை எல்லாம் நான் ஏன் சொல்
கிறேன் என்று சொன்னால் இலாபம் அடைந்தாலும், அடையா
விட்டாலும், நஷ்டம் ஏற்பட்ட நாளிலும் கூட 10 இலட்சத்
திற்கு மேல் டர்ன் ஓவர் ஒரு வியாபாரி செய்திருப்பாரேயானால்



1985 ஜூன் 24] [திரு. அ. மலர்மன்னன்]

அவர் 36 ஆயிரம் ரூபாயை வரியாகக் கட்டவேண்டிய சூழ்நிலை
இருக்கின்றது. இதன் காரணத்தால் பல நேரங்களில் வியாபாரி
களைத் திருடனாக ஆக்குவதற்காகத்தான் இந்தச் சட்டம்
வழிவகை செய்கின்றது. என்பதை இந்த நேரத்தில் நான் தெரி
வித்துக்கொள்ள விரும்புகிறேன். காரணம், இன்றையதினம்
இருக்கின்ற வியாபாரிகளுக்கு நஷ்டம் ஏற்படுகின்ற சூழ்நிலையில்
கூட அவர்களால் இவ்வாறு 36 ஆயிரம் ரூபாயைக் கட்ட முடியுமா
என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

எனவே வியாபாரி ஒரு லைசன்சுக்குப் பதிலாக 5, 6
லைசன்சுகளைப் பெறுகிற அளவுக்கு, இன்றைக்கு அரசுத் துறை
யிலே இருக்கிற அதிகாரிகளே சொல்லித் தருகிறார்கள். ஆகவே
தான் இன்றைக்கு வியாபாரிகள் இதுபோன்ற நிலைமைக்கு உள்
ளாக்கப் படுகிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்
கொள்கிறேன். விற்பனை வரியிலே கட்ட வேண்டிய பாக்கித்
தொகை இருக்குமானால் விற்பனை வரித் துறை அதிகாரிகள்
உடனேயே கெடுபிடி செய்து அந்தத் தொகையை வசூல் செய்து
விடுகிறார்கள். ஆனால் விற்பனை வரித் துறையிலேயிருந்து
வியாபாரிகளுக்கு வர வேண்டிய பணத்தை வாங்குவதற்கு எந்த
அளவிற்கு வியாபாரிகள் கஷ்டப்படுகிறார்கள் என்பது வியாபாரப்
பெருமக்களுக்குத்தான் நன்றாகத் தெரியும். அதேபோல
கட்டப்பட வேண்டிய பணத்திற்கு வட்டி போட்டு வசூலிக்கிற
விற்பனை வரி துறை தான் தர வேண்டிய பணத்திற்கு—
விற்பனை வரியை அதிகமாக கட்டியிருந்தால், அந்தப் பணத்
திற்கு—வட்டித் தருவதில்லை. ஆனால் வருமான வரித் துறை
யிலே கட்ட வேண்டிய தொகைக்கு மேல் அதிகமாகக் கட்டினால்,
அந்த அதிகப் பணத்தை திருப்பித் தரும்போது வட்டி போட்டுத்
தருகிறார்கள். ஆகவே அது போன்ற நிலை இந்த துறைக்கும்
வர வேண்டும் என்று இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர்
அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல கலப்படத்தைப் பொறுத்தவரையில் எடுத்துக்
கொண்டால், வியாபாரிகள் இன்றைக்கு சமூகத்தின் மத்தியிலே
திருடனாகவும், பொய்யனாகவும் விமர்சிக்கப்படுகிறார்கள்.
இந்த நேரத்திலே ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்
இன்றைக்கு இயற்கையாகவே கலப்படமாக சில பொருள்கள்
விளைகின்றன. குறிப்பாக மஞ்சள், எள் போன்றவற்றை
எடுத்துக் கொண்டால், மஞ்சளில் இயற்கையாகவே லெட்
எனப்படும் பொருள் கலப்படமாகி இருக்கிறது. அதைப்போலவே
எள்ளில் தற்போது கொழுப்புச் சத்து அதிகமாக கலப்படமாகி
யிருக்கும் நிலையில் விளைகிறது. ஆனால் அதிகாரிகள் சோதனை
இடுகிற நேரத்திலே இவைகள் எல்லாம் கலப்படப் பொருள்
என்று தீர்மானித்து பல வியாபாரிகளை, அதுவும் சிறிய வியாபாரி
களைக் கைதுசெய்கிறார்கள். இதிலே நான் ஒன்றைத் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன்.

[திரு. அ. மலர்மன்னன்] [1985 ஜூன் 24

நியாயமான முறையில் மக்களுக்காக வணிகம் செய்கிற சிறு வியாபாரிகள் இந்தச் சட்டத்தினாலே மிகவும் வேதனைப்படு கிறார்கள். ஆனால் கோடிக்கணக்கில் வருமானத்தைப் பெற்று வருகிற பெரிய வியாபாரிகள், உங்களுடைய தயவினால் காப் பாற்றப்படுகிறார்கள், என்பதற்கு இரண்டொரு உதா ரணங்களை எடுத்துச் சொன்னால் நலமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

உதாரணமாக டீ தூளை எடுத்துக்கொண்டால், ஆயிரம் கிராம் டீ பாக்கெட் என்றால் அதிலே 900 கிராம் உளுந்து தோலின் தூளும், 50 கிராம் டீ தூளும் சேர்த்து விற்கிறார் கள். அவர்களையெல்லாம் பிடிப்பதேயில்லை. இதன் மூலமாக அவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு வருமானம் சுமார் 43 லட்சம் ரூபாய். அதேபோல ஆயிரம் கிராம் பாக்குத் தூளை விற்கிறவர் கள், கலப்படத்தின் துணை காரணமாக, அந்தத் துறையிலே 1 கோடியே 51 லட்சத்தை ஈட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் எல்லாம் பிடிபடாமல் தப்பி விடுகிறார்கள். அதற்கான காரணங்களில் ஒன்று அவர்களுக்கு வழக்கு மன்றம் இருக்கிறது. அப்படி இல்லையென்றாலும் சட்டமன்றத்திற்கோ நாடாளுமன்றத்திற்கோ, அல்லது வணிக வரிதுறையின் ஏதாவது வாரியங்களிலோ அவர்கள் பிரதிநிதித்துவம், மெம்பர்ஷிப் பெற்று விடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இன்றைக்கு விற்பனை வரித்துறையின் சில கொள் கைகள் காரணமாக வியாபாரிகள் மிக மோசமான சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்ல விரும்புகிறேன். 5 ஆண்டுகளுக்கான கணக்கை வைத்திருந்தால் போதும் என்ற நிலையை மாற்றி, எந்த ஆண்டிலும், எந்த இடத்திலும் எப் பொழுது வேண்டுமானாலும் கணக்குகளை அதிகாரிகள் பார்க்க லாம் என்ற நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். உலகத்திலே எந்த நாடானாலும் எந்த நடவடிக்கையானாலும் அதற்கு ஒரு கால வரையறையைச் செய்திருக்கிறார்கள். ஆனால் இந்த விற்பனை வரித் துறைக்கு மட்டும் இங்கே எந்தக் கால வரையறையும் இல்லாமல் செய்திருப்பதை மாற்ற வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஆகவே, இந்த விற்பனை வரியைப் பொறுத்த வரையில் நான் ஏற்கெனவே சொல்லியதைப் போல வியாபாரிகளை கசக்கிப் பிழியாமல், தேனை எடுக்கின்ற வண்டு மிக எளிதாக பூவிலிருந்து தேனை சேகரிப்பதைப் போல, விற்பனை வரித் துறை அதிகாரிகள் அந்த வரியை சேகரிக்க வேண்டும் என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.



1985 ஜூன் 24]

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்களால் இந்த மன்றத்தில் வைக்கப்பட்டிருக்கிற பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும், நிர்வாகம் குறித்த 4 ஆம் எண் மானியக் கோரிக்கை மீது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய உணர்வுகளை சொல்ல விரும்புகிறேன்.

(முற்பகல் 11-10)

பொதுவாகவே முந்தைய ஆண்டை விட தற்சமயம் வணிக வரித்துறையில் மிக அதிக அளவில் வருவாய் வந்திருக்கிறது என் பதை மாற்றுக் கட்சி உறுப்பினர்களும் சுட்டிக் காட்டினார்கள். அதற்குக் காரணம் இந்த அரசாங்கம் எடுத்திருக்கிற நிர்வாக சீர்திருத்தம் தான் என்பதைத் தவிர வேறில்லை என்பதை அவர் களே உணர்வார்கள். இந்த வணிக வரித் துறையைப் பொறுத்த வரையில் விற்பனை வரியை முதன்முதலில் அறிமுகப்படுத்தியவரே எங்களுடைய தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த மூதறிஞர் இராஜாஜி அவர்கள்தான். இன்றையதினம் தமிழ்நாடு அரசு மட்டுமல்ல, இந்தியத் துணைக்கண்டத்திலே இருக்கிற எந்த அரசானாலும், அல்லது இந்திய அரசே கூட வரவு செலவுத் திட்டத்தை தாக்கல் செய்கிறது என்றால் அதற்கு அடிப்படை காரணம் வருவாய் என்பதைப் பார்க்கின்றபோது, இதுபோன்ற வணிகவரியை வைத்து தான் நிர்ணயம் செய்கிறார்கள் என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

ஆரம்பக் காலத்தில் அது ஒரு துணை நிதியாக இருந்து, அதுவே, இன்றையதினம் அடிப்படை நிதியாக, மூலநிதியாக, நிதிநிலைக்கு ஆதாரமாக இருக்கக்கூடிய அளவில் வளர்ந்திருக் கிறது என்ற உண்மையை நாம் மறந்துவிடவில்லை. அப்படிப் பட்ட நிலையில் இன்றையதினம் வளர்ந்திருக்கின்ற இந்த நிதி தமிழக அரசைப் பொறுத்தவரையில் மிகப் பெரிய அளவில் வருமானம் வருகின்ற அளவில் இருக்கிறது என்று சொன்னால் அதற்குக் காரணம் நிர்வாக சீர்திருத்தம் என்று சொன்னேன். அதுமட்டுமல்ல காரணம். நாட்டிலே பல்வேறு வகையில் சலுகைகளை, விதிவிலக்கைக் கொடுத்திருக்கிறோம். கிராம மக்களுக்கு, தாழ்த்தப்பட்டவர்களுக்கு, பிற்படுத்தப்பட்டவர் களுக்கு, ஒடுக்கப்பட்டவர்கள், ஒதுக்கப்பட்டவர்களுக்கு எல் லாம் பல்வேறு வசதிகளைச் செய்திருக்கிறோம். பல்வேறு இடங் களில் ரேஷன் கடைகளைத் திறந்து அத்தியாவசியப் பொருள் களை அவர்களுக்கு பல்வேறு வகைகளில் வழங்கியும், இப்படி பல்வேறு வகைகளில் அரசாங்கம் உதவி செய்தும் கூட இந்த அளவிற்கு வரியாக ஒரு மாநிலம் பெறுகிறது என்று சொன்னால் அதற்குக் காரணம் தமிழகத்தைப் பொறுத்தவரையில் மக்களின்

[டாக்டர் கே. சமரசம்] [1985 ஜூன் 24

வாங்கும் சக்தி, உபயோகிக்கும் அளவு, இந்த ஆட்சியின் திறத்தால், தன்மையால், நடவடிக்கையால் கூடுதலாக்கப்பட்டிருக்கிறது என்பதை எந்த ஆண்ட எதிர்க்கட்சியும் மறந்து விட முடியாது.

இங்கே பேசுகிறபோது ஒரு உறுப்பினர் சொன்னார். பல்வேறு வகையில் நாம் சிலவற்றை எடுத்துவிட வேண்டுமென்றுகூட சொன்னோம். சாராய சில்லறை வியாபாரம் என்று ஒன்றை ஏற்படுத்தி அதற்கு ஏஜண்டாக நியமனம் செய்து, கட்சிகளுக்குப் பயன்படுகிற அளவில் நிலைமை இருக்கிறதென்று எல்லாம் சொன்னார்கள். மற்றொரு கருத்தையும் சொன்னார்கள். ஏதோ வணிகர்களுக்கு வக்காலத்து வாங்குவதைப் போல சில கருத்துக்களைச் சொல்லி, மலரைச் சொல்லி ஒரு மன்னன் பேசினார். நான் அவருக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மாற்றான் தோட்டத்து மல்லிகை மணக்கும் என்பது நம்முடைய கொள்கைதான் ஆனால் அதற்காக நம் வீட்டு ரோஜாவை மற்றவர்களுக்கு அத்தர் செய்ய கொடுத்துவிட்டு இளிச்சவாயர்களாக இருக்கும் நிலையில் நாம் இல்லை என்பதை மட்டும் யாரும் மறந்துவிட முடியாது.

விவசாயம், வியாபாரம் என்று பார்க்கிறபோது, பொதுவாகவே ஒரு விவசாயி 5 ஏக்கர் நிலத்தை வைத்து, ஏர்மாடுகளை வைத்து மிகப் பெரிய அளவிற்கு விவசாயம் செய்தாலும் கூட ஆண்டிற்கு .ஒருமுறை அல்லது இரண்டு முறைதான் ஏதாவது உணவுப் பொருளையும், கொஞ்சம் காசையும் கண்ணால் பார்ப்பார்கள். ஆனால் வியாபாரம் செய்பவர்கள் 500, 1,000 ரூபாய் என்ற அளவில் பெட்டிக்கடை நடத்துபவர்கள் கூட, அந்தத் தொகையை கடனாகப் பெற்று, கெந்து வட்டியிலே வாங்கி வியாபாரம் செய்தாலும் கூட தினம் தினம் அவர்கள் 100 ரூபாய், 50 ரூபாய் என்ற அளவில் இலாபத்தை எதிர்பார்க்க முடியும். இதுதான் இன்றைக்கு உலக சமுதாய நிலை. அந்த அடிப்படையில் பார்க்கிறபோது வியாபாரிகள் குறைந்த முதலீடு வைத்தாலும் கூட தினம் தினம் ஒரு தொகையை இலாபமாக பெற முடிகிறது. ஆனால் மிகப் பெரிய விவசாயி, உலகத்திற்கே அச்சாணி என்று சொல்கிறோமே அந்த விவசாயிகளுக்கு இந்த வசதி இருப்பதில்லை. அந்த அளவில் இன்றைய சமுதாயச் சூழ்நிலை இருக்கிறது என்பதை யாரும் மறந்துவிட முடியாது: அந்த அடிப்படையில்தான் இங்கே நிர்வாகச் சீர்திருத்தம் செய்து எதற்கு வரி போடலாம், எந்த வரியை நீக்கலாம் எனபதையெல்லாம் இந்த அரசாங்கம் எண்ணிப் பார்த்து, அதற்கு.வேண்டியவைகள் குறித்து முனைப்பாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிற காரணத்தால், வணிக வரி இன்றையதினம் மிகச் சிறந்த அளவில், பரந்த அளவில் வந்து கொண்டிருக்கிறது என்பதை யாரும் மறந்துவிடுவதற்கில்லை.



1985 ஜூன் 24] [டாக்டர் கே. சமரசம்]

அத்தியாவசியப் பொருள்கள் என்று சொல்லக்கூடிய பல்வேறு பொருள்களுக்கு நாம் சலுகைகளைக் கொடுத்திருக்கிறோம். அப்படி சலுகைகளைக் கொடுத்ததால் தான் இன்றையதினம் நாட்டு மக்களுக்கு பலன் தருகிற வகையில், 1985-86 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை அறிவித்தபோது தொடக்க நடவடிக்கையாக மிளகாய், புளி, மஞ்சள், கொத்தமல்லி, மிளகு இப்படிப் பட்டவைகள் மீது 5 சதவீதம் பலமுனை வரியாக இருந்ததை 8 சதவீதம் ஒருமுனை வரியாக மாற்றம் செய்த காரணத்தால் வியாபாரிகள் பல இடர்களில் செய்யக்கூடிய தவறுகளிலிருந்து அவர்களைக் காப்பாற்றுவதற்காக, அரசாங்கம் எதிர்பார்க்கிற ஒருமுனை வரியை நேரிடையாகப் பெறுவதற்காக பொது மக்கள் மீது புதிய புதிய விலை விகிதங்கள் உருவாகாமல் தடுப்பதற்காக, அந்த வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

அதுமட்டுமல்லாமல், வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்கவும் சிறுநிலம் வைத்துள்ள உழவர்களுக்கும், சொற்ப நிலம் வைத்துள்ள உழவர்களுக்கும் உதவி செய்யக்கூடிய வகையில் அரசாங்கம் உரங்களின் மீது உள்ள 5 சதவீத பலமுனை வரி விதிப்பிலிருந்து விலக்கு அளித்து உள்ளது. அதுமட்டுமல்லாமல் மின் அணு என்று சொல்லக்கூடிய வகையில் 12 சதவீதமாக இருந்து ஒருமுனை வரி வீதத்திலிருந்து 10 சதவீத ஒரு முனை வரியாகக் குறைக்கப்பட்டதை யாரும் மறந்துவிட முடியாது. இதையெல்லாம் நாட்டிலே இருக்கிற நிலைமைகளை எண்ணிப் பார்த்து, அவர்கள் என்னென்ன கோரிக்கைகளை எந்தெந்த வகையில், எந்தெந்த நேரங்களில் இந்த அரசுக்கு வைக்கிறார்களோ, அந்த அடிப்படையில் இந்தச் சலுகைகள் அளிக்கப்படுகிறது. அப்படி சலுகைகளை அளித்திருந்தும் கூட, நமக்கு வரவு பெருகி இருக்கிறது என்று சொன்னால், அதற்குக்காரணம் நிர்வாகச் சீர்திருத்தமும், இன்றைக்கு இருக்கக்கூடிய நடைமுறையும், அரசு மட்டத்திலே, அதிகாரிகள் மட்டத்திலே, இலாக்காக்களிலே எத்தனை ஓட்டை உடைச்சல்கள் இருந்தும் கூட, அந்த ஓட்டைகளை அடைத்து, அந்த அடிப்படையில் வரக்கூடிய மொத்த வருவாயாக இன்றைக்கு அது பெருகி இருக்கிறது என பது, இந்த அரசினுடைய ஆண்மைத் தன்மைக்குக் காரணம் என்று கூட நான் இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டு இருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், பல்வேறு வகையில் இந்த அரசாங்கம் எந்த அளவிற்கு வரி விலக்கு கொடுக்க முடியுமோ, அந்த அளவிற்கு கொடுத்து இருக்கிறது. தர்மபுரி மாவட்ட மாச்சத்து தயாரிப்பு பணித் தொழில் கூட்டுறவுச் சங்கத்திற்கும், அதைப் போலவே, உலர்ந்த தேங்காய் விற்பனைக்கு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் செலுத்த வேண்டிய வரியிலிருந்தும் மற்றும் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்

[டாக்டர் கே. சமரசம்] [1985 ஜூன் 24

கீழ் பாம்பு நஞ்சிற்கு சென்னை, இருளர் பாம்பு பிடிப்போர் தொழில் கூட்டுறவுச் சங்கத்திற்கும் வரி விலக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது, மேலும், புதிய வடிவமைப்பு கொண்ட அம்பர் சர்க்கார்க்குத் தேவைப்படும் முன்பதனிடு கருவியின் மீதான விற்பனை வரியிலிருந்தும், தமிழ்நாடு பத்திரிகைத்தாள் காகித நிறுவனம் செலுத்த வேண்டிய வரியிலிருந்தும், மற்றும் குழந்தைகள் அறக்கட்டளை, மருத்துவ ஆராய்ச்சிக் கூடம் போன்ற நிறுவனங்களுக்கும் வரி விலக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது. இருதயத் துடிப்பை ஒரே சீராகவைத்து வருவதற்குரிய கருவி ஆகியவற்றின் மீது இருந்த விற்பனை வரிக்கும் விலக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது. இப்படி பல பொருட்களை நாம் சொல்லிக் கொண்டே போகலாம். ஆகவே, அத்தியாவசியமான பொருட்கள் எது என்று மக்கள் விரும்புகிறார்களோ, அதை எண்ணிப் பார்த்து, பல்வேறு வகைகளில் இன்றைக்கு அரசாங்கம் சலுகைகளைக் கொடுத்து வருகிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன. அந்த அடிப்படையிலே எந்தந்த பொருட்களுக்கு வரி நீக்கம் செய்யவேண்டுமோ, அந்தப் பொருட்களுக்கு எல்லாம் செய்திருக்கின்றது.

அடுத்து குற்றங்கள் இப்போதுகூட நடக்கின்றனவா என்று சொன்னால் நடக்கின்றன. இப்போது சில புகார்கள் வந்திருக்கின்றன. அது எந்த அடிப்படையிலே என்று பார்க்கிறபோது பெரும்பாலும் டிரான்ஸ்போர்ட் லாரிகளிலிருந்து பொருட்களை ஏற்றுமதி செய்து எந்த இடத்திற்கு அனுப்பி வைக்கிறோமோ அந்த இடத்திலே இன்னும் கூட குற்றங்கள்தொடர்கின்றன என்று ஒரு நிலை அரசாங்கத்திற்கு வந்திருக்கும் என்று நான் நம்புகிறேன். எங்களைப் போன்ற பொது நலவாதிகள் இதைப் பற்றிச் சொல்லியிருக்கிறோம். ஒரு பெர்மிட்டை வாங்கிக்கொண்டு ஒரு இடத்திலேயிருந்து இன்னொரு இடத்திற்கு போகவேண்டிய பொருட்கள் ஒரு பெர்மிட்டை வைத்துக்கொண்டு பல லோடுகளுக்கு அவர்கள் பயன்படுத்துகிறார்கள் என்ற குற்றச்சாட்டு வந்திருக்கிறது. நான் இதைப்பற்றி ஏற்கனவே அமைச்சர் அவர்களிடத்திலே எடுத்துச்சொல்லி, அவர்கள் பிடித்து இருக்கிறார்கள், தகுந்த தண்டனையைத் தந்திருக்கிறார்கள். அப்படி இன்னும் எந்தந்த இடத்திலே நடைபெறுகிறது என்பதை எண்ணிப் பார்த்து, இந்த ஓட்டை உடைசல்களை தடுக்கவேண்டும், அப்படியிருக்கின்ற சூழ்நிலைகளை மாற்றியமைக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். டிரான்ஸ்போர்ட் லாரிகளிலே ஏற்றுமதி செய்யக்கூடிய பொருட்கள் எங்கிருந்து புறப்படுகிறதோ, அங்கேயிருந்து, அதற்குண்டான முத்திரை பெறப்பட்ட லெட்டர் எங்கே அதை வாங்குகிறார்களோ, அவர்களிடத்திலே அதைச் சேர்ப்பிக்கப்பட்ட பிறகே, அந்தக் கையெழுத்தை எங்கெங்கே அனுப்பி வைக்கவேண்டுமோ, அங்கே அனுப்பிவைத்து, அவர்களுக்கு அந்த ரசீது வந்து சேர்ந்தாக வேண்டும். அந்த ரசீதுகள் எல்லாம் உடனடியாக அரசாங்கத்திற்கு, இலாக்காக்களுக்கு வந்து



1985 ஜூன் 24] [டாக்டர் கே. சமரசம்]

சேரவேண்டும். இப்படிப்பட்ட ஒரு நிலையிருந்தால்தான் இடையில் ஏற்படக்கூடிய தவறுகள் நிச்சயமாக களையப்படும். அரசாங்கம் இதற்கு வேண்டிய முனைப்பான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படி எடுத்தால் இப்போது சொல்லக்கூடிய, இதுவரையில் முழுமையாகக் கண்டு பிடிக்க முடியாமல் ஆங்காங்கே நடக்கக்கூடிய சில குற்றங்களைக் கண்டுபிடித்து இன்னும் முழுமையாக கண்டுபிடிக்க முடியாமல் இருக்கிற அந்தத் தவறுகளைக் கண்டுபிடித்து, நிவர்த்தி செய்தால், மேலும் வணிக வரித்துறை சீர்திருத்தம் பெறும், வரி ஏய்ப்பாளர்களையும் நாம் தண்டிக்க முடியும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே போல் சில இடங்களில், தயாரிக்கின்ற இடங்களில் ஏமாற்றி விடுகிறார்கள். மின்சாரம் எடுப்பதைப் போல, பல்வேறு வகையிலே புதிய கலைகளைத் தெரிந்து மீட்டர் ஓடாமல் வைத்து, மின்சாரத்தை எடுப்பதைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். இது உண்மையாக இருந்தால், மின்சாரம் எந்த அளவிற்கு இருக்கிறதோ—சிலர் நியாயமானவர்கள் மின்சாரத்தை அதிகமாக ஓட்டியிருப்பார்கள். உற்பத்தியைக் காட்டமாட்டார்கள், சில சில இடங்களில் மின்சாரத்தை ஏமாற்றுவார்கள் உற்பத்தியைக் காட்டுவார்கள் என்று சொன்னார்கள்.

(முற்பகல் 11-20)

அதை பரிட்சார்த்தமாக எதிர்பார்த்து எந்த வகையில் இதை போக்க வேண்டுமோ அந்த வகையில் போக்குவதற்கு உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோலவே போட்டோ பிலிம் தொழில் இருக்கிறது. இப்போது எல்லாம் ஒவ்வொரு குடிமகனும் ஐடென்டிபிகேஷன் கார்டு வைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் வந்து விட்டது. காரணம் இன்றைய தினம் எந்தத் துறையில் பார்த்தாலும் ஆபத்து வந்துகொண்டு இருக்கிறது. அவர் பறந்து சென்றாலும் சரி, நீந்தி சென்றாலும் சரி, நடந்துசென்றாலும் சரி எப்படி சென்றாலும் ஆபத்துகள் அவன் தலை மீது சுற்றிக்கொண்டிருக்கிறது. மேல் நாடுகளை எல்லாம் பார்த்தால் ஒவ்வொரு குடிமகனும் ஐடென்டிபிகேஷன் கார்டு வைத்து இருக்கிறான். பட்டா பாஸ் புத்தகத்தை நாம் கொண்டு வந்தது கூட மிகப் பெரிய ஒரு ஐடென்டிபிகேஷன் கார்டு தான். அது ஒன்று இருந்தால் இந்த நாட்டினுடைய பளுவில் ஒரு 30 சதவீதத்திற்கும் மேற்பட்ட ஒரு பளு குறைந்து விடும். இந்த நிலையில் இந்த போட்டோ பிடிக்க உபயோகிக்கப்படும் பிலிம்க்கு எல்லாம் வரியை எடுத்து விடுவது நல்லது. அது ஒரு சாதாரண கலை. கிராமம் தோறும் இன்றைய

தினம் பெருக்கக்கூடிய ஒரு கலை. அந்த வகையில் அதை எண்ணிப் பார்க்கவேண்டும். அப்படிச் செய்வது மிக நல்லத க இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் பேசுகிற போது கூட குறிப்பிட்டுச் சொன்னார்கள். வெளி மாநிலத்தில் இருந்து வரக்கூடிய பருப்பு வகைகள் இன்னும் சில பொருட்கள், வனஸ்பதி போன்ற பொருட்களுக்கு பல்வேறு வகையில் வரி ஏய்ப்பு செய்யப்படுகிறது. அதை ஏஜென்டு முறை என்று வைத்து அவர்கள் வரி ஏய்ப்பு செய்கிறார்கள். தமிழ் நாட்டில் இருக்கிற உள்ளூர் வணிகர்கள் அவதிப்படுகிறார்கள். இவர்களுக்கும், அவர்களுக்கும் வரி விகிதத்தில் மாறுதல் ஏற்படுவதற்கு காரணம் வரி கட்டக்கூடிய நிலையில் தமிழ் நாட்டுக்காரன் இருக்கிறான். வரி கட்டாமலேயே விற்பனை செய்யக்கூடிய வகையில் ஏஜென்ட் முறையில் அவர்கள் அதை அமைத்துக் கொண்டு இருக்கிறார்கள். இதனால் 2, 3 விதமான விலை விகிதங்கள் கூட நாட்டில் நடமாடுகிறது. இந்த நிலையைப் போக்குவதற்கு வெளி மாநிலத்தில் இருந்து வரக்கூடிய பருப்பு வகைகளுக்கும் மற்றவற்றிற்கும் மொத்தமாக அரசு சிவில் சப்ளை கார்ப்பரேஷன் அல்லது வேறு வகையில் அவைகளுக்கு ஒரு மொத்த விற்பனை வரியை விதித்து இங்கே இருந்து செலவு செய்யக்கூடிய அளவுக்கு விநியோகிக்கக்கூடிய வகையில் அதை ஏஜென்ட் முறை என்று இல்லாவிட்டாலும் கூட எந்த வியாபாரிகளுக்குச் செல்கிறதோ வெளி மாநிலத்தில் இருக்கின்ற அந்த ரேட்டோடு விலையோடு ஒப்பிட்டுப் பார்க்க இந்த அளவுக்கு மேல்போகக் கூடாது என்று வரையறுக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கினால் அந்த விலை விகித மாற்றம் கூட இருக்காது என்று நான் கருதுகிறேன். அதனையும் எண்ணிப்பார்த்து அரசு பரிசீலனைச் செய்ய வேண்டும். அப்படி செய்யக்கூடிய காரணத்தால் இந்த மாநிலத்தில் இருந்து கொண்டு ஏஜென்ட் முறையால் வேறு மாநிலத்தில் இருக்கக்கூடியவர்கள் பல்வேறு வகையில் இந்த மாநிலத்திற்கு வரக்கூடிய வரியை ஏய்க்கக்கூடிய நிலையை மாற்றி அதே நேரத்தில், நாணயமான, நேர்மையான வியாபாரிகள் இந்த மாநிலத்தில் தொழில் செய்து கொண்டு இருக்கக்கூடியவர்கள் அவதிப்படக்கூடிய நிலையிலிருந்து அவர்களை காப்பாற்றியும் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படி இந்த வணிக வரி துறை மிக பெரிய சிறப்பான காரியங்களை பல்வேறு வகையில் செய்தும் இருக்கின்ற இது போன்ற சிறு சிறு பிரச்சினைகளை எண்ணிப் பார்த்து அதனையும் நிவர்த்தி செய்தால் மிகச் சிறந்த ஒரு பெயர் பெற்று இருக்கக்கூடிய இதை மேலும் நல்ல முறையில் மக்களிடத்தில் வரவேற்பை பெறக்கூடிய வகையில் இருக்கும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி இந்த வணிக வரி துறை மானியக் கோரிக்கையை ஆதரித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.



திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விற்பனை வரி சம்பந்தமாக இந்த அவையில் வைக்கப்பட்டிருக்கிற குறிப்பில் சில கருத்துக்களை அதாவது கூடுதல் ஆயத் தீர்வை சம்பந்தமாக சில கருத்துக்கள் சொல்லப்பட்டு இருக்கின்றன. இந்த கருத்து சென்ற ஆண்டும் இந்த அவையில் வைக்கப்பட்ட கொள்கை குறிப்பில் சொல்லப்பட்டு இருக்கின்றன. அதையே இப்போதும் மீண்டும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது சில பொருள்களைப் பொறுத்தவரையில் கூடுதல் ஆயத் தீர்வை விதிப்பதை நீட்டிக்கவேண்டும் என்ற தனது விருப்பதை அவ்வப்போது மத்திய அரசு தெரிவித்து வந்துள்ளது. அதிலிருந்து சில விவரங்களை சென்ற ஆண்டும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதையே இந்த ஆண்டிலும் ரிப்பீட் செய்திருக்கிறார்கள். ஆனால் இது சம்பந்தமாக நான் ஒரு சில கருத்துக்களை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சென்ற அவையில், வரவு செலவுத் திட்டம் சம்பந்தமாக நடந்த விவாதத்தில் மார்க்கிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. ஆர். சுந்தரம் அவர்கள் சில கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். நான் அதை இங்கே படிக்க விரும்புகிறேன்—

மாநில அரசாங்கங்களின் சார்பில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட அதை ஆட்சேபித்து இருப்பதாகவும், அதனை ஆராய்ந்து அறிவதற்கு ஒரு குழுவை நியமித்து இருப்பதாகவும், அந்தக் குழுவில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சமரசம் அவர்கள் ஏற்கனவே பேசியபோது சொன்னார்கள். மத்திய அரசாங்கம் வரி விதிப்பிலே மாநிலங்களுக்கு அதிக உரிமையைக் கொடுக்காமல் இருக்கும் நிலைமை இருக்கிறது. மாநில சர்க்கார் அதைக் கடுமையாக எதிர்த்துப் போராடி மாநிலங்களுக்கு நியாயம் கிடைக்கவேண்டும் என்று சொன்னார்கள்.

அதே கருத்தை நானும் இங்கே சொல்லிக் கொள்ளுகிறேன். மத்திய அரசாங்கம், மாநிலங்களுக்கு கிடைக்கவேண்டிய நியாயமான உரிமைகளை, வரிகளை, நிதி ஆதாரங்களைக் கொடுக்காமல் இருக்கிறது. மாநிலங்கள் தன்னாட்சியைப் பெறுவதற்குத் தேவையான உரிமைகளை கொடுப்பதற்கும், நியாயமான உரிமைகளைப் பெறுவதற்கும் இன்றைக்கு நமது நாட்டில் ஏற்பட்டுள்ள புதிய சூழ்நிலையில், 5 மாநில முதலமைச்சர்கள் இன்று கூடி, மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் பெறுவதற்கும், நிதி ஆதாரங்களை அதிகரித்துக் கொள்வதற்கும், மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கையை மாற்றுவதற்கும் ஒரு பலமான கிளர்ச்சியை நாட்டிலே ஏற்படுத்தி இருக்கிறார்கள். அந்தக் குழுவிலே அங்கம் பெறாமல் தனியாக நின்று குரல் கொடுத்தால்

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1985 ஜூன் 24

போதாது. மாநில மக்களுக்கு அதிக அதிகாரங்கள் பெறுவதற்கும், நிதி ஆதாரங்களைக் கூடுதல் ஆக்குவதற்கும் இன்றைக்கு அந்தக் குழுவோடு சேர்ந்து நாமும் குரல் கொடுப்பதின் மூலமாகத்தான் நம்முடைய குரலையும், அவர்களுடைய குரலோடு இணைத்துக் கொடுப்பதின் மூலமாகத்தான் மாநிலங்கள் அதிக அதிகாரத்தைப் பெறமுடியும்; அதிக நிதி ஆதாரங்களைப் பெறமுடியும்.

ஆகவே, அந்தவாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ளுகிறேன்—சென்ற ஆண்டு மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி சொன்ன கருத்து இது.

இந்த ஆண்டு கொள்கை குறிப்பிலே இதே விஷயங்கள் ரிப்பீட் செய்யப்பட்டிருக்கின்றன. இதே நேரத்தில் அரசின் நிலை என்ன என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். சென்ற மார்ச் மாதத்திலே நடந்த நாடாளுமன்றக் கூட்டத்திலே, மத்திய அரசு ஒரு சட்டத்தை நிறைவேற்றி இருக்கிறது.

அதாவது—மாநிலங்களிலேயிருந்து வருவாய்களை அவர்கள் கொண்டு செல்வார்கள். அந்த வருவாயினுடைய 39 சதவிகிதம் தான் மாநிலங்களுக்குக் கொடுக்கப்படும் என்று—. அந்த நேரத்தில் நாடாளுமன்றத்திலே மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே ஒரு கருத்தை வலியுறுத்தினோம். 39 சதவிகிதம் அப்படி மாநிலங்களுக்குக் கொடுக்கப்படும் என்பது சரி அல்ல. 75 சதவிகிதம் கொடுக்கப்பட வேண்டும் என்று சொன்னோம்.

ஆனால், துரதிஷ்டவசமாக, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்த நேரத்திலே மாநில சுயாட்சியைப் பற்றியும், மாநிலங்களுக்கு அதிக வருவாய் கொடுக்கப்பட வேண்டும் என்று குரல் கொடுக்கவேண்டிய அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அந்தச் சட்டத்தை எதிர்க்கவில்லை என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஆகவே, நான் என்ன சொல்லிக் கொள்ள விரும்புகிறேன் என்றால், சென்ற ஆண்டிலேயும் சரி, இந்த ஆண்டிலேயும் சரி, கொள்கைக் குறிப்பிலே மத்திய அரசினுடைய அப்படிப்பட்ட கொள்கையைச் சரி இல்லை என்று சொல்கிறீர்கள். அதை, ஏற்றுக் கொள்வதற்கு மறுக்கிறீர்கள். ஆனால் அதை எந்த இடத்திலே எந்த நாடாளுமன்றத்திலே எதிர்க்க வேண்டுமோ, அங்கே எதிர்க்க வில்லை. இது சரியா என்பதை நீங்கள் யோசிக்க வேண்டும்.



1985 ஜூன் 24] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

இன்றைய நிலை என்ன? மத்திய அரசைப் பொறுத்த வரையில், மாநிலங்களுடைய வருவாயை மேலும், மேலும் பாதிக் கக்கூடிய முறையில் உள்ள நடவடிக்கைகளை எடுத்துக் கொண் டிருக்கிறார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். இன்று இந்தக் கொள்கைக் குறிப்பிலே கூட, மேலும் பல பொருள்களுக்கு மத்திய அரசு வரி விதிக்கவேண்டும் என்று எண்ணுகிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அப்படி மாநில அரசாங்கங்களை முனிசிபாலிட்டிகளாக மாற்று வதற்கான மத்திய அரசினுடைய நடவடிக்கையை எதிர்க்கவேண் டும் என்ற எண்ணம், இந்த அரசுக்கு இருக்கிறது என்று இந்தக் குறிப்பைப் படித்துப் பார்த்தால் எண்ண வேண்டியிருக்கிறது. ஆனால், நடைமுறையிலே அப்படிப்பட்ட நிலைமைகளைப் பார்க்கமுடியவில்லை.

அந்த நிலையை மாற்றி, மத்திய அரசினுடைய அப்படிப்பட்ட நடவடிக்கைகளை நிச்சயமாக எதிர்ப்பதற்கு இன்று பல மாநில அரசுகள் காங்கிரஸ் கட்சி ஆட்சிப் பொறுப்பிலே இருக்கக்கூடிய மாநில அரசுகள் கூட, மத்திய அரசினுடைய அப்படிப்பட்ட நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்ற நிலையை எடுத்துக் கொண்டு இருக்கின்றன என்பதை அனைத்து உறுப்பினர் களும் அறிவார்கள்.

ஆகவே, அவர்களோடு சேர்ந்து அப்படிப்பட்ட மாநில அரசு களுக்கு நியாயமான நிலை கிடைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்பு கிறேன்.

இன்னொரு கருத்து நான் சுட்டிக் காட்ட விரும்புவது என்னவென்றால், இப்படிப்பட்ட பிரச்சினைகளைப் பற்றி ஆராய்வதற்காக சர்க்காரியா கமிஷன் என்ற ஒரு கமிஷன் நிய மனம் செய்யப்பட்டிருக்கிறது. அதனிடம், தமிழக அரசு தன் னுடைய ஆலோசனைகளை, கருத்துக்களை இன்னும் சொல்ல வில்லை என்று பத்திரிகைகள் வாயிலாக, சர்க்காரியா கமிஷன் தலைவர் சொல்லி இருப்பதாக அறியப்படுகிறது. இந்த அவை யிலே கூட, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், "அதற்கு அவ காசத்தைக் கேட்டிருக்கிறோம்".

(முற்பகல் 11-30)

தமிழக அரசின் கருத்துக்களைச் சொல்லப் போவதாகச் சொன்னார்கள். நான் இந்த நேரத்தில் என்னுடைய வேண்டு கோளாக வைப்பது, சர்க்காரியா கமிஷனிடம் தன்னுடைய கருத்துக்களைத் தமிழக அரசு கொடுக்கின்ற நேரத்தில், இப்படி நிதி ஆதாரங்களை இந்த மாநிலத்திலேயிருந்து பிடுங்கிச் செல்லுகின்ற அந்த எண்ணத்தை, அந்த நடவடிக்கையைக்

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1985 ஜூன் 24

கடுமையாக ஆட்சேபிக்க வேண்டும். அதைத் தடுத்து நிறுத்தும் வகையில் சட்ட ரீதியாக ஏற்பாட்டைச் செய்யும் வகையில் சர்க்காரியா கமிஷனின் அறிக்கை உறுதுணையாக இருக்கும் வகையில் கருத்துக்களைச் சொல்ல வேண்டும்.

இன்னொரு விஷயம் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், சேல்ஸ் டாக்ஸைப் பொறுத்த வரையில் ஒரு கோரிக்கை இருக்கிறது. திரும்பத் திரும்ப வந்து கொண்டிருப்பது சிங்கில் பாயின்ட் லெவி முறையில் அந்த சேல்ஸ் டாக்ஸ் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வருகிறது. போன வருஷம் கொள்கைக் குறிப்பிலே, எங்கெங்கே சாத்தியப்படுமோ அங்கெல்லாம் சிங்கிள் பாயின்ட் சிஸ்டத்தைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கிறோம் என்ற கருத்தைச் சொன்னார்கள். ஆனால் இன்னும் சிங்கிள் பாயிண்ட் சிஸ்டத்தை அனைத்து இடங்களிலேயும் அரசு கொண்டு வரவில்லை. இம்மாதிரி சிங்கில் பாயிண்ட் லெவி சிஸ்டத்தைக் கொண்டு வருவதால் அரசுக்கு மேலும் அதிகமான வருவாய் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. இந்த சிங்கிள் பாயிண்ட் லெவி சிஸ்டத்தைக் கொண்டு வருவதால் மக்களுக்கும் பாதிப்பு இருக்காது; வியாபாரிகளுக்கும் பாதிப்பு இருக்காது; அதே நேரத்தில் அரசுக்கும் அதிக வருவாயை ஏற்படுத்துவதற்கும் உதவியாக இருக்கும் என்ற அந்த முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வனஸ்பதி, மெடிசன், சிமெண்ட், பேப்பர், பெட்ரோலியம் ப்ராடக்ட்ஸ் போன்ற பொருட்களுக்கு விற்பனை வரி அதிகமாக்கப்பட வேண்டுமென்று திரிபாதி கமிட்டியால் சிபாரிசு செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இன்றைக்கு மருந்துகளைப் பொறுத்த வரையிலும் சரி, சிமெண்டைப் பொறுத்த வல்ரயிலும் சரி, காகிதத்தைப் பொறுத்த வரையிலும் சரி அது சாதாரண மக்கள் வாங்கிப் பயன்படுத்துகின்ற பொருட்கள். அவற்றின் மீது அதிக வரியை விதிப்பதற்கான நடவடிக்கைகளை நாம் அனுமதிக்கக் கூடாது. அது சாதாரண மக்களைக் கடுமையாகப் பாதிக்கக் கூடிய விஷயம் என்பதால் அப்படிப்பட்ட நடவடிக்கைகளால் மக்கள் பாதிக்கப்படுவார்கள்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், பெட்ரோலியம் ப்ராடக்ட்ஸ் மேலே மத்திய அரசாங்கம் சென்ற பட்ஜெட்டில் அதிக வரியைச் சுமத்தியதால் இன்றைக்கு நம்முடைய மாநிலத்தில் கூட, போக்குவரத்துத்துறை அமைச்சரவர்கள் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பாகச் சொன்னார்கள். அதன்படி ஜூலை மாதம் 1 ஆம் தேதி முதல் அதிகமான கட்டணத்தை இந்த மாநிலத்திலே உள்ள மக்கள் தலையிலே விதிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பெட்ரோலியம் ப்ராடக்ட்ஸ் மேல் இப்படிப்பட்ட வரியை அதிகப்படுத்துவதை நாம் ஆட்சேபித்திருந்தால், அதை நாம் எதிர்த்திருந்தால் இந்த நிலைமை



1985 ஜூன் 24] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

வந்திருக்காது. இன்றைக்கு நிச்சயமாக அதன் சுமை, ஏற்படுத்தப்பட்ட வரி உயர்வு என்பது யார் தலையிலே சென்றிருக்கிறது என்றால், ஏற்கனவே வாங்கும் சக்திக்கு அதிகமான அளவிற்கு போக்குவரத்துக் கட்டணம் இருந்து கொண்டிருக்கிறது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை; அப்படிப்பட்ட இந்த மாநில மக்களின் தலையிலே மேலும் அதிகமான கட்டணத்தை உயர்த்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நடவடிக்கைகளை நிச்சயமாக மாநில அரசு அனுமதிக்கக் கூடாது. மத்திய அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகள் நிச்சயமாக எதிர்க்கப்பட வேண்டுமென்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, இன்னொரு விஷயம் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், இந்தக் கொள்கை அறிவிப்பில் அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ் சம்பந்தமான ஒரு விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது டர்ன் ஓவர் மூன்று இலட்சத்திற்கும் மேல் போனால் அந்த வியாபாரிகளின் அதிகமான டர்ன் ஓவர் மீது அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ் கட்ட வேண்டியிருக்கிறது. இது யாரைப் பாதிக்கிறது என்றால் வியாபாரிகளைப் பாதிக்கிறது. வியாபாரிகளைப் பாதிக்கிறது என்றால் வியாபாரிகள் தங்கள் கையிலிருந்து கொடுக்கப் போவது இல்லை. இந்தப் பொருட்களை வாங்குகின்ற ஏழை மக்கள், நடுத்தர மக்கள் ஆகியவர்களின் தலையிலேதான் சென்று சேரும். ஆகவே, டர்ன் ஓவர் மேல் கொண்டு வரப்பட்டிருக்கின்ற அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ் நியாயம்தானா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அது தேவையானது தானா என்பதை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும். இம் மாதிரி டர்ன் ஓவருக்கு மேல் கேட்கப்படும் அடிஷனல் சேல்ஸ் டாக்ஸைப் பொறுத்தவரையில் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று எண்ணெய், மிளகாய், மல்லி, பால், பாலின் மூலமாக உற்பத்தி செய்யக் கூடிய பொருட்கள் போன்றவற்றிற்கெல்லாம் விற்பனை வரி போடப்பட்டிருக்கின்றது. மக்கள் அன்றாட வாழ்க்கைக்காக வாங்கி உபயோகப்படுத்தக் கூடிய பொருட்களின் மேலே போடப்பட்டிருக்கக் கூடிய இந்த வரிகள் குறைக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதே போன்று இன்னொரு விஷயத்தை, சென்ற ஆண்டுகூட நாங்கள் சுட்டிக்காட்டினோம். வரி விதிப்பதற்கான தொகையைப் பொறுத்தவரையிலும் ரூ. 50,000-லிருந்து ரூ. 1 இலட்சமாகவும், ரூ. 30,000-லிருந்து ரூ. 50,000 ஆகவும் கூட்டப்

பட்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற விலை வாசி காரணமாக, ரூ. 50,000 வரை விற்பனை செய்யும் சிறு வியாபாரிகள் பாதிக்கப்படக் கூடிய நிலையில் தான் அந்த வரி இருக்கிறது. ஆகவே, சிறு வியாபாரிகளைப் பாதிக்காத முறை யிலே இதையும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று விரும்பு கிறேன்.

இந்தக் கொள்கைக் குறிப்பிலே போடப்பட்டிருப்பது சரி தானா என்று தெரியவில்லை. புட் அன்ட் டிரிங்க்ஸ் சப்ளைட் சட் ஹோட்டல்ஸ் அன்ட் ரெஸ்டாரண்ட்ஸ்ஸுக்கு வரி உயர்த்தி இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கனவே லக்சரி ஹோட்டல்களிலே கொடுக்கப்படுகிற புட் அன்ட் டிரிங்க்ஸ் ஸுக்குத்தான் வரி உயர்வு என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், கொள்கை விளக்கக் குறிப்பிலே இருப்பது எல்லா ஹோட்டல்களுக்கும் எல்லா ரெட்ஸ்டாரண்டுகளுக்கும் என்ப தாகும். அது எல்லா ஹோட்டல்களையும் ரெஸ்டாரண்டுகளை யும் பாதிக்குமா ? அப்படி பாதிக்குமானால், அது இந்த நாட் டிலே உள்ள ஏழை, நடுத்தர மக்களைப் பாதிப்பதாக அமையும். ஆகவே, அப்படிப்பட்ட நிலைமையை ஏற்படுத்தக் கூடாது. லக்சரி ஹோட்டல்களுக்கு என்ற முறையில் அதை ரெஸ்டிரிக்ட் பண்ண வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு விஷயம் என்னவென்றால், சப் ரூல் 4-லிருந்து 7 வரை அமென்ட் பண்ணி, சில விவசாயப் பொருட்களுக்கு இன்றைக்கு வரி குறைக்கப்பட்டிருக்கிறது. இது தேவைதானா என்பதைப் பரிசீலிக்க வேண்டும். இதிலே குறைக்கப்பட்டிருக் கிற சில வரிகள் யாருக்கு என்று பார்த்தால், அதிகமாகக் கொடுக்க வாய்ப்புள்ளவர்களுக்குக் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட வரிக் குறைப்பு வேண்டுமா என்று பார்க்க வேண்டும். அதே மாதிரி பொருட்களுக்கு வரி விதிப் பிலிருந்து விலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த நட வடிக்கை கூட இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிற எல்லோருக்கும் தேவையா என்பதைக் கூடப் பரிசீலிக்க வேண்டும்.

இன்னொரு விஷயம் என்னவென்றால், இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது, 1983-84-லே, 69 சதவீதம் மாநிலத்தினுடைய வருவாயிலே, இன்று சேல்ஸ் டாக்ஸ் வழியாகக் கிடைக்கிறது என்று. இன்று நிலைமை என்னவென்றால், சென்ற வருஷத்தை விட 29 சதவீதம் அதிக மாக, இந்த வரிகள் காரணமாக, அரசுக்கு வருமானம் வருகிறது. அப்படியென்றால், இன்று வரியை உயர்த்திக் கொண்டு போகக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிற காரணத்தால், நாட்டில் ஏழை மக்கள் வாங்கி உபயோகப்படுத்தக் கூடிய பொருள்களின் மேலே அதிகமான வரி விதிப்பதன் காரணமாகத் தான் இப்படிப்பட்ட





நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பது தெளிவு. ஆகவே, மேன் மேலும் இப்படி விற்பனை வரி என்ற முறையில், அதற்கு ஏனைய வரி என்ற முறையில், மக்களைப் பாதிக்கக் கூடிய முறையில் வரியை ஏற்றிக் கொண்டு செல்வது சரியல்ல என்று சுட்டிக்காட்டி, நான் ஏற்கனவே, சுட்டிக்காட்டியதைப் போல, எண்ணெய், மிளகாய், மல்லி, பால் பாலின் மூலம் உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்கு இன்று விதிக்கக் கூடிய வரியை எடுத்து விட முடியுமா என்பதைக் கூட அரசு பரிசீலிக்க வேண்டும்.

ஏற்கனவே பல இடங்களிலே செக் போஸ்ட்கள் போடப் பட்டிருக்கின்றன. ஆனால், அந்த செக் போஸ்ட்கள் பற்றிப் பல புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. அதெல்லாம் உண்மையா என்பது பரிசீலிக்கப்பட வேண்டிய விஷயம். ஆனால் பல இடங்களிலே செக் போஸ்ட்டில் பணத்தைக் கொடுத்துவிட்டு, வசதி உள்ளவர்கள் பொருள்களைக் கொண்டு செல்கிறார்கள், ஏழை நடுத்தர மக்களைத் தான் அங்கே இருக்கக் கூடிய அதிகாரி கள் தொல்லைப் படுத்துகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்படாமல் பார்க்க வேண்டு மென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

இன்னொரு விஷயம் என்னவென்றால், இந்த கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. பல இடங்களில் அதிகாரிகளுக்கு விஷயங்களைச் சொல்லிக் கொடுக்க ''ட்ரெயினிங்'' நடத்தப்படுகிறது. இந்த அதிகாரிகள் பல இடங்களில் வியாபாரிகளுடன் நடந்துகொள்கிற முறை அவ் வளவு சரியானதாக இல்லை. வியாபாரிகளுக்கும் அதிகாரி களுக்கும் நடைமுறையில், பழக்க வழக்கத்தில் பல தவறுகள் ஏற்படுகின்றன. மக்களிடம் நல்ல முறையில் பழக இந்த இலாக்கா அதிகாரிகளுக்கு பிரத்தியேகமான பயிற்சி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயம், பல இடங்களில் சேல்ஸ் டாக்ஸ் சம்பந்த மாக மாநிலக் குழுவும் மாவட்டக் குழுக்களும் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மாவட்ட ரீதியாக ஏற்படுத்தப் பட்டிருக்கிற இந்தக் குழுவில் வியாபாரிகளைப் பற்றி, வியாபாரத்தைப் பற்றித்தெரிந்தவர்கள், அவர்களுடைய ரெப்பிர சென்டேஷன் இல்லை. அவர்களுக்கு இடம் கொடுக்காமல் அரசியல்வாதிகளைக் கொண்ட ஒரு குழுவாக மாற்றப்படாமல் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கக் கூடியவர்களுக்கு அந்தக் குழுவிலே பிரதிநிதித்துவம் கொடுத்து, அந்த வகையிலே அந்தக் குழுவை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1985 ஜூன் 24

இன்னொரு விஷயம், என்டர்டெயின்மென்ட் டாக்ஸ் என்ற வகையிலே நிறைய பணம் வசூலாகிறது. பல இடங்களில் இன்றைக்கு சினிமா கொட்டகைகளில் ''சானிட்டரி கண்டிஷன்'' சரியாக இல்லை. அங்கே மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கிற வசதிகள் காணாது. நாம் வரியை வசூல் செய்கிற போது மக்களுக்குத் தேவையான வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும். அதற்கு இந்த இலாகா பிரத்தியேகக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போன்று இன்னொரு விஷயம் என்னவென்றால், அட்வர்டைஸ்மென்ட் டாக்ஸ் இருக்கிறது. இன்றைய தினம் பல ''அப்சீன் போஸ்டர்'' களைத் தெருவிலே பார்க்கிறோம். சினிமா கொட்டகைகளைப் பொறுத்த வரையில் அட்வர்டைஸ்மென்ட் டாக்ஸ் போட்டிருக்கலாம். ஆனால் இப்படிப்பட்ட அப்சீன் போஸ்டர்களை அனுமதிக்கக் கூடாது. அதற்கு இந்த இலாகாவினர் பிரத்தியேக கவனம் செலுத்த வேண்டும். அப்சீன் போஸ்டர் என்று கண்ட பின்னால் அதை அனுமதிக்கக் கூடாது. இப்படிப்பட்ட போஸ்டர்களை ''ஸ்கிரீனிங்'' பண்ண ஏற்பாடு செய்தால் கூட பராவாயில்லை. ஸ்கிரீனிங் பண்ணி, ஏற்றுக்கொண்ட பின்னால் தான் வெளியே பிரகடனப்படுத்த வேண்டும், பப்ளிஷ் செய்ய வேண்டும்: அப்சீன் போஸ்டர்களைத் தடுக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன்.

*திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே இந்தப் பொது விற்பனை வரி மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பளித்ததற்கு முதலிலே நன்றி தெரிவித்து. ஜனதா கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன்.

இந்த பொது விற்பனை வரி பற்றி சொல்லும்போது அரசாங்கத்தினுடைய நிர்வாகச் சக்கரம் சுழல்வதற்கு தேவையான 3000 கோடி ரூபாயில் ஏறத்தாழ ஆயிரம் கோடி ரூபாய் இந்த வணிகர்களிடமிருந்து வசூல் செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

|இந்த வரி சம்பந்தமாக எனக்கு முன்னாலே பேசியவர்கள் கருத்து கூறும்போது பல கருத்துக்களைக் கூறினார்கள். இந்த வணிக வரியானது அரசுக்கு காமதேனுவாக காட்சியளிக்கிறது. அரசுக்கு வணிகர்களிடமிருந்து வரவேண்டிய வரியை, அவர்களால் பொருள்களை வாங்கக் கூடியவர்களிடமிருந்து வசூல் செய்யப்பட்டு, பில் கிளார்க் போன்ற செலவுகள் எதுவும் அரசுக்கு ஏற்படாமல், அவர்களுக்கு சம்பளம் எதுவும் கொடுக்காமல், அரசுக்குச் செலுத்தி வருகிறார்கள் என்பதை நீங்கள்



1985 ஜூன் 24] [திரு. எ.எஸ்.ஏ. ஆறுமுகம்]

கருத்தில் கொள்ள வேண்டும். அப்படி இருக்கிற வணிகர்களுக்கு பல சலுகைகளைச் செய்யாமல் பல சிரமங்களை அவர்களுக்கு ஏற்படுத்துகிறீர்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே பேசிய ஆளுங்கட்சி நண்பர்கள் எல்லாம் ஏதோ போதி மரத்தடி புத்தர்களைப்போல வணிகர்கள் மட்டும்தான் தவறு செய்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் இரண்டு பக்கமும் தவறு இருக்கிறது.என்று சொல்லியிருந்தால் நான் அதை ஒத்துக்கொண்டிருப்பேன். அதைப்பற்றி நான் பின்னால் சொல்ல இருக்கிறேன்.

இப்போது வணிகர்களுக்கு இருக்கிற பிரச்சினை கூடுதல் விற்பனை வரி செலுத்துவது பற்றி, இந்த கூடுதல் விற்பனை வரியானது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கொண்டு வரப்பட்டது. 10 இலட்சம் ரூபாய்க்குமேல் 'டர்ன் ஓவர்' உடையவர்களாக இருந்தால் அவர்களுக்கு கூடுதலாக ஒரு வரியை விதித்தார்கள். தாங்கக்கூடியவர்கள் அதைச் செலுத்தக்கூடிய வகையில் விதித்தார்கள். அதன் காரணமாக 15 இலட்சம், 16 இலட்சம் டர்ன் ஓவர் உள்ளவர்கள் எல்லாம் அந்த கன்சர்னை இரண்டாகப் பிரித்து, சிஸ்டர் கன்சர்ன் என்ற முறையிலே பிரித்து இரண்டாக அமைத்தார்கள். அந்தவகையிலே இந்தக்கூடுதல் வரியை செலுத்தாமல், சாதாரணமாக செலுத்த வேண்டிய வரியை ஒழுங்காகச் செலுத்தி வந்தார்கள் கூடுதல் வரி இல்லை. ஆனால் இப்போது நீங்கள் சொல்கிற முறைப்படி பார்த்தால் 3 இலட்சம் ரூபாய்க்கு வியாபாரம் செய்கிற வணிகர்கள் கூடுதல் விற்பனை வரி கட்டும் சூழ்நிலை ஏற்படுகிறது. ஒரு மூட்டை 500 ரூபாய் வீதத்தில் விற்கக்கூடிய வியாபாரிகளுக்கு, இது ஒரு பெரிய விபாபாரம் அல்ல. அப்படி சின்ன, சின்ன கடைகள் வைத்து இருக்கக்கூடியவர்கள் கூட இந்த அடிஷனல் டாக்ஸ் கட்ட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

இன்றைக்கு இருக்கக்கூடிய விலைவாசி ஏற்றத்தில் இந்த 3 இலட்சம் என்பது சாதாரண விஷயம். எனவே இந்த வரியை அவர்கள் கையிலே இருந்து கட்ட வேண்டி இருக்கின்றது.

இங்கே பல நண்பர்கள் சொன்னதுபோல் இலாபம் இருந்தாலும் இல்லாவிட்டாலும், நஷ்டம் அடைந்தாலும் அதைக் கட்ட வேண்டி இருக்கின்றது. வருமான வரி கூட இலாபத்திற்கேற்பதான் விதிக்கப்படுகின்றது என்பதை அரசின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். இப்படிப் பட்ட வரி விதிப்பு காரணமாக .வணிகர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே இந்தக் கூடுதல் விற்பனை வரியை எடுத்துவிட வேண்டும் என்ற கோரிக்கையை வணிகர்கள் வைத்திருக்கிறார்கள். அதன்படி இதனை நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அல்லது கூடுதல் விற்பனை வரியை வசூல் செய்துகொள்ள அனுமதிக்க வேண்டும்.

சர்சார்ஜைப் பொறுத்தவரையில் முனிசிபாலிட்டிகளைப் பொறுத்தவரையில் 5 பெர்சன்ட் என்றும் மாநகராட்சியைப் பொறுத்தவரையில் 100-க்கு 10 ரூபாய் என்றும் விதிக்கப் பட்டிருக்கின்றது. இதனால் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப் படுகிறார்கள். எனவே இதெல்லாம் தேவையில்லாத ஒன்றா கும்.

அடுத்து வணிகர்கள் எல்லாம் ஒரு முனை வரி விதிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தோம். ஆனால் 5 பெர் சன்ட் பல முனை வரியாக இருந்தது இப்போது ஒரு முனை வரி 8 பெர்சன்ட் போட்டிருக்கிறார்கள். அப்படியில்லாமல் ஏற் கெனவே இருந்த 5 பெர்சன்டைப் போட்டால் வரி ஏய்ப்புக் குரிய சூழ்நிலை இல்லாமல் இருக்கும்.

அடுத்து தீப்பெட்டிக்கு 2 பெர்சனட் வரி விதிக்கப்பட்டிருக் கின்றது. அதை நீக்க வேண்டும் அதுபோல் நிலக்கடலைக்கு ஒருமுனை வரி விதிக்கப்பட்டிருக்கின்றது. சில பொருட்களைப் பொறுத்தவரையில் வரி இல்லை என்று அறிவித்துவிட்டு பிறகு ப்ராசஸ் பண்ணுகின்றபோது வரி விதிக்கின்ற நிலைமை இருக் கின்றது. அதாவது நிலக்கடலை பருப்புக்கு வரியில்லை, ஆனால் அதை எண்ணெயாக்கி விற்கின்றபோதும். பிண்ணா கிற்கும் வரி விதிக்கப்படுகின்றது. அதுபோல் பருத்திக்கு வரி யில்லை, பருத்தி விதைக்கு வரி விதிக்கப்பட்டிருக்கின்றது. இது சரியல்ல. எனவே எண்ணெய் வித்துக்கள், பிண்ணாக்கு, பருத்திவிதை போன்றவற்றிற்கு விதிக்கப்படுகின்ற வரியைத் தள்ளுபடி செய்ய வேண்டும்.

காமராஜர் அவர்கள் காலத்தில் வெல்லத்தைப் பொறுத்த வரையில் குடிசைத் தொழில் என்பதன் காரணத்தால் அதற்கு வரியினைத் தள்ளுபடி செய்திருந்தார்கள். ஆனால் பிறகு ஒருமுனை வரியாக விதிக்கப்பட்டு அதன் பின்னர் பலமுனை வரி விதித்திருக்கிறார்கள். அதற்கு ஒருமுனை வரி விதிக்க வேண்டும் என்று வியாபாரிகள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதன்படி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வணிகர் நல வாரியம் வேண்டும் என்று கேட்கிறார் கள். தொழிலாளர்களுக்கென்று தொழிலாளர் நல வாரியம் இருக்கின்றது. ஆனால் ஆயிரம் கோடி ரூபாய் வசூலித்துக் கொடுக்கின்ற வணிகர்களுக்காக வணிகர் நல வாரியம் அமைப் பதில் என்ன சிரமம் இருக்கின்றது. எனவே வணிகர் நல வாரியம் அமைக்கப்படவேண்டும்.

மேலவையைப் பொறுத்தவரையில் ஆசிரியர்களுக்குப் பிரதி நிதித்துவம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. பல்வேறு பிரிவினர் களுக்கு அங்கே பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அது போல் வணிகர்களுக்கும் இரண்டுபேர்களுக்கு மேலவையில் பிரதி நிதித்துவம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்



அடுத்து செக் போஸ்ட்களைப் பொறுத்தவரையில் ஒரு ஏக்கர் நிலமாவது வாங்கி அங்கே லாரிகளை வரிசையாக நிறுத்தி வைப்பதற்கான வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும். அவ்வாறு இல்லாததன் காரணத்தால் பல்வேறு விபத்துக்கள் ஏற்படுகின்றன. விருதுநகரில் இளங்கோ, என்பவர் எம்.எஸ்.ஸி. படித்தவர் அவர் ஸ்கூட்டரில் வந்தபோது அங்கே ஒரு லாரி நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததன் காரணத்தால் வந்துகொண்டி ருந்த மற்றொரு லாரி மோதி அவர் இறந்து விட்டார். எனவே செக்போஸ்ட்டுக்கு என்று போதிய நிலம் வாங்கி அதனை அகல மாக அமைக்கவேண்டும். ஆனால் செக் போஸ்டே வேண்டாம் என்று ஒருபுறத்தில் சொல்லிக் கொண்டிருக்கிறோம். எனவே செக்போஸ்டே தேவையில்லை; அதனால் அரசுக்கு அதிக வரு மானம் வந்துவிடப்போவதில்லை. சாதாரண விவசாயிகள் சரக்குகளைக் கொண்டுவரும்போது மூட்டைகளை இறக்கி வைத்து விட்டு போக வேண்டிய சூழ்நிலைகள் எல்லாம் ஏற்படு கின்றன. இப்படி பல்வேறு சிரமங்கள் இருக்கின்றன. இதன் காரணத்தால் செக் போஸ்ட் வேண்டாம் என்பதும் ஒரு கருத்து. அதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன.

(முற்பகல்-11.50)

அதேபோல அடுத்து மாநில விற்பனை வரி ஆலோசனைக் குழுக்களைப் போட்டிருக்கிறீர்கள். அதிலே 6 சட்டமன்ற உறுப் பினர்கள் இருப்பதாக அறிக்கையில் இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களைப் போடும்போது வணிகம் செய்யக் கூடிய சட்ட மன்ற உறுப்பினர்களாகப் பார்த்துப் போட்டால் அது சரியாக இருக்கும் என்ற என் கருத்தை இதில் சொல்ல விரும்புகிறேன். மாநில ஆலோசனைக் குழுக்கள் இருப்பதைப்போல மாவட்ட அளவிலேயும் ஆலோசனைக் குழுக்களை விரிவு படுத்த வேண் டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வணிகர்களுக்குப் பயன் தரக் கூடியது அகல ரயில் வழிப்பாதை. தமிழக வணிகர்கள் வணிகம் செய்யக் கூடிய வணிகத்தின் பொருட்களில் பெரும்பகுதி வட மாநிலங்களில் இருந்து தான் வரவேண்டியிருக்கிறது. வட மாநிலங்களில் பிராட்கேஜ் லைன்கள் இருக்கின்றன. தென் மாநிலங்களில் மீட்டர் கேஜ் ரயில் பாதைகள் இருக்கின்றன. பிராட்கேஜ் ரயில் பாதையிலிருந்து மீட்டர் கேஜ் ரயில் பாதைக்கு மாற்றும்போது பல மூட்டைகள் காணாமல் போகக் கூடிய சூழ்நிலைகள் இருக் கின்றன. சரக்குகளுக்கு சேதம் ஏற்பட்டால, ரெயில்வேயில் கிளைய்ம் பண்ணும்போது, அந்தத் தொகை கிடைக்க கால தாமதம் ஆகிறது. அத்தோடு சரக்குகளுக்கு போதுமான ரெயில் வேகன்களும் கிடைப்பதில்லை. அதனால் சரக்குகள் சரியான நேரத்தில் கிடைப்பதில்லை. ஆகவே அங்கே அகல ரயில் பாதைகள் போடப்பட வேண்டும். இதை நான் விற்பனை வரி மானியத்தில் சொல்வதற்குக் காரணம், வணிகர்கள் சம்பந்தப்

பட்ட விஷயம் என்பதால்தான். ஆகவே அரசாங்கம் பெரும் முயற்சி எடுத்து, திண்டுக்கல்—கரூர், திண்டுக்கல்—மதுரை, மதுரை—திருநெல்வலி போன்ற இடங்களில் எல்லாம் அகல ரயில் பாதைகள் போட முயற்சி எடுக்க வேண்டும். இவைகளுக்கெல்லாம் மொத்தமாக மத்திய அரசு 71 கோடி ரூபாய் ஒதுக்கியது என்றால் அதற்காக நமக்கு வருடத்திற்கு 3. 4, கோடியைத்தான் ஒதுக்குகிறார்கள். மராட்டிய மாநிலத்தில் மொத்தமாக 20 கோடி ரூபாய் இதற்காக வேண்டும் எனறு போராடி பெற்றிருக்கிறார்கள். அது போல மொத்தமாகப்பெறுவதற்கு நீங்களும் முயற்சி எடுக்க வேண்டும். நில ஆர்ஜிதம் செய்வதற்காக 1½ கோடி ரூபாயைக் கேட்டிருக்கிறீர்கள் நீங்கள் மத்திய அரசிடம். அந்த 1½ கோடி ரூபாயையும், அதற்காகப் பெறாமல் இதற்கு ஒதுக்கித் தர வேண்டும் என்று கேட்டு நீங்கள் பெற்றால் மிக நல்லதாக இருக்கும் எனபது என் கருத்து.

அதேபோல அடுத்து திடீர் சோதனை, பறக்கும் படை என்றெல்லாம் வருகிறது. மிக்க மகிழ்ச்சி. ஆனால் இந்த திடீர் சோதனையாலும், பறக்கும் படையாலும் அரசாங்கத்திற்கு எந்தவித லாபமும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அவர்கள் எவ்வளவு தான் சோதனை செய்தாலும், என்னதான் அங்கே எல்லாம் சரியாக இருந்தாலும் கூட நாங்கள் காலையில் 10 மணிக்கு வந்து மாலை 5 மணி வரை இருந்து போகிறோமே எங்களுக்கு என்ன செய்கிறீர்கள் என்று கேட்கிற நிலைமைதான் இருக்கிறது. அதைச் சொல்லித்தான் ஆக வேண்டும்.

விருது நகரிலே ஒரு வணிக வரி அதிகாரி என் கையைக் கடித்து விட்டார் என்று போலீசிலே ஒரு வணிகர் மீது புகார் கொடுத்திருக்கிறார். என் கழுத்தைப் பிடித்து நெரித்தார்கள், என் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள கையைக் கடித்தேன் என்று அந்த வணிகர் புகாரில் சொல்லியிருக்கிறார்கள்.

மதுரையிலே இரும்பு பெட்டியை வணிகர் திறந்திருக்கிறார். திறந்திருக்கிற இரும்புப் பெட்டியின் முன்னால்தான் உட்காருவேன் என்று வணிக வரி அதிகாரிகள் சொல்லியதன் காரணமாக ஏற்பட்ட நிலை அங்கே 30 ஆயிரம் ரூபாயைக் காணோம் என்று வணிகர்கள் புகார் செய்திருக்கிறார்கள். பல லட்சம், பல கோடியை போட்டு வணிகம் செய்கிற வியாபாரிகளை, இரும்புப் பெட்டியைத் திறந்து, கொடுக்க வேண்டிய கணக்குகளை கொடுங்கள் என்று கேட்டிருந்தால் சரி. ஆனால் அந்த திறந்த இரும்புப் பெட்டியின் முன்னால்தான் உட்கார்ந்து சோதனை செய்வோம் என்று சொல்லும் நிலை ஏன் ஏற்பட்டது. இதையெல்லாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அந்த அளவுக்கு அதிகாரிகளுடைய கெடுபிடி இருக்கிறது. விருது நகரிலே ஒரு அதிகாரி காலை-6½ மணிக்குப் போய் சோதனை செய்திருக்கிறார்கள். காலை 6½ மணிக்குப்போய் சோதனை





செய்ய வேண்டிய அவசியம் என்ன? 10 மணிக்கு 12 மணிக்கு மேல்தான் வியாபாரமே தொடங்கும். அந்த நேரத்தில் அங்கு சென்று சோதனை செய்து ரெஜிஸ்டரிலே கையெழுத்துப் போட்டு விட்டு வந்தால், அந்தப் பணம் அரசாங்கத்திற்கு சேரும். காலை 6½ மணிக்குப் போய் சோதனை இட்டால் அந்தப் பணம் எங்கே போய்ச் சேரும் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்.

அடுத்து வணிக வரி அலுவலகத்தில், வணிகர்களுக்கு எந்த விதமான வசதிகளும் கிடையாது. அவர்கள் அலுவலகத்திற்கு வந்தால் உட்காரக் கூட இடம் கிடையாது. பர்னீச்சர்கள் கிடையாது. குடிக்கத்தண்ணீர் கூட கிடையாது. இவைகளையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவர்களுக்கு சௌகரியமாக செய்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அப்பீல்கள். அப்பீல்கள் ஆண்டுக் கணக்கிலே தூங்கிக்கிடக்கின்றன. அத்தோடு அப்பீல் செய்யும்போது செக்யூரிட்டி வேறு கேட்கிறார்கள். செக்யூரிட்டிக்காக பத்திரங்களைக் கொடுக்கிறார்கள். 3, 4 வருஷம் அப்பீலில் இருக்கும் போது, அபராதப் பணத்தை வசூல் செய்து விடுகிறார்கள். அந்த பணம் 3, 4 வருஷத்திற்கு திரும்பக் கிடைக்காத அபாயம் இருக்கிறது. திரும்ப கிடைக்க தாமதமாகிறது. 30 ஆயிரம், 40 ஆயிரம் பாக்கி நிற்கிறது. ஆகவே வணிகர்கள் அப்பீல் செய்வதை அனுமதித்தால், செக்யூரிட்டி கொடுக்க வேண்டும், பணம் செலுத்த வேண்டும் என்கிற முறையை ரத்து செய்ய வேண்டும்.

அதற்கடுத்து மார்க்கெட்டிங் கமிட்டி. இந்த மார்க்கெட்டிங் கமிட்டி என்பது எங்குமே செயல்படுவதில்லை. ஆனால் மாநில அளவிலே அதன் மூலம் பணிகள் நடைபெறுவதைப் போலசெய்து வருவதால், அது செயல்படுவது போலக் காட்டுகிறார்கள். அத்தோடு இந்த மார்க்கெட்டிங் கமிட்டிக்கு விவசாயிகள் சென்று பொருள்களைக் கொடுக்கும்போது, அவர்களுக்கு உடனே பணம் கொடுப்பதில்லை, சரக்குகள் விற்றபிறகுதான் கொடுக்கிறார்கள். ஆதலால் விவசாயிகள் அங்கு செல்ல விரும்பவில்லை.

அதைப்போல லைசன்ஸ் முறை என்று ஒன்று இருக்கிறது. இந்த லைசன்ஸ் முறையை முறைப்படுத்த வேண்டும் என்று வியாபாரிகள் கேட்டதற்கு, முன்பு இல்லாத பொருள்களுக்கும் சேர்த்து இப்போது லைசன்ஸ் முறை கொண்டு வந்து சேர்க்கப்பட்டிருக்கிறது. இப்படி எல்லா பொருள்களுக்கும் லைசன்ஸ் முறை என்று வைத்தால் அதன் விளைவு என்ன ஆகும் என்றால், 15 நாட்களுக்கு ஒரு முறை இவ்வளவு மிளகாய் இருக்கிறது,

[திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்] [1985 ஜூன் 24

இவ்வளவு தானியம் இருக்கிறது என்று சொல்லி மார்க்கெட்டிங் கமிட்டிகளுக்கு கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். வணிகர்களுக்கு இதுபோன்ற பல இடங்களிலும் பல வகையான கஷ்டங்கள் இருக்கின்றன என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையில் 154.14 இலட்சம் ரூபாய் வருமானம் அதிகரித்திருப்பதாகச் சொல்லியிருக்கிறது. அதாவது 21 சதவீதம் வருமானம் அதிகரித்துள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். இதனைப் பார்க்கிறபோது வணிகர்கள் அரசை ஏமாற்றவில்லை என்று உறுதியாக நம்பலாம். 21 சதவீதம் கூடுதல் என்றால் அது பெரிய கூடுதல். ஒரு சதவீதம், இரண்டு சதவீதம் கூட கூடுதலை உங்களால் போக்குவரத்துக் கழகங்களில் காட்ட முடியவில்லை. அவைகள் எல்லாம் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே 21 சதவீதம் கூடியிருக்கிறது என்றால் வணிகர்கள் அரசை ஏமாற்றவில்லை என்பதை மனதிலேகொண்டு வணிகர்களுக்கு முறையான சலுகைகளை அரசாங்கம் செய்ய வேண்டும். நான் முன்பே கேட்டதைப் போல வணிகர் நல வாரியம், மேல்சபையில் பிரதிநிதித்துவம் மற்றும் இதைப்போல பல சலுகைகளைச் செய்ய வேண்டும். அடுத்து திடீர் சோதனைகளைப் பொறுத்தவரையில், அதிகாரிகள் சோதனை செய்வதால் வணிகர்களுக்கு கஷ்டம் ஒன்றுமில்லை. ஆனால் என்னென்ன முறையில் சோதனை செய்ய வேண்டும், எப்படி வழிபடுத்திச் செய்ய வேண்டும் என்பதை அதிகாரிகளுக்கு சொல்லியனுப்பி, வணிகர்களுக்கு இருக்கிற சிரமங்களை நீக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவையின் தற்காலிகத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் வைத்திருக்கிற தமிழ் நாடு பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும், நிர்வாகம் என்ற 4-ம் எண் மானியக் கோரிக்கையினை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை வைக்க விரும்புகிறேன்.

இந்தக் கொள்கை விளக்கப் புத்தகத்தினைப் பார்த்தால், சிறிய புத்தகத்தில் நிறைய விஷயங்களை வைத்திருக்கிறார்கள். அதிகமாக வருவாய் ஈட்டக்கூடிய துறை வணிகவரித் துறை என்பதை அதன் மூலம் தெளிவுபடுத்தி இருக்கிறார்கள். கிராமப்புறங்களில் ஒரு பழமொழி சொல்வார்கள். 'மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரியது' என்று குறிப்பிடுவார்கள். அதைப்போல இன்றைக்கு இவ்வளவு சிறிய புத்தகத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்றைக்கு கொண்டு வந்திருக்கிற இந்த மானியக் கோரிக்கையிலே குறிப்பிட்டிருக்கிற விவரங்களைப் பார்க்கிறபோது தமிழகத்தினுடைய மொத்த வருவாயிலே ஏறக்குறைய 70 சதவீதம் வணிகவரியிலேயிருந்து தான் வருகிறது என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. இந்தத் துறை சிறப்பாக



1985 ஜூன் 24] [திரு. க. பாலசுப்பிரமணியன்]

செயல்படுவதை நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள். இதிலே சில குறைபாடுகள் இரண்டு பக்கத்திலும் இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள் தெரிவித்தார்கள். அவர் அந்த இரண்டு பக்கம் எவையென்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை. ஆகவே அந்த விளக்கம் அவருக்கே வெளிச்சம் என்று விட்டுவிடுகிறேன். அங்கொன்றும் இங்கொன்றுமாக சில குறைபாடுகள் இருக்கலாம். அவற்றை நிறைவு செய்து, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள், எல்லா மக்களுக்கும் எல்லாம் கிடைக்க வேண்டுமென்ற வகையில் நல்ல திட்டங்களைத் தீட்டி நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

இங்கே பேசிய மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். அவர்கள் சொல்கிறபோது; பேரறிஞர் அண்ணா அவர்கள் Tap the rich and pat the poor என்று சொன்னார்கள். ஆனால் இங்கே பணக்காரர்களுக்கு வசதி ஏற்படுத்தி, வியாபாரிகளுக்கு சலுகை கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். இதுவரையில் ஒவ்வொரு முறையும் நிதிநிலை அறிக்கை அளித்த பிறகு வியாபாரிகளும், பொதுமக்களும் ஆட்சேபணைகளைத் தெரிவிப்பது என்பது வாடிக்கையாக இருந்திருக்கிறது. கடந்த நிதிநிலை அறிக்கையின் போது, விற்பனை வரி, வர்த்தக வரி பொறுத்தவரையில் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லாமல், அனைத்து தர மக்களும் ஒப்புக்கொள்கிற அளவிற்கு வரிவிதிப்பை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்படுத்தி இருக்கிறார்கள் என்பதை அனைவரும் அறிவார்கள். ஆகவே அண்ணா அவர்கள் சொன்ன, Tap the rich and pat the poor என்பதை முறையாக புரட்சித் தலைவர் அவர்கள் செய்து வருகிறார்கள். ஆனால் முறைதவறி நடந்தவர்கள் காலத்தில் என்ன செய்தார்கள் என்றால் beat the poor and pat the rich ஏழைகளை வதைத்து வதைத்து, தொழிலாளர்கள் மீது வரிகளைப் போட்டு, ஆட்சி நடத்தியவர்கள்தான் இன்றையதினம் அண்ணா சொன்னதை தடம் புரண்டவர்கள் திசை திருப்புகிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அண்ணா வழி வந்தவர் என்ற காரணத்தால் வரி விதிப்புகளை முறையாக எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் அளவிற்கு செய்திருக்கிறார்கள்.

பலமுனை வரியை ஒருமுனை வரியாக்க வேண்டுமென்று, பல பொருள்களுக்கு அதை மாற்றியமைக்க வேண்டுமென்று வியாபாரிகளிடத்திலிருந்தும், பொதுமக்களிடத்திலிருந்தும், கோரிக்கைகள் வந்த வண்ணமாக இருந்தன. அவைகளை கருத்திலே கொண்டு, புரட்சித் தலைவர் அவர்கள் நாட்டில் இருக்கிற பல்வேறு பொருள்களுக்கு பலமுனை வரிவிதிப்பை ஒருமுனை வரியாக மாற்றி அமைத்திருக்கிறார்கள்.

[திரு. க. பாலசுப்பிரமணியன்] [1985 ஜுன் 24

(நண்பகல் 12-00).

இதிலிருந்து தவறுகள் நடப்பதற்கு வாய்ப்பில்லை. தவறு செய்பவர்களை தூண்டுவதற்கும் வாய்ப்பில்லை. ஆகவே தவறுகளைக் குறைப்பதற்கும், அதே நேரத்தில் விற்பனை செய்கின்றவர்களுக்கும், வாங்குகின்றவர்களுக்கும் நிரந்தரமான நியாயம் கிடைப்பதற்கும் வாய்ப்பாக இங்கே அமைத்திருக்கிறார்கள்.

அதைப் போலவே மிளகாய், புளி, மஞ்சள், கடுகு, மிளகு போன்ற சாதாரண மக்கள், இன்னும் சொல்லப் போனால், ஏற்கனவே ஆண்டவர்கள் சொல்லியதைப் போல, சாமானிய மக்கள் வாங்கி உபயோகிக்கிற பொருட்களுக்கு ஒரு முனை வரியை விதித்து புரட்சித் தலைவர் அவர்கள் சலுகை அளித்து இருக்கிறார்கள். எள் வாங்குவதற்கு வரி விலக்கு என்று இன்னும் பல்வேறுபட்ட பொருட்களுக்கு வரி விலக்கை அளித்து இருக்கிறார்கள். இன்றைக்கு புரட்சித் தலைவர் ஆட்சியிலே தான் எந்தவிதமான பரபரப்போ, எந்தவிதமான எதிர்ப்போ, எந்தவிதமான சஞ்சலமோ மக்களிடத்திலே இல்லாமல் இருக்கிறது. ஏன் அரசியல்வாதிகள் கூட நிதிநிலை அறிக்கையிலே எந்தவிதமான பயங்கரமான ஆட்சேபணையை அல்லது எதிர்ப்புகளைத் தெரிவிக்காமல் இங்கே நிதிநிலை அறிக்கை வந்தது. அதைத் தொடர்ந்து மானியக் கோரிக்கை வந்திருக்கிறது. சென்ற ஆண்டு முதல் இந்த ஆண்டு வரை எந்த அளவிற்கு வரியைக் குறைத்து, அதே நேரத்தில் எதற்குப் போட வேண்டுமோ, அவைகளுக்குப் போட்டு, இன்றைக்கு நிதி ஆதாரத்தை அதிகப்படுத்தி இருக்கிறார்கள். இந்த அறிக்கையிலே பல்வேறுபட்ட குழுக்களை நியமிப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் ஒவ்வொரு நேரத்திலேயும், அரசியல்வாதிகளை ஈடுபடுத்த வேண்டும், சட்டமன்ற உறுப்பினர்களை ஈடுபடுத்த வேண்டும் என்று சொல்வார்கள், ஆனால் இன்றைக்கு என்னவோ, அந்த நிலைக்கு மாறாக அரசியல்வாதிகளுக்கோ அல்லது சட்டமன்ற உறுப்பினர்களுக்கோ, இதிலே இடம் இருக்கக் கூடாது என்று சொல்லி இருக்கிறார்கள். அதனுடைய காரணம் என்னவென்று எனக்குத் தெரியவில்லை. ஒரு வேளை அவர்களுடைய கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கை குறைவாக இருப்பதால், தமிழகம் முழுவதும் அங்கம் வகிக்க முடியாது என்ற எண்ணமோ எனக்குத் தெரியவில்லை. ஆனால் நான் அதற்கு மாற்று ஏற்பாடாக ஒரு ஆலோசனையைச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். மாவட்டக் குழுக்கள் என்று டிஸ்ட்ரிக்ட் லெவல் கமிட்டி போடுவதாகத் தெரிகிறது. அந்தக் குழுக்களிலே அந்தந்தத் தொகுதியிலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிப்பதன் மூலம் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலமாக அரசு செய்கின்ற காரியங்களைத் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பிருக்கிறது என்று ஒரு நிலை ஏற்படுவதற்கு வழி வகையாக இருக்கும்.



1985 ஜுன் 24] [திரு. க. பாலசுப்பிரமணியன்]

அதைப் போலவே மாவட்டக் கமிட்டிகளிலே இருக்கிற உறுப்
பினர்கள் மாநிலக் கமிட்டியிலே இடம் பெற வாய்ப்பில்லாமல்,
மாநிலக் கமிட்டியிலே மற்ற உறுப்பினர்களுக்கு இடம் அளிக்க
லாம். மாநிலக் கமிட்டிக்கு ஏறக்குறைய 6 சட்டமன்ற உறுப்
பினர்கள், ஒரு மேலவை உறுப்பினர் என்று தேர்ந்தெடுக்கப்பட
இருக்கிறார்கள் என்று தெரிவித்தார்கள். அப்படி தேர்ந்
தெடுக்கப்படுபவர்கள் நீங்கலாக மீதி இருப்பவர்களில் மாவட்டக்
கமிட்டியிலோ அல்லது வியாபாரிகளுடைய நலக் குழு ''டிரே
டர்ஸ் வெல்பேர் அட்வைசரி கமிட்டி'' என்று சொல்லுகின்ற
அந்தக் குழுக்களிலோ இடம் வகிப்பதன் மூலம் தேர்ந்தெடுக்கப்
பட்ட பிரதிநிதிகள் அனைவருமே அந்தக் குழுக்களிலே இடம்
வகிக்கிறார்கள் என்ற ஒரு நிலையை நாம் ஏற்படுத்த முடியும்.
ஆகவே மாவட்டக் கமிட்டி, மாநிலக் கமிட்டி, வியாபாரிகளுடைய
நலக் குழு என்று இப்படிப்பட்ட குழுக்களிலே எல்லாம்
அனைத்து உறுப்பினர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்
களும், மேலவை உறுப்பினர்களும் இல்லாத இடங்களில், பாராளு
மன்ற உறுப்பினர்கள் என்று இப்படிப்பட்டவர்கள் அங்கம்
வகிப்பதற்கான வழி வகையைச் செய்ய வேண்டும் என்று
நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இங்கே ஒரு கருத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள்,
சில இடங்களுக்கு நிரந்தரமான சுங்கச் சாவடிகளை அமைக்க
வேண்டும் என்று இந்த நேரத்திலே என்னுடைய கோரிக்கையாக,
என்னுடைய தொகுதியிலே ஒரு சுங்கச் சாவடி அமைக்க வேண்டும்
என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதற்கு ஆதாரமாக நான்
சில விவரங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். வரலாற்று
சிறப்புமிக்க காலத்திலே ஆட்சி செய்தவர்கள், தஞ்சை
மாவட்டத்தில் உள்ள கொள்ளிடத்தின் தென் கரையிலே உள்ள
கொள்ளிடம் என்ற ஊரிலே ஒரு சுங்கச் சாவடி இருக்கிறது.
அந்தச் சுங்கச் சாவடியிலே, பல்லாயிரக்கணக்கான லாரி
களிலே நெல்லை ஏற்றி, அந்த நெல்லுக்கு எல்லாம் விதி விலக்கு
அளிப்பதற்காக, திடீரென்று ஒரு உத்தரவைப் பிறப்பித்து,—
அது 1974 அல்லது 1975 என்று தெரியவில்லை - தமிழகத்தில்
இருக்கின்ற பல்வேறுபட்ட மாவட்டத்திலே இருக்கின்ற லாரிகள்
எல்லாம் வந்து, அங்கேயிருந்த நெல்லை ஏற்றி, இரவோடு
இரவாக கொள்ளை அடிப்பதைப்போல என்னுடைய தொகுதி
யிலே நடத்திக் காட்டினார்கள். அப்படிப்பட்ட ஒரு முக்கிய
மான இடம் தான் கொள்ளிடத்திலே இருக்கின்ற அந்தச் சுங்கச்
சாவடி. அந்தச் சுங்கச் சாவடி நல்ல முறையில் பணியாற்றி
வருகிறது.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த கால ஆட்சி
யின் போது ஏதோ கொள்ளை அடித்துக் கொண்டு போவதைப்
போல நெல்கள் கடத்தப்பட்டதாகச் சொன்னார்கள். அப்
போது என்ன நடந்தது? அது பற்றி அரசின் உத்திரவு என்ன?

என்ன அடிப்படையில் ஒரு எல்லையிலிருந்து இன்னொரு எல்லைக்கு நெல் கொண்டு போகப்பட்டது என்ற விவரத்தை எடுத்துச் சொன்னால் மிகவும் வாய்ப்பாக இருக்கும். அது சம்பந்தப்பட்ட அமைச்சர் கூட இப்போது உங்கள் பக்கம் தான் இருக்கிறார்.

டாக்டர் கோ. சமரசம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சர் எங்கே இருந்தால் என்ன? போனது: வந்தது; உண்மை. அது பற்றி விளக்கம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அதிலே சம்பந்தப்பட்ட அமைச்சர் உங்களிடத்தில் இருக்கிறார் என்று சொல்லிவிட்டு நழுவி விடலாம் என்று நினைக்கிறார்கள். ஆனால் அது சம்பந்தமாக இருந்த முதல் அமைச்சர் அவர்களே என்னுடைய மாவட்டத்துக்காரர். அந்த உத்திரவுக்கு மூலக் காரணம் அவர்தான். அதில் எவ்வளவு பணம் தேவைப்பட்டதோ அதில் முக்கால் பகுதியை முடக்கிக் கொண்டவர்கள் அவர்கள்தான். பழைய கதைகளைக் கிளப்பினால் நிறைய வரும், தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், தயவுசெய்து நீங்கள் அமைச்சர் இருந்தார், அவர் இருந்தார், இவர் இருந்தார் என்று சொல்லி நழுவப் பார்க்க ;வேண்டாம் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அப்படிப்பட்ட ஒரு முக்கியமான தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்ற நெல் முழுவதையும் என்னுடைய ஊர் சீர்காழி, என்னுடைய தொகுதி கொள்ளிடம். கொள்ளிடத்திலிருந்து சீர்காழி 10, 12 கிலோ மீட்டர் தூரம். சீர்காழி கடைத் தெரு முழுவதும் அங்கே நெல் லாரிகள் நிற்கின்றன இரவில், என்ன என்று தெரியாமல் எல்லோரும் தவித்தார்கள். அந்த நேரத்தில் ஒரு அரை மணி நேரத்தில் அந்த லாரிகள் எல்லாம் எங்கே போனது என்று தெரியவில்லை. பிறகு கேட்டால் கொள்ளிடத்தில் இருக்கின்ற சுங்கச் சாவடியை கபளிகரம் செய்து விட்டு எல்லோரும் வெளியே கிளம்பி விட்டார்கள் என்று சொல்லுகின்ற வரலாற்றைப் படைத்தது தான் என்னுடைய தொகுதி. மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை ராமநாதன் அவர்களுக்கு ஒரு சிலது தெரியும். அந்தத் தொகுதியைச் சேர்ந்தவன் என்பதால் எனக்கு நிறையத் தெரியும். தயவுசெய்து இதில் தலையிட வேண்டாம். அப்படிப்பட்ட ஒரு இடம் நெல் நிறைய உள்ள இடம், தஞ்சை மாவட்டத்திலிருந்து நெல் பெரும் பகுதிக்கு சென்னைக்கு அல்லது வடக்கே உள்ள தென் ஆற்காடு மாவட்டத்திற்கு, செங்கற்பட்டு மாவட்டத்திற்கு வடக்கே உள்ள அத்தனை பகுதிக்கும் வரக்கூடிய இடம். அங்கே சுங்கச் சாவடி இருக்கிறது. அங்கே நல்ல முறையில் பணியாற்றி வருகிறார்கள். அதற்கு நிரந்தரமான கட்டிடம் கட்ட வேண்டும். மேலும் அதிலே நல்ல முறையில் நிர்வகிக்க முடியும், கட்டுப்பாட்டை விதிக்க முடியும் என்பதை நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள கடமைப்



பட்டிருக்கிறேன். ஆகவே வணிக வரித் துறையில் புரட்சித் தலை
வர் அவர்கள் ஆட்சியில் தான் ஏழை எளிய மக்களுடைய
வாழ்வு வளம் பெற வரி முறையாக போடப்பட்டு இருக்கிறது
வசதி படைத்தவர்கள் ஓரளவுக்கு வரி கொடுக்க வேண்டும்.
என்ற எண்ணம் அவர்கள் மத்தியில் வந்திருக்கிறது. அதே
போல் வியாபாரிகளுக்கும் அரசு தான் நமக்கு நியாயம் செய்
கிறது, அகவே, ஏமாற்ற வேண்டிய அவசியம் இல்லை என்ற
எண்ணம் அவர்களுக்கு வந்திருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட
நிலையில் இன்றைக்கு வணிக வரித் துறையில் இங்கே இருக்கின்ற
சலுகைகளை பட்டியல் போட்டு காண்பிக்க முடியும். ஆனால்
மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் மணி அடித்துவிடுவார்
கள். ஆகவே காலம் இல்லாத காரணத்தால் அங்கே அத்தனை
பேரும் சொன்னது போல் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்
கள் ஆட்சியில் இந்த நிதி நிலை அறிக்கையில் ஏற்படுத்தியிருக்
கின்ற இந்த மானிய கோரிக்கையானது கற்பக விருட்சம் தான்,
காமதேனு தான், அமுத சுரபி தான், அட்சய பாத்திரம் தான்.
சந்தேகம் இல்லை. தமிழக மக்கள் இதை எல்லாம் இன்றைக்கு
ஆதாரத்தோடு அறிவித்து இருக்கிறார்கள். ஒத்துக் கொண்டு
இருக்கிறார்கள். எந்தவிதமான பிரச்சினையும் இல்லாமல்
அந்த அறிக்கையை இன்னும் நல்ல முறையில் செயல்படுத்து
வதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்து
இருக்கிறார்கள்,' இந்த மானிய கோரிக்கையை வரவேற்று எனக்கு
பேச வாய்ப்பு அளித்த மாற்றுத் தலைவருக்கு நன்றி சொல்லி
முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவையின்
தாற்காலிகத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வணிகத் துறை
அமைச்சர் அவர்களால் கொண்டு வந்து இருக்கும் பொது
விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும் நிருவாகம்
என்ற மானிய கோரிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களைச்
சொல்ல விழைகிறேன்.

இன்றைக்குத் தமிழ்நாட்டில் பொது விற்பனை வரியின் மூல
மாக கிடைக்கக்கூடிய வருமானம் தமிழகத்தில் மொத்தமாக
வரக்கூடிய நிதியில் மூன்றில் இரண்டு பங்குக்கு மேல் நிதி
கிடைக்கிற ஒரு துறையாக இந்த துறை இருக்கிறது. ஆனால்
இந்த துறையினால் போடக்கூடிய வரிகள், வசூல் செய்யக்
கூடிய முறைகளை, அதனால் வசூல் ஆகக்கூடிய தொகைகள்,
இன்னும் ஒரு மாநில அரசு தன்னாட்சி மூலமாக முழுமையும்
பெற முடியாமல் மத்திய அரசினுடைய அனுமதி பெற்று தான்
செயல்படக்கூடிய ஒரு நிலை இன்றைக்கும் நடைமுறையில்
நடந்து கொண்டு வருகிறது.

[திரு. பொ. உத்திராபதி] [1985 ஜூன் 24
(பிற்பகல் 12-10)

அதனாலேதான் இன்றைக்கு ஒரு மாநில அரசுக்கு வரக்கூடிய
நிதி—இந்தந்த வகையில் உள்ள வரிகள் மத்திய சர்க்காருக்கும்.
இந்தந்த வகையில் வரக்கூடிய வரிகள் மாநில அரசுக்கும் என்று
ஒரு உறுதியிட்டு ஒரு முடிவுக்கு வராத வரையிலும், மாநில
அரசினுடைய இப்போதைய நிதியை மட்டும் வைத்து, வரக்கூடிய
வருமானத்தைப் பெருக்கி, தமிழக மக்களுக்கு பயன்படக்கூடிய
காரியங்களை முழுமையாக நிறைவேற்றமுடியுமா என்று நினைத்
துப் பார்த்தால் நிச்சயமாக முடியாது.

மக்கள் மீது போடக்கூடிய பல முனை வரியை ஒரு முனை
வரியாக ஆக்க வேண்டும் என்று இந்த சட்டமன்றத்தில் நாங்கள்
தொடர்ச்சியாக வற்புறுத்தி வந்தோம். அந்த அடிப்படையில்
பல முனை வரியை ஒரு முனை வரி ஆக்கி இருப்பதை நாங்கள்
வரவேற்கிறோம்.

அப்படி பலமுனை வரியை ஒரு முனை வரி ஆக்கி, இன்றைக்கு
மிளகாய், புளி, மஞ்சள், கொத்தமல்லி; மிளகு—இப்படி மக்கள்
பொதுவாக வாங்கக்கூடிய அந்தப் பொருட்கள் மீது இருக்கக்
கூடிய பலமுனை வரியை மாற்றி, 8 சதவிகிதமாகக் கொண்டு
வந்திருக்கிறார்கள்.

நான் கேட்டுக்கொள்வது :—இது சாதாரண உழைக்கக்
கூடிய மக்கள் மட்டும் அல்ல. அனைத்து பகுதி மக்களும் பார
பட்சம் இல்லாமல் வாங்கக்கூடிய சாதாரணப் பொருள்.
இந்தப் பொருளுக்குப் போடக் கூடிய வரியை எதிர்காலத்தில்,—
அந்த வசூலிலிருந்து விதி விலக்கு அளிக்க வேண்டும் என்று
இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதே போல், 1985–86 ஆம் ஆண்டுக்கு 26–3–1985-இல்
சாராயத்தின் மீது உள்ள வரி 6 சதவிகிதத்திலிருந்து 25 சத
விகிதமாக உயர்த்தப்பட்டு, அந்தச் சாராய விற்பனையும், இன்
றைக்கு வணிக வரித் துறைக்கு மாற்றப்பட்டு, அந்தப் பொறுப்
பினை அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு
'ஏஜெண்ட்' மூலமாகவும் கொடுக்கலாம் என்றும் அறிவிக்கப்
பட்டிருக்கிறது.

ஆனால், இந்தச் சாராயம், கள்ளுக் கடை என்பது.
இன்றைக்குத் தமிழகத்தில் எவ்வளவு தான் திட்டங்களையும்,
மக்களுக்குத் தேவையான காரியங்களையும் அறிவித்திருந்தாலும்,
அத்தனையும், இன்றைக்கு கிராமப்புறத்திலே ஒரு பக்கம் குழந்
தைகளுக்கு சத்துணவு கொடுத்து விட்டு, இன்னொரு பக்கம்
குழந்தைகளைப் பெற்றவர்கள்—அதுவும் 5 மைல், 10 மைல்
தேடிப் போக வேண்டிய ஒரு காலம் போய்—இன்றைக்குத்
தெருவுக்கு அருகாமையிலேயே சாராயக் கடையும், கள்ளுக்



1985 ஜூன் 24] [திரு. பொ. உத்திராபதி]

கடையும் இருந்து, சாராய சாம்ராஜ்யமாகக் கரை புரண்டு
ஓடக்கூடிய ஒரு காலம் மக்களை வாட்டி வதைத்துக் கொண்
டிருக்கிறது.

நான் வணிக வரித் துறையைக் கேட்டுக் கொள்வது—
தமிழகத்தின் முதலமைச்சர் அவர்கள் இந்தக் கோட்டையில்
நின்று சுதந்திரக் கொடி ஏற்றுகிற போது தான் சொன்னார்கள்—
நான் அடுத்து தமிழகத்தினுடைய தாய்க்குலத்தின் அவல நிலை
யை போக்க இந்த மதுவிலக்குக் கொள்கைக்கு ஒரு முற்று
புள்ளி வைப்பேன் என்று இந்தக் கோட்டையில் நின்று தான்
அறிவித்தார்கள்.

ஆனால், இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த
அந்த வாக்குறுதியை—மீண்டும் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்
னால், மக்களை ஏமாற்றினார்களோ, அல்லது காற்றிலே பறக்க
விட்டார்களோ என்று சொல்ல முடியாது.

மீண்டும் தமிழகத்தின் நிதிப் பற்றாக்குறையைப் போக்க
வேண்டும் என்பதற்காக, 25 சதவிகிதம் வரியை உயர்த்தி, இன்
றைக்குக் கிராமங்கள், நகரங்கள் முழுமையும் கள், சாராயக்
கடைகள் பெருகி வருகிறது. நான் உங்களைக் கேட்டுக்கொள்
வது—கிராமங்களிலும், நகரங்களிலும் எங்கு பார்த்தாலும்
இருக்கக்கூடிய, ஒரு சாராயக் கடையை எடுத்துக் கொண்டு,
இன்றைக்கு பல துணைச் சாராயக் கடைகளை வைக்கக்கூடிய
நிலையில் அனுமதி வாங்காமலேயே நூற்றுக்கணக்கான இடங்
களில் சர்க்காரையும் ஏமாற்றி விற்றுக் கொண்டிருக்கிறார்கள்.
அதை வணிக வரித் துறையின் மூலமாகத் தடுக்கவேண்டும் என்று
சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதே போல், செக் போஸ்ட்—இன்றைக்கு எங்கு பார்த்
தாலும் வைத்திருக்கிறார்கள். எனக்கு முன்னாலே பேசிய
வர்கள் சொன்னார்கள். இந்த செக் போஸ்டுகளின் மூலம்
ஒரு காலத்தில் தமிழகத்தை ஆண்ட கட்சி கொள்ளையடிப்
பதற்கு வாய்ப்பு இருந்ததாகச் சொன்னார்கள். நான் அந்த
இடத்திற்குச் செல்ல விரும்பவில்லை. ஆனால், அந்தக் கட்சி
யினர் ஊழல் புரிந்தார்கள், கொள்ளையடித்தார்கள்; ஆகவே,
அந்தக் கட்சி தமிழகத்தில் இருக்கக் கூடாது என்றுதான் நாங்
களும் உங்களோடு சேர்ந்துதான், தமிழக மக்களை ஒன்று
திரட்டி நீங்கள் ஆட்சிக்கு வந்தீர்கள். ஆனால் அப்படி வந்த
பிறகும், இன்னொரு கட்சியின் ஊழலையே சொல்லி நாம்
தப்பித்துக் கொள்ளலாம் என்று நினைத்துவிடக் கூடாது. இன்
றைக்குச் செக் போஸ்டுகளில் உள்ள நிலைமைகளை எடுத்துக்
கொள்ளுங்கள். ஒரு லாரிக்கு லைசென்ஸ் வாங்குகிறார்கள்,
ஆனால் அந்த லைசென்ஸைக் காட்டியே பத்து, பதினைந்து
லாரிகளில் இன்றைக்கும் கடத்திக்கொண்டு இருக்கிறார்கள்.

[திரு. பொ. உத்திராபதி] [1985 ஜூன் 24

தமிழ்நாட்டில் தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்ற நிலைம
களைச் சொல்ல முடியாது. நடைமுறையில் அப்படித்தான்
இருக்கிறது.

அப்படியே பிடித்துவிட்டாலும் கூட என்ன செய்கிறார்கள்?
சாதாரண ஒரு விவசாயி மாட்டு வண்டியில் பத்து மூட்டை
களை எடுத்துக் கொண்டு போனால் அதைப் பிடிக்கிறார்கள்.
ஆனால் பெரிய பெரிய வியாபாரிகள் இப்படிப்பட்ட தவறு
களைச் செய்யும்முறையில் செக்போஸ்டுகளின் மூலம் இன்றைக்கும்
நடந்து கொண்டிருக்கிறது. எதிர்காலத்தில் இந்தத் தவறு
களையெல்லாம் தடுத்து நிறுத்தினால் சர்க்காருக்கு அதன்
மூலம் கிடைக்கும் வருமானம் உரிய முறையில் கிடைக்கும்
என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, இன்றைக்கு சினிமாத் தியேட்டர்களைப்
பொறுத்த வரையில், ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கைதான் இருக்க
வேண்டும். ஆனால் அதிகமாக எண்ணிக்கை போகிறது. திடீ
ரென்று ஒரு அதிகாரி வந்து, இரண்டாவது ஷோவைப் பார்க்க
வருகிறார். எண்ணிக்கை அதிகமாக இருக்கும். ஆனால்
யாரைப் பிடிப்பார்கள் தெரியுமா? பீடி பற்ற வைத்துக்
கொண்டிருக்கின்ற பத்து பேர்களைப் பிடித்து, நடவடிக்கை
எடுத்ததாக எழுதிக் கொண்டு போகிறார். எனவே, இப்
படி சினிமாத் துறையானாலும் சரி, அதைப்போல் பெரிய
ஓட்டல்களானாலும் சரி, ஐந்து இலட்சம், பத்து இலட்சம்
ரூபாய் என்று வரி பாக்கி இருக்கிறது. அங்கேயெல்லாம் அதிக
மாகப் பிடிப்பதில்லை.

இன்றைக்குத் தமிழகத்தில் வியாபாரத் துறையில் இரண்டு
கணக்குகள் இருக்கின்றன. ஒரு கணக்கு, அவர்கள் உட்கார்ந்
திருக்கின்ற மேசையிலேயே இருக்கும்; இன்னொரு கணக்கு.
அந்த முதலாளி உட்கார்ந்திருக்கின்ற இடத்திற்கு மேலே சரஸ்
வதி படம் , இப்படி மூன்று சுவாமி படங்கள் இருக்கும். அந்தப்
படத்திற்குப் பின்னால் இன்னொரு கணக்கு இருக்கும்.
போகின்ற அதிகாரிகளுக்கும் அது தெரியும்.

தஞ்சையில் கடைகளைச் சோதனையிடுவதற்காக அதிகாரி
புறப்படுவார். அவருக்கு முன்பே இன்னொரு ஆள் பியூனோ
அல்லது வேறு யாரோ போகிறார் அந்தக் கடைக்கு. என்
னுடைய அதிகாரி புறப்பட்டுவிட்டார் என்று கடைக்காரரிடம்
அவர் சொல்லுவார். அப்படி வருகின்றபொழுது பெரிய
கடைகளிலே உண்மையிலேயே மனச்சாட்சிப்படி சோதனை செய்
தால் தமிழகத்திற்கு இன்னும் ஐம்பது கோடி, அறுபது கோடி
ரூபாய் வருமானம் பெருகும்.



1985 ஜூன் 24] [திரு. பொ. உத்திராபதி]

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். திருத்துறைப்பூண்டியில் வேலவன் ஸ்டோர் என்று இருக்கிறது. அங்கே பரிசோதனை செய்வதற்காகத் தஞ்சாவூரிலிருந்து செல்கிறார். வேலவன் ஸ்டோரின் கணக்குகளைப் பார்க்கிறார். தவறு இருப்பதாகச் சொல்லி, அவரிடத்தில் இரண்டாயிரம் ரூபாய் பெற்று விட்டார். ஆனால் பெற்றுக்கொண்ட பிறகு, ஆயிரம் ரூபாய் அந்தக் கடைக்கு அபராதமோ அல்லது வேறு ஏதோ போடப் பட்டுவருகிறது. இதைக் கண்டுபிடித்த பிறகு நானும் மன்னார்குடி வணிக வரித் துறை சூப்பிரிண்டெண்டிடம் கேட்டபொழுது, சார் இதை வெளியில் சொல்ல வேண்டாம் என்றும் எப்படியாவது செட்டில் செய்து விடுவதாகவும் சொன்னார். பிறகு அவர் திருச்சிக்கு மாற்றப்பட்டு விட்டார்

நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், தமிழகத்தில் உள்ள கடைகள், ஓட்டல்கள் வியாபாரிகளின் மூலமாக வர வேண்டியவருமானம் ஒருசில அதிகாரிகளால், இப்படிப்பட்ட பதுக்கல், கணக்கை மறைப்பது ஆகியவற்றின் மூலம் கோடிக்கணக்கான ரூபாய் நம்முடைய மாநிலத்திற்கு வர வேண்டிய வருமானம், இன்றைக்கு யாரோ ஒரு சிலரின் கைகளுக்குப் போய்க் கொண்டிருக்கிறது என்பதற்காகத்தான் சொல்கிறேன். எதிர்காலத்தில் இதையெல்லாம் தடுக்க வேண்டுமானால் நிர்வாகம் கொஞ்சம் கறாராக நடக்க வேண்டும்.

வணிக வரித் துறை அமைச்சரவர்களிடத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, முதலாவதாக இந்த செக் போஸ்டுகள் நல்லமுறையில் பணியாற்றும்படி செய்யுங்கள் ; இரண்டாவதாக நெல் கடத்தலைத் தவிர்த்து நல்லமுறையில் செய்யுங்கள் ; மூன்றாவதாக பெரிய கடைகளில் பரிசோதனை செய்வதற்கு ஏற்பாடு செய்யுங்கள் ; நான்காவதாகக் கலப்படம் நடைபெறுவதைத் தவிர்க்க ஏற்பாடு செய்யுங்கள்.

(பிற்பகல் 12-20)

இப்பொழுது எதிலும் கலப்படம் இல்லாமல் இல்லை. கலப்படம் இல்லாத பொருள்களே பெரும்பாலும் இல்லை என்று சொல்லிவிடலாம். அந்த அளவிற்குக் கலப்படம் பெருகிவிட்டது. ஆனால் கலப்படத்தைக் கண்டு பிடிக்கின்ற அதிகாரிகள் அந்த அளவிற்கு நடவடிக்கை எடுக்கிறார்களா அல்லது கோர்ட்டுக்கு அனுப்பி தண்டனை பெற்றுத் தருகிறார்களா என்றால அவ்வாறு நடப்பது மிகமிகக் குறைவாகவே இருக்கிறது. இன்றைக்கு இந்த வணிக வரித் துறைக்கு இன்னும் அதிகமான வருமானம் கிடைக்க வேண்டும் என்றால் சில நடவடிக்கைகளை நாம் எடுத்தாக வேண்டும். வரி ஏய்க்கின்ற வியாபாரிகளைக் கண்டுபிடிக்க வேண்டும். சிறிய விவசாயிகள், அல்லது சிறிய வியாபாரிகள் மீது மட்டும் வழக்கு போட்டு, ஒவ்வொரு ஆண்டும்வரி ஏய்ப்பதைத் தடுக்க இத்தனை வழக்குகள் போட்டிருக்கிறோம் என்று கணக்கெடுப்பதை விட, பெரிய வியாபாரிகள், பெரிய ஓட்டல்கள்,

[லரு. பொ. உத்திராபதி] [1985 ஜூன் 24

(பிற்பகல் 12—20)

இப்பேர்பட்டவர்கள் மேல் நடவடிக்கை எடுப்பதன் மூலமாகத்தான் இப்பேர்ப்பட்ட காரியங்களைத் தடுக்க முடியும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லி, எனக்குப் பேச வாய்ப் பளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு மன்றத் துணைத் தலை வர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற வணிக வரி, பொது விற்பனை வரி குறித்த மானியக் கோரிக்கைகளினை வரவேற்று சில கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன். தமிழகத்தினு டைய பெரும்பாலான அரசு செலவுகளை ஈடுகட்டுகிற அளவுக்கு மிகப் பெரிய வருவாயை ஈட்டித் தருகிற அளவுக்கு இருப்பது விற்பனை வரி. இந்த வரி குறித்து, சட்டங்களை நடைமுறைப் படுத்துகிற விதத்தினாலும், அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிற கடுமையான நடவடிக்கைகள் காரணமாகவும் வரி ஏய்ப்பு குறைக் கப்பட்டு இன்று 21 சதவிகிதம் சென்ற ஆண்டைக் காட்டிலும் நாம் கூடுதலான வருமானத்தை இந்தத் துறையின் மூலம், விற்பனை வரியின் மூலம் பெற்றிருக்கிறோம் என்பதை நான் முதலிலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 21 சதவிகிதம் உயர்ந்து விட்டது என்பது ஏதோ ஒரு குற்றத்திற்குரியதாக இருக்கிறது என்று இங்கே எதிர்க்கட்சித் தரப்பிலேயிருந்த உறுப்பினர் சுட்டிக்காட்டினார். இது நாம் எடுத்துக் கொண்டிருக்கிற நிர் வாக நடைமுறையின், சீரமைப்பின் காரணமாகவும் வரி ஏய்ப்பைத் தடுப்பதன் காரணமாகவும் பெற்றிருக்கிற சாத னையே ஒழிய, குறை கூறத்தக்க ஒன்று அல்ல என்பதை நான் முதலிலே சொல்ல விரும்புகிறேன்.

புரட்சித் தலைவர் ஆட்சி ஏற்பட்ட பின்னால், நம்முடைய விற்பனை வரித் துறையானாலும் சரி, மற்ற அரசாங்கத்திற்கு வரி திரட்டுகிற எந்தத் துறையானாலும் சரி, அதிலே இடையிலே இருக்கின்றவர்கள் அரசியல்வாதிகளானாலும் மற்றவர்களானா லும், அதிகாரிகளானாலும் தவறு செய்து விடாமல் பார்த்துக் கொண்டு, தவறுகளைக் குறைத்து, அரசுக்கு உரிய வருமானத் தைப் பெறுகிற முயற்சியில் ஈடுபட்டிருப்பதுதான் இதற்குக் காரணம் என்பதை அவர்கள் மறந்துவிடக் கூடாது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆனால், இந்தத் துறையின் கீழ் விதிக்கப்பட்டிருக்கிற வரிகள், பல இனங்களுக்கு: பல வியாபாரிகளுக்கு, பல இடங்களிலே கன்சூமர்களுக்குப் பளு வாக அமைந்துவிடுகிறது என்று சொல்கிற நேரத்தில் எல்லாம் நாம் அதை மாற்றியமைக்கவோ, குறைக்கவோ முயற்சி எடுத்துக் கொண்டு வந்திருக்கிறோம். பல நேரங்களில் நாம் ஒவ்வொரு பொருளுக்கும் பலமுனை விற்பனை வரி இருந்ததை ஒரு முனை



1985 ஜூன் 24] [திரு. மா. சின்னராசு]

வரியாக ஆக்கியிருக்கிறோம். ஒவ்வொரு நிதி நிலை அறிக்கை
யிலும் பொதுமக்கள் அன்றாடம் பயன்படுத்துகிற சில பொருள்
களுக்கு விற்பனை வரியைக் குறைத்திருக்கிறோம். சில இனங்
களுக்குக் கூடுதலான விற்பனை வரியைப் போட்டிருக்கிறோம்.
இப்படி, அப்போதைக்கப்போது மக்களுக்குத் தேவைப்படுகிற,
மக்களால் எடுத்துச் சொல்லப்படுகிற குறைபாடுகளை, மக்கள்
மிகுதியாக, பளுவாகக் கருதுகிற இனங்களை நான் சீர்செய்து:
பல நேரங்களில் அதற்கான மாற்றங்களையும் செய்து இருக்
கிறோம். ஆகவே, மக்களுக்குத் தேவைப்பட்டதை செய்வதில்
புரட்சித் தலைவர் அரசு தயங்குவதில்லை யென்பதற்காக நான்
இதைச் சுட்டிக்காட்டுகிறேன்.

அதே போல பல உறுப்பினர்கள் இன்றைக்கு வற்புறுத்தி
யதைப் போல, பலமுனை வரி என்பதை, பெரும்பாலும் எல்லாப்
பொருள்களுக்குமே ஒரு முனை வரி என்று மாற்றுவதற்கான
சாத்தியக்கூறு இருக்கிறதா என்று பார்ப்பதுகூட சாலச் சிறந்த
தாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். காரணம், பலமுனை
வரி என்பது வரி ஏய்ப்புக்குக் காரணமாக பல இடங்களில்
இன்னும் அமைந்து கொண்டிருக்கிறது. அதை ஒரு முனை வரி
என்று மாற்றுவதன் மூலம் எந்த இடத்தில் இந்த வரியை நாம்
விதிக்கிறோமோ அந்த இடத்தில் இந்த வரியைக் கண்காணிக்
கின்ற வாய்ப்பு நமக்கு இருக்கிறது. அது மூலக் பொருள்
உற்பத்தியாகிற இடமோ, அல்லது கன்ஸ்யூமர் ப்ரோடக்டாகவோ
மாறி விற்கப்படுகிற இடத்தில், ஏதாவது ஒரு இடத்தில்,
எல்லா பொருட்களுக்கும் ஒருமுனை வரி என்பது காலத்தி
னுடைய அவசியத் தேவை என்பதை நான் வற்புறுத்திக் கூற
விரும்புகிறேன். அந்த வகையிலே உதாரணத்திற்குச் சொல்ல
வேண்டுமென்றால், கடலை எண்ணெய் இருக்கிறது. கடலை
எண்ணெய் உற்பத்தி செய்யப்படுகிற இடத்தில் ஒரு வரியும்,
கடலைக் கொள்முதல் செய்கிற இடத்தில் ஒரு வரியும், அதைத்
தவிர, மில்களிலிருந்து வெளியேறுகிற பொழுது ஒரு வரியும்
என்று 3 வரிகள் அதற்கு விதிக்கப்படுகின்றன. ஆனால், கடை
களிலே விற்கப்படுகிற எண்ணெய்க்கு வரி கிடையாது. ஒன்று
கடலையைக் கொள்முதல் செய்கிற இடத்திலே ஒரு வரியை
விதிக்க வேண்டும் ; அல்லது கடலை எண்ணெய் விற்கிற இடத்
திலே விற்பனை வரி போட வேண்டும். அப்படி இல்லாமல்,
மில்களிலே, பல நிலைகளில், அந்தக் கடலைக்கும், கடலை
எண்ணெய்க்கும் வரி வசூலிப்பது என்று இருக்கிற காரணத்தால்,
நிச்சயமாக நான் கூறுவேன், இப்பொழுது இருக்கிற எண்ணெயில்
மட்டும் ஏய்க்கப்படுகிற வரி இன்னும் நாம் கணக்கிலே எடுத்துக்
கொள்ள முடியாத அளவுக்கு இருந்து வருகிறது என்பதை நான்
சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஏனென்றால், வியாபாரம் செய்கின்றவர்களே, சொல்கிறார்
கள். இன்று இருக்கிற வரி விதிப்பு முறையில் வரி ஏய்க்காமல்
வியாபாரம் செய்ய முடியாது என்று அவர்களே சொல்கிறார்கள்.

அவர்கள் கொடுக்கிற கணக்கின்படி பார்த்தால், கூட, ஒரு முனை வரி என்று பார்க்கிறபோது கூடுதலான வரியைப் பெற வாய்ப்பு இருக்கிறது.

விற்பனை வரி மட்டுமல்ல, அகிரிகல்சர் டிபார்ட்மெண்டின் மூலம் கிடைக்கிற விவசாய விளை பொருள்களுக்கு செஸ் கிடைக்கிறது. மாநில தீர்வை இருக்கிறது இப்படி எல்லாம் சேர்ந்து கிட்டத்தட்ட ஒரு கிலோ எண்ணெய் 30 ரூபாய் என்றால் வரி எல்லாம் சேர்ந்து 50 ரூபாய் ஆகிறது. 50 சதவீதம் விலை உயருவதற்கு வரிதான் காரணமாக இருக்கிறது. இதை எல்லாம் எண்ணிப் பார்த்து அன்றாடம் மக்களுக்குத் தேவைப்படுகிற உணவுப் பொருள்கள் மீதாவது ஒருமுனை விற்பனை வரி விதிப்பு முறையைக் கொண்டுவர வேண்டும்.

அன்றாடம் மக்கள் பயன்படுத்தும் பொருள்களுக்கு வரியைக் குறைக்க வேண்டும் அல்லது ஒருமுனை விற்பனை வரி விதிக்க வேண்டும் என்று மக்களிடமிருந்து கோரிக்கை வந்து, அதைப் பரிசீலனை செய்து மாற்றுவது என்பதைவிட்டு, அன்றாடம் மக்கள் அதிகமாகப் பயன்படுத்தும் பொருள்கள் யாவை, எந்தப் பொருளுக்கு நிவாரணம் தேவைப்படுகிறது, எந்தப் பொருளின் விலையைக் குறைத்தால், வரியைக் குறைத்தால் மக்களுக்கு பாதுகாப்பாக இருக்கும் என்பதைக் கண்டறிந்து உணவுப் பொருள்களின் விலை ஏறாமல் இருக்கும் வகையில் வரிவிதிப்பு முறையை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்த வகையிலே ஒருமுனை விற்பனை வரி விதிக்கப்பட வேண்டிய பொருள்கள் எவை, எவை, ஒருமுனை விற்பனை வரியாக மாற்றும்போது அரசுக்கு வருமானம் இழப்பு ஏற்படுமா என்பதை ஆராய்ந்து அரசுக்கு பரிந்துரை செய்ய ஒரு கமிஷனை அரசு அமைக்கலாம். ஒவ்வொரு பண்டமாக பரிசீலனை செய்து பார்ப்பதற்குப் பதிலாக ஒட்டுமொத்தமாக ஒருமுனை விற்பனை வரி விதிக்கத் தேவையான மாற்றத்தை ஏற்படுத்தித்தர அந்தக் கமிஷன் ஆய்வு செய்யலாம். இதுவரை பல ஆண்டுகளாக நடைமுறையில் இருக்கிற விற்பனை வரி விதிப்பு முறையை வரி விதிப்பு முறையை மாற்றுவதனால் ஏற்படும் சாதக, பாதகங்களை அந்தக் கமிஷன் ஆராயலாம். வரி ஏய்ப்புகளைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகளைக் கண்டறியலாம். இன்றைய நிலையிலே இருக்கிற சாதக பாதகங்களையும் அவர்கள் ஆராயலாம். இந்தப் பணி இன்றைக்கு மிக மிகத் தேவை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த வகையிலே இப்போது இருக்கிற விற்பனை வரி விதிப்பு முறையை சீர் செய்ய ஆய்வு செய்து, நடைமுறையில் கொண்டு வர வேண்டிய மாற்றங்களை ஆராய்ந்து பரிந்துரை செய்யக் கூடிய வகையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு கமிஷனை





அரசின் மூலம் நியமிப்பது மிகவும் அவசியம் என்று நான் கருதுகிறேன். அதன் மூலம் மக்கள் மத்தியிலே, வியாபாரிகளிடையே ஏற்படுகிற இடர்ப்பாடுகளை ஆராய்ந்து, இப்போது இருக்கிற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக நம்முடைய அண்டை மாநிலங்களில் விற்
பனை வரியில் இருக்கின்ற வேறுபாடுகள் காரணமாக நமக்கு
பலவகைகளில் இழப்பு இருக்கிறது என்பதையும் நாம் உணர்ந்து
கொள்ள வேண்டும். உதாரணமாக காகிதம் இருக்கிறது. இங்கே
இருக்கிற காகித ஆலையிலிருந்து வெளியே செல்கிற காகிதத்
திற்கு 8 சதவீதம் வரி விதிக்கிறோம். ஆனால் கர்நாடகத்தில்
4 சதவீதம்தான் வரி இருக்கிறது. அதனால் பெங்களூருக்குப்
போய் அல்லது ஹோசூருக்குப் பக்கத்திலே சுமார் 5 கிலோ
மீட்டர் தூரம் போய் 4 சதவீதம் விற்பனை வரியில் காகிதம்
கொள்முதல் செய்யப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. காரணம்
இங்கே வாங்குவதைவிட பெங்களூரில் வாங்குவது விலை குறை
வாக இருக்கிறது. அதனால் பெங்களூரில் கொள்முதல் செய்து
விற்கக்கூடிய நிலை இருக்கிறது. இதைத் தவிர்க்க அண்டை
மாநிலங்களில் போடுகிற விற்பனை வரியைக் கருத்திற்கொண்டு,
நம்முடைய மாநிலத்தில் அந்த வியாபாரம் கெடாத அளவுக்கு
பாதுகாக்க வேண்டிய அவசியத்தின் காரணமாக கேரளத்தில்,
கர்நாடகத்தில், ஆந்திரத்தில் எப்படி இருக்கிறதோ அந்தவகை
யில் அமைக்க வேண்டும். உதாரணத்திற்கு இதைச் சொன்னேன்.
இதைப்போன்று பல பொருள்கள் இருக்கின்றன. இங்கே இருக்
கின்ற வரி விதிப்பின் காரணமாக அண்டை மாநிலங்களில் போய்
விற்பனை செய்வது, அல்லது கொள்முதல் செய்வது என்ற சூழ்
நிலை இருக்கிறது. இதை ஆராய்ந்து பார்த்து, தகுந்த நட
வடிக்கை எடுக்க வேண்டும்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் கேரளத்தில்
தொழில் தகராறு வந்தபோது டீ, காப்பி போன்றவைகளை
ஏலம் விடுவதை கோவைக்கு மாற்றினார்கள். அதன் காரணமாக
நாம் பல இலட்சக்கணக்கான ரூபாயைப் பெற்றுக்கொண்டிருக்
கிறோம். கோவைக்கு அது மாற்றப்பட்டதால், மீண்டும் கேரளத்
திற்குக் கொண்டுசெல்ல வேண்டுமென்று கருதி, அங்கே விற்பனை
வரியைக் குறைத்தார்கள். கிட்டத்தட்ட நூறு சதவீதம் விற்பனை
வரியைக் குறைத்து, மீண்டும் அந்த வியாபாரத்தை கேரளத்திற்
குக் கொண்டுசெல்ல முயற்சி செய்தார்கள். நம்முடைய மாண்பு
மிகு முதலமைச்சர் அவர்கள் அதை உணர்ந்துகொண்டு இங்கேயும்
வரியைக் குறைத்து, கோவையிலேயே அந்த வியாபாரம் நிலைத்து
இருக்கச் செய்தார்கள். அதன் காரணமாக நாம் நல்லமுறையில்
அதிகமான விற்பனை வரியைப் பெற்றுவருகிறோம். இப்படி
விற்பனை வரிக்கான கூடுதல் வாய்ப்பை கண்டறிந்து, வருமானத்
தைப் பெருக்க தேவையான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

ஏதோ அந்த அந்த நேரத்தில் எழுகிற பிரச்சனையை ஆராய்ந்து பார்த்து, முடிவு எடுப்பது என்று இல்லாமல் ஒரு நிரந்தரமான தீர்வைக் காணுகின்ற வகையில் ஆராய்ந்து பரிந்துரை செய்யத்தக்க வகையில் ஒரு கமிஷனை அமைத்தால் அது நல்ல வாய்ப்பாக இருக்கும்; அந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

அதே போல் இன்று மைய ஆயத் தீர்வை, கூடுதல் ஆயத் தீர்வை என்று பலரும் பேசினார்கள். இதைப் பொறுத்தவரையில் அடிக்கடி மைய அரசு நம்மை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றது. சேல்ஸ் டேக்ஸை மாற்றுவது என்கிற எண்ணம் என்றுமே அவர்களுக்கு இல்லாமல் போகிற அளவுக்கு நாம் நம்முடைய கடுமையான எதிர்ப்பை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கெனவே தெரிவித்த அடிப்படையில் அவர்கள் கைவிட்டு விட்டிருந்தாலும் கூட சேல்ஸ் டாக்ஸ் என்பதை மாற்றுகின்ற முயற்சியில் அவர்கள் ஈடுபடக்கூடாது என்பதை நாம் வலியுறுத்தியாக வேண்டும். தொடர்ந்து இந்த முயற்சியில் சம்பந்தப்பட்ட துறையினர் ஈடுபடுகிறபோது நாம் அதைத் தடுப்பதற்குரிய நிலையிலே என்றும் தொடர்ந்து இருக்க வேண்டும் என்கிற என்னுடைய விருப்பத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

1982 அரசியலமைப்புச் சட்ட மாற்றத்தின் காரணமாக நாம் எதிர்பார்க்கின்ற அந்த மாற்றத்தை இன்னும் மைய அரசு சட்டமாக்கித் தரவில்லை. ஓரளவுக்கு விற்பனை வரியைக் கூடுதலாக்கித் தரக்கூடிய அந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்காக நாம் வலியுறுத்தவேண்டும். கொள்கைக் குறிப்பிலே சுட்டிக் காட்டியிருப்பதைப்போல அரசியலமைப்புச் சட்டம் 1982 மாநிலங்களிடையே ஒப்படை சரக்கு போக்குவரத்துக்கான கூடுதல் வரியை விதித்தால் அதன் மூலம் பெரும்பகுதி வருவாய் வருவதற்கான வாய்ப்பு இருக்கின்றது. எனவே மிக அவசியமான, தேவையான இந்தச் சட்டத்தை, மாநிலங்களுக்கிடையேயான சரக்குப் போக்குவரத்து வரியை விதிப்பதற்கான சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் மத்திய அரசு என்று இந்த மன்றத்தின் மூலமாக நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

அடுத்து கேளிக்கை வரி. எண்டர்டெய்ன்மென்ட் டாக்ஸ் என்ற வகையில் 52 சதவீதம் அளவில் சினிமா தியேட்டர்களிலிருந்து அரசுக்கு வருவாயாகப் பெற்றுக்கொண்டிருக்கிறோம். மிகப்பெரிய ஒரு வருமானத்தை நமக்குத் தொடர்ந்து தந்து கொண்டிருக்கின்ற ஒரு இனமாகும் இது. ஆனால் வரியையும் கட்டிவிட்டு, இந்த சினிமா தியேட்டர்களை ஓரளவுக்காவது நன்கு நிர்வகித்து வர முடியுமா என்ற வகையில் ஒரு அச்சம் சினிமா தியேட்டர் ஓனர்களிடம் வந்திருக்கின்றது. டி.வி., வீடியோ போன்றவை வந்ததன் காரணத்தால் முதலுக்குரிய வட்டி கூட





புதிதாகக் கட்டப்பட்டிருக்கின்ற சினிமா தியேட்டர்களுக்கு வர
வில்லை என்ற சூழ்நிலை இருக்கின்றது. இப்படி எண்டர்டெய்ன்
மென்ட் டாக்ஸ் என்று சொல்லக்கூடியது மிகப்பெரிய வருமான
மாக இருந்தாலும் அந்தத் தொழில் நசித்துப் போகக்கூடிய
அளவுக்கு ஒரு மந்தமான நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

பட உற்பத்தியாளர்களுக்கும், விநியோகஸ்தர்களுக்கும்
பெரும் இலாபம் இருந்தாலும் கூட தியேட்டர் வைத்திருப்பவர்
களுக்கு இன்று பெரும் நஷ்டம் ஏற்படுகின்ற அளவுக்கு அவர்
களை எக்ஸ்ப்ளாய்ட் செய்கிறார்கள். எனவே அவர்களுக்கு ஓரள
வுக்கு நிவாரணம் கொடுக்க வேண்டிய அவசியம் பற்றி மாண்பு
மிகு அமைச்சர் அவர்களும், துறையும் ஆராய வேண்டும் என்று
நான் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வளவு பெரிய வருமானத்தை நமக்கு ஈட்டித் தருகின்ற
விற்பனை வரித்துறையில் சில காலங்களில் பல தொழில்களில்
இடர்பாடுகள் ஏற்படுகின்ற நேரத்தில், சங்கடங்கள் ஏற்படுகின்ற
நேரத்தில் அவர்கள் மேல்முறையீட்டுக்காக வருகிறார்கள். உதா
ரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்றால் கோவை போன்ற
தொழில் நகரங்களில் நூற்பாலைகள் இருக்கின்றன. நூற்பாலை
களைப் பொறுத்தவரையில் ப்ளக்சுவேஷன் இருக்கும். ஒவ்
வொரு முறையும் அவற்றுக்கு வருமானம் கூடுவதும், குறை
வதும் என்ற வகையில் பல காரணங்களால் ஏற்பட்டு விடுகின்
றது. நல்ல இலாபத்தை ஈட்டுகின்ற நூற்பாலைகள் கூட சில
காலங்களில் முழுவதுமாக மூடப்படுகின்ற நிலைக்கு வந்துவிடு
கின்றன பல காரணங்களால். அந்த நேரங்களில் ஒட்டுமொத்த
மாக விற்பனை வரியினை அவர்களிடத்திலே நிர்பந்திக்கின்ற
போது அந்த நூற்பாலையையே முழுவதுமாக மூடிவிடவேண்டிய
நிலை வந்துவிடுகின்றது பல காரணங்களினால். இது சாதாரண
மாக எல்லா நேரங்களிலும் நடைபெறக்கூடிய நிகழ்ச்சி அல்ல.
என்றைக்காவது ஒருநாள் இந்த விற்பனை வரி கட்டப்படவேண்
டும் என்ற காரணத்தால் தொழிலாளிக்குக் கூலி கூட கொடுக்க
முடியாத நிலையில் அந்த நூற்பாலைகள் இருக்கின்றன என்கிற
போது இதனை, விற்பனை, விதிக்கக் கூடிய ஒரு விஷயமாகக்
கருதாமல் இது ஒரு நூற்பாலையினுடைய பிரச்சினை அதிலே
பணியாற்றுகின்ற 500 தொழிலாளர்களுடைய பிரச்சினை, இது
சமுதாயப் பிரச்சினை, எனவே அரசாங்கத்திற்கு அதைக் காப்
பாற்றுகின்ற கடமையும் பொறுப்பும் உண்டு என்பதை மனத்தில்
கொண்டு அதற்கு ஒரு நிவாரணம் தரவேண்டும்.

நான் சொல்லுகின்ற நிவாரணம், வரியைத் தள்ளிவிடவேண்
டும் என்ற நிவாரணம் அல்ல. அரசோ, அமைச்சர்களோ
பார்த்து இதற்கு ஒரு விதிவிலக்கு அளித்து ஒரு மூன்று மாத காலம்
அல்லது 6 மாத காலம் வரவேண்டிய வரியை ஒத்திவைப்பது
என்ற வகையில் ஏற்பாடு செய்வது சட்டத்திற்கோ அல்லது வரு
மானத்தை ஈட்டவேண்டும் என்று சொல்கின்ற எண்ணத்துக்கோ

விரோதமானதல்ல. ஆனால் தொழிற்சாலை மூடப்படுகின்றது
என்றால் அவ்வாறு மூடப்படுவதன் காரணத்தால், 400, 500
தொழிலாளர்கள் வெளியே தெருவில் நின்றால் அவர்களைக்
காப்பாற்றவேண்டிய பொறுப்பும், அந்த நூற்பாலைக்கு நாம்
பல வகையில் உதவி செய்து பணத்தைக் கொடுத்து அதை நடத்து
கின்ற பொறுப்பும் அரசாங்கத்திற்குத்தான் திரும்பி வரும். எனவே
அதைக் கருத்தில் கொண்டு இதுபோன்ற சில குறிப்பிட்ட இடங்
களில் இருந்து வருகின்ற அப்பீல்களைப் பொறுத்தவரையில்
வெறும் சட்டத்தை பார்க்காமல் இதன் காரணத்தால் நம்முடைய
வருமானம் குறைந்துவிடுகின்றது என்று அதிகாரிகள் எண்ணாமல்
அதில் இருக்கின்ற நியாயத்தைப் பார்க்கவேண்டும். இதை நான்
இவ்வளவு தூரம் குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம் நானே
ஒரு நூற்பாலைப் பிரச்சினையையும், நலிவையும் பற்றிச் சொல்லி
யிருக்கிறேன். எனவே, அதற்கு நிரந்தரமான நிவாரணம் தேவை
யில்லை; தற்காலிகமாக அவற்றை ஒத்தி வைத்து சலுகை வழங்க
வேண்டும் என்று கேட்டு அதற்கு பல அமைச்சர்களும் ஒப்புக்
கொண்டதற்குப் பின்னாலும் அதிகாரிகள் அதை இம்ப்ளிமெண்ட்
செய்ய ஒத்துக்கொண்டு நிவாரணம் கொடுக்க மறுக்கிறார்கள்;
மறுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே சட்டத்திலே என்ன வகை இருந்தாலும் கூட மக்களின்
ஏகோபித்த கருத்தை, எண்ணத்தை ஏற்றுக் கொண்டு, ஜனநாய
கத்தில் ஆட்சி நடத்துகின்ற நமக்கு எல்லாப் பக்கத்தில் இருக்கிற
மக்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டிய
கடமை இருக்கிறது என்பதை உணர்ந்து, அந்த வகையிலே அவர்
களுக்கு ஏற்பட்டிருக்கிற நிர்ப்பந்தத்தின் காரணமாக, அவர்கள்
நிவாரணம் வேண்டும் என்று சொல்லுகிறபோது அதிகாரிகள்
அதிகாரம் செலுத்துபவர்களாக மட்டும் இல்லாமல், ஜூடிசியல்
அத்தாரிட்டியைப் போல, நீதிபதியைப் போல, சில சமயங்களில்
செயல்படவும் கடமைப்பட்டிருக்கிறார்கள். அரசு ஒத்துக் கொண்
டிருக்கிறபோது, அதை மறுப்பதற்கு அந்தத் துறையினுடைய
அதிகாரிக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் அதிகாரம் இருக்
காது, இருக்கக் கூடாது என்பதை இந்த நேரத்தில் பணிவன்
போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே அந்தத் துறை எந்த தீர்மானத்தை வைத்திருந்தாலும்,
மக்களுடைய அன்றாடக் குறைகளைத் தெரிந்து அவைகளைப்
போக்குகின்ற வகையில் செயல்பட வேண்டும். இந்தத்துறையின்
பெரும்பகுதி வருமானத்தை அந்த மக்கள் தான் வரியாகச்
செலுத்துகிறார்கள். வரி செலுத்துகிற அந்தப் பொது மக்கள்
இடர்பாடுகளுக்கு ஆளாகாமல் தொடர்ந்து அவர்களுடைய
தொழிலைச் செய்ய அவர்களை வேகப்படுத்துவதன் மூலமும்
தொழில் உற்பத்தியை அதிகப்படுத்துவதன் மூலமும், அரசு
வருமானத்தை கூடுதலாகப் பெற முடியும். எப்படி வரி ஏய்ப்பு
செய்வதைத் தடுப்பதன் மூலம் வருமானம் அதிகப்படுகிறதோ
அதைப்போல, அதிக அளவில் தொழிலை அபிவிருத்தி செய்கிற





வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதன் மூலமும் இந்தத் துறை அதிக
மாக வருமானத்தை வரியாகப் பெற முடியும் என்ற கருத்தை
நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து என்னுடைய மாவட்டத்தில் கோவையில் உள்ள
செக்போஸ்டுகளில் உள்ள குறைபாடுகளைப் பற்றிச் சொல்ல
விரும்புகிறேன். கேரளாவில் உள்ள பாலக்காட்டிற்கு செல்லுகின்ற
போக்குவரத்துகளில் பெரும்பாலும் உருளையாறு வழியாகத்தான்
போகிறது. அங்கே நம்முடைய சோதனைச் சாவடி ஒன்று இருக்கி
றது. அங்கே எப்பொழுது பார்த்தாலும் எந்த நேரத்திலும், காலை
யிலோ அல்லது மாலையிலோ, 200-க்கு குறையாத வாகனங்கள்
வரிசையாக காத்துக்கொண்டிருக்கும் நிலைமையைப் பார்க்கலாம்.
அதற்காக அங்கு இருந்த வியாபாரிகள் லாரி ஓனர்கள் போன்றவர்
கள் உண்ணாவிரதம் கூட இருந்தார்கள். அவர்கள் வரி செலுத்து
கிறார்கள். ஆனால், செக்போஸ்டிலே தேவையில்லாத வகையில்
காலதாமதம் ஏற்படுவதை அவர்கள் எதிர்க்கிறார்கள். வெகு
விரைவாக செக் செய்து கொண்டு, கட்ட வேண்டிய பணத்தை
கட்டி, உடனடியாக போவதற்குரிய வகையில் அந்தப் பகுதியில்
இன்னொரு செக்போஸ்டையோ அல்லது கூடுதலாக அதிகாரி
களைப் போட்டோ, அந்தப் பணிகளை விரைவாகச் செய்து தர
வேண்டும், காலதாமதத்தை தவிர்க்க வேண்டும் என்பதுதான்
அவர்களுடைய கோரிக்கை. ஆனால் அதைக்கூட சரியாகப் பரி
சீலிக்காத காரணத்தால், அங்கே போக்குவரத்தில் அன்றாடம்
நெரிசல்—டிராபிக் கன்ஜெக்ஷன் ஏற்படுகிறது. ஆகவே,
அதைச் சமாளிக்க கூடுதலாக அங்கே பணியாளர்களை அமர்த்தி,
போக்கு வரத்திற்கு இடைஞ்சல் இல்லாமல் செய்வதற்கு, மாண்பு
மிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்து தர வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக அவிநாசி ரோட்டிலே இருக்கிற கருமத்தான்
பட்டி செக்போஸ்ட். அந்த செக்போஸ்டில் சோதனை முடிகிற
வரை லாரிகள் ரோட்டிலேதான் நிற்க வேண்டிய நிலைமை இருக்
கிறது. அங்கேயும் நிறைய டிராபிக் ஜாம். இந்தத் துறையில்
இதில் அதிகமான வருமானம் வருகிற காரணத்தால், இத்தகைய
செக் போஸ்டுகளுக்கு பக்கத்தில் இருக்கிற நிலத்தை 2 ஏக்கர்,
3 ஏக்கர் ஆர்ஜிதம் செய்து, அந்தப் பகுதியில் சோதனை வேலை
முடிகிற வரையில், சோதனை இட வேண்டிய லாரிகளை அல்லது
வாகனங்களை மட்டும் நிறுத்துவதற்குரிய வகையில் ஒரு வாய்ப்பை
ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். ஏனென்றால் இது போன்ற மிக
முக்கியமான சோதனைச் சாவடிகளில் அதிக அளவிற்கு லாரி
களும் மற்றவைகளும் அங்கேயே வரிசையாக நிற்க வேண்டிய
அவசியம் ஏற்படுகிறது. ஆகவே அது போன்ற இடங்களில்
எல்லாம் நில ஆர்ஜிதம் செய்து, அங்கே வருகின்ற வாகனங்கள்
நிற்பதற்கும், குடிதண்ணீர் வசதி போன்ற அத்தியாவசியமான
சில வசதிகளைச் செய்து தருவதற்கும் அரசு முன்வர வேண்டும்.

[திரு. மா. சின்னராசு] [1985 ஜூன் 24

ஏனென்றால் அங்கே லாரிகளில் வருபவர்கள் முதலாளிகள்
அல்ல. சாதாரணத் தொழிலாளர்கள், டிரைவர்கள், கிளீனர்கள்
ஆகியவர்கள் தாம் வருகிறார்கள். அவர்கள் பொருள்களை ஏற்
றிக் கொண்டு வருகிற ஒரே காரணத்திற்காக அவர்களை பல
மணி நேரம் எந்த வசதி வாய்ப்பும் இல்லாமல் காக்க வைக்கக்
கூடிய நிலைமை சரியல்ல. ஆகவே இதை மனிதாபிமானக் கண்
ணோட்டத்தோடு நாம் இதைச் செய்துக் கொடுக்க வேண்டும்
என்று கேட்டுக் கொண்டு, விற்பனை வரி சம்பந்தமாக வரி விதிப்பு
முறைகளை தயாரிப்பதற்கு ஒரு கமிஷன் அல்லது ஒரு கமிட்டி
அமைக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி மாண்புமிகு அமைச்
சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மானியக் கோரிக்
கையை வரவேற்று முடிக்கிறேன். வணக்கம்.

•

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவையி
னுடைய் மாற்றுத் தலைவர் அவர்களே, பொது விற்பனை வரியும்,
ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற மானியத்தின்
கீழ் நான் சார்ந்திருக்கிற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்
பிலே எனக்கு முன்னாலே உரையாற்றிய எங்களுடைய கட்சியின்
மாண்புமிகு உறுப்பினர் திரு. தெய்வநாயகம் அவர்கள் சொல்லிய
கருத்துக்களை ஆதரித்து, மற்றும் காங்கிரஸ் கட்சியின் சார்பாக
இம்மாமன்றத்திலே கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்
களையும் வலியுறுத்தி என்னுடைய ஒரு சில கருத்துக்களை நான்
கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களாலே கொடுக்கப்பட்டிருக்கிற
இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே 5 ஆண்டுகளினுடைய வரு
மான விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த வணிக வரி
என்பது இந்தியாவிலேயே தமிழகத்திலேதான், முதன் முதலாக
காங்கிரஸ் கட்சி ஆட்சியிலே இருந்த காலத்திலே, மூதறிஞர்
இராஜாஜி அவர்களாலே மதுவிலக்கை அமல் படுத்திய நேரத்திலே
மாநிலத்திற்கு ஏற்பட்ட வருவாய் இழப்பை ஈடு செய்கின்ற விதத்
திலே முதன் முறையாக அப்பொழுது இருந்த சென்னை ராஜ்யத்
திலே கொண்டு வரப்பட்டது என்பதை நாம் நன்றாக அறிவோம்.
இன்றைக்குக் கூட இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில், மெட்
ராஸ் ஜெனரல் சேல்ஸ் டாக்ஸ் என்றுதான் இது சொல்லப்படு
கிறதே தவிர, வேறு பெயரால் அழைக்கப்படுவதில்லை என்பதை
இந்த நேரத்தில் நாம் எண்ணிப் பார்க்கிறோம். எனக்கு முன்னால்
பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல
தமிழக அரசுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக, காமதேனுவாக
இன்றையதினம் இதற்கு முன்னாலே இருந்த ஆண்டுகளைப்
போல இருந்து கொண்டிருக்கிறது. தமிழக அரசினுடைய இந்த
ஆண்டு வருமானம் 2,368 கோடி ரூபாயாக இருக்குமென்பதை
எண்ணிப் பார்க்கிறபோது, வணிக வரிகள், ஏனைய வரிகள் மூல
மாக ஆயிரம் கோடிக்கு அதிகமாகவே வருமானம் வருமென்பதை
எண்ணிப் பார்க்கிறபோது, அரசிற்கு கிடைக்கிற வருவாயில்



1985 ஜூன் 24] [திரு. என். எஸ். வி. சித்தன்]

40-லிருந்து 45 சத விதம் இந்தத் துறை மூலமாக கிடைக்கிறது
என்பதை நாம் மகிழ்ச்சியோடு வரவேற்கிறோம். இந்த ஆயிரம்
கோடி ரூபாயை அரசிற்கு ஈட்டிக் கொடுக்கிற அதிகாரிகளை நான்
பாராட்டுகிறேன். இந்த அரசு பல்வேறு சமுதாயப் பணிகளை
நிறைவேற்றுவதற்கு உதவியாக நேர்மையான முறையில் ஒழுங்
காக வரிகளைச் செலுத்துகிற வணிகர்களையும் பாராட்டுகிறேன்.

(ஈற்பகல் 12-40)

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற புள்ளி விவ
ரங்களைப் பார்க்கிறபோது 5 ஆண்டுக் காலத்திலே கிட்டத்தட்ட
100 சதவிதம் வரி அதிகமாகி இருக்கிறது. அந்த முறையில் இது
வளர்ந்து வருகிற வரவேற்கத்தக்க இனமாக இருந்து வருகிறது.
இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே இதற்கு முன்னாலே
இருந்த வரி விதங்கலளப் பற்றியெல்லாம் குறிப்பு கொடுத்திருக்கி
றார்கள். 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் கீழ்
1984-85-ம் ஆண்டிற்கு, 71,896 லட்சம் ரூபாய் கிடைத்திருக்
கிறது. 1984-85-ம் ஆண்டில் ரூ. 13,056 இலட்சம் அதிகரித்துள்
ளது. அதிகரித்த வருவாய் 22 சதவிதமாகும் என்ற கணக்கு
கொடுக்கப்பட்டிருக்கிறது.

அதே போலவே, மத்திய விற்பனை வரிச் சட்டத்தில்
1984—85 ஆம் ஆண்டில் கிடைத்த மொத்த வருவாய் ரூ.
13,569 லட்சமாகும். கடந்த ஆண்டோடு ஒப்பிட்டுப் பார்க்
கையில் 1,747 லட்சம் ரூபாய் வருவாய் அதிகரித்துள்ளது. அதி
கரித்த வருவாய் 15 சதவிதமாகும் என்று குறிப்பு கொடுக்கப்
பட்டிருக்கிறது.

அதே போலவே, கேளிக்கை வரிச் சட்டத்தில் கீழ் 562
லட்சம் ரூபாய் வருவாய் அதிகரித்துள்ளது. அதிகரித்த வரு
வாய் சுமார் 14 சதவிதம் என்று குறிப்பு கொடுக்கப்பட்டிருக்
கிறது.

ஆனால் அதேநேரத்தில் தமிழ் நாடு 1935 ஆம் ஆண்டு
குதிரைப் பந்தயங்கள் வரிச் சட்டத்தின் கீழ் இந்த ஆண்டு
கிடைத்திருக்கிற வருவாய் 1984—85 ஆம் ஆண்டில் 392 லட்
சம் ரூபாய் என்று கணக்குப் போட்டு, கடந்த ஆண்டை விட
14 லட்சம் ரூபாய் அதிகரித்திருக்கிறது, அதிகரித்த வருவாய்
4 சதவிதமென்று ஒரு கணக்கைப் போட்டு இந்த இலாக்கா
தனக்குத்தானே ஒரு சான்று போட்டுக்கொள்கிறது. சென்ற
ஆண்டை விட இந்த ஆண்டில் 4 சதவிதம் உயர்த்தி இருக்
கிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள். அந்தக் கணக்கை
கொஞ்சம் பின்னாலே பார்ப்போமானால் 1980—81 ஆம் ஆண்
டில் 406 லட்சம் ரூபாய் இந்தக் குதிரைப் பந்தய வரிச் சட்
டத்தின் கீழ் கிடைத்திருக்கிறது. 1981—82-ல் 454.68 லட்சம்
வருவாய் கிடைத்திருக்கிறது. 1982—83 ஆம் ஆண்டில் 450.88
லட்சம் ரூபாய் வருவாய் கிடைத்திருக்கிறது. இப்படி கொஞ்
சம் கொஞ்சமாக உயர்ந்து வந்த வரி 1983—84-ல், 1984—85
-ல் ஏன் குறைந்தது என்பதற்கான காரணத்தைச் சொல்லி
யிருப்பார்களானால் பாராட்டி இருக்கலாம்.

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1985 ஜூன் 24

நான் இந்த மாமன்றத்தில் நிதிநிலை அறிக்கை விவாதத்தில் நிறைவுச் சொற்பொழிவு ஆற்றுகிற போது சொன்னேன். குதிரைப் பந்தயத்தின் மூலமாக தமிழகத்தில் பல முறைகேடுகள் நடைபெறுகின்றன. அரசுக்கு முறையாக வரவேண்டிய பலகோடி ரூபாய் வருவாய் இன்றைக்கு மறைக்கப்படுகிறது அல்லது மறுக்கப்படுகிறது. எனவே முறையான விசாரணை வேண்டும். எங்களுடைய கொள்கைகுதிரைப் பந்தயத்தை அறவே ஒழிக்க வேண்டும். அதன் மூலமாக சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கிற மக்கள் பாழடிக்கப்படுகிறார்கள். எனவே குதிரைப் பந்தயத்தை ஒழிக்க வேண்டும். அந்தக் கொள்கை இருந்தாலும் ஒழிக்கப்படுகிற வரையில் அதிலிருந்து வருகிற வருமானம் அரசுக்கு ஒழுங்காக வர வேண்டும் என்று பேசியிருக்கிறேன். அதே வேளையில் இந்த இனங்களில் வருமானம் ஏன் குறைந்திருக்கின்றது என்பதற்கான காரணத்தை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒரு வேளை அது முறையாகப் பேணப்படவில்லையா? மற்ற இனங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிற போது இதற்கு 8 கோடி ரூபாயாக வந்திருக்க வேண்டும். ஆனால் வருமானம் குறைந்திருக்கிறது. காரணம் என்னவென்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலில் தெரிவிப்பார்கள் என்று கருதுகிறேன்.

அதே போலவே வணிக வரித் துறைப் பற்றி நம்முடைய கம்ப்ட்ரோலர் அண்ட் ஆடிட்டர் ஜெனரல் 1982–83 அறிக்கையில் சொல்கிறபோது ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள்.

I quoto......due to ommission torevise within the period of limitation the assessment of dealers or to submit proposals for suo-moto revision of tax liviable, tax amounting to Rs. 1475058 was lost to G. vernment.

என்று போட்டிருக்கிறார்கள். இது 1982–83 ஆம் ஆண்டறிக்கையிலே 8-வது பக்கத்திலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இப்படி தவறாக வரி விதித்த காரணத்தாலே அல்லது உரிய காலத்தி லே வரியை விதிக்காத காரணத்தாலே 14 லட்சத்து, 75 ஆயிரம் ரூபாய்க்கு மேலே இழப்பு ஏற்பட்டு இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதற்கு என்ன காரணம்? இது அதி காரிகளுடைய அசட்டையினாலோ, அல்லது கவனக் குறை வாலோ இருந்தால், அப்படி அரசாங்கத்திற்கு இழப்பு ஏற்படு வதற்கு காரணமாக இருந்தவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? வருகின்ற காலங்களிலே இதுமாதிரி யான இழப்பு ஏற்படாமல் இருப்பதறகு என்ன பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும் என்று நான் உங்கள் மூலமாக கேட்டுக்கொள்கிறேன்.



1985 ஜூன் 24] [திரு. என். எஸ். வி. சித்தன்]

இதே ஆடிட்டர் ஜெனரலினுடைய அறிக்கையிலே, அப் பென்டிக்ஸ் 3-லே சொல்கிற நேரத்திலே, 'அமவுன்ட் பெண் டிங் கலக்சன்' என்ற முதல் இனத்திலே இந்தத் தொகை எவ்வளவு என்று குறிப்பிடப்படவில்லை. ஆனால் அதேநேரத் தில் 'நெட் கலக்சன் டூரிங் தி இயர்' என்று போடுகின்றபோது 653.82 கோடி ரூபாய் என்று போட்டிருக்கிறார்கள். ஒரு வேலை எவ்வளவு தூரம் இன்னும் நமக்கு வர வேண்டும் என்பதை அவர்கள் காட்டுவார்களானால், எந்த அளவிற்கு வசூலித்து இருக்கிறார்கள் என்பதைப் பார்த்து நாம் பாராட்டு தெரிவிக்கலாம். இவ்வளவு ரூபாய் வசூல் ஆகாமல் நிலுவையில் இருக்கிறது, அதற்கு இன்ன நடவடிக்கை எடுக்க லாம் என்பதைப் பற்றிச் சொல்லலாம். அது இந்த அறிக்கை யிலே 1982–83 ஆம் ஆண்டிலே இல்லை.

அதைப் போலவே 1983–84 ஆம் ஆண்டு அறிக்கையிலே இல்லை என்பதை நான் அறிகிறேன். இதே 1983–84 ஆம் ஆண்டில், ஆடிட்டர் ஜெனரலினுடைய அறிக்கையிலே 8-வது பக்கத்திலே ரிசல்ட்ஸ் ஆப் ஆடிட் என்று போட்டு, ஏறக் குறைய 222.78 லட்சம் அரசாங்கத்திற்கு, தவறாக வரி விதித்த கொள்கையாலோ, அல்லது வரி விதிக்காத காரணத் தாலோ, அபராத விதிப்பு, இன்னும், பல்வேறு தலைப்புகளி லே, அரசாங்கத்திற்கு இழப்பு ஏறபட்டு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இவைகள் எல்லாம் தவிர்க்கப்பட வேண்டும், தடுத்து நிறுத்தப்படவேண்டும். அதற்கான நட வடிக்கைகளை எந்த அளவிறகு இந்தத் துறை எடுத்து இருக் கிறது என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே இந்த அறிக்கையிலே 32-வது பக்கத்தில் ஒரு குறிப்பிட்ட ஊரைச் சுட்டிக்காட்டி, 2,15,236 ரூபாய் அதிகாரிகளுடைய தவறான நடவடிக்கை காரணமாக இழப்பு ஏற்பட்டு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அறிக்கையிலே சொல்லியிருக்கிறது குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

I quote : 'On the mistake being pointed out (February 1980) in audit, the Department stated (March 1984) that revision of assessment was barred by limitation'

ஆகவே காலம்கடந்த காரணத்தாலே, 2,15,236 ரூபாயை வசூலிக்க முடியவில்லை என்று காரணம் காட்டியிருக்கிறார்கள். இதற்காக என்ன நடவடிக்கையை அரசு எடுத்து இருக்கிறது என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். வருங் காலத்திலே இதைத் தவிர்க்கிற வகையிலே, அரசுக்குச் சொந்த மான வரித் தொகை இழப்பு ஆகாத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1985 ஜூன் 24

இந்த மன்றத்திலே பேசிய பல்வேறு உறுப்பினர்கள் பல்
வேறு பொருட்கள் மீது வரி விலக்கு அளிக்கவேண்டும் என்
றும், அல்லது வரியைக் குறைக்க வேண்டும் என்றும் விளக்க
மாகச் சொன்னார்கள். உதாரணமாக சமையல் எண்ணைக்கு
இன்றைய தினம் பல முனை வரி விதிக்கப்படுகிறது. ஆட்சிக்
கட்சியின் சார்பிலே மட்டுமல்லாது, எதிர் வரிசையிலே இருக்
கிற எல்லாக் கட்சிகளின் சார்பிலேயும் சொல்லப்பட்டது.
ஒரு முனைவரியாக மாற்றவேண்டும் என்று சொல்லி இருக்
கிறார்கள். அதைப்போலவே கால்நடைகளுக்கும் உரத்திற்
கும் பயன்படுகிற பிண்ணாக்குக்கூட பல முனை வரி இருக்
கிறது. ஒரு முனைவரியாக இருந்தது. பலமுனை வரியாக
மாற்றப்பட்டு இருக்கிறது. எனவே அதை ஒரு முனை வரி
யாக மாற்றவேண்டும் என்ற நியாயமான கோரிக்கையை
அரசு பரிசீலிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே இந்த மன்றத்திலே பேசுகிற நேரத்திலே
எல்லாம், மற்ற உறுப்பினர்கள் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள்.
நானே பேசி இருக்கிறேன், சைக்கிள்களின் உதிரிபாகங்களுக்கு
வரியை ரத்து செய்யவேண்டும் என்று. இந்த அரசு கடந்த முறை
ஆட்சிப்பொறுப்புக்கு வந்த போது, 6 சதவீதமாக இருந்ததை 3
சதவீதமாக குறைத்தது, நம்முடைய வேண்டுகோளுக்கு இணங்க.
அண்டையிலே இருக்கிற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்
தால் அங்கே எல்லாம் முழுமையாக வரி ரத்து செய்யப்பட்டு
இருப்பதாலே, 3 சதவீதம் என்று வரி விதித்து இருப்பதை—
ஏதோ பாதி கிணறு தாண்டியதைப் போல இருக்கிறது—
எனவே சைக்கிள்களுடைய உதிரி பாகங்களுக்கு 3 சதவீத
வரியையும் ரத்து செய்தால், நல்லது. ஏன் என்றால், சைக்கிள்
என்பது 'காமன் மேன் வெகிக்கிள்' என்று சொல்கிறார்கள்.
சாதாரண நடுத்தர மக்களுடைய வாகனமாக அது இருக்கின்ற
காரணத்தால், இன்னும் குறைந்த விலையிலே அந்த சைக்கிளை
வாங்குவதற்கு இந்த வரியை ரத்து செய்யவேண்டும் என்று
நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய கட்சியைச் சேர்ந்த கொறடா பழனி
முத்து அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். சேலத்திலே பாக்கு
உற்பத்தி செய்து விற்பனைக்கு கொண்டு வருகிற நேரத்திலே
அதிகாரிகள் தொல்லைப்படுத்துகிறார்கள். வரி விதிக்கப்
படுகிறார்கள். அதனால் அவர்களுக்கு பெருத்த சிரமங்கள்
இருக்கின்றன, எனவே இதற்கு வரி விதிக்கக் கூடாது என்ற
கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதை நான் அரசினுடைய
பரிசீலனைக்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்து, இந்தப் பகுதியிலே சில உறுப்பினர்கள் சொன்
னார்கள். வெல்லத்திற்கான வரியை பலமுனை வரியிலிருந்து
ஒரு முனை வரியாக மாற்ற வேண்டும் என்று சொல்லியிருக்
கிறார்கள். இதைப்பற்றி கொஞ்சம் விளக்கமாகச் சொல்ல



1985 ஜூன் 24] [திரு. என். எஸ். வி. சித்தன்]

வேண்டும் என்று நான் நினைக்கிறேன். வெல்லம் இன்றைக்கு
சீனிக்குப் பதிலாக ஏழை மக்களாலே உபயோகப்படுத்தப்
பட்டு வருகிறது. வெல்லம் தயாரிப்பு முழுமையான ஒரு
குடிசைத் தொழில என்பது அனைவரும் அறிந்ததே.

(பிற்பகல் 12-50)

வெல்லம் குடிசைத் தொழிலாக விவசாயிகளால் கிராமங்களில்
வயல் வெளிகளில் கரும்பு சாற்றை ஆலைகளில் பிழிந்து பெரிய
கொப்பரைகளை அடுப்பில் வைத்து காய்ச்சி வெல்லமாக தயார்
செய்கிறார்கள் என்பதை நாம் நன்கு அறிவோம்.

வெல்லத்தைக் காய்ச்சுவதற்கு தமிழ்நாட்டில் மட்டும் பணி
புரிந்து வருகின்ற தொழிலாளர்கள் இன்றைக்கு பல லட்சம் பேர்
இருக்கிறார்கள். மற்ற எல்லா குடிசைத் தொழிலுக்கும் நம்
முடைய அரசு வரி விலக்கு கொடுத்து இருப்பதாக நான் அறி
கிறேன். ஆகவே, வெல்லத்தை பல முனை வரியிலிருந்து ஒரு
முனை வரியாக மாற்ற வேண்டும் என்று சொல்லுகிற ஒரு
கோரிக்கை நியாயமான கோரிக்கை என்று சொல்லி அதே
நேரத்தில் 1956-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டினுடைய முதலமைச்
சராக இருந்த கல்விக் கண் கொடுத்த கருணை தெய்வம் என்று
நாம் எல்லாம் போற்றுகின்ற பெருந்தலைவர், அரும் தலைவர்
காமராஜ் அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்த
காலத்தில் 1958-ஆம் ஆண்டு வெல்லத்திற்கு வரி தள்ளுபடி,
ரத்து செய்யப்பட்டது. ஆனால், பிறகு 1-1-1968-ல் வெல்லத்
திற்கு பல முனை வரி விதிக்கப்பட்டது. மீண்டும் 18-10-1969ல்
பல முனை வரியாக இருந்த 5 சதவீதத்தை ஒரு முனை கொள்
முதல் வரியாக ஆக்கப்பட்டது. வெளி மாநில விற்பனை வரி
இல்லை என்று ஆக்கப்பட்டது. அதற்குப் பின்னால் 18-8-1977ல்
3 சதவீத பல முனை வரி ஆக்கப்பட்டது. 12-5-1982-ல் 3 சத
வீத பலமுனை வரியிலிருந்து 5 சதவீத பல முனை வரியாக
ஆக்கப்பட்டது. இந்த நிலை தான் இன்றைக்கு இருந்து கொண்
டிருக்கிறது. ஆகவே ஒரே பொருளின் மீது ஏழை மக்கள் பயன்
படுத்துகிற பொருளின் மீது இப்படி பல்வேறு கால கட்டங்களில்
பல்வேறு நிலைகளில் அதற்கு வரி விதிக்கப்பட்டிருக்கிறது.

வெல்லம் நமக்குத் தெரியும் அது அழுகும் பொருளோடு
சேர்ந்தது ஆகும். மார்ச்சில் 15 தினங்கள் ஆனால் கசிந்து கெட்டுப்
போகும். நிலையில் தான் அது இருக்கிறது. அதோடு இந்தி
யாவில் வெல்லம் உற்பத்தி செய்வதை பார்ப்போமானால் உத்திர
பிரதேசத்தில் 40 சதவீதம், ஆந்திர பிரதேசத்தில் 20 சதவீதம்,
மராட்டிய மாநிலத்தில் 15 சதவீதம், தமிழ்நாட்டில் 15 சதவீதம்
தான் வெல்லம் உற்பத்தி ஆகிறது. ஆனால் அதே நேரத்தில்
இந்தியாவில் இருக்கின்ற ஏனைய மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்ப்
போமானால் எந்த அளவுக்கு வரி விதிக்கப்படுகிறது என்று பார்க்
கும் போது மராட்டிய மாநிலத்தில் வெல்ல விற்பனைக்கு வரி

கிடையாது. மேற்கு வங்கத்தில் வரி இல்லை, இந்தியாவில் உற்பத்தி ஆகிற மொத்த வெல்லத்தில் 40 சதவிதம் உற்பத்தி செய்கின்ற உத்திர பிரதேசத்தில் வரி இல்லை. மத்திய பிரதேசத்தில் வரி இல்லை. பஞ்சாப் மாநிலத்தில் வரி இல்லை, ஆந்திரப் பிரதேசத்தில் 7 சதவித ஒரு முனை வரியாக விற்பனை வரி விதிக்கப்படுகிறது. கர்நாடகத்தில் 2 சதவித ஒரு முனை வரியாக இருக்கிறது. தமிழகத்தில் தான் 5 சதவித பல முனை வரி ஆக இருக்கிறது. ஆகவே, நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ளுவது எல்லாம் இந்த வெல்லத்திற்கு 5 சதவித ஒரு முனை வரியாக விதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் இது சம்பந்தமாக பல்வேறு விவரங்கள் என்னிடம் இருக்கின்றன. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் சொல்லிக் கொள்ளுவது எல்லாம் பரிட்சார்த்தமாக ஒரு ஆண்டுக்கு இரண்டு ஆண்டுக்கு வைத்து பார்ப்போமானால் ஒரு முனைவரியாக மாற்றினால் இப்போது பல முனை வரியாக இருந்து அரசுக்கு வருகின்ற வருமானத்தை விட ஒரு முனை வரியின் மூலம் அதிகமாக கிடைக்கும் என்ற விவரத்தை அந்த தொழிலில் ஈடுபடுபவர்கள் என்னிடத்தில் சொல்லியிருக்கிறார்கள். 1977-லிருந்து 1985 வரையில் கணக்கு எடுத்து எந்த அளவுக்கு இருக்கிறது என்று கணக்கு பார்ப்போமானால் ஒரு முனை வரியின் மூலம் 5 சதவிதம் போடுவதன் மூலம் அதிகமாக கிடைக்கும் என்று சொல்லுகின்ற அவர்களுடைய வாதத்திற்கு நியாயம் இருக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, அமைச்சர் அவர்கள் ஒரு சாதகமான பதிலை தன்னுடைய உரையின் இறுதியில் சொல்லவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே இன்றைக்கு உள்ள கூடுதல் விற்பனை வரி என்று சொல்லக்கூடிய அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ் அதைப்பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். நியாயமாக வணிகம் செய்கின்ற வியாபாரிகள் கணக்கை வைத்து காட்டக்கூடிய அல்லது கணக்கிலிருந்து தப்புகின்ற ஒரு முறையாக இருக்கிறது. வருமான வரி கூட லாபத்தில் தான் செலுத்துவதாக இருக்கிறது. ஆனால் இந்த அடிஷனல் டாக்ஸ் என்று சொல்லக் கூடிய கூடுதல் வரி லாபம் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் வணிகர்கள் செலுத்த வேண்டிய ஒரு வரியாக இது இருக்கிறது. கடந்த ஆண்டு தான் இதை அதிகமாக தமிழ்நாடு அரசு உயர்த்தியது. அப்படி உயர்த்திய நேரத்தில் கூட நான் அதைக் கடுமையாக உயர்த்தக் கூடாது என்று வாதித்து இருக்கிறேன். ஆகவே, வியாபாரிகளுக்கு தொல்லை கொடுக்கின்ற, அதன் மூலமாக அதிகமான வரி செலுத்துகின்ற நிலை இருக்கின்ற காரணத்தால் கூடுதல் வணிக வரியை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னால் வைக்க விரும்புகிறேன்.

அதுபோலவே, சில நாட்களுக்கு முன்னால் வற்றல், புளி, மஞ்சள், மல்லி, மிளகு, ஆகியவைகளுக்கு வரி விகிதத்தை இந்த அரசு 8 சதவிதமாக ஒரு முனை வரியாக மாற்றியிருக்கிறது.



நான் உங்கள் மூலமாக சொல்ல விரும்புவது எல்லாம் பல முனை வரியை எடுத்துவிட்டு ஒரு முனை வரியாக மாற்றுகின்ற நேரத்தில் அந்த வரி விகிதத்தை அதிகமாக உயர்த்துவதால் நாம் என்ன பயனை எதிர்பார்க்கிறோமோ அந்த பயன் கிடைக்காது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மீண்டும் அந்த வரி ஏய்ப்புக்கு அந்த வரியை தவிர்ப்பதற்கான முறையாகத்தான் அது இருக்குமே தவிர அந்த ஒரு முனை வரி சதவிதத்தை குறைத்துக் கொடுப்பார்களானால் ஏற்கனவே வந்த வருமானத்தை விட அதிகமான வருமானம் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவேதான் மொத்தமாக இருக்கின்ற பல முனை வரியை மாற்றி ஒரு முனை வரியாக மாற்ற வேண்டும் என்ற வாதத்தினை இந்த மாமன்றத்தில் சொல்லியிருக்கிறேன். இதற்கு முன்னாள் அமைச்சராக இருந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட எதிர் வரிசையில் இருந்த காலத்தில் பல முனை வரியை எல்லாம் ஒரு முனை வரியாக ஆக்க வேண்டும் என்று பேசி பின்னால் அதை நாங்கள் மேற்கோளாக எடுத்து காட்டியதற்கு கூட இல்லை, இல்லை பல முனை வரி இருக்கவேண்டும் என்று அதனுடைய தேவையை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். நான் உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குகொண்டு வருகிறேன். பக்கத்தில் இருக்கின்ற பாண்டிச்சேரி மாநிலத்தில் கூட, இந்த ஆண்டிலிருந்து பல முனை வரி அறவே ஒழிக்கப்பட்டு ஒரு முனை வரியாக மாற்றிவிடப்பட்ட காரணத்தால் வியாபாரிகளுக்கு தொல்லை கொடுக்கின்ற இந்த பல முனை வரி ஒழிக்கப்பட்டு ஒரு முனை வரியாக கொண்டு வருவார்களானால் அரசுக்கு நிறைய வருமானம் கிடைக்கும் வியாபாரிகளுக்கு அந்த அதிகாரிகள் மூலம் வருகின்ற சில தொல்லைகளிலிருந்து விடுபடுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதைப் போலவே, வணிகர்களது கணக்கைப் பார்க்கிறபோது, அவர்கள் தொல்லைப்படுத்தப்படுகிறார்கள் ; குற்றவாளியைப் பார்ப்பதைப்போல பார்க்கிறார்கள் : மரியாதையாக நடத்தப்படுவது இல்லை என்ற குற்றச்சாட்டுகள் அங்கொன்றும், இங்கொன்றுமாக வந்து கொண்டிருக்கிறது. அதை நிவர்த்தி செய்கின்ற அளவுக்கு அதிகாரிகள் நடந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வணிகர் நல வாரியம் வேண்டும் என்கிறபோது, இந்தக் கொள்கைக் குறிப்பிலே கூட சொல்லி இருக்கிறார்கள். அதற்கான குழு அமைத்திருக்கிறோம் ; உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லி இருக்கிறார்கள்.

இதில் நான் கேட்டுக் கொள்ள விரும்புவது—அந்த வாரியம், ஆலோசனைக் குழு எத்தனை தடவை கூடியது ? என்ன முடிவு எடுக்கப்பட்டது? அது அரசுக்கு என்னென்ன பரிந்துரைகளைச் செய்தது ? அரசு அவற்றில் எதனை ஏற்றுக்கொண்டது ? அதன்

மூலம் என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்று அமைச்சரவர்கள் கோடிட்டுக் காட்டினால், அடிக்கடி இந்த ஆலோசனைக் குழு, நல வாரியங்கள் அமைத்துக் கூடுவதற்கான வாய்ப்புகள் நல்ல முறையில் இருக்கும் என்று சொல்லிக் கொண்டு இந்த அளவில் என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. தா. வீராசாமி : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக் கையின் எண். 4—விற்பனை வரியும், ஆயத் தீர்வையும், ஏனைய வரிகளும் என்ற தலைப்பின்கீழ் மாண்புமிகு 10 சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய அனுபவமிக்க, அறிவார்ந்த ஆலோ சனைகளை, கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லி இருக்கி றார்கள். அதற்காக முதற்கண் நான் அவர்களைப் பாராட்டு கிறேன்.

அபபடி அவர்கள் எடுத்துச் சொன்ன அந்த அறிவுரைகளின் அடிப்படையில், இன்று வணிக வரித் துறையில் காணப்படுகின்ற ஒரு சில குறைகளை, தவறுகளை களைவதற்கு இந்த அரசு தன்னா லான எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், இங்கே பேசிய பெரும்பான்மையான மாண்பு மிகு உறுப்பினர்கள், அத்தனை பேரும் தமிழக அரசு இன்று இந்த வணிக வரித் துறையில் பெறுகின்ற வருவாயினைப் பார்க் கின்ற நேரத்தில், அதனைப் பாராட்டிச் சென்று இருக்கிறார்கள் பாராட்டுகின்ற நேரத்தில் வருவாய் உயர்வுக்கான காரணங்களைச் சொல்லிச் சென்று இருக்கிறார்கள்.

அதற்கு முதல் காரணம், வருவாய் வணிக வரித் துறையில் பணியாற்றுகிற அதிகாரி பெருமக்கள் திறமையாக பணியாற்று வதன் காரணமாகத்தான் இன்று உயர்ந்திருக்கிறது என்று சொல் கிற நேரத்தில் உள்ளபடியே நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

அப்படிப்பட்ட சூழ்நிலையில், அங்கொன்றும், இங்கொன்று மாக ஒரு அரசினுடைய பெரிய நிர்வாகத்தில் தவறுகள் ஏற்படு வது இயற்கை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறி வார்கள். அப்படிப்பட்ட தவறுகளைச் சுட்டிக் காட்டுவதன் பேரில், நிச்சயமாக இந்த அரசு வருங்காலத்தில் வணிக வரித் துறையில் நல்ல பல நடவடிக்கைகளை எடுத்து, அவைகளைக் களைய கடமைப்பட்டிருக்கிறது என்று இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

இங்கே வரி விதிப்பைப் பற்றி சொல்லி, இன்றைக்கு அரசுக்கு வணிக வரி துறையின் மூலம் வந்திருக்கின்ற வருவாயைப் பார்க் கும்போது இந்த அரசு வணிகப் பெருங்குடி மக்களை, வியாபார



பெருங்குடி மக்களை கசக்கிப் பிழிகின்ற ஒரு நிலைமை இருக்கின் றது என்று ஒரு யூகத்தின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இது உண்மையான நிலைமை அல்ல என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று இருக்கின்ற அரசு, வாங்கி உண்பவர்களுடைய சிரமங் களைப் போக்குகின்ற, களைகின்ற வகையிலும், பொருளாதாரத் தில் முக்கியத்துவம் வாய்ந்த அரசுத் துறையின் வளர்ச்சியை பாதிக்காத வகையிலும் வரி விதிப்பு முறையை, கொள்கையை இன்று ஏற்படுத்தி இந்த நாட்டில் வணிகம் பெருகி, இந்த நாட்டில் தொழில்கள் பெருகி இந்த நாட்டில் வாழ்கின்ற அத்தனை பேரும் மகிழ்ச்சியாக வியாபாரம் செய்கின்ற சூழ்நிலையை உருவாக்கியதன் காரணமாகத்தான், வியாபாரம் பெருகி, வருவாய் பெருகி இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் கூறிக் கொள்கிறேன்.

வருவாய் பெருகி இருக்கிறது என்று சொன்னால், அதற்குக் காரணம், மத்திய அரசு வரி விதிக்கின்ற நேரத்தில், இங்கே நம் முடைய அரசும் அதற்கேற்ப சில வரிகளை விதிக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அதோடு மட்டுமல்லாது, வரி விதிப்பின் காரணமாக விலைவாசிகள் ஏறுகின்றது. சில நேரங்களில் வியாபாரிகள் செய்யக்கூடிய வியாபாரத்தின் தொகையும் பெருகி டுகின்றது என்பதும் உங்களுக்கு நன்றாகவே தெரியும்.

(பிற்பகல் 1—00)

விலைவாசிகள் ஏற்றம், தொழில்கள் பெருக்கம், வியாபாரி களுடைய வியாபாரங்கள் பெருக்கம் என்ற அடிப்படையில் இன்று வணிக வரித்துறை மூலமாக வருவாய் பெருகி இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன். இப்படியெல்லாம் சொல்லுகின்ற நேரத்தில், வருவாய் பெருகி யிருக்கிறது என்றால், அதனால் நாம் மகிழ்ச்சியாக இல்லை. இந்த அரசுக்கு வருகின்ற வருவாய் போதாது. அதற்கான காரணம் உங்களுக்கெல்லாம் தெரியும்.

இன்றைக்கு இருக்கின்ற அரசு நம்முடைய தமிழகத்திலே பல்வேறு நல்ல ஆக்கப் பணிகளை, வளர்ச்சிப் பணிகளை, சமு தாயத்திற்கு நலம் பயக்கும் நல்ல பல திட்டங்களை நிறைவேற்று வதன் மூலமாக இந்த அரசுக்குஅதிகமான வருவாய் தேவைப்படு கிறது என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். எனவே தான், இந்த அரசு சில சந்தர்ப்பங்களில் கட்டாயத்தின் அடிப் படையில் சில பொருட்களின்மீது வரியை விதிக்கின்ற நிலைமை ஏற்படுகிறது. அப்படி வரி விதிக்கின்ற நேரத்தில் இங்கேயுள்ள தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்கள் பாதிக்கப்படாத வகையிலே யும், வாங்கி உண்பவர்களும் பாதிக்கப்படாத வகையிலேயும் கண்ணும் கருத்துமாக இந்த அரசு இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. தா. வீராசாமி] [1985 ஜூன் 24

வரி விதிப்பு அதிகாரத்தைப் பொறுத்தவரையில், மைய
அரசையும் மாநில அரசையும் ஒப்பிட்டுப் பார்க்கின்ற நேரத்தில்
வருவாயைப் பெருக்குவதற்கான வாயில்களைப் பொறுத்தவரை
யில் மத்திய அரசாங்கத்திற்கு அதிக அதிகாரம் இருப்பதாலும்,
நம்முடைய வரி விதிப்பிற்கான அதிகாரங்கள் குறைந்திருப்பதா
லும் நாம் சுற்றிச்சுற்றி, குண்டுச் சட்டிக்குள்ளேயே குதிரையை
ஓட்டுகின்ற நிலைமையில், குறிப்பிட்ட பொருட்களின் மீது வரி
யைப் போடுவதோ அல்லது உயர்த்துவதோ போன்ற நிலைமை
கள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு மத்திய அரசு பெரிதும் வருவாயைப் பெருக்கும்
பொருட்களுக்கெல்லாம் வரிகளை விதித்து விட்டார்கள். அந்த
வரிகளைத் தங்களுக்கு எடுத்துக் கொள்வதால் இன்றைக்கு இந்த
அரசு நினைக்கின்ற அளவிற்கு நல்ல பல திட்டங்களுக்கு வரு
வாயைப் பெருக்க முடியவில்லை. அந்த வகையிலே இந்த அரசு
இன்றைக்கு வரி விதிப்பு முறைகளை, கொள்கைகளை வகுத்து,
நல்லமுறையிலே காரியங்களைச் செய்து வருகிறது என்பதை இந்த
நேரத்தில் நான் கூறிக்கொள்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள்
களும் குறிப்பிட்டதற்கிணங்க, இங்கே கூடுதல் விற்பனை வரியைப் அத்தனைபேர்
பற்றித் தெளிவாகச் சொன்னார்கள். இந்த அரசு கூடுதல் விற்
பனை வரிஉயர்வை வேண்டுமென்றே விதிக்கவில்லை என்பதை
இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

நுழைவு வரி என்ற வரியைக் கொண்டு வந்தோம்; இந்த மா
மன்றத்தில் சட்டமாக்கினோம் என்பதும், அந்தச் சட்டம் மத்திய
அரசின் அனுமதிக்காகக் காத்திருக்கிறது என்பதும் உறுப்பினர்
களுக்கெல்லாம் தெரியும். அதற்கிடையிலே தமிழகத்திலே உள்ள
வணிகப் பெருங்குடி மக்கள், இந்த வரி கூடவே கூடாது என்று
சொல்லி மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களை
அணுகி, அந்தச் சிரமங்களை எடுத்துச் சொன்ன நேரத்தில் அந்த
நுழைவு வரிக்கு உரிய வருமானத்தைப் பெறுவதற்கு வேறு வழி
வகைகளைச் சொல்கிறோம் என்று கூறியதன் அடிப்படையில்,
ஒரு குழு அமைக்கப்பட்டது. வணிகப் பெருங்குடி மக்கள் அந்தக்
குழுவிலே பங்கு கொண்டு ஆலோசனை கூறியதற்கேற்பத்தான்
இன்றைக்குக் கூடுதல் விற்பனை வரியை இந்த அரசு உயர்த்தி
உள்ளது என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள
விரும்புகிறேன்.

இந்த அரசு இப்போது பலமுனை விற்பனை வரிக்கு விலக்கு
அளிப்பதற்கான அளவு 50,000 ரூபாய் என்பதை ஒரு இலட்சம்
ரூபாயாக உயர்த்தியிருக்கிறது. இதனால் வியாபாரப் பெருங்குடி
மக்கள் ஏராளமான பயன்களைப் பெற்று வருகிறார்கள்.



1985 ஜூன் 24] [திரு. தா. வீராசாமி]

அதுமட்டுமல்லாமல், பதிவு நோக்கத்திற்காக பலமுனை வரி
விதிப்பின்கீழ் வரும் பொதுவான பொருள்கள் குறித்த ஆண்டு
விற்பனை மொத்த வியாபாரத் தொகை அளவு 30,000 ரூபாய்
என்பதிலிருந்து 50,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இவ்வாறு
இந்த அரசு வியாபாரிகளுக்கு நல்ல பல சலுகைகளைச் செய்து
வருகிறது.

அதேநேரத்தில் வரி விதிக்கத்தக்க மொத்த வியாபாரத்
தொகை 3 இலட்சத்திற்கு அதிகமாக ஆனால் ரூபாய் ஐந்து இலட்
சத்திற்கு மேற்படாமல் இருக்கும்போது 0.4 சதவீதத்திலிருந்து
0.5 சதவீதமாக கூடுதல் விற்பனை வரியை உயர்த்தியிருக்கிறது.
இப்படியே படிப்படியாக ரூபாய் பத்து இலட்சத்திற்கும் மேலே
போகின்ற நேரத்தில் 1.25 சதவீதம் கூடுதல் விற்பனை வரியை
விதிக்க இந்த அரசு வகை செய்திருக்கிறது என்று மாண்புமிகு
உறுப்பினர்கள் சொன்னார்கள். இப்படிச் செய்வதால் வியாபாரப்
பெருங்குடி மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று கூறினார்கள்.

நான் சொல்லிக்கொள்கிறேன். வியாபாரிகளின் பிரதிநிதிகள்,
வியாபாரச் சங்கத்தின் பிரதிநிதிகள், வர்த்தகச் சங்கங்களின்
பிரதிநிதிகள் போன்றவர்கள் கூடிச் சொன்ன முடிவுதான் இது
என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்கிறேன்.

அந்த வகையிலேதான் இந்த அரசு இன்றைக்கு கூடுதல் விற்
பனை வரியை விதித்திருக்கிறது. அப்படிக் கூடுதல் விற்பனை
வரியை விதித்திருக்கின்ற நேரத்தில், அதில் வருகின்ற நிலைமை
களை நாம் பார்க்க வேண்டும். இப்படி 4 இலட்சம், 5 இலட்சம்
என்று டர்ன் ஓவரில் வரிகட்டுகின்றவர்கள் சாதாரண வியாபாரிகள்
அல்ல; பெரிய தொழிற்சாலைகள், பேக்டரிகளிடத்திலிருந்து
இப்படிப்பட்ட வரியை வசூலிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது;
சாதாரண வியாபாரிகளைப் பாதிக்கின்ற நிலைமைகள் இந்தக்
கூடுதல் விற்பனை வரியால் இல்லை என்பதை நான் கூறிக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம்
ஒன்றைச் சொன்னார்கள். துணி வகைகள், சர்க்கரை, புகை
யிலை போன்ற பொருட்களுக்குப் பொது விற்பனை வரியை
நம்முடைய அரசு விதித்து வந்தது. 1957-லிருந்து மத்திய
அரசு கூடுதல் ஆயத் தீர்வை என்று கொண்டு வந்து, வரிவிதித்
தது. அதன் பேரில் தேசிய கவுன்சிலில் எடுக்கப்பட்ட முடிவு
என்னவென்றால், 1972-ஆம் ஆண்டிற்குள் 10.8 விழுக்காடு வரு
வாயிலிருந்து வருமானத்தை மாநிலங்களுக்குப் பகிர்ந்து கொடுக்க
வேண்டுமென்று முடிவு எடுத்தார்கள். ஆனால், இன்றைய
நிலைமையில், 1985 ஆம் ஆண்டு 8.5 சதவீதம் வருமானத்தைத்
தான் நமக்குப் பங்கிட்டுத் தந்திருக்கிறார்கள் என்பதை மெத்த
வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த வகையிலே
இன்று மேலும் 5 பொருட்களை, மத்திய ஆயத் தீர்வையின்
கீழ் கொண்டு வரவேண்டுமென்று மத்திய அரசு—நீட்டிக்க—
பல்வேறு நடவடிக்கைகளை இன்று எடுத்து வருகிறது.

[திரு. தா. வீராசாமி] [1985 ஜூன் 24

'அப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் மைய அரசின் மாண்புமிகு முன்னாள் நிதித்துறை அமைச்சர் திரு. பிரணாப்குமார் முகர்ஜி தலைமையிலே முதல் அமைச்சர்கள் மாநாடு நடக்கிற நேரத்திலே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி. ஆர். அவர்கள் இதற்குக் கடுமையான எதிர்ப்பினை தெரிவித்து இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். 9—3—1983-ல் மத்திய நிதிஅமைச்சர் பிரணாப்குமார் முகர்ஜி அவர்கள் தலைமையில் முதலமைச்சர்கள் மாநாடு நடைபெற்றது. அம் மாநாட்டில் தமிழக முதல்வர் அவர்கள் இதனை மிகக் கடுமையாக எதிர்த்துள்ளார்கள். அவர்கள் கூறிய அந்த வாசகத்தை அப்படியே கூற விரும்புகிறேன். 'I categorically oppose on behalf of the Government of Tamil Nadu, என்று அவர்கள் திட்டவட்டமாக மறுத்திருக்கிறார்கள். இப்படி மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்த 5 பொருள்கள் மீது மத்திய அரசு ஆயத் தீர்வையினைக் கொண்டு வருவதைக் கடுமையாக எதிர்த்து. எதிர்ப்பினைத் தெரிவித்து இருக்கிறார்கள் என்பதைக் கூறிக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்களுக்கு ஒன்று கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மத்திய ஆயத்தீர்வை விதிக்கின்ற முறையினை இந்த அரசு ஒருபோதும் அனுமதிக்காது என்பதை மட்டும் இந்த நேரத்திலே நான் குறிப்பிடக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்னொன்றையும் சொல்கிறேன். இந்த 5 பொருட்கள் மூலமாக' வருகின்ற வருவாய், இப்பொழுது ரூ. 153 கோடியாக இருக்கிறது. 1972-லேயிருந்து 10.8 சதவீதம் உள்ள வருவாயை மாநிலங்களுக்குக் கொடுத்திருக்கவேண்டும். ஆனால், இப்பொழுது, 1983—84-ல் 8.3 சதவீத வருவாயைத்தான் மாநிலங்களுக்குப் பகிர்ந்து கொடுத்திருக்கிறார்கள். ஆனால் 10.5 சதவீதம் வருவாய் எப்பொழுது கிடைக்கும் என்றால், 1989—90-லேதான் நமக்குக் கிடைக்கும். நிலைமை அவ்வாறு இருக்க, இப்பொழுது இந்த 5 பொருட்களின் மீது ஆயத் தீர்வையை நீட்டிக்க நாம் அனுமதித்தோமானால், தமிழக அரசுக்கு, 8.3 சதவீதம் என்ற கணக்கில் ரூ. 13 கோடிதான் வருமானமாகக்கிடைக்கும் என்பதையும், மொத்த வருவாயான ரூ. 153 கோடியில் ரூ. 40 கோடி இழப்பு இந்த மாநில அரசுக்கு ஏற்படும் என்பதையும் இந்த நேரத்திலே குறிப்பிடக் கடமைப் பட்டிருக்கிறேன். எனவே இந்த அரசு, கூடுதல் ஆயத்தீர்வையை, மருந்து. மற்றும் மருந்துப் பொருட்கள், காகிதம் மற்றும் காகிதப் பொருட்கள், சிமெண்ட், வனஸ்பதி, பெட்ரோல், மற்றும் பெட்ரோலியப் பொருட்களுக்கு விதிப்பதற்குக் கடுமையான எதிர்ப்பைத் தெரிவிக்கிறது. அது தமிழக அரசினுடைய விருப்பம் மட்டுமல்ல.



1985 ஜூன் 24] [திரு. தா. வீராசாமி]

இந்திய துணைக் கண்டத்திலிருக்கிற ஏனைய மாநில முதல்வர்களுடைய எண்ணமும் அதுதான் என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட்டுக் கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்றும் சொல்கிறேன். ரெயில்வேயிலிருந்து 1961-க்கு
முன்பு டிக்கட்டிலே வரி விதித்து, மாநில அரசுக்குக் கொடுத்து
வந்தது. 1961-லே ஒரு முடிவை எடுத்து, 1961-62 முதல்
1965-66 வரை ஒரு லம்ப் சம் ப்ரவிஷன், அதாவது ரூ. 12½ கோடி
கொடுப்பதாக அவர்கள் சொன்னார்கள். பிறகு, 1966—67-க்குப்
பிறகு, 16½ கோடி கொடுத்து வருகிறார்கள். இப்பொழுது
நடப்பது, 1985; சுமார் 18 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால்,
ரெயில்வேயிலிருந்து உரிய பங்கை, வருவாயிலிருந்து கொடுக்க
வேண்டிய பங்கைக் கொடுக்கவில்லை என்பதை இந்த நேரத்
திலே நான் குறிப்பிட்டுக் கூற கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி
அதிலேயிருந்து நமக்குக் கிடைக்கக்கூடிய வருமானம் ரூ. 1.11
கோடி என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-10)

நான் இதை எல்லாம் சொல்வதற்குக் காரணம் இன்றைக்கு
பெருவாரியாக வருவாய் வரக்கூடிய வாயில்கள் அனைத்திலும்
மத்திய அரசு வரி விதிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிற காரணத்
தால்தான் நம்முடைய வருவாயைப் பெருக்க முடியவில்லை.
மாநில அரசு இங்கே இருக்கிற மக்களுக்கு நேரடியாக காரியங்
களை ஆற்ற கடமைப்பட்டிருக்கிற அரசு. ஆனால் இப்படிப்
பட்ட சூழ்நிலையில் நல்ல காரியங்களைச் செய்ய, ஆக்க பூர்வ
மான காரியங்களைச் செய்ய, திட்டப் பணிகளைச் செய்ய
போதிய வருவாய் கிடைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். அந்த வகையில் மத்திய அரசு மனமுவந்து இப்
படிப்பட்ட வருவாய் வாயில்களில் நியாயமாக மாநில அரசுக்கு
அதிகப் பங்கினைத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.
1984—85 ஆம் ஆண்டில் இந்தியப் பேரரசின் வருவாய் 25,514
கோடி ரூபாய். ஆனால் மாநிலங்களுக்கு கொடுக்கப்பட்டது
6,592 கோடி ரூபாய்தான். அதாவது 27 சதவீதத்தை மாநிலங்
களுக்கு ஒட்டுமொத்தமாக பகிர்ந்து கொடுக்கிறார்கள் என்
பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் நம்முடைய மத்திய மாநில அரசுகளுக்கு
வரி விதிப்பு பற்றி பேரறிஞர் அண்ணா அவர்கள் தனது 1968-69
ஆம் ஆண்டு உரையில் பேசிய பேச்சினை மாண்புமிகு உறுப்பினர்
களுக்குப் படித்துகாட்ட விரும்புகிறேன். ''விரிவுபடுத்தக்கூடிய
வருவாய் வாய்ப்புக்கள் எல்லாம் மத்திய அரசின் அதி
காரத்திற்கு உட்பட்டும் விரிவுபடுத்த முடியாத எஞ்சியுள்ள
வருவாய் வாய்ப்புகளே மாநிலங்களிடம் உள்ளன''

என்றும், ''செலவு அதிகரித்துக்கொண்டே போகக்கூடிய இனங்
களான கல்வி, சுகாதாரம் போன்றவைகள் மாநில அரசுக்குக்
கொடுக்கப்பட்டுள்ளன'' என்றும் பேரறிஞர் அண்ணா அவர்கள்
சொல்லியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட
விரும்புகிறேன்.

(பேரவைத் தலைவர் தலைமை)

நான் இதை எல்லாம் சொல்வதற்குக் காரணம் இன்று நம்
முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.எஸ்.வி. சித்தன் அவர்
கள் பல்வேறு பொருள்களைச் சொல்லி, அந்தப் பொருள்
களுக்கு எல்லாம் — அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கக்கூடியவர்
களுக்கு இருக்கிற சிரமங்களைப் போக்க இந்த அரசு ஒருமுனை
வரியாக இருப்பதை பலமுனை வரியாகவும், பலமுனை வரியாக
இருப்பதை ஒருமுனை வரியாகவும் மாற்றக்கூடிய சூழ்நிலையை
உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்.

இந்த அரசுக்கு இருக்கிற கவலை எல்லாம் இங்கே இருக்கிற
வியாபாரிகள் என்றாலும் தொழில் அதிபர்கள் என்றாலும்
அவர்கள் நல்லமுறையிலே தொழில் நடத்த வேண்டும் என்பது
தான். அந்த வகையிலே அவர்கள் மீது அக்கறை கொண்டிருக்
கிற, நல்ல நம்பிக்கை கொண்டிருக்கிற அரசுதான் மாண்பு
மிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு. ஆனால் எங்
களுக்கு இருக்கிற அச்சம் எல்லாம் வருவாய் வரக்கூடிய வாயில்
கள் மிகவும் சொற்பமானவை. இத்தகைய சூழ்நிலையில்தான்
நாங்கள் எதையும் நல்லமுறையில் ஆராய்ந்து, தெளிவாக முடிவு
செய்து, அதன் பிறகுதான் காரியங்களைச் செய்ய வேண்டு
மென்ற நிலைமை இருப்பதால் சில சங்கடங்கள் இருக்கின்றன.
மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்வதைப்போல எங்களுக்கும்
அவர்கள் மீது அதிக அக்கறை இருக்கிறது. வியாபாரிகள்
நல்லமுறையில் வாழ வேண்டும், தொழில் பெருக வேண்டும்
என்ற எண்ணம் எங்களுக்கு இருக்கிறது. அதன் காரணமாகத்
தான் ஐயத்தோடு, தயங்கித் தயங்கி, 'எண்ணித் துணிக கருமம்'
என்ற அளவில் நிதானமாக — மெத்தனமாக என்று சொல்ல
மாட்டேன் — காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறோம் என்
பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, பக்கத்தில்
இருக்கிற பாண்டிச்சேரி மாநிலத்தில் அங்கிருந்த பலமுனை வரி
ஒழிக்கப்பட்டு, ஒருமுனை வரி நடைமுறையில் இருக்கிறது. அது
பற்றி இந்த அரசு ஆலோசனை செய்து, நமக்குப் பக்கத்திலே
இருக்கிற பாண்டிச்சேரி மாநிலத்தில் நடைமுறையில் இருக்கிற
வரிவிதிப்பு முறையை தமிழ்நாட்டிலும் கொண்டுவந்தால் வியா
பாரிகளுக்கு ஏற்படுகின்ற தொல்லைகள் குறைக்கப்பட்டு, அர
சுக்கு அதிக வருவாய் வரக்கூடிய வாய்ப்பு இருப்பதால் நம்
முடைய அரசு ஏன் அதை பரிசீலனை செய்யக்கூடாது?





மாண்புமிகு திரு. தா. வீராசாமி : பக்கத்திலே இருக்கிற
பாண்டிச்சேரி மாநிலத்தினுடைய நிலைமை நம் எல்லோருக்கும்
நன்றாகத் தெரியும். நம்முடைய மாநில அரசு எப்படிப்பட்ட
சூழ்நிலையில் காரியங்களை ஆற்றிக்கொண்டிருக்கிறது என்
பதும் எல்லோருக்கும் தெரியும். அதைப்போன்று நம்முடைய
வரவு-செலவும், பாண்டிச்சேரியின் வரவு-செலவும் தெரியும்.
இப்படிப்பட்ட ஒரு நிலையில், நாம் வருவாயைப் பெருக்க
வேண்டிய சூழ்நிலையில் இருப்பதால் நிதானமாக காரியங்
களைச் செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று, ஒருமுனை விற்பனை வரியைக் கொண்டு
வந்துவிட்டால் வியாபாரிகளுக்கு நன்மை கிட்டிவிடும் என்று பல
மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு தவறான எண்ணத்தில் பேசி
இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள
விரும்புகிறேன்.

பல முனை வரி விதிப்பைப் பொறுத்தவரையில் 50 ஆயிரம்
ரூபாயாக இருந்த வரி விதிக்கக்கூடிய தொகை 50 ஆயிரத்தி
லிருந்து ஒரு இலட்சமாக ஆக்கப்பட்டிருக்கின்றது. அதேமாதிரி
பதிவு செய்துகொள்ளக் கூடியவர்கள் என்பதைப் பொறுத்தவரை
யில் 30 ஆயிரத்திலிருந்து 50 ஆயிரம் என்று ஆக்கப்பட்டிருக்கின்
றது. அப்படி ஒரு இலட்சம் வரையில் வியாபாரம் செய்யக்
கூடிய வியாபாரிகள் கணக்கு வைத்திருக்கவேண்டிய தேவை
யில்லை. அதே மாதிரி 50 ஆயிரம் வியாபாரம் செய்யக்
கூடியவர்கள் பதிவு செய்து கொள்ளத் தேவையில்லை.

ஒருமுனை வரியை எடுத்துக்கொண்டால் ஒரு ரூபாயிலிருந்து 5
ரூபாய், 10 ரூபாய், 50 ரூபாய் அல்லது 5,000 ரூபாய், ஒரு இலட்சம்
ரூபாய் என்று வியாபாரம் செய்யக்கூடிய அத்தனை பேரும்
கட்டாயமாகக் கணக்கு வைத்துக்கொள்ளவேண்டும், கணக்கை
எழுத வேண்டும், கணக்கைப் பார்க்க வேண்டும். ஒரு முனை வரி
என்று சொன்னால் அப்போதுதான் அவர்கள் இரண்டாம் முறை
வாங்கப்பட்டு விற்கப்படுகின்ற பொருள் என்று நிரூபிப்பதற்காக
கணக்குகளை எல்லாம் வைத்துக்கொள்ளவேண்டும். அப்போது
தான் வரிச் சலுகை அவர்களுக்குக் கிடைக்கும். எனவே ஒரு முனை
வரியை விட பலமுனை வரிதான் வியாபாரிகளுக்குச் சிறந்தது என்
பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். வியாபாரி
களிடத்திலே ஒரு தெளிவான கொள்கை, எண்ணம், சிந்தனை
இல்லை என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிட்டுக் காட்டக்
கடமைப்பட்டிருக்கிறேன். 1957-ல் டாக்டர் பி.எஸ். லோகநாதன்
அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. 1957-லேயே
அவர்கள் சொன்னார்கள். எல்லா பொருட்களுக்கும் பல முனை
வரி என்று போட வேண்டும் என்று சொன்னார்கள். அதற்குப்

பிறகு சீனிவாசன் குழு அமைக்கப்பட்டது. அப்போது சொன்னார்கள் எல்லா பொருட்களுக்கும் ஒருமுனை வரி போட வேண்டும் என்று. அதற்குப் பிறகுநான் கைவார் குழு 1977-ல் அமைக்கப்பட்டது. அந்தக் குழுவிலே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், எல்லா பொருட்களுக்கும் ஒரு முனை வரியாக போடவேண்டும் என்று. இப்படி மாறி, மாறித்தான் அவர்கள் குழம்பிய நிலையில் சொல்லி வருகிறார்கள் என்று நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். எனவே வியாபாரிகளிடத்திலே தெளிவான ஒரு முடிவு இல்லை என்பதை இங்கே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அரசைப் பொறுத்தவரையில் ஒருமுனை வரியோ பலமுனை வரியோ எது வியாபாரிகளுக்கு நன்மை பயக்கும், எப்படி அரசுக்கு வருவாய் குறையாமல் நன்மை பயக்கும் என்ற அந்த நிலையில் இருந்து ஆய்ந்து பார்த்து நடவடிக்கை எடுத்து வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு அரசின் வருவாயில் 88 விழுக்காடு விற்பனை வரியின் மூலமாகத்தான் கிடைக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வியாபாரிகளின் கோரிக்கைகளுக்கேற்ப பலமுனை வரி ஒருமுனை வரியாக ஆக்கப்பட்டிருக்கின்றது.

இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். ஒருமுனை வரி போடப்பட வேண்டும் என்றால் அந்தப் பொருளினுடைய பிறப்பிடம் நமக்குத் தெளிவாகத் தெரிந்தாகவேண்டும். அதற்குப் பிறகு அதைத் தணிக்கை செய்வதற்கும், ஆய்வு செய்வதற்கும் எளிமையாக இருக்கவேண்டும். பொருளின் பிறப்பிடம், டிஸ்ட்ரிபுஷன் பாயின்ட், செல்லிங் பாயின்ட், அவற்றை ஆடிட் செய்வதற்கான வாய்ப்பு இவையெல்லாம் எளிதாக இருக்கவேண்டும். அப்படி இருந்தால் அவற்றுக்கு ஒருமுனை வரியினை இந்த அரசு விதித்து வருகின்றது. இருப்பினும் வணிகர்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வந்த 5 பொருட்களைப் பொறுத்தவரையில் பலமுனை வரியாக இருந்தது ஒருமுனை வரியாக மாற்றப்பட்டிருக்கின்றது. ஆனால் பலமுனை வரியாக இருந்தபோது 5 சதவீதம். இப்போது ஒருமுனை வரியாக மாற்றப்பட்டபோது 8 சத வீதமாக ஆக்கிவிட்டீர்களே என்று குறிப்பிட்டார்கள். ஒருமுனை வரியில் வரி ஏய்ப்புக்கு அதிக வாய்ப்பு இருக்கின்றது. பல முனை வரியில் வரி ஏய்ப்புக்கு வாய்ப்பு இல்லை. எங்கெங்கு வரி ஏய்க்கப்படுகின்றது என்பதைக் கண்டுபிடித்துவிடலாம்.

ஒருமுனை வரியில் பில் ட்ரேடிங் என்ற வகையில் போலித்தனமான பில்களைக் கொடுத்து செகன்ட் சேல்ஸாக ஆக்கி வரியை ஏய்க்கக்கூடிய நிலைமை இருக்கின்றது.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பில் ட்ரேடிங் பற்றிச் சொல்கிறார்கள். இந்த அரசுதான் விற்பனை வரியைப் பொறுத்



வரையில் ஆர். சி. கொடுக்கின்றது. பில் டிரேடிங் மூலமாக அவ்வாறு ஈடுபடுவது யார் என்பது அரசு அதிகாரிகளுக்குத் தெரியும். எனவே பில் டிரேடிங் நடக்கின்றது என்று சொல்வதை நான் வன்மையாக மறுக்கிறேன். பில் ட்ரேடிங் யார், யார் செய்கிறார்கள் என்று பார்த்து அவர்களுக்கு ஆர். சி. கொடுக்காமல் விட்டுவிட்டால் இந்த நிலை மாறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேமாதிரி அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ் பற்றிச் சொன்னார்கள். வணிகர்கள் அதை ஒத்துக்கொண்டுதான் அவ்வாறு செய்யப் பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வணிகர்கள் சொல்வது என்னவென்றால் கேளிக்கை வரியை அதிகப்படுத்துங் கள், லாட்டரி சீட்டு வரியை அதிகப்படுத்துங்கள் என்பதுதான். அமைச்சர் அவர்கள் வணிகர்கள் சொல்லி அடிசனல் சேல்ஸ் டாக்ஸ் கூட்டப்பட்டது என்று சொன்னார்கள். அதைப்பற்றிக் கொஞ்சம் விளக்கமாகச் சொன்னால் நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : பேரவைத் தலைவர் அவர் களே, என்ட்ரி டாக்ஸ் போடுகிறபோது, ஒரு குழு அமைக்கப்பட் டது. சட்டம் இயற்றுகிறபோது வெளியே ஒரு போராட்டம் நடத்தினார்கள், ஊர்வலம் நடத்தி முதல்வர் அவர்களைச் சந் தித்துப் பேசினார்கள். அவர்களுடைய உணர்வுக்கு மதிப்பளித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் அவர்களின் கோரிக்கையைக் கேட்டு அவற்றுக்கு பரிகாரம் தருவதற்காக அவர்கள் சொன்னார்கள், இந்த வரியினால் அரசுக்கு இவ்வளவு வருமானம் கிடைக்கும், அந்த வரி கிடைக்காத நிலையில் அதற்கு மாற்று வழி என்ன என்பதைச் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். அதற்கு மாற்று வழி வியாபாரிகளே சொல்லித்தான் அது பிறகு வந்திருக்கின்றது. ஆனால் இப்போது வியாபாரிகள் சொன்னது அடிஷனல் சேல்ஸ் டாக்ஸை வாங்குபவர்கள் மீது போடவேண்டும் என்று. அதாவது ஷிப்டிங் தி பர்டன் என்ற வகையில் அந்தமாதிரி செய்யவேண்டும் என்று அவர்கள் கேட்டார்கள்.

[பிற்பகல் 1–20]

ஷிப்டிங் தி பர்டன் என்று இருக்கிறதே அதை மாதிரி இதைச் செய்ய வேண்டும் என்று அவர்கள் கேட்டார்கள். ஆனால் அரசு அதை ஒத்துக் கொள்ளவில்லை. அதைத்தான் நான் முன்பே சொன்னேன். வாங்கும் நுகர்வோர்களுடைய நலன் பாதிக்காத வகையில் இந்த அரசு வரி விதிப்பு கொள்கைகளை கொண்டிருக்கிறது என்பதை நான் ஆரம்பத்திலேயே சொல்லியிருக்கிறேன். அதைத்தான் நான் இப்போதும் சொல்கிறேன். வேண்டுமானால் இப்போது இதை எடுத்து விட்டு, அந்த வகையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல என்ட்ரி டாக்ஸ் என்று கொண்டு வரலாமா என்று நான் கேட்க ஆசைப் படுகிறேன். எனவே சிங்கிள் பாயிண்ட், மல்ட்டி பாயின்ட் என்று

சொல்லுவதில் வியாபாரிகளுக்குள் ஒரு தெளிவான முடிவு இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே கூறி, அந்தந்த பொருள்களுக்கு கூடிய வரையில், அந்தப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படு கின்ற இடத்தைக் கண்டு பிடித்து, அது விற்பனை செய்யப்படு கின்ற இடத்தையும் கண்டு பிடித்து, அதை ஆய்வு செய்து, தணிக்கை செய்து, எப்படி வரி விதிக்கப்பட முடியுமோ அப்படி பொருள்களுக்கு இந்த அரசு ஒரு முனை வரிகளை கொண்டு வந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே கூறிக் கொள்கிறேன்.

அது மட்டும் அல்லாது இன்று மாண்புமிகு முதல்வர், எங்கள் தலைவர், புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி ஏற்பட்ட தற்குப் பிறகு 34 பொருட்களுக்கு பலமுனை வரியிலிருந்து ஒரு முனை வரியாக ஆக்கி மாற்றம் செய்து கொடுத்திருக்கிறார்கள். இன்று மொத்தம் நம்முடைய நாட்டில் தமிழகத்தைப் பொறுத்த வரையில் 144 பொருட்களுக்கு ஒரு முனை வரியிலே வரி விதிக் கப்படுகின்றன. அதிலே டிக்ளோட் கூட்ஸ் என்ற முறையிலே 13 இனங்கள் சேர்க்கப்பட்டு 157 பொருட்களுக்கு, ஷெட்யூல் 1, ஷெட்யூல் 2 ஆகியவைகளாக பிரிக்கப்பட்டு இன்று ஒரு முனை வரி விதிக்கப்படுகின்றன.

இதற்கு மேல் இந்த பலமுனை வரி என்பது 66 பொருட் களுக்கு இருந்து வருகிறது. அரசு பல பகுதிகளில் இவைகளை யெல்லாம் ஆராய்ந்து ஒன்றன் பின் ஒன்றாக, வியாபாரிகள் விரும்புகிற வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் விரும்புகிற வகையில், அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படாத வகையில், அவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்து, நிச்சயமாக நட வடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து சில உறுப்பினர்கள் மாநிலங்களுக்கிடையே வருகிற பொருள்கள் குறித்து வரி விதிப்பது—இன்டர் ஸ்டேட் டிரேட்-என்ற வகையில் குறித்துப் பேசினார்கள். இன்று சி.எஸ்.ஐ. மூலமாக இந்த அரசுக்கு வந்திருக்கிற வருவாய் 135.69 கோடி. கடந்த ஆண்டு வருவாயோடு ஒப்பிடுகையில் இந்த ஆண்டு 17.47 கோடி அதிகரித்து இருக்கிறது. சதவீத அதிகரிப்பு என்பது 15 சதவீதம் என்பதை நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன்.

அத்தோடு இது மைய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது. வணிக வரியை வசூல் செய்ய மட்டும் மாநில அரசுக்கு அதிகாரம் உண்டு. ஆனால் இதற்கு சட்டம் இயற்றும் அதிகாரம் மாநில அரசுக்கு இல்லை. டேக்ஸ் ஆன் கன்சைன்மெண்ட் கூட்ஸ் என்ற வகையில் அதைப் பற்றிச் சொன்னார்கள். அதற்கு இந்திய அரசியலைப்பில் 46-வது பிரிவில் திருத்தம் கொண்டு வந்தாலும் கூட, இந்தப் பொருட்களுக்கு வரி விதிக்கின்ற அதிகாரம் பார்லியமெண்டுக் குத்தான் இருக்கிறது என்ற காரணத்தால் அந்த பார்லியமெண்ட்



தான் அந்தச் சட்டத்தை கொண்டுவர வேண்டும். அதிலே பார்லிய மெண்ட் காலதாமதத்தை ஏற்படுத்தி வருகிறது. அதற்காக நமது தலைவர் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவர் அவர்கள் கூட இந்தக் காலதாமதத்தை உடனடியாக தீர்க்க சட்டம் கொண்டு வரவேண்டும் என்று மத்திய அரசுக்கு அண்மைக் காலத் தில் கடிதம் எழுதியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து கேளிக்கை வரி. இந்த கேளிக்கை வரி மூலமாக சென்ற ஆண்டு 39.26 கோடி ரூபாய் அரசுக்கு வந்தது. இந்த ஆண்டு 44.8 கோடி அரசுக்கு வருவாயாக வந்திருக்கிறது. 5.62 கோடி அதிகம் இந்த ஆண்டு. அந்த வகையில் இந்தக் கேளிக்கை வரி மூலமாக அதிகமான வருமானம் நமக்கு வந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக் கொள்கிறேன். இது சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த வெட்டுத் தீர்மானங்களை நான் பார்த்தேன். அவைகளை நடைமுறைப் படுத்த சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவா என்பதை எல்லாம் பார்த்து நாம் நடவடிக்கை எடுக்க இருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே நான் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த ஆண்டு தமிழக அரசு 14 படங்களுக்கு வரி விலக்குச் சலுகை கொடுத்திருக்கிறது. அதிலே 10 தமிழ் படங்கள், 4 ஆங்கிலப் படங்கள் என்பதை இந்த நேரத்திலே கூறிக் கொள்கிறேன். இன்று சினிமா தியேட்டர் களில் பல்வேறு முறைகேடுகள் நடைபெறுவதை பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். நிச்சயமாக இந்தத் துறை அவைகளை எல்லாம் களைவதற்கு நடவடிக்கை எடுக்குமென் பதை இந்த நேரத்தில் குறிப்பிடுகிறேன்.

குதிரைப் பந்தயத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் சொன்னார்கள். வருவாய் எல்லா இனங்களிலும் பெருகி இருக்கிற நேரத்தில் இந்தத் துறையில் மட்டும் வருவாய் இடை யில் குறைந்து பிறகு கூடுகிற நேரத்தில் அதனுடைய வேகம் போதாது என்று சொன்னார்கள். அதைநான் ஏற்றுக்கொள்கிறேன் ஆனால் அவர்கள் சொல்கிறபோது குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதுதான் அவர்களுடைய இயக்கத்ினுடைய கொள்கை என்று சொன்னார்கள். எங்களுடைய கொள்கையும், மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய கொள்கையும் குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதுதான் என்பதை இந்த நேரத்தில் கூறிக் கொள்கிறேன். அதிலே கருத்து வேறுபாடே கிடையாது. நல்ல காரியம் என்றால் யார் செய்தாலும், யார் கொண்டு வந்தாலும் அதை ஆதரிக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். அந்த வகையில் குதிரைப் பந்தயத்தை ஒழிப்பது தான் இந்த அரசினுடைய நோக்கம் என்பதை இந்த நேரத்தில் கூறிக் கொள் கிறேன்.

இதிலே இரண்டு விதமான வரிகள் இருக்கின்றன. ஒன்று டோட்டலைசர்ஸ். இதில் வரி ஏய்ப்பிற்கு வாய்ப்புகள் கிடையாது. இன்னொன்று புக்-மேக்கர்ஸ். இதில் வரி ஏய்ப்பிற்கு அதிக வாய்ப்புகள் இருக்கின்றன. உங்களுக்குத் தெரியும், வணிக வரித் துறை அதிகாரிகள் கண்காணிப்பாக இருந்து எச்சரிக்கையாக காரியங்களைச் செய்து வருகிறார்கள். இருந்தாலும் அவர்களையும் மீறி இவைகள் நடைபெறுகின்றன என்பதை நீங்களும் ஒப்புக்கொள்வீர்கள், நானும் ஒப்புக்கொண்டு தான் ஆக வேண்டும். அந்த வகையில் நிலைமைகள் அங்கே இருக்கின்றன. ஒரு உதாரணத்தைச் சொல்லலாம் என்று கருதுகிறேன். நாமெல்லாம் விவசாயப் பெருங்குடி மக்களைச் சேர்ந்தவர்கள். சந்தைக்கு உழவு மாடுகள் வாங்கச் செல்கிறோம். அங்கே மாட்டை விற்பவர்களும் வருகிறார்கள். வாங்குபவர்களும் வருகிறார்கள். விற்பவர்களுக்கும், வாங்குபவர்களுக்கும் இடையே தரகர்கள் நிற்கிறார்கள். அவர்களுக்கிடையே விற்பவர்களுக்கு ஒரு தரகர். வாங்குபவர்களுக்கு ஒரு தரகர். அவர்கள் கையிலே துண்டைப் போட்டு, உள்ளே கையை வைத்து ஏதோ சைகைசெய்கிறார்கள். என்ன பேசுகிறார்கள் என்ன சைகை செய்கிறார்கள் என்பது நமக்குத் தெரியாது. மாடு கொண்டுவந்தவருக்கும் விலை தெரியவில்லை. மாடு வாங்குபவருக்கும் விலை தெரியவில்லை. அவர்கள் தாங்களாகவே பேரம் பேசி முடித்து இறுதியாக ஒரு விலையை நம்மிடத்தில் சொல்கிறார்கள். நம்முடைய தரகர் அதை வாங்கித் தருகிறார்கள். அதைப் பெற்றுக்கொண்டு வருகிற சூழ்நிலைதான் அங்கே இருக்கிறது. அதைப்போலத்தான் இந்தக் குதிரைப் பந்தயத்தில் அங்கே நடந்து வருகிறது என்பதைக் கூறிக் கொள்கிறேன். நிச்சயமாக அப்படிப்பட்ட முறைகேடுகளை, குறைபாடுகளை களைவதற்கு இந்த அரசு தன்னுடைய சிந்தனையில் கொண்டிருக்கிறது. அதற்காக என்ன செய்யலாமென்று ஆலோசனை செய்து வருகிறது. அவற்றையெல்லாம் களைவதற்கு இந்த அரசு பிரிட்டிஷ் பேட்டர்ன், அதாவது பிரிட்டிஷ் முறையில் சட்டம் கொண்டு வர இந்த அரசு இருக்கிறதென்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

1981 ஆம் ஆண்டு ஓட்டல்கள், தங்கும் விடுதிகள் ஆகியவற்றில் அளிக்கப்படும் ஆடம்பர வசதிகள் மீது வரிவிதிப்புச் சட்டம் பற்றி இங்கே பேசுகிறபோது மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் ஒன்றைத் தெரிவித்தார்கள். ஓட்டல்கள், ரெஸ்டாரண்டுகளில் சாதாரணமானவர்களுக்கு வரியை விதிப்பதற்காக இந்த அரசு கொள்கைக் குறிப்பிலே சொல்லியிருக்கிறது என்று சொன்னார்கள். இந்த ஆண்டு கொள்கைக் குறிப்பிலே அப்படியில்லை என்று கருதுகிறேன். சென்ற ஆண்டு கொள்கைக் குறிப்பிலே இருந்தாலும் இருக்கலாமென்று கருதுகிறேன். நிச்சயமாக ஓட்டல்களில் அளிக்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு மட்டும்தான் வரி விதிக்கப்படும். அவர்கள் சொல்லியதைப் போல இதிலே வரி நீட்டிப்பு . . என்பதை இந்த





நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே வருமானம் 21 சதவீதம் உயர்ந்திருக்கிறது. 1983–84 ஆம் ஆண்டில் வருவாய் ரூபாய் 150 லட்சம். 1984-85 ஆம் ஆண்டில் வருவாய் ரூபாய் 181 லட்சம். இந்த உயர்வு 21 சதவீதம் என்பதைக் கூறிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து தமிழ் நாடு விளம்பர வரிச் சட்டம் 1983 ஆம் ஆண்டில் டிசம்பர் மாதத்தில் கொண்டு வந்தது. டிசம்பரிலிருந்து மார்ச் முடிய 2 லட்சம் ரூபாய் அரசுக்கு வருவாய் கிடைத்திருக்கிறது. இப்போது இந்த ஆண்டு வருவாய் 6 லட்சமாக உயர்ந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக் கொள்கிறேன்.

அடுத்து சோதனைச் சாவடிகள் எல்லாம் வேதனைச் சாவடிகளாக இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் மனம்நொந்து பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்தேன். நிச்சயமாக சோதனைச் சாவடிகள் வேதனைச் சாவடிகளாக இருக்காது. அவைகளை சாதனைச் சாவடிகளாக மாற்றுவதற்கு இந்த அரசு நடவடிக்கைகளை எடுக்குமென்பதை இந்த நேரத்தில் கூறிக் கொள்கிறேன். சோதனைச் சாவடிகளில் கட்டிடங்கள் கட்டுவதைப் பற்றிச் சொன்னார்கள். சோதனைச் சாவடிகள் சாலையின் நடுவிலேயே லாரிகள் நிற்பதை நானே பார்த்திருக்கிறேன். அதை எல்லாம் பார்த்து வந்த நேரத்திலே, இந்தச் சோதனைச் சாவடிகளுக்கு நல்லக் கட்டிடங்கள் கட்டவேண்டும், பல வசதிகளுடைய கட்டிடங்கள் இருக்க வேண்டும் என்பதை ஒத்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. தா. வீராசாமி:** மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் இங்கே சொன்னதைப் போல, சோதனைச் சாவடிகள் ரோட்டின் ஓரத்திலே இருந்தால், லாரிகளை ரோட்டின் ஓரத்திலே தான் நிறுத்துவார்கள். அது போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருக்கும். எனவே எங்கெங்கே நிலங்கள் கிடைக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவோ, அப்படிப்பட்ட இடங்களில் எல்லாம் இந்தச் சோதனைச் சாவடிகளை ரோட்டிலேயிருந்து உள்ளே தள்ளி, லாரிகளை சாலைகளிலே நிறுத்தாத அளவில், அது எவ்வளவு லாரியாக இருந்தாலும், உள்ளே தள்ளி நிற்கக் கூடிய வகையில், சோதனைச் சாவடிகளை அமைப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சோதனைச் சாவடிகளின் சாதனையைப் பற்றிச் சொன்னால் நீங்கள் அதை வரவேற்பீர்கள் என்பதற்காக சில விவரங்களைச் சொல்ல விரும்புகிறேன். 1983–84 ஆம் ஆண்டு, சோதனையிடப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை 38,090. இதனால் வசூலிக்கப்பட்ட இணக்கத் தொகை 108.70 இலட்சங்கள். முன் வரி வசூல் தொகை 63.98 இலட்சங்கள். 1984–85 ஆம் ஆண்டு சோதனையிடப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை 50,403. வசூலிக்கப்பட்ட இணக்கத் தொகை 141.68 இலட்சம். முன் வரி வசூல் 73.37 இலட்சம் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன.

இன்னொரு பிரிவு இருக்கிறது. அந்தப் பிரிவைப் பற்றி யாரும் பேசவில்லை. பேரவையினுடைய உறுப்பினர்கள் எல்லாம் பேசும்போது, திடீரென்று வருகிறார்கள், கடையிலே உட்காருகிறார்கள், சோதனையிடுகிறார்கள், கணக்கை எடுக்கிறார்கள், இப்படி எல்லாம் செய்கிறார்கள் இப்படி எல்லாம் செய்வது மிகத் தொந்திரவாக இருக்கிறது என்று சொன்னார்கள். அப்படிச் செய்வது என்போர்ஸ்மென்ட் விங், அதாவது செயலாக்கப் பிரிவு என்று அதற்குப் பெயர். இந்தப் பிரிவின் கீழ் தமிழகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, மதுரையிலே தலைமையிடம் ஒன்றும், சென்னையில் தலைமையிடம் ஒன்றும் இருக்கிறது. அதன் கீழ் பல்வேறு அதிகாரிகள் எல்லாம் பணியாற்றி வருகிறார்கள். அவர்களுடைய நோக்கம் எல்லாம், இப்படிச் சோதனை செய்வதன் மூலமாக லாரிகளில் பொருட்களைக் கடத்தி, வரி ஏய்ப்புச் செய்வது, வியாபாரிகள் ஒழுங்காக கணக்கு எழுதாமல், தங்களுடைய வரவு செலவுக் கணக்கை ஒழுங்காக புத்தகத்திலே கொண்டு வராமல், வரி ஏய்ப்புச் செய்கின்றவர்களை எல்லாம் சோதனை செய்வதன் மூலமாக அவர்களுடைய மனதிலே ஒரு நல்ல எண்ணத்தை உருவாக்க வேண்டும், வரி ஏய்ப்புச் செய்யக் கூடாது. நல்ல முறையில் ஒழுங்காக நியாயமான விலையில் பொருட்களை விற்று, கணக்குகளை ஒழுங்காகப் பராமரித்து, அரசுக்கு செலுத்த வேண்டிய வருவாயைக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தை அவர்களுக்கு உணர்த்துவதற்காகத்தான் இந்தப் பிரிவு உருவாக்கப்பட்டு, அது செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நம்முடைய ஜனதா கட்சியினுடைய உறுப்பினர் மாண்புமிகு ஆறுமுகம் அவர்கள் சொன்னதைப் போல, இது யாருக்கும் தொந்திரவு கொடுப்பதற்காக, அவர்களுக்கு இன்னல்களை, இடையூறுகளைக் கொடுப்பதற்காக உருவாக்கப்பட்ட செயலாக்கப் பிரிவு அல்ல என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். சோதனைச் சாவடிகளும், செயலாக்கப் பிரிவுகளும் வணிக வரித்துறையின் மூலமாக, வணிக வரி மூலமாக வருகின்ற வருவாயைப் பெருக்குவதற்காக— வியாபாரிகளுக்கு அச்சம் என்று நான் சொல்லவ ...ல்— அவர்களிடம்



நல்ல எண்ணத்தை உருவாக்குவதற்காக, இந்த இரு பிரிவுகளும் பணியாற்றி வருகின்றன என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தச் செயலாக்கப் பிரிவு மூலம் ஏற்பட்ட சாதனையை நான் குறிப்பிட விரும்புகிறேன். 1983–84 ஆம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்ட இனங்கள், 11,00,057. 1984–85-ல் கண்டு பிடிக்கப்பட்ட இனங்கள் 12,00,199. ஒரு வருடத்தில் லட்சத்திற்கும் மேல் உயர்ந்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். வரி விதிக்கப்பட வேண்டிய தொகை 172 கோடி 14 இலட்சம், 1983–84-ல். அதே நேரத்தில் 1984–85-ல் 216 கோடியே 61 இலட்சத்திற்கு உரிய பொருட்கள் மீது வரி விதிக்க வேண்டிய அளவிற்கு இந்தச் செயலாக்கப் பிரிவு இன்றைக்கு சாதனை புரிந்து இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். நான் மேலே சொன்னது டர்ன் ஓவர். இப்போது டாக்ஸ். இந்தச்செயலாக்கப் பிரிவு மூலமாக 1983-84-ல் வருமானம் 18 கோடி. 1984–85-ல் இந்தச் செயலாக்கப் பிரிவு மூலமாக வருமானம் 23.52 கோடி என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்ததாக, சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு பெரிய இனம், 18–5–1985 அன்று ராஜபாளையத்தில் வி. ராஜேந்திரன் அண்ட் கம்பெனி என்ற நிறுவனம் 48,19,013 ரூபாய் மதிப்புள்ள விற்பனையின் மீதான வரியாக ரூ. 5,09,551-ஐ வரி ஏய்ப்பு செய்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த மாதத்தில் சென்னையில் ஷிமோகா ஸ்டீல்ஸ் என்ற நிறுவனம் கோடிக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள விற்பனையின் மீது ரூ. 25 இலட்சம் வரி ஏய்ப்பு செய்துள்ளது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்த வகையில் அரசினுடைய வருவாய் ஏமாற்றப்படுகின்ற நேரத்தில் இந்த செயலாக்கப் பிரிவு தன்னுடைய கடமையை, பணியை செய்து அரசினுடைய வருமானத்தை பெருக்குவதற்கு இது பெரிதும் உறுதுணையாக இருந்து வருகிறது என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்றைச் சொல்கிறார்கள். கடலைப் பருப்பைப் பற்றி சொன்னார்கள். அது கூட கரூரில் அவர்கள் வரி ஏய்ப்பை பற்றி கண்டுபிடித்து இருக்கிறார்கள். ஆகவே 2 கோடியே 32 இலட்சம் ரூபாய்க்கு வரி விதிக்கின்ற தொகையின் அளவுக்கு பொருள்கள் பில்-டிரேட் செய்து இருக்கிறார்கள். ஒரு சிங்கள் பாயின்ட் அதற்கு அவர்கள் பில்-டிரேட் மூலமாக இரண்டாம் பர்சேசஸ் என்று சொல்லக்கூடிய அளவுக்கு அவர்கள் அங்கே பில் எல்லாம் தயாரித்து, போலித் தனமாக அங்கே பில்-டிரேட் செய்ததன் காரணமாக அங்கே வரி ஏய்ப்பு செய்து இருக்கிறார்கள். ஆகவே செயலாக்கப் பிரிவு இதை கண்டுபிடிக்கவில்லை.

[திரு. நா. வீராசாமி] [1985 ஜூன் 24

அங்கே உள்ள அசஸ்மெண்டு அட்மினிஸ்ட்ரேட்டீவ் டி. சி. திருச்சி அவர்கள் இதைக் கண்டு பிடித்து இப்போது அங்கே இன்வெஸ்ட்டிகேஷன் நடந்து கொண்டு இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன். அதனால் அரசுக்கு வருமானம் வரக் கூடியது 14 இலட்சம் ரூபாய் ஆகும். இன்னும் மேலும் அங்கே இன்வெஸ்ட்டிகேஷன் நடந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பல பேர் வணிகர்களுக்கு வணிக நல வாரியம் அமைக்கப்பட வேண்டும் என்று சொன்னார்கள். வணிக நல வாரியம் அமைப்பதற்கு நமது சட்டத்தில் இடம் இல்லை என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்கிறேன். இது ஒரு அரசு துறை. இதில் பிளானிங் எக்ஸ்பெண்டிசர் கிடையாது. நான் இன்னும் ஒன்றையும் சொல்கிறேன், நீங்கள் வருமானத்தைப் பற்றி எல்லாம் சொன்னீர்கள். 909 கோடி ரூபாய் அரசின் வருவாயில் 22 சதவீதம், 69 சதவீதம் என்று எல்லாம் சொன்னீர்கள். ஆனால் அதற்கு ஆகின்ற செலவை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த ஆண்டு ஆகியிருக்கின்ற செலவு 905.32 கோடி ரூபாய் வசூல் செய்வதற்கு அரசுக்கு வணிக வரித்துறையால் ஏற்பட்டு இருக்கிற செலவு 1.3 சதவீதம் ஆகும் என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக் கொள்கிறேன். குறைந்த செலவில் அதிக வருவாயை ஈட்டித் தருகின்ற ஒரே துறை இந்தத்துறை தான் என்பதை நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன். அதற்கு காரணம் உங்களுக்கு நன்கு தெரியும். நான்-பிளானிங், வளர்ச்சிப் பணியில் ஈடுபடுகின்ற துறை அல்ல இது. அந்த வகையில் இன்று வணிக வரித்துறை தன்னுடைய காரியங்களைச் செய்து கொண்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன். வணிக நல வாரியம் அமைக்காவிட்டாலும் கூட இன்று மாவட்ட அளவில் எல்லா மாவட்டங்களிலும் மாநில அளவிலும் ஆலோசனைக் குழுக்கள் இருக்கின்றன. அதிலே மாவட்ட அளவில் வணிக சங்கங்கள், வர்த்தக சபைப் பிரதிநிதிகள் இருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அதன் துணைத்தலைவராக இருக்கிறார்கள். மாநில அளவில் இன்று வணிக வரி துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் வணிக வரி சங்கத்தைச் சேர்ந்தவர்கள் 32 பேர் என்று நான் கருதுகிறேன், வர்த்தகர்கள் சங்கத்தினுடைய பிரதிநிதிகள் எல்லாம் இதிலே உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் ஒன்று கூடி பேசி தங்களுடைய சிரமங்களை, பிரச்சினைகளை அவ்வப்போது தெரிவிக்கின்ற விதத்தில் அந்தக் கருத்துக்கள் அங்கு ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஆலோசனைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு அதற்கு பரிகாரம் தேடப்பட்டு வருகின்றன என்பதை இந்த நேரத்தில் கூறிக் கொள்கிறேன்.

அதற்கு மேலாக வெல்பேர் கமிட்டி, வர்த்தகர் நலக் குழுக்கள் இருக்கின்றன. இவைகள் எல்லாம் வணிகர்களின் பிரச்சினைகளை மனதில் வைத்து அவர்களை பாதுகாப்பதில் அக்கறை



1985 ஜூன் 24] [திரு. நா. வீராசாமி]

காட்டி நடவடிக்கைகள் எடுத்து வருகிறது என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன். அதனால் வணிக நல வாரியம் அமைக்கத்தேவை இல்லை என்பதை இந்த நேரத்தில் கூறிக் கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிற போது பல்வேறு ஆலோசனைகளை சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் பேசுகின்றபோது இன்று ஓட்டல்களில் வரி விதிப்பு பற்றி எடுத்துச் சொன்னார்கள். 20 ரூபாய்க்கு கீழ் வாடகை என்று சொன்னால் வரியில்லை. 20 ரூபாயிலிருந்து 50 ரூபாய் என்று சொன்னால் நபர் ஒன்றுக்கு ஒரு நாளைக்கு 5 சதவீதம் வரி விதிக்கிறார்கள். 50 ரூபாய்க்கு மேல் இருக்கின்ற வாடகைக்கு 10 சதவீத வரி விதிக்கிறார்கள் என்பது நடைமுறையில் இருந்து வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இது பற்றி பிறகு ஆலோசனை செய்யப்படும் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்றை சொன்னார்கள், ஒரு குடைக்கு கீழே எல்லா வியாபாரத்தினுடைய லைசன்ஸ்களை வழங்க வேண்டும் என்று சொன்னார்கள். லைசன்ஸ் வழங்குவது வணிக வரி துறையின் வேலை அல்ல. அது உணவுத் துறையினுடைய வேலை. லைசன்ஸ் நாங்கள் கொடுப்பது இல்லை.

(பிற்பகல் 1-40)

நான் முன்பே குறிப்பிட்டது போல், 50 ஆயிரம் வரை பல முனை வரியில் வியாபாரம் செய்கிறவர்கள் பதிவு, ரிஜிஸ்டர் செய்து கொள்ளவேண்டும். அதற்குக் குறைந்த டர்ன்-ஓவர் உள்ளவர்கள் பதிவு செய்து கொள்ளத் தேவையில்லை. ஒருமுனை வரி என்று சொன்னால், ஒரு ரூபாயாக இருந்தாலும் 5 ரூபாயாக இருந்தாலும் அவர்கள் பதிவு செய்து கொள்ள வேண்டும். அந்த முறை தான் இன்று வணிக வரித்துறையிலே இருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

இங்கே 'கன்சைன்மென்ட் டாக்ஸ் அண்டு கன்சைன்மென்ட் நட்ஸ்'-ஐப் பற்றி மரியாதைக்கு உரிய நம்முடைய செம்மலை அவர்கள் பேசினார்கள் அது மத்திய அரசினுடைய வரம்புக்குள்ளே சட்டம் இயற்றுகிற பொறுப்பு இருக்கின்ற காரணத்தால், விரைவிலே பாராளுமன்றத்தில் ஒரு சட்டம் கொண்டு வரப்பட்ட பிறகு, நிச்சயமாக அவர் சொன்ன அப்படிப்பட்ட பொருள்களுக்கு எல்லாம் வரி விதித்து மாநிலத்தின் வருவாயை பெருக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் இதிலே முனைந்து அக்கறை காட்டி வருகிறார்கள் என்பதையும், அந்த வகையில் விரைவில் சட்டம் அதற்குக் கொண்டு வரப்படும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. தா. வீராசாமி] [1985 ஜூன் 24

பல்வேறு உறுப்பினர்கள் பல்வேறு கோரிக்கைகளை, ஆலோ
சனைகளை இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். வெல்லம்
பற்றி மாண்புமிகு செம்மலை அவர்களும், அருமை சகோதரா
மாண்புமிகு சித்தன் போன்றவர்களும், வெல்லத்திற்கு ஒரு
முனை வரி வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். இதில்
முன்பே பல முனை வரியிலிருந்து ஒரு முனை வரி ஆக்கப்பட்டு,
பிறகு வியாபாரிகளேவந்து, 'தொல்லை தாங்கமுடியவில்லை,
கணக்கு வைத்துக் கொள்ள முடியவில்லை, பல
முனை ஆக்குங்கள்' என்று வேண்டுகோள் விட்டதன் பேரில்
நிர்ப்பந்தத்தின் பேரில் அது பல முனை ஆக்கப்பட்டிருக்கிறது.

எனவே, மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்களும், செம்
மலை அவர்களும் சொன்னது போல், பல முனையினால் என்ன
வருவாய், ஒரு முனையினால் என்ன வருவாய் அரசுக்கு வந்து
கொண்டிருக்கிறது ? வருவாய் உயர்ந்து கொண்டிருக்கிறதா,
குறைந்து கொண்டிருக்கிறதா என்று பரிசீலனை செய்து— எங்க
ளுடைய நோக்கம் அரசினுடைய வருவாய் குறையக் கூடாது.
யாருக்கும் தொந்தரவு செய்வது இல்லை—அந்த அடிப்படை
யில் ஒட்டு மொத்தமாக சமுதாயத்திற்கு அந்த வகையில் நிச்சய
மாக பரிசீலனை செய்யப்படும் என்பதை இந்த நேரத்திலே
தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கு பேசியவர்கள் அருமைச் சகோதரர் மாண்புமிகு சின்ன
ராசு போன்றவர்கள், நம்முடைய தமிழ்நாட்டிலே இருக்கின்ற
ஆலைகள் சில நேரங்களிலே சிரமப்படுகின்ற நேரங்களிலே,
நலிவுறுகின்ற நேரங்களிலே, அதற்கு வரிச் சலுகை கொடுத்து
மீண்டும் செயல்பட உதவ வேண்டும் என்று கேட்டுக் கொண்
டார்கள்.

நம்முடைய நாட்டிலுள்ள தொழிற்சாலைகள் தொடர்ந்து
நல்ல முறையில் செழித்து வளரவேண்டும். அதற்கு மேலாக,
பல்வேறு தொழில் அதிபர்கள் இங்கே வந்து தொழில்கள்
துவங்கவேண்டும் என்று அப்படிப்பட்ட சலுகைகளை எல்லாம்
இந்த அரசு செய்து வருகின்றது. அந்த வகையில் தன்னுடைய
வரி விதிப்புக் கொள்கையை வணிக வரித் துறையில் இந்த அரசு
வைத்திருக்கிறது என்று நான் கூறிக் கொள்ளுகிறேன்.

எனவே, தமிழக அரசினுடைய கொள்கை, மாண்புமிகு புரட்
சித் தலைவர் எம்.ஜி.ஆருடைய எண்ணம், நோக்கம், சிந்தனை
எல்லாம் தமிழ்நாட்டில் நிறையத் தொழில்கள் தொடங்கப்பட
வேண்டும். தமிழகம் தொழில் மயம் ஆகவேண்டும் அதன்
மூலமாக இந்த நாட்டிற்கு வேண்டிய வருவாய் பெருக
வேண்டும் என்ற அடிப்படையில் தான் இந்த அரசு வரிவிதிப்புக்
கொள்கையை வைத்திருக்கிறது என்று கூறி, இங்கு இருக்கின்ற



1985 ஜூன் 24] [திரு. தா வீராசாமி]

தொழிற்சாலைகள் பல்வேறு நேரங்களிலே சிரமப்படும் நேரத்
தில், இந்த அரசு அவர்களுக்கு எல்லாம் ஒரு சலுகை காட்டி
வந்திருக்கிறது ; இன்னமும் காட்ட இருக்கிறது என்றும் கூறிக்
கொள்கிறேன்.

இன்னொன்றையும் சொல்கிறேன். இப்படி நாம் வரி விதித்து,
இங்கு இருக்கின்ற தொழிற்சாலைகள் அடுத்த மாநிலங்களுக்குச்
சென்றுவிடுமோ என்ற ஐயத்தை மாண்புமிகு உறுப்பினர்கள்
தெரிவித்தார்கள். இந்த அரசு அதற்கு நிச்சயமாக இடம்
கொடுக்காது. அடுத்த மாநிலங்களிலே இருந்து, தொழில்கள்
இங்கே வருவதற்கு நமது வரி விதிப்புக் கொள்கை பாலமாக,
வழிவகையாக அமையும் என்றும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அந்த வகையில், இன்று இந்த வணிக வரித் துறையிலே
மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பல்வேறு ஆலோசனைகளை,
சில நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.
அவைகளை எல்லாம் கருத்திலே கொண்டு, இந்த அரசு வருங்
காலத்தில் நிச்சயமாக செயல்படும் என்று கூறிக் கொள்ளு
கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் 12 பேர் பல்வேறு வெட்
டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். ஒருவர், தாலிக்கு
தங்கம் கொடுப்பதற்கு வரி விலக்கு வேண்டும் என்று சொல்லி
யிருக்கிறார். தாலி செய்கின்ற நேரத்தில் அது பணக்கார வீட்
டுத் தாலி, ஏழை வீட்டுத் தாலி என்று பாகுபாடு படுத்த முடி
யாது.

ஆனால், அரசுக்கு இது நல்ல காரியம் ; அப்படிச் செய்ய
லாம் என்ற எண்ணம் இருந்தாலும், அந்த இரக்க எண்ணத்தை,
நல்லெண்ணத்தை பயன்படுத்தி, வியாபாரிகள் அவர்கள் தாலி
யாகவே விற்றதாக கணக்கு காட்டுவார்கள். வரி ஏய்ப்பு செய்
வார்கள். அதனால், அப்படிப்பட்ட கோரிக்கைகளை எல்லாம்
இந்த அரசுக்கு நல்ல மனம் இருந்தாலும் கூட, சூழ்நிலை, நடை
முறைப் பிரச்சினைகளை கருத்தில் கொண்டு, இதைச் செய்வ
தற்கு இல்லை என்று கூறிக்கொள்ளுகிறேன்.

சிறு தொழில்களில் பொருட்களை உற்பத்தி செய்வதற்குரிய
இயந்திரங்களுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டும் என்று சொல்
கிறார்கள். அதை எல்லாம் அளிப்பதற்கு இல்லை. ஏன் என்று
கேட்டால், பல்வேறு துறைகள் மூலம், வங்கிகள், அரசுத் துறை
கடன்கள், வட்டிச் சலுகைகள் பல்வேறு சலுகைகள் கொடுப்பதன்
காரணமாக, நான் முதலிலேயே சொன்னபடி, இது பிளானிங்
டிபார்ட்மென்ட் இல்லை. பல்வேறு துறைகளிலே அவர்களுக்குச்
சலுகைகள் வருகின்ற காரணத்தினால் இந்தத் துறை அதைச்
செய்யவில்லை என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

[திரு. தா. வீராசாமி] [1985 ஜுன் 24

இப்படி பல்வேறு வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக் கிறார்கள். அவற்றிற்கு முடிந்த வரையில் நான் பதில் கூறி யிருக்கிறேன் என்று கருதுகிறேன். இத்துடன் என்னுடைய உரையை முடித்துக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் அத் தனை பேர்களும் சொன்ன கருத்துக்கள் இந்த அரசின் குறிப்பில் இருக்கிறது ; அதைப் பார்த்து நியாயமானவற்றை நல்லபடி யாக முடிந்த வரையில் செயல்படுத்தும் என்று கூறிக்கொண்டு இந்த மானியத்தை நிறைவேற்றித் தரும்படி வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கையால் செய்யப்படும் பேனாக்களுக்கு, அதாவது எபோனைட் பேனாக்களுக்கு 1–5–1985 முதல் வரி விலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதைப் போல கை யால் தயாரிக்கப்படுகின்ற பால்பாயின்ட் பேனாக்களுக்கு வரி விதிக் கிறார்கள். இரண்டும் ஒரே மூலப்பொருளில்தான் செய்யப்படு கின்றது. இன்னும் சொல்லப்போனால் அதைவிட பால் பாயின்ட் பேனா மலிவாக விற்கப்படுகிறது. எனவே, அந்த பால் பாயின்ட் பேனாக்களுக்கான வரியை ரத்து செய்ய முடியுமா என்பதை உங்கள் மூலமாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.எஸ்.வி. சித்தன் அவர்கள் கேட்ட கேள்விக்கு இப்பொழுது என்னால் நேரடியாகப் பதில் சொல்ல முடியாது. அதற்காகத்தான் சொன் னேன். பிறகு பரிசிலனை செய்து, எந்தெந்த இடத்தில், எப் படி வரியை ரத்து செய்வது அல்லது ஒருமுனை வரிக்குக் கொண்டு வருவது அல்லது பலமுனை வரியாக்குவது என்று முடிவு செய்ய லாம் என்ற எண்ணம் இந்த அரசுக்கு இருக்கிறது என்று பொது வாகச் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு அங்கத்தினர் அவர் கள் சொன்ன கோரிக்கையையும் இந்த அரசு கவனத்தில்கொள் ளும்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பொது விற்பனை வரி மானியக் கோரிக்கையின் மீது மாண்புமிகு அமைச்சரவர்கள் நல்ல முறை யில் பதில் சொன்னாலும், வணிகர்களைப் பற்றி பலயிடங்களில் குறை சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றிப் பரவாயில்லை. அனைத்து மானியக் கோரிக்கைகளிலேயும் பொதுவாக அமைச் சர்கள் ஏதாவது சலுகைகளை வழங்குவார்கள் ; அதை கருத் தில்கொண்டு வணிகர்களுக்கு ஏதாவது ஒரு சலுகையை வரி விதிப்பைப் பொறுத்தவரையில் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிகர்களைப் பற்றி நான் தவறாகச் சொன்னதாகச் சொன்னார்கள்.



1985 ஜுன் 24] [திரு. தா. வீராசாமி]

ஆனால், நாட்டிலே உண்மையாக நடக்கின்ற நடைமுறைகளை இந்த மன்றத்திலே சொல்லவில்லையென்றால், இந்த வணிக சமுதாயத்திலுள்ள, ஒன்றிரண்டு பேர்கள், இங்கொன்றும் அங்கொன்றுமாகத் தவறு செய்கின்றவர்கள் தங்களைத் திருத்திக் கொள்வதற்கான வாய்ப்பு இருக்காது என்பதால் நான் அதைச் சுட்டிக் காட்டுகிறேனேயொழிய, சமுதாயத்தில் அவர்கள் கெட்டவர்கள் என்று மக்கள் மத்தியில் தவறான எண்ணத்தை இந்தச் சபையின் மூலம் உருவாக்குவதற்காக அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மன்றத்தின்மூலம் சொல்லப்படும் அறிவிக்கைகள், வார்த்தைகள் அத்தனையையும் நம்முடைய தமிழ்ச் சமுதாயத் திலே உள்ள அத்தனைபேரும் ஒட்டுமொத்தமாகப் படித்து, தங் கள் வாழ்க்கையை நல்ல வாழ்க்கையாக அமைத்துக் கொள்ள வேண்டுமென்ற கருத்திலே சில தவறுகளைச் சுட்டிக்காட்ட வேண் டிய பொறுப்பிலே நாம் இருக்கிறோம்.

சலுகைகளைப் பற்றி அவர்கள் கேட்டார்கள். வரி விதிப்பு தான் இந்தத் துறையின் வேலை, இது பிளானிங் கிடையாது என்று சொன்னேன். எனவே, சலுகைகளை அறிவிக்க ஒன்று மில்லை. இந்தத் துறையிலே வரி ஏய்ப்பு செய்கின்றவர்களைப் பற்றித் துப்பு கொடுக்கின்றவர்களுக்குச் சன்மானங்களைக் கொடுப்பதற்கு ஏற்கெனவே சட்டத்தில் இடமிருக்கிறது ; அப் படி நடைமுறையில் இருக்கிறது.

எனவே, அந்த வகையிலே, கடந்த காலத்திலே வணிகர் களுடைய நலன்கள் புரட்சித் தலைவரவர்களின் ஆட்சியிலே எப் படிக் காக்கப்பட்டு வந்ததோ அதைப் போல வருங்காலத்திலே யும் அவர்களுடைய நலன்கள் பேணி பாதுகாக்கப்படும் என்ற உறுதியை மட்டும் இந்த அவையின் மூலம் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

### கோரிக்கை எண் 4.—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

திரு. என். எஸ். வி. சித்தன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள் ளப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 13,86,86,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங் கப்பெற வேண்டும்."

[1985 ஜூன் 24

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (25-6-1985) காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-49 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

224. தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் 1982-83 ஆம் ஆண்டிற்கான ஐந்தாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

225. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் 1980-81-ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை [தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 35 பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

226. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் 1981-82 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை [தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 35 பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

125. கோரிக்கை எண் 4—தமிழ்நாடு பொது விற்பனை வரியும், ஏனைய தீர்வைகளும்—நிர்வாகம் குறித்த விளக்கக் குறிப்பு (தமிழ் ஆங்கிலம்).





இணைப்பு.

(307 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பை காண்க.)

மானியக் கோரிக்கை எண் 4.

தமிழ்நாடு பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும், நிர்வாகம்.

தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டமும், ஏனைய வணிக வரிகளும் 1983-84 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கு உரிய வருவாயில் 69 சதவீதத்திற்கும் அதிகமான வருவாயைப் பெற்றுத் தந்தன. 1982-83-ல் வணிக வரிகள் வாயிலாக ரூ. 696.04 கோடி வருவாய் கிட்டியது. 1983-84-ல் ரூ. 751.18 கோடி கிட்டியது. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் சுமார் 8 சதவீதம் கூடுதலாகும்.

2. வணிக வரித்துறை பின்வரும் வரி விதிப்புச் சட்டங்களை நிருவகித்து வருகிறது.

(1) தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம்.

(2) தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரிச் சட்டம்.

(3) தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு விற்பனை வரி (மேல் வரி) சட்டம்.

(4) 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டம்.

(5) தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டம்.

(6) தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டம்.

(7) தயழ்நாடு 1935 ஆம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச் சட்டம்.

(8) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஓட்டல்கள், தங்கும் இல்லங்களில் ஆடம்பர வசதிகள் மீதான வரிச் சட்டம்.

(9) தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு விளம்பர வரிச் சட்டம்,

3. கடந்த ஐந்தாண்டுகளில் வணிகவரித்துறை வசூல் செய்த வருவாயும் துறைக்கு ஏற்பட்ட செலவும் வருமாறு :—

| ஆண்டு (1) | வருவாய். (2) (ரூபாய் இலட்சத்தில்) | செலவு. (3) |
|---|---|---|
| 1979–80 .. | 388,27.94 | 598.09 |
| 1980–81 .. | 491,63.93 | 669.00 |
| 1981–82 .. | 594,25.00 | 778.31 |
| 1982–83 .. | 696,04.09 | 942.59 |
| 1983–84 .. | 751,18.00 | 1,067.55 |
| 1984–85 .. | 905,32.00 | 1,161.30* |

* (1985 பிப்ரவரி வரை)

1984–85 ஆம் நிதி ஆண்டில், ரூபாய் 905,32.00 இலட்சம் வசூலிக்கப்பட்டது. இதற்கு முந்தைய ஆண்டில் இதே கால அளவில் வசூலான தொகை ரூபாய் 751,18.00 இலட்சமாகும். இத்தொகை சென்ற ஆண்டை விட ரூபாய் 154.14 இலட்சம் அதிகரித்துள்ளதைக் காட்டுகிறது. அதாவது 21 சதவீதம் அதிகரித்துள்ளது.

4. வணிகவரி அலுவலகங்களுக்கு அரசுக் கட்டிடங்கள் கட்டுதல் :

வணிகவரி அலுவலகங்களுக்கு வரும் வணிகப் பெருமக்களுக்கும் வணிகவரித்துறை பணியாளர்களுக்கும் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்கும் நோக்குடன், படிப்படியாக வணிகவரி அலுவலகங்களுக்கு கட்டிடங்கள் கட்டும் பணியை அரசு மேற்கொண்டுள்ளது. தற்போது, காஞ்சிபுரம், கோவில் பட்டி, ஈரோடு, தஞ்சாவூர், திருநெல்வேலி, கும்பகோணம், கடலூர், தருமபுரி, சேலம், உதகமண்டலம், வேலூர், தூத்துக் குடி, கோயம்புத்தூர், திண்டுக்கல், பொள்ளாச்சி, திருப்பூர், நாகர்கோவில், விருதுநகர், சென்னை, மதுரை ஆகிய இடங்களில் உள்ள வணிகவரி அலுவலகங்கள் அரசுக் கட்டிடங்களில் அமைந் துள்ளன. திருச்சி, பூவிருந்தவல்லி ஆகிய இடங்களில் கட்டு மானப் பணி நடந்தேறி வருகிறது. விரைவில் கட்டி முடிக்கப் பட்டுவிடும்.



5. சோதனைச் சாவடிகள் கட்டுமானப் பணி நிலை.

கே. ஜி. சாவடி, புளியறை, சின்னசேலம், சன்னூரப்பட்டி, மீனாட்சிபுரம், பூவிருந்தவல்லி, ஒசூர், ஆகிய இடங்களில் சோதனைச் சாவடிகளுக்கான கட்டிடம் கட்டும் பணி முடிவடைந் துள்ளது. கடம்பர் கோயில், காட்பாடி, களியக்காவிளை ஆகிய இடங்களில் சோதனைச் சாவடிக்கான கட்டிடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

6. மேசை, நாற்காலி, அலமாரி, தொலைபேசி முதலியனவும் ஏனைய வசதிகளும் :

அலுவலகங்களில் பழைய மேசை, நாற்காலி, அலமாரி, ஆகிய வற்றை மாற்றிவிட்டு அதற்கு பதிலாக பணியாளர்களுக்கு குறித்த பணிக்குத் தேவையான மேசை, நாற்காலி முதலிய வற்றை வழங்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பார்வை யாளர்களுக்கான மேசை, நாற்காலி முதலியவற்றிற்கும் வகை செய்யப்பட்டுள்ளன. தற்போது கட்டப்பட்டு வரும் கட்டிடங் கள் உட்பட அனைத்து அரசுக் கட்டிடங்களிலும், பார்வையாளர் கூடத்திற்கு வகை செய்யப்பட்டுள்ளது. கழிவறைகள், உண வருந்தும் கூடம், மிதிவண்டி நிறுத்துமிடம் ஆகிய வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன. பார்வையாளர்களுக்காக மேசை, நாற்காலிகள், முதலியவற்றை வாங்குவதற்கு ரூ. 16 இலட்சத் திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேசை, நாற்காலிகள் முதலியவற்றை வாங்குவதற்காக சென்னை, மதுரை ஆகிய இடங்களில் ஒவ்வொரு செயற்படுத்தும் பிரிவிற்கும் ரூ. 3 இலட் சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது. நாகர்கோவிலில் உள்ள வரிவிதிப்பு வட்ட அலுவலகங்களுக்கு வருகை தருபவர்களின் வசதிக்காக மேசை, நாற்காலி முதலியவற்றை வாங்குவதற்கு ரூ. 2,088-க்கு அனுமதி வழங்கப்பட்டது.

7. பணியாளரமைப்பு :

1–1–1984-லிருந்து 31–12–1984 வரையில் கூடுதலாக அனு மதிக்கப்பட்ட பதவிகள் குறித்த விவரம் :—

(i) உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுக் களின் பேரில் மாநில அரசு தாக்கல் செய்ய வேண்டிய எதிர் உறுதி மொழிப் பத்திரங்களைத் தயாரிப்பதில் அரசு வழக்கு நடத்துநருக்கு உதவும் நோக்குடன் வணிக வரிகள் ஆணையாளர் அலுவலகத்தில் ஒரு வணிகவரி அலுவலர் பதவிக்கும், உதவியாளர் இருவர் பதவிக்கும் ஒரு சுருக்கெழுத்து தட்டச்சர் பதவிக்கும் ஒரு அலுவலக உதவியாளர் பதவிக்கும் அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

(ii) ஈரோடு, மேல் முறையீட்டு உதவி ஆணையாளரிடம் மேல் முறையீடுகளை விசாரிக்க பின்வரும் துணைப் பணியாளர்களுடன் துறைப் பிரதிநிதி ஒருவரை நியமிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| துறைப் பிரதிநிதி | | 1 |
| இளநிலை உதவியாளர் | .. | 1 |
| தட்டச்சர் | .. .. | 1 |
| பதிவுரு எழுத்தர் | .. .. | 1 |
| அலுவலக உதவியாளர் | .. | 1 |

(iii) தென்னாற்காடு மாவட்டம், கடலூரிலுள்ள வணிக வரிகள் உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு பதிவுரு எழுத்தர் பதவித் தரத்தில் தொலைபேசி இயக்குபவர் பதவி ஒன்றுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(iv) மதுரை, வணிகவரி அலுவலகக் கட்டிடத்திற்கு பின் வரும் பராமரிப்புப் பணியாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மின் தூக்கி இயக்குவோர் .. | | | 3 |
| காவலாள் | .. | .. | 1 |
| துப்புரவாளர் | .. | .. | 1 |
| மசால்ச்சி | .. | .. | 1 |

(v) வெவ்வேறு அலுவலகங்களுக்கு பதினொரு ஓட்டுநர் பதவிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(vi) வடக்கு வேலூர், காட்பாடி சோதனைச் சாவடி ஆகிய இடங்களிலுள்ள வணிகவரி அதிகாரி ஒவ்வொருவருக்கும் ஒரு காவலாள் வீதம் இரு காவலாள் பதவிகளுக்கும், வணிகவரி ஆணையாளர் அலுவலகத்திற்கு பெருக்குபவர் பதவி ஒன்றுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

8. கூடுதல் ஆயத்தீர்வை :

துணி, சர்க்கரை, புகையிலை போன்றவற்றின் மீது 1957-
லிருந்து மத்திய அரசு, விற்பனை வரிக்குப் பதிலாக கூடுதல் ஆயத்
தீர்வை விதித்து வருகிறது. இக்கூடுதல் ஆயத்தீர்வையிலிருந்து
கிடைக்கும் நிகர வருவாயில் மாநில அரசுக்கு பங்கு கிடைப்பதால்
இப் பொருட்களுக்கு விற்பனை வரி எதுவும் விதிக்க முடியாது.
விற்பனை வரிக்குப் பதிலாக கூடுதல் ஆயத்தீர்வை விதிப்பது





குறித்த நிலை ஆய்வுக் குழுவின் மூன்றாவது கூட்டம் புதுடில்லி
யில் 13-6-1983 அன்று திட்டக்குழுச் செயலாளர் திரு. கே. வி.
இராமநாதன் தலைமையில் நடைபெற்றது. அக் கூட்டத்தில்
ஒவ்வோர் ஆண்டும் விற்பனை வரி வசூலின் அளவு 14 சதவீதத்
திலிருந்து 18 சதவீதம் வரை அதிகரிப்பதாகக் கூறப்பட்டது.
எனினும் கூடுதல் ஆயத் தீர்வையிலிருந்து கிடைக்கும் பங்கு
இந்தத் தொகைக்கு ஒரு போதும் ஈடாகாது. எனவே, இசை
வளிக்கப்பட்ட மதிப்பான 10.8 சதவீதம் எப்பொழுதோ எய்தப்
படவேண்டி இருந்தும் இதுவரை எய்தப்படாததால் மாநிலல்
களுக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது. இத்தகைய நிலையில்
மேற்குறிப்பிட்ட 10.8 சதவீதம் 1989-90 ஆம் ஆண்டுக்கு
முன்னர் எய்த முடியாது. அக்கால அளவிற்குள் 10.8 சதவீதம்
வரி விதிப்பு எய்த வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல
என்றும், எனவே, சிறப்பு முயற்சிகளை எடுக்காவிட்டால்
மாநிலங்கள் வருவாயை தொடர்ந்து இழக்கும் என்றும்
குறிப்பிடப்பட்டது.

சில பொருட்களைப் பொறுத்த மட்டில், கூடுதல் ஆயத்தீர்வை
விதிப்பதை நீட்டிக்க வேண்டும் என்ற தனது விருப்பத்தை
அவ்வப்போது மத்திய அரசு தெரிவித்து வந்துள்ளது. வனஸ்பதி,
மருந்துப் பொருட்கள் மற்றும் மருந்துகள், சிமிட்டி, காகிதம்
மற்றும் காகித அட்டை, பெட்ரோலியம் பொருட்களின் மீது
விற்பனை வரிக்குப் பதிலாக கூடுதல் ஆயத் தீர்வை விதிப்பதற்கான
செயற்குறிப்பு மீது தனது அறிக்கையை திரிபாதி குழு அனுப்
பியது. 2-11-1983 அன்று புதுடில்லியில் மாண்புமிகு மத்திய
நிதி அமைச்சர் நடத்திய முதலமைச்சர்கள் மாநாட்டில், மேற்
சொன்ன 5 பொருட்களின் மீது விற்பனை வரிக்குப் பதிலாக
கூடுதல் ஆயத் தீர்வை விதிக்கும் கருத்துருவிற்கு மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடுமையாக எதிர்ப்பு தெரி
வித்தார்கள். ஏனைய மாநிலங்களிலிருந்தும் எதிர்ப்பு தெரிவிக்
கப்பட்டது. இவை குறித்து மாநில அரசுகளுக்கிடையே கருத்து
ஒருமைப்பாட்டை கொண்டு வருவதற்காக தொடர்ந்து முயற்சி
கள் செய்யப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

9. சில கூடுதல் இனங்கள் மீது விற்பனை வரி விதித்தல் :

1982 ஆம் ஆண்டு அரசியலமைப்புச் (46-வது திருத்தம்)
சட்டத்திற்கு குடியரசுத் தலைவரின் இசைவு 2-2-1983 அன்று
பெறப்பட்டது. மாநிலங்களுக்கிடையே ஆன ஒப்படைச் சரக்கு
போக்குவரத்து, பணி ஒப்பந்தங்கள், தவணைக் கொள்முதல்,
பொருட்களைக் குத்தகைக்கு விடுதல், சட்டப்படிக்கு இணைக்கப்
படாத சங்கங்களுக்குச் செய்யப்படும் விற்பனை, ஆற்றக்கூடிய
பணி வகைக்காக எனக் கருதப்படும் (உணவு மற்றும் பானங்கள்)
விற்பனை ஆகியவற்றிற்கு வரி விதிக்க இச்சட்டம் வகை செய்
கின்றது. மேற் சொன்ன இனங்கள், விற்பனை அல்லது கொள்
முதல் மீது வரி விதிப்பதன் வரம்புக்கு அப்பாற்பட்டதாக இருந்து

வந்தன. மாநிலங்களிடையே ஆன ஒப்படைச் சரக்கு
போக்குவரத்து வரி கணிசமான கூடுதல் வருவாய்க்கு வழி
செய்யும் என்று எதிர் பார்க்கப்பட்டது. ஆனால் இச்சட்டம்
இயற்றப்படுவது மத்திய அரசினால் மேற்கொள்ளப்பட்டு நாடாளு
மன்றத்தால் நிறைவேற்றப்பட வேண்டும்.

இந்திய அரசியலமைப்புச் (46 ஆம் திருத்தம்) சட்டம் நிறை
வேற்றப்பட்டவுடன் ஒப்படைச் சரக்கு அனுப்புகை வரி விதிப்பு
முறைகள் பற்றி மாநில அரசு தனது கருத்தை மத்திய அரசுக்கு
தெரிவித்து, நாடாளுமன்றத்தில் இது குறித்து உடனடியாக
சட்டம் கொண்டு வரவேண்டிய அவசியத்தை வலியுறுத்தியது.
2–11–1983 அன்று நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில்
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நம்முடைய கருத்துக்களை
வலியுறுத்திக் கூறினார். மேற்கொண்டு காலதாமதம் செய்யாமல்
சட்டம் கொண்டு வரும்படி மத்திய அரசைக் கேட்டுக்கொண்டார்.
பன் மாநில விற்பனைக்கு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ்
வரி விதிக்கப்பட்டு அதன் மூலம் கிடைக்கும் வருவாய் மாநில
அரசுக்கு வழங்குவது போன்று ஒப்படைச் சரக்கு அனுப்புகை
வரி மூலம் கிடைக்கும் வருவாயை சரக்குகள் எங்கிருந்து அனுப்பப்
பட்டனவோ அந்த மாநிலங்களுக்கே கொடுக்கப்பட வேண்டும்
என்று வலியுறுத்தப்பட்டது. எனினும் ஒப்படைச் சரக்கு அனுப்பு
கை வரியில் ஒரு பகுதியைத் தங்களுக்கு வழங்க வேண்டுமென்று
சில மாநிலங்கள் கேட்டன. எனவே மத்திய நிதியமைச்சரைத்
தலைவராகவும், ஒரு சில முதலமைச்சர்களை உறுப்பினர்களாக
வும் கொண்டு குழு ஒன்றை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டது.
மேற்குறிப்பிட்ட பெயர்ப் பட்டியலில் குறிப்பிடப்பட்ட உறுப்
பினர்களில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும்
ஒருவராவார். மாநிலங்களுக்கிடையே ஒப்படைச் சரக்கு அனுப்
புகை மீது வரி விதிப்பது தொடர்பான பல்வேறு பிரச்சினைகள்
குறித்து இக்குழுவின் கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

திருத்திய அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் அனுமதிக்கப்
பெற்ற ஏனைய பற்று வரவு மீதான வரி விதிப்பைப் பொறுத்த
வரையில் தக்க சட்டத்தை இயற்றும்படி மாநில அரசுகள் கேட்டுக்
கொள்ளப்பட்டுள்ளன. பணி ஒப்பந்தங்கள், பொருட்களைக்
குத்தகைக்கு விடுதல், தவணைக் கொள்முதல் போன்றவற்றிற்கு
வரி விதிக்க தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்
(நான்காம் திருத்த) சட்டம் அதிகாரம் அளிக்கிறது. இச்சட்டம்
29–5–1984 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வ்ந்தது. பின்னர்
தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில்
திருத்தம் செய்யப்பட்டு அது 1–10–1984 ஆம் நாளிலிருந்து
செயலுக்கு வந்தது. பணி ஒப்பந்தங்கள் மீது 1–10–1984 ஆம்
நாளிலிருந்து விற்பனை வரி விதிக்க இச்சட்டத்தில் வகை செய்யப்
பட்டது.



10. பொருட்களை குத்தகைக்கு விடுதல், வாடகைக்கு விடுதல்,
போன்றவற்றின் மீது இச்சட்டத்தின் 3ஏ புதிய பிரிவின் கீழ்
வரி விதிப்பது பற்றி பரிசீலித்து வரி வீதத்தை பரிந்துரைக்க
அமைக்கப்பட்ட குழுக்கள்.

பொருட்களை குத்தகைக்கு விடுதல், வாடகைக்கு விடுதல்,
முதலியவற்றின் மீது தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது
விற்பனை வரிச் சட்டத்தின் 3–ஏ பிரிவின் கீழ் வரி விதிப்பு பற்றி
பரிசீலித்து வரி வீதத்தைப் பரிந்துரைக்க 1984 ஆம் ஆண்டில்
அரசு இரு குழுக்களை அமைத்தது. முதல் குழுவின் தலைவர்
செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சராவார். மேலும்
அரசு அதிகாரிகள் மூவர் உறுப்பினர்களாக உள்ளனர். ஓர்
அதிகாரி இக்குழுவின் உறுப்பினர்-செயலாளராக உள்ளார்.
மேலும் அரசு சார்பற்ற வேறு இரு உறுப்பினர்களும் உள்ளனர்.
திரைப்படச் சுருள், திரைப் படக் கருவி, நிழற்படச் சாதனங்கள்
போன்றவற்றை குத்தகைக்கு விடுதல் மீது விதிக்கத்தக்க வரி
வீதம் பற்றி இக் குழு கருத்து தெரிவிக்கும்.

இரண்டாம் குழுவில் வணிகவரி ஆணையாளர் தலைவராகவும்
அரசு அதிகாரிகள் மூவர் உறுப்பினர்களாகவும், ஓர் அதிகாரி
உறுப்பினர்-செயலாளராகவும் மேலும் அரசு சார்பற்ற இருவர்
உறுப்பினர்களாகவும் உள்ளனர். தளவாடம், இயந்திரங்கள்,
மோட்டார் வண்டிகள், கட்டிடங்கள், கட்டுமானப் பொருட்கள்
போன்றவற்றை குத்தகைக்கு விடுதல் மீது விதிக்கத்தக்க வரி
வீதத்தை இக்குழு தெரிவிக்கும். இக்குழுவின் முதல் கூட்டம்
17–11–1984 ஆம் நாளன்றும் இரண்டாம் கூட்டம் 26–12–1984
ஆம் நாளன்றும் நடைபெற்றன. இக் குழுவின் வரைவுப் பரிந்
துரைகள் செயல் வகைப்படுத்தப்பட்டு வருகிறது.

11. வணிக வரித்துறைப் பணியாளர் பயிற்சி நிலையம், சென்னை.

திரு. எஸ். ஆர்.கைவார், ஐ.சி.எஸ். (ஓய்வு பெற்றவர்) அவர்
களின் தலைமையிலான தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு விற்பனை
வரிக்குழு வணிக வரித்துறையில் அதிகாரிகளுக்குப் பயிற்சியளிப்ப
தற்கான தற்போதைய ஏற்பாடு போதிய அளவில் இல்லை என்று
கூறி வணிகவரி அதிகாரிகளுக்கென்றே அனைத்து வசதிகளும்
கொண்ட பயிற்சி நிலையத்தை அமைக்க வேண்டும் என்று பரிந்
துரைத்தது. அதற்கிணங்க, 1982-ல் வணிக வரிப் பணியாளர்கள்
பயிற்சி நிறுவனத்தை அமைக்கும் ஆணையை அரசு பிறப்பித்தது.
அந்நிறுவனம் தற்போது சென்னை-6, கிரீம்ஸ் சாலை,
வணிகவரிகள் கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது. அதற்கு
துணை ஆணையாளர் (வணிகவரிகள்) பதவித்தரத்தில் இயக்குனர்
ஒருவர் தலைவராக இருக்கிறார். வணிகவரித்துறையிலிருந்து

உதவி ஆணையாளர் (வணிக வரிகள்) பதவித் தரத்திலுள்ள இரண்டு முதுநிலை விரிவுரையாளர்களும் வணிக வரி அதிகாரி பதவித்தரத்திலுள்ள ஒரு விரிவுரையாளரும், கொண்ட ஆசிரியர் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. வணிகவரி அதிகாரிகள், வணிக வரித்துணை அதிகாரிகள், வணிகவரி உதவி அதிகாரிகள் ஆகி யோருக்கு முறையே 6 வாரங்கள், 3 வாரங்கள் 6 வாரங்கள் என்ற அளவில் பயிற்சி வகுப்பு நடத்தப்படுகிறது. 1984-ல் 295 அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அது பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வணிக வரி அதிகாரிகள் | .. . | 46 |
| வணிகவரித் துணை அதிகாரிகள் | . . | 125 |
| வணிகவரி உதவி அதிகாரிகள் | . . | 124 |

இந்நிறுவனத்தைச் சேர்ந்த இயக்குநரும், ஆசிரியர் குழுவும் தயா ரித்துள்ள பாடக் குறிப்புகள் பயிற்சியாளர்களுக்கு அளிக்கப்படு கின்றன. இந்நிறுவனத்திற்கென்று நூலகம் ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. அதில் வைக்கப்பட்டுள்ள நூல்கள் பயிற்சி பெறு வோருக்கும், பயிற்சி அளிப்போருக்கும் பெரிதும் பயனுள்ளதாக இருக்கிறது. "புள்ளி விவரங்களை கணக்கிட்டு பொறி மூலம் தொகுத்தல்" "புள்ளி விவர இருபொருள்களைத் தயாரிக்கும் நியதிகள்", "வரி வசூலிப்புச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப் படும் வசூல் நடவடிக்கைகள்", 'சோதனைச் சாவடியின் செயல் முறையும், அதிகாரிகள் லாரிகளைச் சோதனையிடுதல்" போன்ற சிறப்பு தலைப்புகளில் கௌரவ விரிவுரையாளர்கள் சிறப்பு விரிவுரையாற்றும் வகையில் சிறப்பு விரிவுரைகளுக்கும் ஏற்பாடு செய்யப்படுகிறது.

பயிற்சி பெறுவோர்களுக்கு, பயிற்சிக்கால இறுதியில் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. சம்பந்தப்பட்ட அதிகாரியின் குழு விவாதம், பொதுவான செயல்முறை ஆகியவற்றின் அடிப் படையில் ஆசிரியர் குழுவினால் வகுப்பு அறை மதிப்பெண்கள் வழங்கப்படுகின்றன. வெளியிடங்களிலுள்ள தகவல் தொகுப்புப் பிரிவு போன்ற இடங்களுக்கு கணக்கீட்டுப் பொறி தொழில் நுட்பத்தில் நடைமுறை செயலறிவு பெறுவதற்காக அழைத்துச் செல்லப்படுகின்றனர். குதிரைப் பந்தய வரியில் அனுபவ அறிவு பெறுவதற்காக குதிரைப் பந்தயத் திடல்களுக்கு அழைத் துச் செல்லப்படுகின்றனர். குஜராத்தி மொழியில், சான் றிதழ் வகுப்பு ஒன்று விரைவில் நடத்தப்படவிருக்கிறது. பெரிய அளவு உற்பத்தி, வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அரசுத் துறை நிறுவனம், மற்றும் கூட்டுறவு அமைப்பு அதிகாரிகளுக்கு விற்பனை வரிச் சட்டங்களில் பாடங்கள் நடத்த இந்நிறுவனம் முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது.



## 12. ஆலோசனைக் குழுக்கள்.

விற்பனை வரி நிர்வாகத்தில் கருத்துப் பரிமாற்றம், கருத்து உதவி பெறும் வகையில் பல்வேறு நிலைகளில் ஆலோசனைக் குழுக்களை அரசு அமைத்து வருகிறது. அவற்றின் பங்கு என்ன என்பது கீழே விவரிக்கப்பட்டுள்ளது :—

### மாவட்ட அளவிலான குழுக்கள் :

மாவட்ட அளவிலான குழுவிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் தலைவராக இருக்கிறார். அரசுச் சார்பு உறுப்பினர்களுடன் வர்த்தக சபை, வணிகச் சங்கங்கள், கூட்டுறவு, உழவுத் தொழில் சார்பு அமைப்புகள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் அரசுச் சார்பற்ற உறுப்பினர்களாக அதில் அங்கம் வகிக்கின்றனர். இக்குழுக்கள் வர்த்தக துறைக்கே உரித்தான பிரச்சினைகளை விவாதிக்கின்றன. இக்குழுக்களின் முடிவுகளும், ஆலோசனைகளும், நிர்வாக மேம் பாடு கருதியும் வர்த்தக சமூகத்தை எதிர்நோக்கியுள்ள பிரச் சனைகளை அணுகவும் கருத்தில் கொள்ளப்படுகின்றன.

### மாநில அளவிலான ஆலோசனைக் குழு :

மாநில அளவிலான விற்பனைவரி ஆலோசனைக் குழு 1—10—1984லிருந்து 2 ஆண்டுக் காலத்திற்கு மீண்டும் அமைக் கப்பட்டது. இக்குழுவிற்கு வணிகவரித்துறை அமைச்சர் தலை வராவார். வேளாண்மைத் துறை அமைச்சரும் ஊரகத் தொழில் துறை அமைச்சரும், உறுப்பினர்களாவர். பல்வேறு வணிகர்கள் சங்கங்கள், வர்த்தக சபை ஆகியவற்றின் பிரதிநிதிகள் 32 பேர் இக்குழுவின் உறுப்பினர்களாக இடம் பெற்றுள்ளனர். சட்டப் பேரவையைச் சேர்ந்த ஆறு உறுப்பினர்களும் சட்ட மேலவை யைச் சேர்ந்த ஒரு உறுப்பினரும் அரசு அதிகாரிகள் மூவரும் இதில் உறுப்பினர்களாக அங்கம் வகிக்கின்றனர்.

### வணிகர்கள் நல ஆலோசனைக் குழு :

1983 மே மாதத்தில் வணிகர்கள் நல ஆலோசனைக் குழு வொன்று இரண்டாண்டுகளுக்கு அமைக்கப்பட்டது. வணிக வரிகள் துறை அமைச்சர் இதற்குச் தலைவராவார். நிதி அமைச்சர், ஊரகத் தொழில் அமைச்சர் ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்களாவர். அத்துடன் அரசுச் சார் அலுவல் முறை உறுப்பினர்களும் அரசு அதிகாரிகளான 3 உறுப்பினர் பற்ற 15 உறுப்பினர்களும் இதில் இடம் பெற்றுள்ளனர். இக்குழு, வியாபாரிகளின் பிரச்சினைகளையும் சிக்கல்களையும் அறிய முயற்சிக்கிறது. அவர்களின் சிக்கல்களைத் தீர்க்க பரிந்துரைகள் செய்வது குறித்து ஆலோசிக்கிறது.

13. குறை தீர்க்கும் பிரிவு :

குறை தீர்க்கும் பிரிவு ஒன்று 1984 செப்டம்பரில் ஏற்படுத்தப் பட்டது. இணை ஆணையாளர், இதன் தலைவராவார். துணை ஆணையாளர் (வரைவுப் பிரிவு), உதவி ஆணையாளர் (சட்டம்) ஆகியோர் இப்பிரிவின் உறுப்பினர்களாவர். வணிக சமூகத்தினரின் குறைகளைக் கேட்டு, அவற்றை விரைவில் தீர்க்க நடவடிக்கை எடுப்பதற்கென்றே இப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

14. தகவல் தொகுப்புப் பிரிவு :

வணிகவரி ஆணையாளர் அலுவலகத்தில் உள்ள தகவல் தொகுப்பு பிரிவில் 3 பணிப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. வணிகவரி அதிகாரி பதவித் தரத்திலுள்ள வழி முறை பகுப்பாய் வாளர் இதன் தலைவராவார். இவர் மக்கள் தொடர்பு அதிகாரி, மற்றும் துணை ஆணையாளரின் (புள்ளி விவரம்-ஆராய்ச்சி) கட்டுப்பாட்டில் செயல்படுபவராவார்.

விற்பனைவரி தொடர்பான புள்ளி விவரங்களை கணக்கிட்டு பொறி மூலம் தொகுப்பதே இப்பிரிவின் முக்கிய பணியாகும். பொருள்வாரியான மொத்த வியாபாரத் தொகை, விதிக்கப்பட்ட வரி முதலிய தகவல்கள் தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வரி விதிப்பு அதிகாரிகளால் IP 1 படிவங்களிலும் மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் அளிக்கப்படும் விவரங்கள் IP 2 படிவங்களிலும் இவ்விருச் சட்டங் களின் கீழ் வராத ஆண்டு விற்பனைத் தொகை விபரம் IP 3 படி வங்களில் சம்பந்தப்பட்ட ஆண்டுக்காக ஒவ்வொரு வணிகரின் வரி விதிப்பு பதிவுருக்களின் அடிப்படையில் கொடுக்கப்படுகின்றன. அத்துடன், ஒரு லட்சம் ரூபாயும் அதற்கு மேற்பட்டும் ஆண்டு மொத்த வியாபாரத் தொகை உள்ள வியாபாரிகளிடமிருந்து ஒவ்வொரு ஆண்டின் அரையாண்டிற்காக பொருள் வாரியான தற்காலிக புள்ளி விவரமும், வரி விவரமும் திரட்டப்பட்டு வரவு-செலவுத் திட்ட நோக்கங்களுக்காக தகவல் தொகுப்புப் பிரிவில் வகைப்படுத்தப்படுகின்றன.

ஆய்வு ஆண்டில் 1981-82, 1982-83 வரி விதிப்பு ஆண்டுகள் தொடர்பான விவரங்களைத் தொகுக்கும் பணி தகவல் தொகுப்பு பிரிவில் பூர்த்தி செய்யப்பட்டது. 30-9-1984-டன் முடி வடையும் அரையாண்டு தொடர்பான தற்காலிகக் கணக்குப் புள்ளி விவரங்கள் தற்போது இப்பிரிவில் தொகுக்கப்பட்டு கணக் கீட்டுப் பொறி மூலம் தொகுக்கப்படுவதற்காக அரசு தகவல் தொகுப்பு நிலையத்திற்கு அனுப்பப்படுகின்றன.

1984 ஆம் ஆண்டில், 1980—81-க்காக I P 1-ஐ அடிப்படையாகக் கொண்டு வெளியிடும் ஆக்கப் பொருள் விவரக் குறிப்புகள் அரசு தகவல் தொகுப்பு நிலையத்திலிருந்து வரப் பெற்றுள்ளன. 1983 செப்டம்பருடன் முடிவடையும் அரையாண்டுக்கான தற்காலிக வெளியிடும் ஆக்கப்பொருள் விவரங்களும் வரப்பெற்றுள்ளன.

தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டம், தமிழ்நாடு உள்ளாட்சி மன்றங்களின் நிதிச் சட்டங்கள் ஆகியவற்றின் கீழ் 1981-82 ஆம் ஆண்டுகளுக்கான புள்ளி விவரங்கள் வணிகவரி அதிகாரிகளிடமிருந்து (இணக்கம் செய்யப்பெறாத பகுதிகளுக்கு) வரப்பெற்று தொகுக்கப்பட்டு அரசு தகவல் தொகுப்பு நிலையத்திற்குக் கணக்கீட்டுப் பொறி மூலம் தொகுக்கப் பெறுவதற்காக அனுப்பப்பட்டன.

தமிழ்நாடு வணிகவரிகள் துறையில் தகவல் சேகரிப்பு ஏற்பாடு பற்றி புது டில்லியிலுள்ள தேசிய பொது நிதி-கொள்கை ஆய்வு நிறுவனம் அளித்துள்ள அறிக்கை ஆய்வு செய்யப்பட்டது. இம்முறையை மாதாந்திர விவரக் கணக்கு ஏற்பாடாக மாற்றுவது (முக்கிய வருவாய் தரும் பொருள்கள் தொடர்பான தகவல் நடப்பு நிலவரப்படி கிடைப்பதற்கு ஏதுவாக இருப்பது) பரிசீலனையில் உள்ளது.

### 15. அமைப்பு-செயல்முறைப் பிரிவு :

இப்பிரிவில் வணிகவரி அதிகாரி ஒருவர், தட்டச்சர் ஒருவர் அடிப்படைப் பணியாளர் ஒருவர் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். இப்பிரிவின் செயல் நோக்கங்களில் குறிப்பிட்ட துறையின் தொடர்ந்தாற்போன்ற விஸ்தரிப்பின் காரணமாக மதிப்பீட்டு அலுவலகங்களில் மாறியுள்ள பணியின் அளவை வரையறுத்த முறையில் ஆய்வு செய்வது, தேவையான இடங்களில் கூடுதல் பணியாளர் நியமனத்திற்கு ஆலோசனை கூறுவது ஆகியவை இடம் பெற்றுள்ளன. இப் பிரிவு கீழ்க்காணும் பணியினங்களைக் கவனித்து வருகிறது:—

(i) தனிப்பட்ட தகவலாளர்களுக்கு வெகுமதிகள் வழங்குவது.

(ii) துறை அதிகாரிகளுக்கு முதலமைச்சரின் தகுதிச் சான்றிதழும், ரொக்கப் பரிசும் வழங்குதல்.

(iii) வருகைகள் (பிற மாநிலங்களிலிருந்து அரசு அதிகாரிகள் வருகை புரிதல்).

**16. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம்**

***(A) சட்டத்தில் திருத்தங்கள் செய்தல் :***

சிப்பத்தில் அடங்கியுள்ள அல்லது அதில் சிப்பம் செய்யப்பட்ட பொருள்களுக்கு பொருந்தக் கூடிய வீதங்களில் சிப்பமிடும் பொருள்களின் மதிப்பிற்கும் சிப்பமிடும் கட்டணங்களுக்கும் வரி விதிக்க வகை செய்ய மேற்படிச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் (7) என்னும் புதிய உட்பிரிவு அமைத்துக் கொள்ளப்பட்டது.

பலமுனை விற்பனை வரிக்கு விலக்கு அளிப்பதற்கான அளவு 50,000 ரூபாய் என்பது 1—4—1984 முதற்கொண்டு 1,00,000 ரூபாயாக உயர்த்தப்பட்டது. பதிவு நோக்கத்திற்காக பலமுனை வரி விதிப்பின்கீழ் வரும் பொதுவான பொருள்கள் குறித்த ஆண்டு விற்பனை மொத்த வியாபாரத் தொகை அளவு 30,000 ரூபாய் என்பதிலிருந்து 50,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. 1,00,000 ரூபாய்க்கு குறையாமல், ஆனால் ரூ.2,00,000 ரூபாய்க்கு மேற்படாமல் மொத்த விற்பனை வியாபாரத் தொகை கணக்குள்ள வணிகர்களுக்கு 1—4—1984 முதற்கொண்டு 7 ஆம் பிரிவின்கீழ் வரி விதிக்க வகை செய்யப்பட்டது. இதை அடுதது 3(1), 7(1), 7(ஏ), 16(ஏ), 20 ஆகிய பிரிவுகள் உரியவாறு திருத்தப்பட்டன.

பின்வரும் பற்றுவரவு வகைகளுக்கு மாநில அரசு வரி விதிக்க 1982 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் (46 ஆம் திருத்த) சட்டம் வகை செய்கிறது. இவை முன்னர் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 7வது அட்டவணையில் கண்டுள்ள II—ஆம் பட்டியலில் 54 ஆம் பதிவின்கீழ், மாநில அரசின் சட்ட அதிகார வரம்புகளுக்கு அப்பாற்பட்டிருந்தன.

1. ஒப்பந்தம் ஒன்றின் மூலம் அல்லாது செய்து கொள்ளப்படும் சொத்து மாற்றம் (எடுத்துக்காட்டாக, கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட பொருள்களைக் கட்டாயமாக விற்பனை செய்தல்)

2. பணி ஒப்பந்தம்.

3. தவணைக் கொள்முதல் பற்று வரவுகள்.

4. பொருள்களின் குத்தகைகளும் வாடகைகளும்.

5. சட்டப்படி அன்றி வேறு வகையில் அமைந்த சங்கங்கள் அல்லது நபர்கள் மூலம் அதன் உறுப்பினர்களுக்கு பொருள்கள் வழங்குதல்.

6. ஓட்டல்கள், ரெஸ்ட்டாரண்டுகள் மூலம் உணவும், பானங்களும் வழங்குதல், மேற்சொன்ன பற்றுவரவுகளுக்கு வரி விதிக்க 2-ஆம் பிரிவைச் சேர்ந்த (h), (n) ஆகிய உட்பிரிவுகள்,



திருத்தப்பட்டன. மொத்த ஆண்டு வியாபாரத் தொகை 50,000 ரூபாய்க்கு குறையாமலிருக்கக் கூடாதென்ற நிபந்தனைகளுக் குட்பட்டு, எப்பொருளையும் பயன்படுத்தும் உரிமைக்கு வரி விதிக்க 3ஏ என்னும் புதிய உட்பிரிவு அமைத்துக் கொள்ளப் பட்டது.

பணிகள் ஒப்பந்தத்திற்கு வரிவிதிப்பது தொடர்பான விதிகள் இயற்ற அதிகாரம் அளித்து 53 ஆம் பிரிவு (2) உட்பிரிவைச் சேர்ந்த (b) பகுதிக்குப் பின்னர் (bb) என்னும் புதிய பிரிவு ஒன்று அமைத்துக் கொள்ளப்பட்டது.

**(B) விதிகளில் திருத்தம் செய்தல்.**

ஒவ்வொன்றும் தனிப்பட்ட நிர்வாகத்தின்கீழ் வருவதும், ஒரு கோடி ரூபாய்க்கு மேல் ஆண்டு மொத்த வியாபாரத் தொகை உள்ளவையுமான பல்வேறு பிரிவுகள் அல்லது கிளைகள் கொண்டுள்ள வரி செலுத்துவோர் வணிகவரி ஆணையரிடம் அனுமதி பெற்று தனியே ஆண்டு விவரக் கணக்குகள் சமர்ப்பிக்கும் வகையில் 7-ஆம் பிரிவில் (4) என்னும் புதிய உட்பிரிவு அமைத்துக் கொள்ளப்பட்டது.

1984 ஆம் ஆண்டு 22 ஆம் சட்டம், செயலுக்கு வந்த நாளிலிருந்து அதாவது 22—5—1984-லிருந்து 6 (cc) என்னும் விதி ரத்து செய்யப்பட்டுள்ளது.

பணி ஒப்பந்தங்களை நிறைவேற்றுவது தொடர்பாக பொருள்களின் (பொருள்களாக அல்லது வேறு வகையில்) உரிமை மாற்றத்திற்காக வணிகர்களுக்கு செலுத்தத்தக்க தொகையை நிர்ணயம் செய்யும் முறையை வரையறுக்க 6(எ), 6(பி) என்னும் புதிய பிரிவுகள் அமைத்துக் கொள்ளப் பட்டன.

பலமுனை வரிக்குட்பட்ட பொருள்கள் தொடர்பான குறைத்து மதிப்பிடப்பட்ட பொருள் விவரப்பட்டியல் சம்பந்த பட்ட பற்றுவரவை சேர்த்துக் கொள்ளும் வகையில் 18-சி பிரிவு திருத்தப்பட்டது.

**(C) முதலாம் அட்டவணையில் திருத்தம் :**

இனம் 13.—பணப்பேழை, பணப்பெட்டிகள், சுவரில் புதைக்கப்பட்ட பணப்பேழைகள், பாதுகாப்புப் பெட்டகங்கள், பெட்டக அறைகள், இரும்பு அறை அல்லது நிலவறைக் கதவுகள், பலகணிகள் (அவற்றின் பாகங்களும் துணை பாகங்களும் உட்பட) ஆகியவை இவ்வகையில் சேர்த்துக் கொள்ளப்பட 1—10—1984 முதற்கொண்டு இப் பதிவு திருத்தப்பட்டுள்ளது.

[1985 ஜூன் 24

இனம் 41.—'' இத்தகைய பொருள்களின் பாகங்களும்
துணை பாகங்களும்'' சேர்த்துக் கொள்ளப்படும் வகையில்
இப் பதிவு 1—10—1984 முதற்கொண்டு திருத்தப்பட்டுள்ளது.

இனம் 41-டி.—''வோல்டேஜ் ஸ்டெபிலைஸர்கள்'' சேர்த்
துக் கொள்ளப்படும் வகையில் 1—10—1984 முதற்கொண்டு இப்
பதிவு திருத்தப்பட்டுள்ளது.

இனம் 90.—''கூரை அமைக்கப் பயன்படும் ஓடுகள்''என்ப
தற்கு பதிலாக ''இந்த விவர அட்டவணையில் வேறு இடத்தில்
குறிப்பிட்டுள்ள ஓடுகள் நீங்கலாக அனைத்து வகை ஓடுகள்''
என்பதைச் சேர்த்துக் கொள்வதற்காக இப்பதிவைத் திருத்து
வதன்மூலம் இப்பதிவு 1—10—1984 முதற்கொண்டு திருத்தப்
பட்டுள்ளது.

இனம் 99.—இந்த இனத்தின் கீழ், இத்தகைய பம்புகளின்
பொதுவாகப் பயன்படுத்தப்படும் பாகங்கள், துணைப் பாகங்கள்
ஆகியவற்றைச் சேர்க்க இயலும் வண்ணம் இப்பதிவானது
1—10—1984லிருந்து திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

இனம் 123. –'பிரசர் குக்கர்கள்' என்பதற்குப் பின்னர்,
41-பி இனத்தின் கீழ் வருபவை தவிர ஏனைய பொருள்களைச்
சேர்த்து இப்பதிவானது 1—10—1984-லிருந்து திருத்தியமைக்
கப்பட்டுள்ளது.

இனம் 137.— இப்பதிவானது பின்வருமாறு இரண்டாகப்
பிரிக்கப்பட்டு 1—10—1984-லிருந்து திருத்தியமைக்கப்
பட்டுள்ளது.

| | |
|---|---|
| (i) பின்வரும் (ii) ஆம் இனத்தின் கீழ் வராத இரால், ஒட்டுடல் பிராணிகள் (நண்டு, நத்தை வகைகள்) நத்தை, சிப்பி இனம், தவளைகள், தவளைக் கால்கள். | மாநிலத்தில் இறுதி—5 யாகக் கொள்முதல் செய்யப்பட்டது. |
| (ii) குப்பி அல்லது டின்களில் அடைக்கப்பட்ட அல்லது குளிரவைக்கப்பட்ட அல்லது வேறு வகையில் பதனிடப்பட்ட இரால், ஒட்டுடல் பிராணிகள் (நண்டு, நத்தை வகைகள்) நத்தை, சிப்பி இனம், தவளைகள், தவளைக்கால்கள். | மாநிலத்தில் இறுதி—5 யாக கொள்முதல் செய்யப்பட்டது. |

இனம் 1.—மின்னணுவியல் படியெடுக்கும் முறைகளைச்
சேர்க்க இயலும் வண்ணம் இப்பதிவானது 1–1–1985-லிருந்து
திருத்தியமைக்கப்பட்டுள்ளது.



1985 ஜூன் 24]

இனம் 69. – வரி விதிப்பு முனை, முதல் கொள்முதல் முனையி
லிருந்து கடைசிக் கொள்முதல் முனைக்கு 5–1–1985-லிருந்து
மாற்றப்பட்டுள்ளது.

இனம் 136. – ஒளி ஊடுறுவத்தக்க, ஓரளவு ஒளி ஊடுறுவத்
தக்க, ஒளி ஊடுறுவதாக நெகிழும் தன்மை கொண்டதும், நெகிழும்
தன்மையற்றதுமான குழாய்கள், குழாய் பொருத்திகள்,
டியூப்புகள் ஆகியவை உட்பட அனைத்து வகை பி.வி.சி.
குழாய்கள், டியூப்புகள், பொருத்திகள் ஆகியவற்றை இந்த
இனத்தின் கீழ்க் கொண்டுவர இயலும் வண்ணம் இப்பதிவானது
1–1–1985 லிருந்து திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

(D) வரிக் குறைப்பு :

2,500 சிசி அளவிற்கு மிகையான எந்திரத்திறன் கொண்டதும்
5,625 கிலோ கிராம் வரையில் மொத்த எடையுள்ள மென்ரக
வணிக வண்டிகளுக்கு 20—5—1984-லிருந்து வரி வீதம் 12 சத
வீதமாகக் குறைக்கப்பட்டது.

துணியால் செய்யப்பட்ட பைகளுக்கான வரி வீதம்,
17–12–1980-லிருந்து செயல் வடிவம் கொடுத்து குறைக்கப்
பட்டது.

சேலத்திலுள்ள சேலம் மாவட்ட மாச்சத்து சவ்வரிசி தயா
ரிப்பு பணித் தொழில் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமும் தருமபுரியி
லுள்ள தருமபுரி மாவட்ட மாச்சத்து தயாரிப்புப் பணித் தொழில்
கூட்டுறவுச் சங்கத்தின் மூலமும் விற்பனை செய்யப்பட்ட சவ்வரிசி,
மரவள்ளிக் கிழங்கு, மாச்சத்து ஆகியவற்றின் விற்பனை மீதான
பல்முனை வரி வீதம் 5 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக்
குறைக்கப்பட்டது.

பாலிதீன் சிறுமணிகள், ஹெச்.டி.பி. (HDP), எல்.டி.பி.
(LDP) பாலி புரோப்பிலின், ஏ.பி.எஸ். பிளாஸ்டிக்குகள்,
பி.வி.சி. (PVC) போன்ற பிளாஸ்டிக் மூலப் பொருள்கள் மீது
1–10–1984-லிருந்து 31–3–1985 வரையில் ஆறு திங்கள்களுக்கு
பல்முனை வரி வீதம் 5 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்
கப்பட்டது.

திருவாளர்கள் இண்டியன் ஆர்கானிக் கெமிக்கல்ஸ் லிமிடெட்
திறுவனம் தயாரித்த பாலியெஸ்டர் ஸ்டேபிள் பைபர் (Poyester
stable fibre) விற்பனை மீதான வரி வீதம் 15–7–1985 ஆம்
நாள் உட்பட அந்நாள் வரையில் 2 சதவீதமாகக் குறைக்கப்
பட்டது.

கோயம்புத்தூர், குன்னூர் ஆகிய இடங்களிலுள்ள ஏல மையங் களில் விற்பனை செய்யப்படும் தேயிலையின் மீதான ஒருமுனை வரி 6 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

திருவாளர்கள் மெட்ராஸ் பெட்ரோ கெமிக்கல்ஸ் லிமிடெட், இராஜ் ஆப்பிரிக்கண்ட்ஸ் ஆகிய நிறுவனங்களுக்கு மூன்றாண்டுக் கால அளவுக்கு (30-12-1981-லிருந்து 29-12-1984 வரையில்) ட்ரான்ஸ்பாம் எண்ணெயைப் பொறுத்தவரையில் இச் சட்டத்தின் 3 (4) ஆம் பிரிவின் கீழ் அளிக்கப்படும் சலுகை வரி வீதம் நீட்டிக்கப்பட்டது.

திருவாளர்கள் இந்துஸ்தான் மோட்டார் லிமிடெட், எர்த் மூவிங் எக்யுப்மெண்ட் டிவிசன், மேல் நல்லாத்தூர், திருவள்ளூர், தமிழ்நாடு, விற்பனை செய்யக்கூடியவையும் இச்சட்டத்தின் முதல் அட்டவணையின் 55 ஆம் இனத்தின் கீழ் வரும் ''கிராவலர் டிராக்டர்கள், புல்டோசர்கள், வீல் டோசர்கள்'' 55-ஏ ஆம் இனத்தின்கீழ் வரும் ''நெடுஞ்சாலைகளில் பயன்படுத்தக்கூடிய கியர் டம்பர்கள், பாட்டம் டம்பர்கள், லோடர்கள், ஸ்க்ரேப் பர்கள்'' ஆகிய பொருட்களுக்குச் செலுத்த வேண்டிய வரி விதமானது 9 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப் பட்டது.

(E) வரித் தள்ளுபடி :

தஞ்சாவூர் மாவட்டம், மாயூரத்தைச் சார்ந்த திருவாளர்கள் ஆர். எஸ். கிருஷ்ணா அண்ட் கம்பெனி 1980-81 மற்றும் 1981-82 ஆம் ஆண்டுகளில் 15-3-1980 முதற்கொண்டு 2-6-1981 வரையிலான கால அளவிற்கு தென்னமரக்குடி எண்ணெய் விற்பனை மீது செலுத்த வேண்டிய 8 சதவீத ஒருமுனை வரிக்கும் 4 சதவீத பலமுனை வரிக்கும் உள்ள வேறுபாட்டுத் தொகை முறையே ரூ. 30,757 மற்றும் ரூ. 6,552 சில நிபந்தனைக்குட் பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது.

1-4-1974 முதல் 8-5-1979 வரையிலான கால அளவில் மரவள்ளிக் கிழங்கு திப்பி (Tippi) பருத்தி விதை உமி ஆகிய வற்றிற்கு வணிகர்கள் வரி வசூலிக்கவில்லை எனில் அவற்றிற்கு செலுத்தத்தக்க விற்பனை வரி தள்ளுபடி செய்யப்பட்டது.

4-3-1974 முதல் 8-5-1979 முடியவுள்ள கால அளவில் 14-6-1978 ஆம் நாளிட்ட மதுரை, விற்பனை வரி மேல் முறை யீட்டு நடுவர் மன்றத்தின் (AB), டி.ஏ. 531/77 ஆம் எண் முடிவுற் கிணங்க வரி விதிப்பு அல்லது திருத்த வரி விதிப்பு செய்யப்பட் டுள்ள இனங்களில் வரி, கூடுதல் வரி, மேல் வரி தள்ளுபடி செய் யப்பட்டது. ஆனால் இந்த வரித் தள்ளுபடி 4-3-1974 முதல் 8-5-1979 வரையுள்ள கால அளவில் இந்த வரி எதையும் வணிகர் வசூலித்திருக்கக்கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டதாகும்.



உசிலம்பட்டி பேக்கர்ஸ் கன்பெக்சனர்ஸ் அசோசியேசன்ஸ், உசிலம்பட்டி என்ற அமைப்பின் 14 உறுப்பினர்கள் தயாரித்து விற்பனை செய்யும் பேக்கரிட் பொருட்களுக்கு 16-9-1981 முதல் 7-3-1983 வரையிலான கால அளவிற்கு வரி, கூடுதல் வரி, மேல் வரி ஆகியவை தள்ளுபடி செய்யப்பட்டன.

முன்னாள் வருவாய்த்துறை வாரியம் (வணிக வரிகள்) முன்ன தாக வெளியிட்ட விளக்கத்தின் காரணமாக, 8 சதவீத வரியினை வசூலிக்காத 11 வணிகர்களைப் பொறுத்தமட்டில் அச்சிட்ட பளபளப்புக் காகிதம், திருமண அழைப்பிதழ் அட்டை, பழுப்பு நிறக் காகிதம், கையேட்டு மேலுறை, கணக்குப் புத்தக மேலுறை இருவண்ண, மூவண்ண ஜோடனைக் காகிதம் (வடிவங்கள் அச்சிடப்பட்ட மேலுறை) ஆகியவற்றிற்கு செலுத்த வேண்டிய வரி, கூடுதல் வரி மற்றும் மேல்வரி ரூ. 31,029 தள்ளுபடி செய்யப் பட்டது.

(F) வரி விலக்கு :

தருமபுரி மாவட்ட மாச்சத்து ( Starch ) தயாரிப்பு பணித் தொழில் கூட்டுறவுச் சங்கம் வரியினைச் செலுத்தியிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, அச்சங்கத்திடமிருந்து வாங்கப்படும் சவ்வரிசி, மரவள்ளிக்கிழங்கு மாச்சத்து ஆகிய வற்றின் இரண்டாம் விற்பனை அதற்குப் பின்னர் நடைபெறும் விற்பனைகள் ஆகியவற்றின் போது வரி விதிப்பிலிருந்து வரி விலக்கு அளிக்கப்பட்டது.

எந்தவொரு வணிகரும் விற்பனை செய்யும் இஞ்சிப்புல் எண்ணெய்க்கு விற்பனைவரி விதிப்பதிலிருந்து விலக்கு அளிக்கப் பட்டது.

அறிவிக்கையின் I மற்றும் II-ஆம் பட்டியல்களில் குறிப்பிடப் பட்டுள்ள சூரியசக்தி, தாவர நுண்மைச் சக்தி (Bi-mass), காற்றுச் சக்தி, சக்தி சேமிப்புக் கருவிகள் ஆகியவற்றைப் பயன் படுத்த தயாரிக்கப்படும் சக்தி புதுப்பிக்கும் கருவிகள், சாதனங்கள், வடிவமைப்புகள் ஆகியவற்றை விற்பனை செய்யும், எந்தவொரு வணிகரும் செலுத்தத்தக்க விற்பனை வரிக்கு 1-6-1984-லிருந்து மூன்றாண்டுக் காலத்திற்கு விலக்களிக்கப்பட்டது.

இந்திய விமானப் படையினர் மனைவியர் நலச் சங்க பரிசுச் சீட்டின் விற்பனை மீது எந்தவொரு வணிகரும் வரி செலுத்துவதி லிருந்து விலக்களிக்கப்பட்டனர்.

மதுரை மாவட்டம், காந்தி கிராமம், திருவாளர்கள் இலட்சுமி சேவா சங்கம் உற்பத்தி செய்யும் பொருள்களின் விற்பனைக்கு விற்பனை வரி விதிப்பிலிருந்து விலக்களிக்கப் பட்டது.

சதர்ன் பெட்ரோ கெமிக்கல்ஸ் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேசன் லிமிடெட், தூத்துக்குடி ஆல்கலி கெமிக்கல்ஸ் அண்டு பெர்டி லைசர்ஸ் லிமிடெட்டிற்கு விற்பனை செய்யும் அமோனியா வாயு மீது விற்பனை வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

மதுரை, உலகத் தமிழ்ப் பணி மையம், சென்னை பன்னாட்டு தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றிற்கு விற்பனை செய்யப் படும் கல்வி தொடர்பான ஒலி நாடா விற்பனைக்கு விற்பனைவரி விதிப்பிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

சென்னை Y's மென் பன்னாட்டு நிறுவனத்திற்கு விற்பனை செய்யப்பட்ட ஸ்டாண்டர்டு-20 டீசல் ஆம்புலென்ஸ் வேனுக்கு விற்பனை வரி விதிப்பிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

திருச்சிராப்பள்ளி, பர்மா சந்தை வணிகர்கள் சங்கத்தைச் சேர்ந்த பர்மா அகதி வணிகர்கள் விற்பனை செய்யும் பொருட் களுக்கு வரி விதிப்பிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

இருதயத் துடிப்பை ஒரே சீராக வைத்து வருவதற்குரிய கருவி, நாடித் துடிப்பை ஏற்படுத்தும் கருவி ஆகியவற்றின் விற்பனை மீது விதிக்கத்தக்க விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கப் பட்டது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கிய பதப்படுத்தப்படாததும், தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் இணையத்தின் தேசிய பால் பண்ணை வளர்ச்சிக் கழகத்தினால் சுத்திகரிக்கப்பட்டது மான ரேப்சீட் எண்ணெயை குஜராத், ஆனந், தேசிய பால்வள வளர்ச்சி கழகமும், அதனைப் பின்பற்றி விற்பனை செய்யும் அனைத்து வணிகர்கள் செய்யும் விற்பனை மீது விதிக்கத்தக்க வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

69 ஆம் இனத்தின் கீழ் வரும் உலர்ந்த தேங்காய் விற்பனைக்கு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் எந்தவொரு வணிகரும் செலுத்த வேண்டிய வரியிலிருந்து விலக்களிக்கப் பட்டது.

தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் பர்பூரல் விற்பனை மீது, சென்னை திருவாளர்கள் சதர்ன் அக்ரி பர்னேஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் செலுத்த வேண்டிய வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.



தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் பாம்பு நஞ்சிற்கு சென்னை இருளர் பாம்பு பிடிப்போர் தொழில் கூட் டுறவுச் சங்கம் செலுத்த வேண்டிய வரி விதிப்பிலிருந்து விலக் களிக்கப்பட்டது.

புதிய வடிவமைப்புக் கொண்ட அம்பர் சர்க்காருக்கு தேவைப் படும் முன்பதனிடு (Pre-processing) கருவி விற்பனை மீதான வரி விதிப்பிலிருந்து விலக்களிக்சப்பட்டது.

தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் பத்திரிகை காகித விற்பனை மீது, திருவாளர்கள் தமிழ்நாடு பத்திரிகைத் தாள் காகித நிறுவனம் செலுத்த வேண்டிய வரியிலிருந்து விலக் களிக்கப்பட்டது.

குழந்தைகள் அறக்கட்டளை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம், சென்னை-34, நடமாடும் மருத்துவ ஊர்தியை வாங்குவதன் மீது செலுத்த வேண்டிய வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

(17) 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டம்

பின்வரும் வரி வீதக் குறைப்புகள், வரிவிலக்குகளுக்கு அனு மதி வழங்கப்பட்டுள்ளது.

சென்னை திருவாளர்கள் தமிழ்நாடு குரோமேட்ஸ் கெமிக் கல்ஸ் லிமிடெட் நிறுவனம் பேசிக் குரோமியம் சல்பேட், சோடி யம் பைகுரோமேட், சோடியம் சல்பேட் (மஞ்சள்), சோடியம் சல்பேட் (வெள்ளை) ஆகிய அவர்களது உற்பத்திப் பொருட் களுக்கான மத்திய விற்பனை வரி 1—6—1984 முதல் 31—5—1985 வரையிலான காலத்திற்கு 2 சதவீதமாகக் குறைக் கப்பட்டது.

சென்னை சதர்ன் போரக்ஸ் நிறுவனம் விற்பனை செய்யக் கூடிய போரக்ஸ் மீதான மத்திய விற்பனை வரி 27—6—1984 முதல் 29—7—1984 வரையிலான காலத்திற்கு 1 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் மாநிலங்களுக்கிடை யேயான வாணிபம் அல்லது வர்த்தகத்தின் போது விற்பனை செய்யப்படும் பாம்பு நஞ்சிற்கு சென்னை இருளர் பாம்பு பிடிப் போர் தொழில் கூட்டுறவுச் சங்கம் செலுத்த வேண்டிய வரி விதிப் பிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ், பத்திரிகைத்தாள் விற்பனையின் மீது சென்னை, திருவாளர்கள் தமிழ்நாடு பத்திரி கைத்தாள் காகித நிறுவனம் செலுத்த வேண்டிய வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

சூரிய சக்தி, தாவர நுண்மைச் சக்தி (Bio Mass) காற்றுச் சக்தி, சக்தி சேமிப்புக் கருவிகள் ஆகியவற்றைப் பயன்படுத்த தயாரிக்கப்படும் சக்தி புதுப்பிக்கும் கருவிகள், சாதனங்கள், வடி வமைப்புகளின் விற்பனை மீதான மத்திய விற்பனை வரி 1—6—1984 முதல் மூன்றாண்டுக் காலத்திற்கு விலக்களிக்கப் பட்டது.

18. தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டம் மற்றும் விதிகள் ஆகிய வற்றில் செய்யப்பட்ட திருத்தங்கள்,

மதுரை, திருநெல்வேலி, செங்கற்பட்டு, சேலம், வட ஆற்காடு தென் ஆற்காடு, கோயம்புத்தூர், தருமபுரி, கன்னியாகுமரி, நீலகிரி, பெரியார், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களிலுள்ள குறிப்பிட்ட சில பேரூராட்சிகள் தேர்வு நிலைப் பேரூராட்சி களாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளதால், தேர்வுநிலைப் பேரூராட்சியில் உள்ள திரையரங்குகளுக்குப் பொருந்தக் கூடிய வரியினை விதிக்கும் நோக்கத்திற்காக இச்சட்டத்தின் II-ஆம் விவர அட்டவணையில் அவசியமான திருத்தங்கள் செய்யப் பட்டன.

திருநெல்வேலி, மதுரை, சேலம், இராமநாதபுரம், தஞ்சாவூர், வட ஆற்காடு, தருமபுரி, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களி லுள்ள குறிப்பிட்ட சில நகராட்சிகள் தரம் உயர்ந்தப்பட்டதைத் தொடர்ந்து இச்சட்டத்தின் I-ஆம் விவர அட்டவணையில் அவசியமான திருத்தங்கள் செய்யப்பட்டன.

வீடியோ, கேசட் ரிகார்டர்கள் மூலம் தொலைக் காட்சித் திரை களில் படங்கள் காட்டுவதற்கு வரி விதிப்பதற்காக இச்சட்டத் தின் 3 ஆம் பிரிவு 22—2—1984 ஆம் நாளிலிருந்து திருத்தப் பட்டுள்ளதுடன், 4-D, 5-D, 5-E, 5-F, 5-G, ஆகிய புதிய பிரிவு களும் சேர்க்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டத்தின் 3ஆம் பிரிவின் (1) உட் பிரிவு(b) பகுதியிலும் இதைப் போன்ற திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.



விதிகள்

வீடியோ-கேசட் ரிகார்டர்கள் மூலம் தொலைக் காட்சித் திரைகளில் படங்கள் காட்டப்படுவதன் மீது வரி விதிப்பதற்கு சட்டம் இயற்றப்பட்டதைத் தொடர்ந்து, 21, 26-A, 32, 32-A, 32-B, 32-G, 32-H, 32-I, 32-L, ஆகிய விதிகளிலும் குறிப்பிட்ட சில படிவங்களிலும் திருத்தங்கள் செய்யப்பட்டன.

தேசிய வங்கிகளில் குறித்த கால வைப்பீடுகளை ஏற்றுக் கொள்ளுதல், பிணைய வைப்பீடுகளை வரி நிலுவைக்குச் சரிக்கட்டல், அனுமதிச் சீட்டுகளின் இணைப்புச் சீட்டுகளைப் பாதுகாத்தல், அழித்தல் ஆகியவை தொடர்பாக 21(i), 29(2), ஆகிய விதிகளில் திருத்தமும் புதிய விதி 4-Aயும் ஏற்படுத்தப் பட்டது.

திறந்தவெளி திரையரங்குகளுக்கு பிணைய வைப்பீடுகளை வரையறுப்பது தொடர்பாக 21(i), 32-B, (3), 32-1 (3) ஆகிய விதிகளில் திருத்தம் செய்யப்பட்டது.

திரைப்படச் சங்கங்கள், கிளப்புகள் பிணைய வைப்பீடுகள் அளிப்பது தொடர்பாக 45-எ, விதியில் திருத்தம் செய்யப்பட்டது.

19. தமிழ்நாடு 1935-ஆம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச் சட்டம்.

குதிரைப் பந்தய வரி சென்னையில் 20 சதவீதமாக உள்ளது. இது 31—3—1984 வரை செயலில் இருக்கும். உதகமண்டலத் தில் நடைபெற்ற குதிரைப் பந்தயங்களுக்குக் குறைக்கப்பட்ட வரி வீதமான 15 சதவீத வரி வீதம் 30—6—1983 வரை தொடர்ந்து செயலில் இருந்தது. வெளியூர்களில் நடைபெறும் பந்தயங்களுக்கு இங்கு பந்தயம் கட்டி ஆடுவதற்கு 31—3—1984 வரை 15 சதவீத வரி தொடர்ந்து செயலில் இருந்தது.

20. தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு விளம்பர வரிச் சட்டம் :

திரையரங்குகள் காட்டும் விளம்பர வில்லைகள், படங்கள், ஆகியவற்றிற்கு வரி விதிக்கும் பொருட்டு 5—12—1983 முதல் புதிய சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

[1985 ஜூன் 24

21. தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரிச் சட்டம் :

ஏ. சட்டத்திற்குத் திருத்தம் :

1—4—1984 முதல் இச்சட்டத்தின் 2-ஆம் பிரிவைத் திருத்துவதன் மூலம், பின்வருமாறு கூடுதல் விற்பனை வரி வீதங்கள் அதிகரிக்கப்பட்டன.

| | வரி வீதம். |
|---|---|
| (i) வரி விதிக்கத்தக்க மொத்த வியாபாரத் தொகை 3 இலட்சத்திற்கு அதிகமாக ஆனால் ரூ. 5 இலட்சத்திற்கு மேற்படாமல் இருக்கும்போது. | வரி விதிக்கத்தக்க மொத்த வியாபாரத் தொகையில் 0.5 சதவீதம். |
| (ii) வரி விதிக்கத்தக்க மொத்த வியாபாரத் தொகை ரூ. 5 இலட்சத்திற்கு அதிகமாக ஆனால் ரூ. 7 இலட்சத்திற்கு மேற்படாமல் இருக்கும்போது. | வரி விதிக்கத் தக்க மொத்த வியாபாரத் தொகையில் 0.7 சதவீதம். |
| (iii) வரி விதிக்கத்தக்க மொத்த வியாபாரத் தொகை ரூ. 7 இலட்சத்திற்கு அதிகமாக ஆனால் ரூ. 10 இலட்சத்திற்கு மேற்படாமல் இருக்கும்போது. | வரி விதிக்கத்தக்க மொத்த வியாபாரத் தொகையில் 1 சதவீதம். |
| (iv) வரி விதிக்கத்தக்க மொத்த வியாபாரத் தொகை ரூ. 10 இலட்சத்திற்கு அதிகமாக இருக்கும்போது. | வரி விதிக்கத்தக்க மொத்த வியாபாரத் தொகையில் 1.25 சதவீதம். |

(பி) விதிகளுக்குத் திருத்தம்.

மேல்முறையீடு செய்வதற்கும், கூடுதல் விற்பனை வரி செலுத்துவதை வலியுறுத்துவதற்கும் விதித்துறை இயற்றுவதற்காக விதி 7-A திருத்தப்பட்டது.

விதி 4(2) திருத்தப்பட்டு, புதிய படிவம் N1, வரையறுக்கப்பட்டது.

22. தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு விற்பனை வரி (மேல் வரி) விதிகளுக்குத் திருத்தம் :

மேல் முறையீடு செய்வதற்கும் மேல் வரி செலுத்துவதை வலியுறுத்துவதற்கும் விதித்துறை இயற்றுவதற்காக 7-ஏ விதி திருத்தப்பட்டது.

விதி 4(3) திருத்தப்பட்டு T 2 படிவம் வரையறுக்கப்பட்டது.



1985 ஜூன் 24]

23. புதிய சலுகைகள் :

1985–86 ஆம் ஆண்டுக்கு வரவு-செலவுத் திட்டம் அறிவித்த பின்னர் 26—3—1985 அன்று பின்வரும் புதிய சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன :—

(i) தொடக்க நடவடிக்கையாக, ஒவ்வொருவரும் வாங்கும் வேளாண்மைப் பொருள்கள் சிலவற்றின் (மிளகாய், புளி, மஞ்சள், கொத்தமல்லி, மிளகு) மீதான 5 சதவீத பலமுனை வரி 8 சதவீத ஒருமுனை வரியாக அரசு மாற்றம் செய்துள்ளது. இது அங்காடியில் இப்பொருள்களின் விலையைக் குறைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சிறு வியாபாரிகளும், சில்லறை வியாபாரிகளும் கணிசமான அளவுக்கு நிவாரணம் பெறுவர்.

(ii) வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்கவும், சிறு நிலம் வைத்துள்ள உழவர்களுக்கும், சொற்ப நிலம் வைத்துள்ள உழவர்களுக்கும் உதவி செய்ய இயலும் வகையில் அரசு உரங்களின் மீதான வரியை தற்போதுள்ள 5 சதவீத பலமுனை வரி வீதத்திலிருந்து விலக்கு அளித்துள்ளது.

(iii) மின்னணுவியல் தொழிலுக்கு உதவி செய்யும் பொருட்டு அரசு இப்பொருள்களின் மீதான வரியை 12 சதவீத ஒருமுனை வீதத்திலிருந்து 10 சதவீத ஒருமுனை வீதமாகக் குறைத்துள்ளது.

24. கூடுதலான வருவாய் கிடைப்பதற்கான புதிய நடவடிக்கைகள் :

1985–86-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை அறிவித்த பின்னர் இம்மாநிலத்தின் வருவாய் வாயிலைப் பெருக்கும் பொருட்டு, அரசு 26—3—1985 அன்று சாராயத்தின் மீதான விற்பனை வரி வீதத்தை 6 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாக அதிகரித்துள்ளது.

25. வருவாய் : (A) தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம் :

1979–80-லிருந்து 1984–85 வரையுள்ள ஆண்டுகளில் மேற்சொன்ன சட்டத்தின் கீழ் கிடைத்த வருவாய் பற்றிய விவரம் வருமாறு :—

| ஆண்டு. | மொத்த வருவாய் (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|
| 1979–80 .. .. .. | 25,827.90 |
| 1980–81 .. .. .. | 34,361.75 |
| 1981–82 .. .. .. | 44,937.50 |
| 1982–83 .. .. .. | 53,782.95 |
| 1983–84 .. .. .. | 58,840.00 |
| 1984–85 .. .. .. | 71,896.00 |

[1985 ஜூன் 24

1983–84-ஆம் ஆண்டில் இச்சட்டத்தின்கீழ் கிடைத்த வருவாய் ரூ. 58,840 இலட்சமாகும். 1984–85-ஆம் ஆண்டில் கிடைத்த வருவாய் ரூ. 71,896 இலட்சமாகும். இந்த வருவாய் முந்தைய ஆண்டு வருவாயுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், 1984–85-ஆம் ஆண்டு ரூ. 13,056 இலட்சம் அதிகரித்துள்ளது. அதிகரித்த வருவாய் 22 சதவீதமாகும்.

(B) 1956-ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டம் :

1979–80-லிருந்து 1984–85-ஆம் ஆண்டு வரை 1956-ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் கிடைத்த வருவாய் பற்றிய விவரம் வருமாறு :—

| ஆண்டு | | | மொத்த வருவாய் (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|---|
| 1979–80 .. | .. | .. | 6,854.07 |
| 1980–81 .. | .. | .. | 8,574.67 |
| 1981–82 .. | .. | .. | 9,554.98 |
| 1982–83 .. | .. | .. | 11,597.34 |
| 1983–84 .. | .. | .. | 11,822.00 |
| 1984–85 .. | .. | .. | 13,569.00 |

1984–85-ஆம் ஆண்டில் இச்சட்டத்தின்கீழ் கிடைத்த வருவாய் ரூ. 13,569 இலட்சமாகும். கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூ. 1,747 இலட்சம் வருவாய் அதிகரித்துள்ளது. அதிகரித்த வருவாய் 15 சதவீதமாகும்.

(C) தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டம், தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டம்.

மேற்சொன்ன சட்டங்களின் கீழ் 1979-80-லிருந்து 1984–85-ஆம் ஆண்டு வரை கிடைக்கப்பெற்ற வருவாய் குறித்த விவரம் வருமாறு :—

| ஆண்டு. | | | மொத்த வருவாய் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1979–80 .. | .. | .. | 1,671.13 |
| 1980–81 .. | .. | .. | 2,892.91 |
| 1981–82 .. | .. | .. | 3,146.11 |
| 1982–83 .. | .. | .. | 3,642.04 |
| 1983–84 .. | .. | .. | 3,926.00 |
| 1984–85 .. | .. | .. | 4,488.00 |



1985 ஜூன் 24]

சென்ற ஆண்டு வருவாயுடன் ஒப்பிடும்போது 1984–85-ஆம் ஆண்டில் ரூ. 562 இலட்சம் வருவாய் அதிகரித்துள்ளது. அதிகரித்த வருவாய் சுமார் 14 சதவீதமாகும். இணக்க வரி ஏற்பாட்டுத் திட்டம், மூன்று மாநகராட்சிகள் மற்றும் 8 தனி நிலை நகராட்சிகள் அதாவது சேலம், ஈரோடு, திருப்பூர், வேலூர், திருச்சி, தஞ்சாவூர், பொள்ளாச்சி, தூத்துக்குடி ஆகியவை நீங்கலாக அனைத்து பகுதிகளிலும் தொடர்ந்து செயலிலிருந்தது. இவ்விரு சட்டங்களும், கேளிக்கைகள் மீது வரி விதிக்க வகை செய்கின்றன. தொகை செலுத்துவதன் பேரில் மக்கள் அனுமதிக்கப்படும் திரைப்படங்களுக்கும் குதிரைப் பந்தயத்திற்கும் மட்டும் வரி விதிக்க வகை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டத்தின் கீழ் விதிக்கப்படும் வரி மூலம் கிடைக்கும் வருவாய் முழுவதும் அந்தந்த உள்ளாட்சி மன்றங்களிடம் கொடுக்கப் படுகிறது. அத்துடன் தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் கீழ் கிடைக்கப்பெறும் அடிப்படை கேளிக்கை வரித் தொகையில் 90 சதவீதத் தொகையும் அந்தந்த உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒதுக்கப்படுகிறது. வரி இணக்கம் செய்து கொள்ளும் திட்டம் செயலில் இருக்கின்ற பகுதிகளில் கிடைக்கும் வருவாய், இரண்டாம், மூன்றாம் நிலை நகராட்சிகளைப் பொறுத்தமட்டில் அரசுக்கும் உள்ளாட்சி மன்றங்களுக்கும் இடையே 40 : 60 என்ற வீதத்திலும் முதல் நிலை தனி நிலை நகராட்சிகளைப் பொறுத்த மட்டில் அரசுக்கும் உள்ளாட்சி மன்றங்களுக்கும் இடையே 35 : 65 என்ற விகிதத்திலும் ஒதுக்கப்படுகிறது.

(D) தமிழ்நாடு 1935-ஆம் ஆண்டு குதிரைப் பந்தயங்கள் வரிச் சட்டம் :

சென்னையிலும் (கிண்டி), உதகமண்டலத்திலும் குதிரைப் பந்தயங்கள் நடைபெறுகின்றன.

1979–80-லிருந்து 1984–85 வரையில் மேற்சொன்ன சட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற வருவாய் குறித்த விவரம் வருமாறு :—

| ஆண்டு. | | | மொத்த வருவாய் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1979–80 .. | .. | .. | 266.08 |
| 1980–81 .. | .. | .. | 408.39 |
| 1981–82 .. | .. | .. | 454.63 |
| 1982–83 .. | .. | .. | 450.88 |
| 1983–84 .. | .. | .. | 378.00 |
| 1984–85 .. | .. | .. | 392.00 |

1984—85-ல் கிடைத்த வருவாய் முந்தைய ஆண்டில் கிடைத்ததைக் காட்டிலும் ரூ. 14 இலட்சம் அதிகரித்துள்ளது. உயர்வு 4 சதவிதமாகும்.

(E) தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு ஓட்டல்கள், தங்கும் விடுதிகள் ஆகியவற்றில் அளிக்கப்படும் ஆடம்பர வசதிகள் மீது வரி விதிப்புச் சட்டம் :

1980—81-லிருந்து 1984—85 வரையில் மேற்சொன்ன சட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற வருவாய் குறித்த விவரம் வருமாறு :

| ஆண்டு | மொத்த வருவாய் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1980—81 .. .. .. | 32.73 |
| 1981—82 .. .. .. | 107.31 |
| 1982—83 .. .. .. | 130.88 |
| 1983—84 .. .. .. | 150.00 |
| 1984—85 .. .. .. | 181.00 |

சென்ற ஆண்டு வருவாயுடன் ஒப்பிடும்போது இந்த ஆண்டின் வருவாய் சுமார் ரூ. 31 இலட்சமாக அதிகரித்துள்ளது. உயர்வு 21 சதவிதமாகும்.

(F) தமிழ் நாடு விளம்பர வரிச் சட்டம் :

1984—85-ஆம் நிதியாண்டில் இச்சட்டத்தின்கீழ் கிடைத்த வருவாய் ரூபாய் 6 இலட்சமாகும். 1983—84-ஆம் ஆண்டில் டிசம்பர் 1983-லிருந்து மார்ச் 1984 முடிய (4 மாதங்கள்) ரூ. 2 இலட்சம் கிட்டியுள்ளது. இந்தப் புதுச் சட்டம் 1983ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 5-ஆம் தேதி முதல் அமலுக்கு வருகிறது.

26. துறையில் பல மேம்பாடுகள் செய்யப்பட்டதாலும், வியாபாரம் செய்யும் பொது மக்களுக்கு பல சலுகைககளும், வசதிகளும் அளிக்கப்பட்டதாலும், துறை அதிகாரிகளுக்கும், வரி விதிக்கப்பட்டவர்களுக்குமிடையே சுமுகமான உறவு நிலவியது. இது அரசுக்கு ஆதாயம் கிடைக்கும் வகையிலும் பொது மக்களுக்கும் வியாபாரம் செய்பவர்களுக்கும் அதிகஇடர்ப்பாடு இல்லாமலும் வணிக வரிகள் சட்டத்தை நிருவகிப்பதற்கும் பெரிதும் உதவியது. துறைக்கும் பொது மக்களுக்கும் இடையே இது போன்ற சுமுகமாக நல்லுறவும், நெருங்கிய ஒத்துழைப்பும் தொடர்ந்து நிலவும் என்று அரசு நம்புகிறது.

136387